தருவீரேயானால்அடியாள் மெத்தசந்தோஷிமாவேன்

ஸ்ரீராமர் சொல்லல்,

அந்தப்படியேயுனக் கருள்செய்கிறேன்பெண்ணே
என்னவரங்கள்வேணு மென்னை நீகேளாயிப்போ

கோகிலப்பெண்ணே கண்ணே சந்தோஷிமானேன்
அன்னமேசீதாய் லதயமேமானே

இதுவும்-ஸ்ரீராமர்சொல்லல்,

நினைத்தநெஞ்சந்தன்னில் நீவனம்போகத்
துணிந்தவகையெனக்குச் சொல்லடிமயிலே (கோகில)

சீதை சொல்லல்,

அந்தவனத்திற்சென்று அருமுனிவரைக்கண்டு
தெண்டஞ்செய்துநானுந் திரும்பியேவருகிறேன் (நேச)

ஸ்ரீராமர்சொல்லல்,

அந்தவனத்திலுள்ள தந்திகாடிபுலி
முந்தியேசென்றுநாம் மோதமாய்ப்பார்த்தோமே (கோகி)

சீதை சொல்லல்,

கந்தமலைகளும் [illegible]களும்
கண்டுமகிழ்ந்துநான் கடுகேவருகிறேன் (நேச)

ஸ்ரீராமர்சொல்லல்,

கந்தமலையிலுள்ள கல்லுமுள்ளுகளெல்லாங்
கா[illegible]றைக்கநாம் கடந்தோமே (கோகில)

சீதை சொல்லல்.

ஆடுமயில்களும் அன்பாய்க்குயில்களும்
நாடு[illegible]னங்களும் நான்கண்டுவரு[illegible] (நேச)

ஸ்ரீராமர் சொல்லல்,

ஆடேமயில்களும் அன்பாய்க்குயில்களும்
அன்னங்களிருக்கு வனங்கண்டுபோவானேன் (கோகில)

சீதைசொல்லல்,

வேணுமடியாளுக்கு வேண்டியவரமிது
அன்றுமகிழுந்தாப்போ லின்றுமகிழ்ந்தேனே (நேச)

ஸ்ரீராமர்சொல்லல்,

மதிபோல்மலர்முகமும் மயிலின்வளர்கொண்ட
ரதியேயுதவாது ரஞ்சிதமேசீதாய் (கோகில)

சீதை சொல்லல்,

தேசம்புகழவந்த ஜெயராமச்சந்திரா நீ
பாசம்வையும்நல்ல விஸ்வாசமாயென்மேல் (நேச)

ஸ்ரீராமர்சொல்லல்,

ஆகமாய்வேதமாம் வேதப்பொருளாயெந்தன்
மோகமானசீதா யோகஜனகன்பெண்ணே (கோகில)

சீதை சொல்லல்,

அதிபதிசீராச்சே சதிசர்ப்பனைகளாமோ
மதியினிலொருநாளும் நெறிதப்பிநடவேனே (நேச)

ஸ்ரீராமர்சொல்லல்,

சின்னநாளையிற்பெண்ணே சீதையேயுன்னைமணஞ்
செய்யவந்தபோது ஜனகன்வில்லொடித்தேனே (கோகில)

சீதை சொல்லல்,

தெண்டகாவனத்தினில் ரிஷிகளென்பவர்நம்மை
கண்டுமனமகிழ கருத்தில்நினைந்தேனையா (நேச)

ஸ்ரீராமர்சொல்லல்,

பாலப்பிராயத்தில் பரிந்துன்னைமணஞ்செய்தேன்
கோலம்பொருந்துஞ்சீதை தேனேயென்மானே (கோகில)

ஸ்ரீராமர்-சீதைக்குசமசால வசனம்,

அசோவாரும்பெண்ணே சீதாய் அப்படியேவனம்போக உ
னக்குச் செலவுதருகிறேன் நீ அந்தப்புரம்போம்பெண்ணே.

சீதைசொல்-வசனம்,

ஆனால்மகாபாக்கியம் நான்போய்வருகிறேன்சுவாமி

ஸ்ரீராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்-திபிதை,

கட்டியக்காரர்கேளாய் கடுகியேயோடிப்போ
[illegible]மாய்க்காவலாளாச் சந்நிதியில்வாவேசொல்லி

திட்டமேசெய்துநீயுஞ் சீறியபுலியைப்போலப்
பொட்டெனக்கொணுமுன்பாகப் புகழுடனேடிவாடா.

ஸ்ரீராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்வசனம்,

அடோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா நம்முடைய - அயோ
த்தியாபுரியைக்காக்கப்பட்ட தலையாரிகளை அழைப்பியும்பிள்ளாய்.

கட்டியக்காரன் சொல்-வசனம்,

அப்படியே யழைப்பிக்கிறேன்சுவாமி.

கட்டியக்காரன் தலையாரிகளுக்குச்சொல் கவி,

நிலைமைசேரயோத்தித் தலைவருரும்மை
சொலுவுக்குவரவே வனுவினிற்சொன்னர்

வசனம்.

அடோகேளும் தலையாரிமார்களே நமதரசனுகியஸ்ரீராமரு
ங்களை அதிசீக்கிரமாயழைத்து வரச்சொன்னார்ஓடிவாருங்களப்பா

தலையாரிமார்கள் கட்டியக்காரனுக்குச்சொல்-கவி.

திட்டமாயரசுசெய்யும் பட்டாபிராமர்சொன்ன
கட்டளைதனக்கேதேனு மட்டியுமுண்டோவாரோம்.

வசனம்.

கேளுமப்பா கட்டியக்காரா நமதாசன்சொல்லுக்கு மோர
ட்டியா இதோவருகிறோமப்பா.

தலையாரிகள்வருகிற பொருநிதிஷிதை.

நெட்டியதடியுங்கொண்டு நேரிசங்கையிலேந்தி
மட்டின்றியார்ப்பரித்து மகிபதியழைத்தாரென்று
தட்டியே நடைகடன்னைத் தாண்டியேலகுவெடுத்து
கட்டுடன்காவலாளர் கள்றியில்வருகின்றூர்.

தலையாரிகள்வருகிற-தரு இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி,

காவற்காரர்நாங்களே ஊரிற் காவற்காரர்நாங்களே

அநுபல்லவி,

கோபக்காரர்போல விழிகளைக்
கூட்டிமுழித்து நா[illegible]ருக் (காவ)

சரணங்கள்.

தண்ணீர்மேலடி எடுப்போம்-மெள்ளத்
தவழ்ந்துகள்ளரைப்பிடிப்போம்,
உலனிதட[illegible] நடந்தடியைப்பற்றி
யின்னாரின்னொன்று மன்னர்முன்னேசொல்வோம் (காவ)
அயோத்திமுழுதுந் திரிவோம் பகல்
அர்த்தராத்திரியில் வருவோம்

வைடகத்தோரெவ ரெம்மைப்பழித்தாலும்
வெட்டுவமெங்கள் பேர்நாட்டுவோம்பூமியில் (காவற்)
நகண்டதடிகள் பிடிப்போம் - கையில்
தேரிசம்பல்லயந் தொடுப்போம்
அகண்டபதியாம் அயோத்திவாழ்ராமர்
ஜயன்பாதந்தன்னை மெய்யென்றுநம்பியே (காவற்)

தலையாரிகள்-ஸ்ரீராமருக்குச்சொல் திபதை.

மெய்ப்பொருளானசேனை விகுதியாய்ப்படைத்தவீரா
செப்பமாயடியார்தம்மைச் சீக்கிரமாயழைத்ததென்ன
செப்பெனச்சொல்வீரெங்கள் கொற்றவர்அயோத்திராமா
நற்பதஞ்சரணம்ராமச் சந்திரசேசரணமையா.

(வ-ம்.) அகோவாருஞ்சுவாமி ரகுநாயகரே எங்களை அழைப்பித்தகாரியம் அருளிச்செய்யவேணுஞ் சுவாமி.

ஸ்ரீராமர் தலையாரிகளுக்குச்சொல் திபதை.

தலையாரிமாரேவாரீர்! சாற்றுமென்மொழியைக்கேளீர்
நிலைமையாய்நமது நாட்டில் நிசப்பவருரைக்கும்பேச்சும்
மலையதோர்பட்டணத்தில் வாய்மையுமுளவாய்க்கேட்டு
நலமுடன்வந்தெனக்கு நவிலுவீர்காவலோரே

வசனம்.

அகோவாரும் தலையாரிகளே நீங்கள் நகரிசோதனைக்குப்போய் அவாளவாள் என்னசொல்லிக் கொள்ளுகிறார்களோ அந்தவார்த்தையை ஒன்றும் ஒளியாமல் நம்முடன்வந்து அறிக்கை யிடுவீர்களப்பா.

தலையாரிகள்சொல்-வசனம்,

அப்படியேவந்து அறிக்கையிடுகிறோம்-சுவாமி,

தலையாரிகள் ஊர்உளறிவருகிற-தரு

இ-ம். எதுகுலகாம்போதி-சாபுதாளம்

பல்லவி.

அறிந்துவருவோம் வாரீர் நகரின்சேதி
அறிந்துவருவோம்வா[illegible]

அநுபல்லவி.

அறிந்துவருவோம்வாரீர் அவனிதன்னிலேசேதி
வருசேதியவர்சொல்லும் வார்த்தையையிப்போது (அறி)

சரணங்கள்.

நாலுதிசையெங்கும் தேடுவோம்-மெள்ள
நயனபாஷைகள்சொல்லி கூடுவோம்
மேல[illegible] காரியத்தைக்கொண்டு
[illegible]ல்ராமருக்கு[illegible]யே பகருவோமண்ணமாரே (அறிந்)

பட்சிகளைப்போலே பறக்குவோம்-நல்ல
பழையச்சுவரின் மேலேதுக்குவோம்.
கெல்லியேபல்லைக் கடித்தாற்போல்பூமியில்
வல்லமையாகவே கல்லின்மேற்பாயுவோம் (அதிர்)

ராஜரத்தனர்வீதி செல்லுவோம்
தண்ணும்வீதியினிற் புல்லுவோம்-வடுகர்
மாசில்வைசியர்வீதி வணிகர்வீதிகளும்
வாகனமற்றவர்வாழ் வீதியுஞ்சென்று (அதிர்)

வண்ணான் வருகிற-பொது திபதை,

அசைவிலாதயோத்திதன்னி லனுதினங்கலைவெளுக்கும்
இசைபெறும்ரசகனானே வெடுபடாமூட்டைதூக்கி
வகையுடன்பேசிக்கொண்டு மங்கையுந்தானுமாகப்
புஜபலராமர்நாட்டிற் பொருந்தியேவருகின்றானே.

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தச்சமயத்திலே தலையாரிகள்-நகர்சோதனைக்குப்போய் உளவாயிருக்கிறபோது அயோத்தியாபுரிபட்டணத்தி லிருக்கப்பட்ட வண்ணான் வருகிறவிதங்காண்க.

வண்ணான் வருகிற-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி,

வண்ணான்வந்தானே அயோத்தியில்
வண்ணான்வந்தானே

அநுபல்லவி.

வண்ணான்வந்தான் வெகு விண்ணாணம்பேசியே
கண்ணானவயோத்தியிற் கலைகள்வெளுக்கின்ற (வண்ணான்)

சரணங்கள்.

வாட்டமாகப்பெரு மூட்டைமுதுகில்வைத்து
யேட்டிபோட்டியாக நாட்டம்பேசிக்கொண்டு (வண்ணான்)
கஞ்சிகஞ்சியூட்டிற் கெஞ்சிக்கெஞ்சிவாங்கி
கொஞ்சிக்கொஞ்சியிவன் மிஞ்சிசலவைசெய்யும் (வண்ணான்)
வண்ணானும்வந்தானே மனையாளையேசியே
என்னமல்ராமர்க்கு யீனங்கள்பேசியே (வண்ணான்)
மன்னவர்மெச்சிட மரியாதையாகவே
துள்ளித் துவைக்கிறேன் சோமனை நானென்று (வண்ணான்)
ஆளையுங்கும்பிட்டுக்கொண்டு ஐயாஉங்கள்குடி
அடிமைநானென்று தெருமட்டுஞ்சண்டைபோட்டு (வண்ணான்)
தள்ளாடித்தள்ளாடிக்கொண்டு தாயும்பிள்ளையுமாகக்
கொள்ளைவார்த்தைதன்னைக் கூறவுபாயக்கொண்டு (வண்ணான்)

வண்ணான் தன்மனைவிக்குச்சொல் த்விபதை.

எந்தநற் றுணிகளெல்லா மியலுடன்கொண்டுபோய்நீ
அந்தந்தவீடுதோறும் அடங்கலுங்கொடுத்துப்பின்பு
விந்தையாய்ப்பாண்டங்கொண்டு வீடுகள்தோறும்போய்நீ
சொந்தமாய்ச்சோறுவாங்கிச் சுருக்கினில்வருவாய்பெண்ணே.

வசனம்

அகோவாரும்பெண்ணே இந்தத்துணியைக்கொண்டுபோய் அந்தந்தவீட்டிற்கொடுத்துவிட்டுப் பிற்பாடுபானையையெடுத்துக் கொண்டுபோய்அந்தவீட்டில்சோறுஎடுத்துக்கொண்டு ராத்திரிகாலமானபடியால்சீக்கிரம்கிருஹத்திற்குள் வருவாய்பெண்ணே.

வண்ணாத்தி வண்ணானுக்குச்சொல் வசனம்.

நீர்சொன்னபடியே செய்துவருகிறேன் பிராணநாயகா

வண்ணாத்தி வீடுகளில் சோறுவாங்குகிற தரு.

இராகம்-புன்னாகவராளி ஆதிதாளம்.

பல்லவி:

சோறுபோடம்மா ஓ அம்மா கொஞ்சஞ்
சோறுபோடம்மா

அநுபல்லவி.

கீரையுடன்பகற் கறியிருந்தாலிடு
நேரமாகுது ஆரம்மாகூழ்கொடு (சோறு)

சரணங்கள்.

பகல்முலசாதத்தண்ணி யிருந்தாலிப்போ
பரிவாய் தந்திடம்மணி
தகவுடன்பழங்கஞ்சி யிருந்தாலுந்தட்டிடுவாய்
சட்டியில்மீந்தக்கறியை இட்டமுடனதந்திடுவாய் (சோறு)

கம்புக்களிதருவாய் வாருசோற்றைக்
காங்கொண்டு நீவருவாய்
கும்பலென்னவம்மா கூவிக்கூவித்தாவுறேனே
நம்பியுங்களைநானும் நாடிநாடிமேவுறேனே (சோறு)

புளித்தகூழேனும் அம்மா அம்மா
போடாய் நீதானும்
களித்துக்கலைத்தனை வெளுத்துத்தருகிறேன்
கஞ்சிகொஞ்சந்தஞ்சமம்மா கலக்கியிடுவருகிறேன் (சோறு)

வண்ணாத்திவண்ணானுக்குச்சொல்-த்விபதை.

என்னிடகணவாநீயு மியம்பியவாறேநானும்
சொன்னவரிவீடுதோறுஞ் சுருக்கினிற்கலைகள்தந்து

பன்னியபாண்டங்கொண்டு பரிவுடன்சோறுவாங்கி
முன்னமேவந்தேனையா வுன்னைவேவந்திடாயே.

வசனம்.

அகோவாருமென்கணவா நீசொன்னபடியே கலங்களைக்கொடுத்து சோறுவாங்கிவந்தேன் சாப்பிடவாருமென்கணவா.

வண்ணான்-வண்ணாத்திமீது-கோபங்கொண்டடித்தல்-திபதை.

எத்தனைநேரமுண்டு யிங்கிருந்தேகையில்நீ
பத்திதானில்லையோடி பயமுனக்கில்லையோடி
சித்தினிநாயைப்போலத் திரிகிறாயுன்னைக்கையாற்
குத்தியேமயிர்பிடித்துக் குப்புறவிழவுதைத்தேன்,

வசனம்,

அகோவாரும்பெண்ணே நீயிங்கேயிருந்து போகிறபோது என்னேரமுண்டு இப்போது எவ்வளவுநேரமாச்சுகொஞ்சமாகிலும்பயமில்லாமல் போச்சுதல்லவா இராக்காலமென்று சீக்கிரமாய் வரச்சொன்னால் சித்தினிநாயைப்போல ஊரைச்சுற்றியிருந்துவந்தாயல்லவா என்முகத்தின்முன் வரவேண்டாம் அப்புறத்தேபோடி இனிமேல்வரத்தேவையில்லை இதோ அடித்தேன். உதைத்தேன் ஓடிப்போடிஓடிப்போ.

வண்ணாத்திபுலம்பல் கண்ணிகள்-இராகம்-கண்டா-ஆதிதாளம்.

எங்கும்நோகுதே-அடித்தஅடி-ரத்தமேவுதே
பொங்கிமீறுதே-கண்ணிரண்டும்-போதச்சோர்ந்தே
பெற்றதாயில்லையே-எனக்-குற்றநோயில்லையே
சுற்றத்தாரில்லையே-இவ்வுலகில்-துணைத்தனத்தாரில்லையே
பக்கம்நோவுதே-உதைத்தவுதை-பார்க்கவேகுதே
திக்குங்காணேனே-தெய்வமேயிந்தச்-செனனம்வீண்தானே

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோதெப்படியென்றால் வண்ணாத்திமுறைபிடிப்போது வண்ணான்மாமனார் தன்மகளுக்காகச் சிபாரிசுவருகிற விதங்காண்க.

தரு-இராகம்-புந்நாகவராளி-ஆதிதாளம்.

-பல்லவி.

இப்படியடிக்கலாமோ-நான்பெற்றபெண்ணை
இப்படியடிக்கலாமோ

அநுபல்லவி.

இப்படியடிக்கலாமோதம்பிபிறப்பயலே
வொப்பனைவொழியென்று குப்புறப்போட்டுதையாமல் (இ)

சரணங்கள்,

சிச்சியென்றிடனுஞ் சீச்சிவிபோய்விடாதோ
சோர்வவாலழுத்து செருப்பாலடித்திடாமல் (இப்)

காலையுஞ்சலையையுங்கட்டிக் கழுத்துக்குச்சுருக்கிட்டு
கோலமுடன்கொண்டுபோய் குளத்திலேதள்ளாமல் (இப்)
பெற்றஅருமையென்ன பேரிட்டநேத்தியென்ன
வளர்த்தஅருமையென்ன வைத்திருந்தநேத்தியென்ன (இப்)
ஓடியொளித்திட்டாலும் உலக்கைத்தடியெடுத்து
பாடிப்பாடியடித்தானே பக்கடம்புழிச்சுவர (இப்)

வண்ணான்தாயார் வண்ணானுக்குச்சொல்-திபிதை-

மட்டியாமவளை நீயும் வாயுரைசெய்யாமல்வீணாய்
திட்டெனவடித்ததாலச் சிறக்கியும்விட்டைவிட்டுப்
பட்டணக்கோடிதன்னிற் பருத்தவோரகம்போயுற்றாள்
சட்டெனச்சென்றேயுன்றன் றாரத்தையழைத்துவாடா,

வசனம்.

அகோவாடாயென்மகனே உன்மனைவியை வாயால்திட்டா மல் அடிஅடியென்று நீயடித்தபடியால் அவள் இந்தப்பட்டணத் துக் கடைக்கோடியில் ஒருவீட்டில்போயிருக்கிறாள் நீபோய்அழை த்துவாடா மகனே-

வண்ணான் தாயாருக்குச்சொல்-திபிதை,

இன்னிதாயழையுமென்றீ ரின்னொருவீடுபோன
டன்னிதானேதுக்காகும் பாராளும்ராமறக்கல்லால்
மன்னிபசீதைபோலே வருந்தினளைழத்தேனுகில்
என்னிடகுலத்துக்கெல்லாம் ஈனத்தம்வருமேதாயே.

வசனம்,

அகோகேளுந்தாயே பெண்சாதியானவள் அயல்வீடு போனா ல்அழைக்கலாமோ ரகுநாயகரானவர் சீதையையெடுத்துக்கொண் டுபோனராவணனைச் சங்காரம்பண்ணி சீதையை அழைத்துக்கொ ண்டுவந்து அயோத்தியில்ராச்சியபாரம்பண்ணுகிறாரோ அவருக்கு அடுக்குமொழிய அயல்வீடுபோனபெண்சாதியை நானழைத்தே னுகில்என்னுடைய ரசகுலவம்சத்திற்குயீனத்துவம்வருந்தாயே.

தலையாரிகள்-ஒருவரோடொருவர்சொல்-திபிதை.

கேட்டீரோரசகன்வார்த்தைக் கேட்டீரோயெல்லோருந்தான்
தேட்டமாம்ராமபத்ரர் தேவிமேல்தோஷஞ்சொன்னான்
வாட்டியேயவனைநாமும் வாய்கொழுப்படக்கவேண்டும்
நாட்டியபட்டணத்தில் நகரிசேதனைகள்காரே.

வசனம்,

அகோவாருங்கோளண்ணமாரே ரசகனான வண்ணான் என்னவா ர்த்தைசொன்னான் அந்தவார்த்தைக்கு அவனையென்னசெய்ய வே ணும் ஒன்றுஞ்செய்யப்போகாது ரகுநாயகருடனே இந்தவார்த் தையைச்சொல்லுவோம் வாருங்களண்ணமாரே.

தலையாரிகள்சொல்-தரு-இராகம்-எதுகுலகாம்போதி - ஆதிதாளம்.

பல்லவி,

நாமெழுந்தென்னசொல்வோம் ராமரோடே
நாமெழுந்தென்னசொல்வோம்

அநுபல்லவி.

நாமெழுந்தென்னசொல்வோம் நகைக்கப்புவியின்மீதில்
பாவிரசகன் வார்த்தைப் பாராமற்சொன்னவார்த்தை (நா)

சரணங்கள்.

என்னென்று சொல்லப்போறோம்-ராமரோடே
ஏதென்று சொல்லப்போறோம்
என்னென்றுசொல்லுவோ மிந்தச்சேதிதன்னை
காதினிற்கேட்கவுங் காரணமோஅரி (நா)
சொல்லுவ தெப்படிநாம்-ராமரோடே
சொல்லுவ தெப்படிநாம்
சொல்லுவதெப்படி துஷ்டரசகன்வார்த்தை
தொல்புவியுள்ளவர் செவிதனிற்கேற்குமோ (நா)

தலையாரிகள் ஸ்ரீராமருக்குச்சொல் திபதை.

ஐயனேநாங்களிப்போ அஞ்சுவோஞ்சேதிசொல்ல
உய்யவேரசகன்பேச்சு உலகினிலடாதுகண்டீர்
வையகமனிதர்வாய்மை வாய்த்ததோர்சீதைக்கென்று
பையவேகுற்றஞ்சொன்னான் பாதமேசரணமையா

வசனம்.

சரணஞ்சரணஞ்சுவாமி எங்களைநகரிசோதனைக் கனுப்பிவை த்தீர்களே நம்முடையபட்டணத்தில் ரசகனனவன்னான் சீதாலட் சுமியின்பேரில் தோஷஞ்சொன்னான் அதை யெப்படி சொல்லப் போகிறோம்சுவாமி

ஸ்ரீராமர்-தலையாரிகளுக்குச்சொல் திபதை.

எதுதான்சொன்னான்சொல்வீ ரென்மீதுபழுதாய்வன்னான்
பாதகனன்னகண்டீர் பரிவுடனறிவேயுள்ளான்
சீதைதானானலென்ன திட்டுவோர்க்குற்றமாகில்
நீதியாய்ச்சொல்லும்வார்த்தை நிமிஷத்திலுணர்த்திடீரோ.

வசனம்,

அகோவாரும்பிள்ளாய் தலையாரிகளே ஆராகிலும் என்ன கு ற்றங்களிருந்தால் சொல்லுவார்கள் ரசகநானவன்னான்என்னவார் த்தைசொன்னானென்றுமொளியாமற்சொல்லுங்கள் தலையாரிகளே

தலையாரிகள்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபதை.

சகனுமனையாள்தன்னை நாடியேயடித்தானென்று
வசையறப்பிணங்கிப்போனாள் மாநிலந்தன்னிலந்த

அசல்கம்போனபெண்ணை அழைப்பனோவழையேனந்த
தசரதராமர்க்கல்லோ தகுமிதென்றுரைத்தானையா

வசனம்.

அகோவாருஞ்சுவாமி நகரிசோதனைக்குப் போகையில் ரசகனானவனான் தன்பெண்சாதியையடித்தான அவள்பிணங்கி அயல்வீடுபோனாள் அவன்தாயாரும் மற்றுமுண்டானபேரும்அவனைத் தன்பெண்சாதியை அழைத்துக்கொண்டு வீட்டிற்குப் போகச் சொன்னார்கள் அதற்கந்தவண்ணான்சொன்னது ரகுநாயகரல்லவோ சீதையையெடுத்துக்கொண்டுபோன ராவணனைச் சம்மாரம் பண்ணிசீதையைக்கொண்டுவந்து தொடையின்மேல்வைத்துக் கொண்டுஇராச்சியபாரம்பண்ணுகிறார் அப்படிக்கொத்தராமருக்கே செல்லுமேயல்லாமல் அயல்வீடுபோன பெண்சாதியை யழைத்தால் தனரசகுலத்துக்கு ஈனம்வருமென்றுசொன்னான் சுவாமி.

ஸ்ரீராமர்-தலையாரிகளுக்குச்சொல்-வசனம்.

ஆனால்உங்கள்வீட்டிக்குப்போய்வாருங்கள்பிள்ளாய் தலையாரிகளே

தலையாரிகள்வசனம்-மகாபாக்கியஞ்சுவாமி.

ஸ்ரீராமர் - கட்டியக்காரனுக்குச்சொல் - வசனம்.

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா தம்பிபரதனை அழையும்பிள்ளாய்.

கட்டியக்காரன்வசனம்-அப்படியேயழைப்பிக்கிறேன் சுவாமி.

[illegible]யக்காரன் பரதருக்குச்சொல்வசனம்.

அகோவாரும் பரதமகாராஜாவே தங்களை ரகுநாயகர் அழைத்துவரச்சொன்னார் சுவாமி.

பரதர்வசனம்-ஆனால்போவோம் வாரும்பிள்ளாய்

பரதர்வருகிற-ஓரடி-தரு-இராகம்-பூரிகலியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

கதிர்குலபதிபரதன் வருகிறான் ஸ்ரீராமர்க்கிளைய
கதிர்குலபதிபரதன் வருகிறான்

அநுபல்லவி.

அதிபதியெனவரு குணபதி
இசைதரும்புகழ்வீர ரணபதி (கதிர்)

சரணங்கள்.

அண்டரண்டமெங்கும் நடுங்கவே எக்காளபூரி
அதிகசின்னமூரக ஊதவே
கண்டபேர்கள்தெண்ட னிடவே
கவித்துக்கவிஞர் கவிகள்பாடவே
வண்டணிகுழல் மாதர்நாட்டியம்
வரிசையாய்நின்றெதிர்காட்டவே (கதிர்)

பரதர்-ஸ்ரீராமனுக்குச்சொல்-வசனம்.

சரணஞ்சரணஞ்சுவாமி அடியேனை அழைப்பித்தகாரியம் அருளிச்செய்யவேணுஞ்சுவாமி-

ராமர்சொல்கண்ணிகள்-இ-ப்-புன்னாகவராளி-ரூபகதாளம்-பல்லவி

அல்லவேதம்பிபரதா நாமொருசேதி
சொல்லுகிறேன்கேளும் நீரே

அநுபல்லவி.

வல்லவராகநாமும் வாழ்ந்திருந்தெல்லாம்வசையாச்சே
மெல்லியசீதையாலே நம்மிட
வெட்கமெல்லாம் விளையப்போச்சே (அல்ல)
சீதையென்றவழுத்தபேர்க்கு உலகத்திலொருவர்க்கிடையாச்சே
யாதுசீதையாலிப்போ மானபங்கம்வரலாச்சே
ஆதுகாரியமானாயாம லேகிவிடுவீர்வனத்திற்கு (அல்லவே)

ஸ்ரீராமர்பரதருக்குச்சொல்-திபதை.

எத்தன்மீதினிநற்குற்ற மிருக்கவேபரதாசேனாய்
முத்தியேசொன்னாலும் மோசமேயாகிடாதோ
செந்திருவானசீதை செகந்தனிலீனயானுள்
வந்திடும்விதிவசத்தை மயலரன்றநிக்கமாட்டான்.

வசனம்.

அகோவாருப்பிள்ளாய் தம்பிபரதா இந்தசீதையினுக்கி[illegible]படியினாலே நம்முடையவம்சத்திற்கு மிகத்துவம்வருகிறது தசரதராமனென்கிற கீர்த்தியும்போகின்றது அப்படிக்கொத்த சீதையிருந்தாலும் நமக்காகாது பொழுதுவிடியுமுன்னமே சீதையைஅழைத்துக்கொண்டுபோய் வனத்தில்விட்டுவாரும்தம்பிபரதா

பரதர்-பிரலாபிக்கிறகண்ணிகள்-இ-ம்-ஆகிரி-ஆதிதாளம்.

ஐயையோசீதைதன்னை அடுக்குமோவனத்திலோட்ட
விண்ணுலகிலுள்ளதேவர் வேந்தருமதிகிலமோ
சென்றுடனேஇலங்கைவிட்டுத் திருப்பிவரும்வேளைதன்னில்
திண்மையானஅக்கினியிலே சென்றுடனுருவாய்வந்தாள்
என்னசெய்வேன்ராகவனே பிணையடிசரணமையா

பரதர்சொல-வேறு-கண்ணிகள்-
இ-ப்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

மல்லிகைமலர்வாசப்பொருந்திய
வாகுள்ளசீதையாமோ (என்னண்ணா)
கல்வியுஞ்சொல்லித் தனிக்காடுபோகத்
தயங்கவிடலாமோ (என்னண்ணா)
முன்னாளிற்பட்ட கஷ்டங்களிப்போது

முகமுந்தெளியவில்லை (என்னண்ணா)
இன்றளிற்கானகத்தேகுமெனக்கேறசொன்னீர்
இவ்விதிக்கென்னசெய்வேன் (என்னண்ணா)
பாருக்குள்ளேசீதைலட்சுமியைப்போலே
பதியிலிருந்தவளை (என்னண்ணா)
கானகந்தன்னில்மயில்போலேசீதையை
கலங்கவிடலாமோ (என்னண்ணா)
முத்தானமேனிமுழுதுங்கறுகறுத்து
முகமுந்தளர்ந்திடுமே (என்னண்ணா)
பத்தினிசீதை பதிவிரதைதன்னைப்
பதைக்கவிடலாமோ (என்னண்ணா)
குற்றங்கள்சொல்லிநீகாட்டினிலோட்டினால்
குலத்திற்குதீங்குவரும் (என்னண்ணா)
இதுயாராலேவந்தவனர்த்தமோவறியேனே
அரிகரிதெரியேனே (என்னண்ணா)

பரதர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபதை.

என்னிட அண்ணாவே கனீ ரோஷதாநீர்சொன்னாலும்
கன்னியாஞ்சீதைதன்னைக் காட்டினில்விடவொண்ணாது
முன்னமேரவிகுலத்தில் முக்கியமாய்வந்தராமா
என்னிடமனுவைக்கொண்டே இக்கோபமாறவேணும்.

வசனம்.

அகோவாருஞ்சுவாமி அக்கினிசொரூபமாயிருக்கப்பட்ட சீதையின்பேரில் குற்றஞ்சொல்லிக் காட்டில்விடலாமோ இப்பிழையை என்னைக்கொண்டு மன்னியுஞ்சுவாமி.

ஸ்ரீராமர்-பரதருக்குச்சொல்-திபதை.

யானைகள்தேர்களென்ன அடர்ந்திடும்பரிகளென்ன
ஜானகிதானுமென்ன தம்பிமார்மூவரென்ன
மானமில்லாதொன்று வையகத்தவர்களேச
நானென்னநீயுமென்ன நன்றல்லகடக்கநில்லாய்.

வசனம்,

அகோவாரும்பிள்ளாய் தம்பிபரதா அதேது ஒருநாளுமில்லாதவார்த்தை உத்தரத்திற்கு உத்தரஞ்சொல்லுகிறாய் சீதையைவனத்தில்விட்டு வந்தாலாயிற்று இல்லாவிட்டால் என்முகத்தின்முன்வரவேண்டாம் அப்புறத்தேபோபிள்ளாய்,

பரதர்சொல்-வசனம்-அரிகரிகோதண்டபாணி,

ஸ்ரீராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்,

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா லட்சுமணனை அழைப்பிப்பீர்பிள்ளாய்.

கட்டியன்-வசனம்-அப்படியே அழைப்பிக்கிறேன் சுவாமி-

கட்டியக்காரன்-லட்சுமணருக்குச்சொல்-வசனம்.

சரணஞ்சரணஞ்சுவாமி லட்சுமணப்பெருமாளே தங்களோகு நாயகர் அழைத்துவரச்சொன்னார் சுவாமி.

லட்சுமணர் கட்டியக்காரனுக்குச்சொல் வசனம்

ஆனால்போவோம் வாரும்பிள்ளாய்

லட்சுமணர்வருகிற-ஓரடிதரு-இ-ம்-மோகனம்-அடதாளம்

பல்லவி,

தந்திரத்தினிலுயர்ந்த இந்திரஜித்தைவென்ற
சுந்திரலட்மணரும்வந்தார் ஜெயசூர (தந்திர)

அநுபல்லவி.

அந்தரந்தனிலுயர்ந்த சந்திரனெனும்வதனர்
சுந்திரஸ்ரீராமரது விந்தைசேர்வைசெய்ய (தந்திர)

சரணங்கள்.

அன்னநித்திரைதனை வெறுத்தோன்-தன
தன்னன்சொற்படிவனை முறுத்தோன்
பன்னும்பலகனியைப் பகுத்தோன்-என்றும்
பரிவாய்தனமயன்காண் குவித்தோன்
பவர்க்கும்படைத் தவர்க்கும்-வெரு
தடிக்குங்கணை யெதிர்க்கொண்டவன்
திடிகள்படைகொடை கவிரிசிறிகள்
சுருளும்அலைமுனை திகருமொளிபெற (தந்திர)

லட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல் வசனம்.

சரணஞ்சரணஞ்சுவாமி அடியேனை அழைப்பித்த காரியம் அருளிச்செய்யவேணுங் சுவாமி.

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-திபதை,

மன்னமாம்லட்மணனேயென் வார்த்தையைநன்றாய்க்கேளு
என்னிடசீதைதானு மேகாந்தவேளைதன்னில்
பின்னமில்வனந்தான்பார்க்கப் பிரியமாயிருக்குதென்றாள்
மன்னியவவளை இப்போ வனத்தினில்விட்டுவாராய்.

வசனம்.

அகோவாருந்தம்பி லட்சுமணா சீதையானவ்வனம்பார்க்கவேண்டுமென்று சொல்லியிருந்தாள் இப்போது அழைத்துக்கொண்டுபோய் பொழுதுவிடிய ஜாமத்துக்குள் வனத்தில்விட்டுவாருந்தம்பிலட்சுமணா.

லட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல்-கண்ணிகள்.

இ-ப-கண்டா ரூபகதாளம்.

நன்றல்லவே அயோத்தியாளும் நாயகரேநீதியல்ல (ராமராமா)

வெகுபேர்தேவரென்னசொல்வார் மேதினிக்கு வார்த்தையல்லோ (ரா)
வண்ணமானமேனிசீதை மனமெலிந்துபோகொணுது (ராமராம)
என்னமல்லராமபத்திரா யெத்தனைப்பேன்ராகவரே (ராமராமா)
பாருக்குள்ள அயோத்தியென்ற பால்மொழிபவள் சீதைதன்னை (ராம)
நீக்கியேவனத்திலோட்ட நீதியல்லராகவரே (ராமராமா)
தேக்கியேயக்கினிதன்னிற் சீதையாருமூழ்கிவந்தாள் (ராமராமா)
தீங்குகள்நீர்சொல்லவேண்டாந் தேவரீர்மனம்பொறுப்பீர் (ரா)

லட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபதை.

அக்கினியில்மூழ்கிவந்த அலங்காரஞ்சீதைதன்னை
உக்கிரமானவார்த்தை புரைப்பதுநீதியல்ல
இக்குலந்தன்னில்வந்து மியலுடன்வாழ்ந்திருந்தோம்
மிக்கதோர்வனத்திற்போனல் மீண்டுபோஞ்செல்வமெல்லாம்

வசனம்.

அண்ணாவாருஞ்சுவாமி ரகுநாயகரே அக்கினிவளர்த்து அதில் மூழ்கிவந்தசீதையின பேரில் தோஷஞ்சொல்லிக்காட்டில் விடலாமோ நம்முடையகுலத்திற்குத் தீங்குவரும் இந்தவார்த்தையை என்னைக்கொண்டு மன்னியுஞ்சுவாமி.

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல் திபதை.

தம்பிநீகேளாயிப்போ தாரணிமனிதரெல்லாம்
வம்புரைசொல்லவும்நம் வம்சத்திற்கீனமாகும்
பின்பகைப்[illegible]ரிக்கப் பிரமர்களுமெளிதேயாகும்
என்னுயிர்க்[illegible]வாதம்பி யென்னைதடுக்கதில்லாய்.

வசனம்.

அண்ணாவாருந்தம்பி லட்சுமணு நம்முடையகுலத்திற்குயீனம் வருமென்று சீதையை வனத்தில் விட்டுவரச்சொன்னால் ஒருநாளுமில்லாதவார்த்தை உக்கிரத்திற்ற உத்தாரஞ்சொல்லுகிறாய் சீதையைவனத்திலேவிட்டு வந்தாலாயிற்று விடாமற்போனால் என்முகத்தின்முன் நிலாவேண்டாம் அப்புறம்போம்பிள்ளாய்.

ஸ்ரீராமர் கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்,

அண்ணாவாரும்பிள்ளாய் கட்டியக்காரா லட்சுமணப்பெருமாள் போய்விட்டாராபாரும் பிள்ளாய்.

கட்டியக்காரன்சொல்-வசனம்-போய்விட்டார்சுவாமி.

ஸ்ரீராமர் வசனம்.

ஆனால்நம்முடையசத்துருக்கனை அழைப்பியும்பிள்ளாய்

கட்டியன்-வசனம். அப்படியேயழைக்கிறேன்சுவாமி

கட்டியக்காரன்-சத்துருக்கனருக்குச்சொல் வசனம்

சரணஞ்சரணஞ்சுவாமி சத்துருக்கமகாராஜனே தங்கள் ரகுநாயகர் அழைத்துவரச்சொன்னுர்வாருஞ்சுவாமி

சத்துருக்கர்-கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்,
ஆறுற்போமேவாம்வாரும்பிள்ளாய்

சத்துருக்கர்வருகிற ஓரடிதரு இ-ம்-நாததாயக்கிரியை-அடதாளம்,

பல்லவி,

சத்துருக்கர்வந்தார் சபைதனில் சத்துருக்கர்வந்தா

அநுபல்லவி,

மித்துருக்கர்புகழ் எத்திசைதனிலுயர்
வுற்றிருக்கமணி முடியிசைபி லங்கவே (சத்துருக்)

சரணங்கள்.

தசரதமகிபாலன் தோள்வலி தாவுமதிசீலன்
அதிரதற்கதிகாரன்புகழ் பெறும்யானைசேனைவீரன்
திசைகடலொலியாக மிருபுசமோசைகள்
ஜெயஜெயஜெயவென மூறைசெவொலிபெற (சத்து)

சத்துருக்கர் ஸ்ரீராமருக்குச்சொல்-வசனம்,

சரணஞ்சரணஞ்சுவாமி அடியேனை அழைப்பித்தகாரியந் தெரியச்சொல்லுஞ்சுவாமி-

ஸ்ரீராமர்-சத்துருக்கருக்குச்சொல்-திபதை-

தம்பிசத்துருக்கா நீதான் சதிருடன்ரதத்தைக்கொண்டு
வம்பெணுஞ்சீதைதன்னை வனத்தினில்விட்டுவாராய்
அப்புவிக்கச்சதாபித் ருலையால்நீயுமிப்போ (ம்
அன்பமாய்வார்த்தையொன்றுந் துடுக்கெனசொல்லவேண்டா

(வ-ம்) அகோவாருந்தம்பி சத்துருக்கா நீயாகிலுந் அன்பமாய் ஒன்றுஞ்சொல்லாமல் சீக்கிரமாய் சீதையை வனத்திலே விட்டுவாருந்தம்பிசத்துருக்கா.

பொது கொச்சகம்.

துய்யவெழுதுங்கொங்கை தோகையாஞ்சீதைதன்னை
வையகத்திலுள்ளவர்கள் வழுத்தும்வசையறிந்து
வெய்யவனமதனில் விட்டுவாவென்றவுடன்
ஐயோவெனச்சத்துருக்கர் அழுதுபுலம்புவரே

சத்துருக்கர்சொல்-கண்ணிகள்-இ-ம்-கண்டா-மீசுரதாளம்.

மாதவர்சீதையை வனந்தனில்விடச்சொன்னீர் அன்றுமே-இந்த
வங்கிஷத்துக்கெல்லாம் வார்த்தைகளல்லவோ ரகுராமா
பேதையாஞ்சீதையை யேதுக்குச்சொன்னீராயா- அன்றுமே நல்ல
பேரும்பெறவாழ்வும் பெண்களாலல்லவோ ரகுராமா
செந்திருமாதைத் தியக்கவிடும்போது அன்றுமே-அவள்
செப்பியசாபமு மெப்படி ரகுமா ரகுராமா
அன்னைசீதைதனை யென்னசொன்னீராயா அன்றுமே-இது
யாராலேவந்த வார்த்தையோ தெரியோ ரகுராமா

சத்துருக்கர்சொல் திபிதை.

இந்தமாமொழிகள்கேட்க வென்செவியற்றதையோ
சிந்தையிற்சிவமேமுன்னே செய்திடும்பாவந்தானோ
எந்தனுக்கிந்தபாவமிருந்ததோ யினியென்செய்வேன்
விந்தையாஞ்சீதையார்க்கு விதியின்வாரதிகேனே

சத்துருக்கர்சொல்-கண்ணிகள்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

அன்னைபெனுஞ்ஜானகியை
அடுக்குமோவனத்திவிட — ஹரிநாதா (அன்ன)
என்னமாய்மனந்துணிந்து
பேருவேனுன்கானகத்தில் — ஹரிநாதா (அன்ன)
கன்னலானமுகக்களெல்லாங்
கறுகிடுமேயென்செய்வேன் — ஹரிநாதா (அன்ன)
தின்மையானவார்த்தையொன்றுஞ்
சீதையர்க்குவரலாமோ — ஹரிநாதா (அன்ன)
வர்ணமானமேனியெல்லாம்
வாடிடுமேயென்னசெய்வேன் — ஹரிநாதா (அன்ன)
அன்றிலங்கையழித்து
அக்கினியில்மூழ்கிவந்தாள் — ஹரிநாதா (அன்ன)
பாக்குடன்சீதையைக்காட்டில்
பரிவாய்விட்டல்நீது — ஹரிநாதா (அன்ன)
நீக்குகள்சொல்லவேண்டாம்
நீசாதாராமச்சந்திரா — ஹரிநாதா (அன்ன)

சத்துருக்கர்சொல் வசனம்.

அரிகரியென்னபாதகஞ்செய்தேன் இந்தவார்த்தைதனையக்கேழ்க்க நான்முன்செய்த பாவந்தானோ இனியென்னசெய்யப்போகிறேன் சீதாதேவிக்கு என்னகாரணம்வந்தது அரிகரி.

சத்துருக்கர்-பிரலாபிக்கிறகண்ணிகள்.

இ-ம்-எதுகுலகாம்போதி — ஆதிதாளம்.

என்னசெய்வேன்ராகவரோ யேதுசெய்வேன்ராகவரோ
தின்மையானவார்த்தைதன்னை செவிதனிலேகேட்கலானேன்
என்னமாய்மனந்துணிந்து யேகுவேனுன்காட்டகத்தில்
மன்னவனேராமச்சந்திரா மனதிற்கோபமாகுமையா
அன்றிலங்கைதன்னையழித்து அக்கினிதன்னில்மூழ்கிவந்தாள்
மன்னவாஅயோத்தியாளும் மாதவாசரணமையா.

சத்துருக்கர்ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

பாக்குள்ள அயோத்தியாளும் பால்மொழிச்சீதைதன்னை
நீக்கிப்பேவனத்திலேவிட்ட நீதியோசொல்லுமன்னா

தேக்கியே அக்கினிகன்னிற் சீதைபுழுங்கிவந்தாள்
நீக்குகள்சொல்லவேண்டாந் தசாதராமச்சந்திரா

வசனம்.

அகோ சேனைமையா ரகுநாயகரே சீதையின்பேரில் குற்றமிருக்கிறதென்று சித்தம்பராமரித்தீரோ பதிவிரதையாயிருக்கப்பட்ட சீதையைக் குற்றஞ்சொல்லிக் காட்டிலேவிடலாமோ இந்தக்கோபத்தை மாத்திரம் என்னைக்கொண்டு மன்னியுங்சுவாமி.

ஸ்ரீராமர் சத்துருக்கருக்குச்சொல்-திபிலதை,

சந்தமாயக்கரைத்தாலும் தம்பியென்றிருந்ததெல்லாம்
செந்தணற்பூவென்றெண்ணிச் சேர்ந்ததோர்வண்டதானேன்
மூந்தவக்குறைகளெல்லா முடிந்திடவேணுமாகில்
எந்தன்கைவாளினாலே யென்னுயிர்மாய்த்துக்கொள்வேன்

வசனம்

அகோவாருந் தம்பிசத்துருக்கா இதுவரைக்கும் நானுங்களைத்தம்பிமாரென்று நினைத்திருந்ததெல்லாம் எனக்கெதிக்குவந்ததுசீதையைக்கொண்டுபோய் வனத்திலேவிட்டுவந்தாலாயிற்று இல்லாவிட்டால் என்னுயிரைப் போக்கடித்துக்கொள்ளுகிறேன் அப்புறத்தைப்போம்பிள்ளாய் சத்துருக்கா.

பொதுதிபிலதை,

வாளதுவுருவும்போது வகைகொளட்சுமணர்தானும்
நீள்காங்குவித்துசீந்தை நிலைகலங்கிமெய்ச்சார்ந்து
கோளவேசெய்யுமராமர் கொடுஞ்சிலையேந்துங்கையை
மீளவேயோடி ...ந்து விசையுடன்பிடித்திட்டாரே.

ஸ்ரீராமர் - ..ட்சுமணருக்குச்சொல் - கண்ணிகள்

இராகம்-மூகாரி-அடதாளம்,

கையைப்பிடித்த — தம்பி-ஒரு
காரியமுண்டானாற் சொல்லுந்தப்பி
செங்கைப்பிடித்த தம்பி-ஒரு
சேதிகளுண்டானுலசொல்லுந் தம்பி
வா..ளைப்பிடித்த தம்பி-ஒரு
..ர்த்தைகளுண்டானாற்சொல்லுந் தம்பி
அ..வாள்பிடித்த தம்பிஎன்னுடை
அருங்காரியமென்னசொல்லுந் தம்பி
சூ..ரிவாள்பிடித்த தம்பி-என்னை
கூறுகின்றுபதைச்சொல்லுந் தம்பி

இராகம்-ஸ்ரீராமர் லட்சுமணருக்குச்சொல்-கண்ணிகள்,
இராகம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

எதுக்கடா தம்பி யென்கைபிடிக்கிறாயிப்போ
தெனக்குச்சொல்லிப்போடா அப்புறத்தே (எதுக்)

சந்ததந்தாரத்தால் தன்னுயிர் மாய்க்கவும்
எந்தன்கைவாளினால் என்னுயிர் போக்கிறேன் (எதுக்)

சீதையாலேபெத்தன் சீவனைப்போக்கிறேன்
கோதையாளுயிரைக் கொடும்வாளுக்கிரைசெய்வேன் (எ)

லட்சுமணருக்கும் ஸ்ரீராமருக்கும் தர்க்கம்-கண்ணிகள்
இராகம்எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

லட்சுமணர் சொல்லல்.

அவபாதநாட்டில் ஆரோசொன்னானென்று
நியமாய்சீதையைவிட நீதியோராமா

ஸ்ரீராமர் சொல்லல்.

நீதிநீதியென்று ஙகவென்னோமும்
வாதிகனென்னோடு வாதிக்கலாமா

லட்சுமணர் சொல்லல்.

மாயப்பொய்வார்த்தையை வண்ணான்சொன்னானென்று
நேயசீதையைத்தள்ள நீதியோராமா

ஸ்ரீராமர் சொல்லல்.

நீதியல்லவென்றும் நீர்மனம்பொறுமென்றும்
வாதித்தெந்தன்னோடு வசிக்கக்கூடாது

லட்சுமணர் சொல்லல்,

வசிக்கக்கூடாதென்றீர் வனத்திற்சீதையை விடச்
செய்யாதகுற்றங்கள் செய்தாளோ அண்ணா

ஸ்ரீராமர் சொல்லல்,

செய்யாமலேகுற்றஞ் சேருமோவுலகத்தில்
எய்யாதவார்த்தையை யேனசொல்லிவாராய்

லட்சுமணர் சொல்லல்.

எய்யாதவார்த்தையை யினித்தள்ளதர்மமோ
ஐயாநீர்பிழைபொறும் அவள்நமக்கெதிரோ

ஸ்ரீராமர் சொல்லல்.

எதிரில்லையென்றவ ளில்லாத்தைச்சொன்னாலும்
அதிகாரிநானென்று அவளைத்தள்ளுவேனே

லட்சுமணர் சொல்லல்,

தள்ளுவதுநமக்குத் தர்மமோசீதையைத்
தெள்ளுப்புகழோயோதீதி தசரதராயா

ஸ்ரீராமர் சொல்லல்,

பாவம்பாவமென்று பரமார்த்தம்பேசுறாய்
கோபமானவார்த்தை கூறுகிறாயேடா

லட்சுமணர் சொல்லல்,

சொல்லுவதேகுற்றஞ் சொன்னோரோநாட்டினில்
எல்லோருமக்கினியி லிரங்கினதறியாயோ

ஸ்ரீராமர் அறிந்தாலுமுலகவாய் ஆராலேமூடலாம்
இருசான வண்ணானைச் சொல்லச்சொன்னேனே

லட்சுமணர் என்னசெய்தாளென்று பேதைசீதைதனைய
வனக்காட்டில்விட வகுத்தீரோ அண்ணா

ஸ்ரீராமர் வகுத்துச்சொல்வதென்ன மாதுசீதையாலே
அயத்தினிற்கோத்திரம் அசடாகுந்தம்பி

லட்சுமணர் அசடாகச்சொல்வது ஆரெனக்குச்சொல்லும்
கசடனாவானிறுத் கண்டிப்பேன் அண்ணா

ஸ்ரீராமர் கண்டிப்பதேதினி காரிகைசீதையைக்
கொண்டுபோய்வனத்தினிற் குவித்துவிடாயோ

லட்சுமணர் விடுவதென்னகுற்றம் வந்த தீதைதமல்
கொடுமையானகாட்டில் கொண்டுவிடேனே

ஸ்ரீராமர் கொண்டுவிடேனென்ற குவலயத்தோராண்மை
கண்டபடிநகைக்க காட்டியோதம்பி

லட்சுமணர் காட்சியாவதென்ன கலக்கமில்லாச்சீதை
மீட்டருட்டனதியில் மூழ்கிவந்தாளே

ஸ்ரீராமர் மூழ்கிவந்தாளென்று மேன்மைகள்சொல்லுறாய்
ஏழைவண்ணான்சொன்ன நிகட்சிகேளாயோ

லட்சுமணர் வண்ணானைக்கோபித்தவன் வாயாலுளறினன்
என்னுமற்றுற்றக்க வேர்லைவகொள்வீரோ.

லட்சுமணர்சொல்-[illegible]-இராகம்-பியால்-ஆதிதாளம்-பல்லவி,

பொறுங்களண்ணா அண்ணா
பொறுங்களண்ணாவைப் பொறுங்களண்ணா சோபம்
பொறுங்களண்ணா மலர்பாதரண்ணா

சரணங்கள்.

கலிவுசத்தமில்லாமல் கலந்துமொழிபேசாமல்
தனிபேபுத்திசொல்லாமல் தர்மநீதியில்லாமல் (பொறு)
கண்டபோர்களநமக்காரோ காவலர்புரியாரோ
அண்டர்முனிவோர்நிந்தனையில்படியென்பாரே (பொறு)
கொண்டபெண்டுக்காக நீர்மண்டபப்பிகொண்டீர்
தெண்டிக்கும்வாளாலுமினி கண்டதுண்டஞ்செய்கிறீர் (பொறு)

ஸ

பாதமலர்பணிகிறோம் பணிந்தும்மைத்தொழுகிறோம்
எதுமறியாச்சீதையை யிதோவனம்விடுகிறோம். (போறு)

லட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல் திபிதை

கொண்டிடும்பெண்டுக்காகக் கொற்றவாவுயிராமாய்த்தால்
அண்டர்மாமுனிவர்க்கெல்லாம் அடுக்குமோஇந்தவார்த்தை
வண்டணிசீதைதன்னை வனத்திலேவிட்டுவாறேன்
தெண்டனுந்தன்பாதம் திருவுளமகிழுமையா.

(வ-ம்) அகோவாருஞ்சுவாமி கொண்டபெண்சாதிக்காகவுயி ராய்ப்போக்கடித்தா லுலகத்திலுண்டான பேர்களெல்லாம் நகை ப்பார்கள் அதுநமக்கு பக்குவமல்ல சீதையைவனத்தில் விட்டுவரு கிறேன் கோபமில்லாமல் சந்தோஷமாகச்செலவுகொடுஞ்சுவாமி.

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-வசனம்.

அகோவாருந்தம்பி லட்சுமணா முன்னாற்சீதையானவள் தண்டகாவனம் பார்க்கவேண்டுமென்று என்னுடன்சொல்லியிருந்தாள் அந்த அடையாளஞ்சொல்லி சீதையை ரதத்தின்மேலேற்றிக் கொண்டு பொழுதுவெடிய ஜாமத்திற்குமுன்னே வனத்தில்விட்டுவாருந்தம்பி லட்சுமணா.

(லட்சுமணர் சொல்வசனம்) அப்படியேசெய்கிறேன்சுவாமி

லட்சுமணர் துயரத்துடன்சொல்-கண்ணிகள்

இராகம்எதுகுலகாம்போதி- ஆதிதாளம்.

தெல்திசைராவணனூர் அண்ணா
சீதைவனத்திற் சிறையிருந்தாள்
செந்தணல்மூழ்கிவந்தாள் அண்ணா
செந்திருவாகியே கண்மணியே
சந்தேகமென்பார்களோ அண்ணா
ஜானகியாளென்னும்நாயகியை

நிந்தனைசொன்னாலே வெகுதோஷங்கள்வந்துசெம்நீதியல்ல
தாயானசீதையருஞ்செய்ததர்மங்கள் பொய்த்துதோகாரணத்தால்
மாயமோஸ்ரீராமர்சொன்ன வாக்குத்தவாதுமன்னரசே
கன்னல்வரோசெரியசீதைகாட்டினிற்போகவேண்டாமண்ணா
மன்னனும்ஸ்ரீராமா அண்ணமனுக்களைக்காத்திடும்மகிபதியே
காதாலேகேழ்ப்பார்களோஐயோகண்டகனவின்படியிதுவோ
ருகாடும்வித்தைகளும்நம்மிடசூரியகுலத்திலுக்கேற்காதே
வேதாளமுள்ளவனம்அதுவெகுகொள்ளிவாய்ப்பேய்களுமுனிகள்
பூதப்பிசாசுகளும்நல்லபூமலர்கன்னிகளுள்ளவனம்
யாளிசிங்கம்சர்ப்பங்கள்கரும்யானைபுலிசரபாதிகளும்
கெண்டபேரண்டங்களும்நல்லகாண்டாமிருகங்களனேகங்களும்
அண்டப்பிசாசுகளும்நல்ல துஷ்டமிருகங்கள் தானுமுண்டே

பெண்தோஷம்பொல்லாது அதைப்பேதலமையாகவேசெய்குவரோ
(இதுவும்லட்சுமணர்சொல்-கண்ணிகள்-இ-ம்-கண்டசாபுதாளம்.)
பெண்டுகளைக்காட்டில்விட்டுப் பேருலகையாள்வதுண்டோ ராம
கண்டபேராசொல்லுமென்பார்காட்டில்விட நீதியுண்டோ ராமரா
வல்லோருவமைகேட்டுவனத்தில்விட நீதியல்ல ராமராமா
பெண்ணேராமாகநிந்தைபேசவுமொண்ணுதுகாண் ராமராமா
புலிப்பசித்தாலந்தப்புல்லைபொசித்திடுமோ ராமராமா
வலியஜானகிதன்னைவனத்தில்விட நீதியல்ல ராமராமா
எத்தனைப்புடம்போட்டாலும்இரும்புபசும்பொன்னுமோ ராமரா
எத்தனைமாத்துள்ளதங்கம்பழுதென்றுஞ்சொல்லலாமோ ராமரா
திக்குத்திசைகளெங்கும்ஜெயமானகீர்த்திப்பெற்ற ராமராமா
அக்கினியில்மூழ்கிவந்த அன்புடையசீதையாளை ராமராமா
என்னமாய்வனத்தில்விட யேகுவேனுன்கானகத்தில் ராமராமா
அன்னீதமாய்க்காட்டில்விட அடுக்குமோயிவ்வையகத்தில் ராமராமா
ஐயோநானென்செய்வேன் அன்னீதவார்த்தைக்குளானேன் ராம
துய்யனேயிந்தவார்த்தை சொல்லவொண்ணுதேஐயோ ராமராமா
வையகம்புகழ்சீதையை உய்யவனம்மேவுகின்றீர் ராமராமா
மெய்யனேகாட்டில்விடவேந்தனேமுறைமையல்ல ராமராமா
குற்றங்கள்குறைகளவள்மெத்தவும்மைச்செய்தாளோ ராமராமா
சித்தமூற்றிடுஞ்சீதையைமெத்தவனமேவுகின்றீர் ராமராமா
சிறையாகலங்கைதனில்சீதையாரிருந்தபோது ராமராமா
குறையில்லாப்பாணமேவி கோதைசிறைமீட்டுவந்தீர் ராமராமா
லங்கைதன்னையழித்திட்ட நாயகியாள்சீதையாளை ராமராமா
இங்கிதாதத்திலேற்றி யேகுவதுநீதியுண்டோ ராமராமா
என்னமாய்மனந்துணிந்துயேகுவேனுன்கானகத்தில் ராமராமா
முன்னமேசீதைக்குஅயன்என்னமென்றெழுதினனோ ராமராமா
தத்தளித்திடுமேமனது தாமரைஇலைத்தண்ணீர்போல் ராமராமா
இத்தலத்தையாள்சீதையைக்குற்றஞ்சொல்லியோட்டொணுது ரா
ஆதியில்முனிவோரிட்ட சாபமோவந்திதேனே ராமராமா
ஜோதியாகியசீதைக்கு யேதுகாரணம்வந்ததோ ராமராமா

லட்சுமணர்சொல் இயிதை.

ஜானகியென்னென்ற தாயினுமதிகமான
மாயினையுமயிலாள்தன்னை மனமதுதுணிந்துராமர்
கானகத்தேகுமென்றார் காரணவிதிமேல
நானென்னசெய்வேனையா நடப்பதேநீதிதானே.

(வ-ம்) ஹரி ஹரி சீதாதேவியை வனத்திற் கொண்டுபோய் விடச்சொன்னுரே என்னையோ மனந்துணிந்து சொன்னுர் நான்என்னமாய் விடப்போகிறேன் விடாமற்போனுல் அண்ணனுக்கும்

ளதிற்சோபமாயிருக்கும் அழைத்துக்கொண்டுபோய் விட்டுவரு
வோம்ராகவா

லட்சுமணர் சீதைக்குச்சொல் திபதை.

வண்டணாயே கேளீரியலுட நீயுமன்பு
பின்னியவனங்கள்பார்க்கப் பிரியமாயிருக்குதென்று
சொன்ன அருமைட்டைம்பா சீதானைகேயாமமோடு
அன்னையேசிலவுதந்தார் அடவியின் புதுமையைபார்க்க.

(வ-ம்) அகோவாருந்தாயே தண்டகாரண்ணியம் பார்க்கவே
ண்டுமென்று ரகுநாயகருடனே சொன்னையாம் இப்போது வன[illegible]
பார்க்கச்செலவுகொடுத்தார் போவோம்வாருந்தாயே.

லட்சுமணர் சீதையை அழைக்கிற-தரு

இ-ம்-எதுகுலகாம்போதி ஸ்ரீசாதாவம்-பல்லவி:

அன்னையேவாருமம்மா வனம்பார்க்க அருகவேவாருமம்மா

அநுபல்லவி.

அன்னையேவாருமம்மா அடவிப்புதுமைபார்க்க
சொன்னபடியேராமர் என்னையனுப்பிவைத்தார் (அன்)

சரணங்கள்.

அஞ்சுகாருஞ்சிதமோராமருடன்கொஞ்சுங்குயிலன்னமே
பஞ்சவர்ணக்கிளியைவனந்தனில்பார்க்கலாம் வேடிக்கையாய் (அ)
மாலுமயிலினங்கள்வனந்தனில்வாழ்கின்றபட்சிகளும்
கானகந்தனில்போய்வெகுவிதமனிசனிதரிசிக்கலாம் (அன்)
மாடப்புறவினங்கள்[illegible]ந்தனில்வாழ்கின்றபட்சிகளும்
ஜோடுசோடாகவேதானேஎன்னம்மணி சொருகுடன் விளையாடும் ( )

சீதைலட்சுமணருக்குச்சொல், திபதை-

என்னிடவதிபிடந்தாலே யியலுடன் வனங்கள்பார்க்க
சொன்ன அமுண்டுநாளும் ஜோபிதரா[illegible]ரோடே
இன்றுதானமாயியார்க்கு வியலுடன் சொல்லிவாரோன்
நன்றிதாய் நீயுந்தப்பி ரதங்கிலுமலங்கரிப்பாய்.

(வ-ம்) அகோவாருந்[illegible]பி லட்சுமணா முன்பு ரகுநாயகருட
னே தண்டகாரண்ணியவன[illegible]ர்க்கவேணுமென்று நான்சொன்
னதினாலிப்போது செலவு[illegible]ரோ நான்செய்தபாக்கியந்
தான் இப்பவும் கருசன்[illegible] கைகேயியென்னும் அத்தைமார்மூ
ன்றுபேருக்கும் நான்சொல்லி செலவுவாங்கிக்கொண்டு வருகிறே
ன் ரதத்தைச் சிங்காரிபுந்தம்பி லட்சுமணா.

சீதைலட்சுமணருக்குச்[illegible]சொல்லுங் கண்ணிகள்.

இ-ப்-எதுகுலகாம்போதி[illegible]தாளம்-

உய்மைத்தினைபோமென்று உத்தரஞ்[illegible]சொன்னோ லக்ஷ்மணரே
ஏன் பீதிஉமக்குபயமும் என்றுமுண்டோ சொல்லும் லக்ஷ்மணரே

வேடிக்கையாகவே தேனாவிளங்கச்சோடியத்தம்பி லக்ஷ்மணரே
அத்தைகளுஞ்சகலைக்கும் அடியணிந்தவாரேன்தம்பி லக்ஷ்மணரே
அம்மாமிகைகேசிக்கு அடியணிந்தவாரேன்தம்பி லக்ஷ்மணரே
மாமிசுமத்திரையாள் மலரடிபோற்றிவாரேனே தம்பி லக்ஷ்மணரே
அத்தைமார் ஜனகருக்கும் அடியணிந்தவாரேன்தம்பி லக்ஷ்மணரே
ஆலோசனைபண்ணுகிறீர் ஐயையோயோதோ தம்பி லக்ஷ்மணரே
பொன்னுரதத்தையிப்போ பூட்டசொல்லுந்தம்பி லக்ஷ்மணரே
தங்கரதத்தையிப்போ தான்பூட்டசொல்லுந்தம்பி லக்ஷ்மணரே
நூத்துரதத்தையிப்போ பூட்டுகிறடத்திவாரும் லக்ஷ்மணரே
வச்சிரரதத்தையிப்போ வாசலில்வரவழையும் லக்ஷ்மணரே
மைச்சினரியாதருக்குப்பத்திரங்கள் சொல்லிவாரேன் லக்ஷ்மணரே
தம்பிசத்துருக்கருக்குத்தைரியங்கள் சொல்லிவாரேன் லக்ஷ்மணரே
சீதையாமிமாரிடம்வருகிற-கண்ணிகள்-இ-ம்ன தருல காம்போதி-

ஜம்பை தாளம்.

சீதையாள்கமுசலையாள் தேவிதன்னண்டைக்கு
மோகத்துடனேவாரான் மூன்றுதலைகயாளுடன்
அன்னநடையானமாது அரிவையாளுசிரோமணி
மின்னலெனுங்கமுசலையாள் விடுதிக்குவாரான்
சின்னமலர்கொண்டு சிலசேடியர்கள்சூழ்ந்துவர
வர்ணமாலசீதையாருமாமிவீட்டுக்கு
பொன்னிறவளையல்மின்ன பொருந்தியவிடைதுவள
மின்னலெனுங்கமுசலையாள் [illegible]க்குவாரான்
கன்னியராலத்திசேர்ந்த காரிகையார்சூழ்ந்துவர
மின்னிபசிலம்பசைய மெள்ளவேநடந்தாள்
நித்தநித்தஞ்சுத்தமான பத்தினியாள்சீதையரும்
அத்தைசிற்பாதம் போற்றிவெற்றிபெறவே
தண்டையுந்தங்கமித்த தானிசையப்பூட்டி
வெண்டையப்புலம்பிடவே மெள்ளநடந்தாளே
பொன்னின்மணிகிண்கிணி சிலம்புபுலம்பிடவே
பின்னுஞ்சேகலைகள் பே[illegible]ஜ்ஜலழத்த
அன்னமெல்லநடை[illegible] [illegible]யர்கள்சிரோமணியும்
மின்னலெனுங்கமுசலையாள் வீட்டுக்குவாரான், (பொருதிசீதை,
சிருடனேய[illegible]த்தியா[illegible] [illegible]சாதல்யாரியான
காரிகை[illegible]சலயா[illegible] [illegible]கேசிசுமித்திரையோடு
சிருள்ளமுறன் [illegible]பெருந் [illegible]டிபோற்றவேதான்
தாரணிதனினில்[illegible] [illegible]னி தோலருவதானே-
(வ-ம்) ஆகோதெட்பிடியென்றன் ஸ்ரீராமருடைய தாய்மார்களி
வருகிறவிதந்தானே.

மாமிமார்கள்-மூவர்வருகிற-தரு-இ-ம்-மத்தியமாவதி - ஆதிதாளம்.

(பல்லவி,) தாய்மார்கள்மூவரும்வந்தார் ஸ்ரீராமச்சந்திரன்
தாய்மார்கள்மூவரும்வந்தார்

அநுபல்லவி.

தாய்மார்கள்மூவரும்வந்தார் தாக்குடனயோத்தியாளும்
மாயவன்ராகவனை மைந்தனைப்பெற்றெடுத்த தாய்

சரணங்கள்.

சீருள்ள அயோத்தியாண்டதசரதற்குப்பாரியான
காரிலைசகோசலையாள்கைகேசிசுமித்திரையாள் தாய்
சத்யமுள்ளராகவற்குத்தயவுள்ளலக்ஷமணர்க்கும்
அக்ஷயபரதருக்கும்அன்புள்ளசத்துருக்கருக்கும் தாய்
வருத்தமதாகவேவயிருக்கிறடை நடந்து
ஒருத்தியொருத்தியாய்த்திருத்தமதாகவே தாய்

சீதைமாமிமாருக்குச்சொல் அயிரிக்கை.

எதுகுலகாம்போதி-மிசுரதாளம்.பல்லவி,

சரணஞ்சரணமம்மா மாமிமாரே தாயேசரணமம்மா
அநுபல்லவி. சரணஞ்சரணமம்மா தாயேகோசலை
தரணிமேபோர்க்கத் தாயேவிடைதாரும் (சரணஞ்)

சரணங்கள்.

எந்தன்மனக்கவலை ஸ்ரீராமர்தீர்த்து
சந்தோஷித்தனுப்பிவைத்தார்
உந்தனிருபதத்தை உகந்துநான்பணிகிறேன்
சிந்தைமகிழ்ந்துநீங்கள் செலவுகொடுக்கவேணுஞ் (சரணஞ்)
அந்தப்புரத்திலொருநாள் ராமருடனே
சிந்தை மகிழ்ந்துரைத்தேன்
எந்தன்மனதைப்போலே யிருந்ததவர்மனும்
அந்தப்படிக்குநீங்கள் அருள்செய்யவேணுமே (சரணஞ்)
அச்சுதராமரும் மனமகிழ்ந்து
லட்சுமணனையனுப்பினார்
அட்சாதங்கொண்டு லை[illegible]னர்வந்தார்
இலட்சணம்போய்வா[illegible]யடியாள்சரணம் (சரணஞ்)

சீதைமா[illegible]ச்சொல் றிமெ[illegible].

உந்தன்மாமைந்தன்றன்னை யொருவரங்கேட்டுக்கொண்டேன்
எந்தனற்கவலைராம பத்ரரோதீர்த்தாரம்மா
மு[illegible]கியேவனத்திற்சென்று முனி[illegible]ரைசரணம்[illegible]ணி
சிந்தைதான்றெளியப்பார்த்து திரு[illegible]வேவந்[illegible]வனம்மா

(வ-ம்) அசோகேளுங்களம்மா மாமிமார்களே முன்னாலே ரகு
நாயகருடனே நான்தண்டகாரண்ய வனம் பார்க்கவேணுமென்று

சொல்லி யிருந்தேன் இப்போது செலவுகொடுத்து தம்பியாகிய லட்சுமணப் பெருமானையும் அனுப்பிவைத்தார் இளயபெருமாள் அதோவாசலில் வந்திருக்கிறார் நான்வனத்திற்குப்போய்ரிஷீஸ்வாளைத் தரிசனஞ்செய்து வருகிறேன் நீங்கள்சந்தோஷமாய்ச் செலவுகொடுத் தனுப்பவேணும் அம்மாமாமிமார்களே.

மாமிமார்கள் சீதைக்குச்சொல் இபிதை.

அன்னேயேசீதாயிப்போ அடுக்குமோவனத்திற்கேக
பன்னியவயிற்றிற்கெற்ப பாக்கியமிருக்கும்போது
மன்னவன்ராமபத்ரன் மனமகிழ்ந்தனுப்பினானே
என்னமாய்மனந்துணிந்து ஏகுவாயிப்போதம்மா

(வ-ம்)அகோவாருமம்மாசீதாய் உன்வயிற்றில் ஐந்துமாதம்கெர்ப்பபாக்கிய மிருக்கையில் ரகுநாயகருன்னை என்னமாய் மனம்வைத்து வனம்போகச் செலவுகொடுத்தார் நீதான் எப்படி போகப்போருய்சீதாய். (சீதைமாமிமார்களுக்குச்சொல்- திபிதை)

தவமதுசெய்யும்ராமர் தருக்குடனனுப்பிவைத்தார்
மவுனமாயுங்களுக்கு மனதிலேகிலேசம்வேண்டாம்
இவையினல்ரிஷிகள்பாத மிபனுடன்காணவேணும்
அவமதுசெய்திடாம லனுப்புவீர்சந்தோஷமாக

(வ-ம்) அகோவாருங்களம்மா மாமிமார்களே ரகுநாயகர் செலவுகொடுத்தபோது நான்வனத்திற்கு போகாமலிருந்தால் அவருக்குக் கோபம்வராதா நான்போகவேணும் சந்தோஷமாய் அனுப்பவேணுமம்மா மாமிமார்களே.

மாமிமாருக்கும்-சீதைக்கும்-தர்கப்-கண்ணிகள்

இ-ம்-எதுகுலகாம்போதி-மிசுரதாளம்.

மாமிகள் அடிபணிந்துவனத்திற்கு அனுப்புமென்றேசொல்ல
அக்கமுருகுதடி சீதையாளே
சீதையார் அடியனைராமர் ஆரண்ணியம்பார்க்க
அன்பாய்வரமளித்தார் என்னிடமாமி
மாமிகள் கடியவிருகந்தஞ்சூழ்ந்த கானகந்தன்னிற்போகக்
காரணமோசொல்லடி சீதையாளே
சீதையார் கடியவிருகஞ்சூழ்ந்த கானகந்தன்னிற்சென்று
கடிதில்வருவேனை என்னிடமாமி
மாமிகள் கொடியமிருகம்யாளி கூளிகள்சூழ்வனத்தில்
குதித்தங்கேசெல்லலாமோ சீதையாளே
சீதையார் கொடியமிருகமென்னை அணுகாமலிளையவரும்
கூடவருகிறாரே என்னிடமாமி
மாமிகள் வாடித்தேன்மொழிபுன்னை வனம்போய்வாவென்றிட
மனந்துணியுமோகண்ணே சீதையாளே

சீதையார் வடிவாளகேரிமேலேறி மந்திரசுமந்திரனுடனும்
வருவேனிந்தக்கண மென்னிடமாமி
மாமிகள் எய்யுங்கணைகள்போலே யிருசெவியில்நாராச
மேற்றிவிட்டாற்போலாச்சே சீதையாரே
சீதையார் எய்யுங்கணையென்று யென்னைவேண்டாமம்மா
இக்கணம்போய்வாறேன் மாமிமாரே
மாமிகள் செய்யுந்தவங்கள்பொய்யோ தெய்வமிப்படிதானோ
செய்யவதொன்றறியேனே சீதையாரே
சீதையார் செய்வேநீங்களிப்போ தியங்கவேண்டாமம்மா
திரும்பிவருகுவேனே மாமிமாரே
மாமிகள் ஐயோநாமென்செய்வேனாரண்யந்தனிலுன்னை
அனுப்படுவோநானிருந்தேனே சீதையாரே
சீதையார் அயோத்தியாளுநராமர் ஆரண்யம்பார்க்கவென்னை
அனுப்பினார்போய்வாரேன் மாமிமாரே
மாமிகள் மெய்யென்றிருந்ததெல்லாம் விழலுக்கிறைத்த
விட்டகதையாச்சே சீதையாரே
சீதையார் செய்யவனத்தினில் மேவுங்கன்னிமாரின்
வேடிக்கைபார்த்துவாறேன் மாமிமாரே

சீதைமாமிமாருக்குச்சொல் திபிதை.

வெடிநேரமாகுதிப்போ மெல்லியேமாமிமாரே
நெடியகாலங்கழிசென்று நிமிஷத்தில்வருவேனிப்போ
கடையொன்றுஞ்சொல்லிடாமற் சனகிபிற்சிலவுதாரீர்
அடியிணைபணிவேனென்னை யனுப்புவீர்விடைவிற்றுனே

(வ-ம்) கேளுமம்மா மாமியார்களே பொழுதுவிடியப்போகின்றது சீக்கிரமாகச் செலவு கொடுத்தனுப்பவேணும்மாமியார்களே

மாமிமார்-சீதைக்சொல்-கல்யாணிகள்-இ-ம்-சாம்போதி-ஆதிதாளம்.

மாடத்துக்கேற்றமணிவிளக்கல்லவோ சீதையாரே-எங்கள்
கூட்டத்துக்கேற்றகுயிலனமல்லவோ சீதையாரே
மாமனைத்துக்கேற்றபூமணையல்லவோ சீதையாரே-உலகில்
நாமனைத்துக்கேற்ற பாமணை[illegible]வோ சீதையாரே
கோடுகடவாதகோகிலமே[illegible]ணே சீதையாரே-இந்தப்
பாடுபடயிர்மன்பாவித்து[illegible]னோ சீதையாரே
அஞ்சுமாதம்பிள்ளைப் பிஞ்சல்லவோ கெர்ப்பச்சீதையாரே-உன்னை
அஞ்ச வனத்திலிக்கொஞ்சினிதிம்மா சீதையாரே
போமென்றுசொல்லவும் நாவுவருமோநான் சீதையாரே-பூமி
மேவியோருக்கெல்லாம் தாயெனிருந்தோமே சீதையாரே

சீதைமாமியார்களுக்குச்சொல் இபிதை.

விடையதுதருகவேணு மிக்கதோர்வனத்திற்கேக

நடையதுசொல்லவேண்டாத் தாயேகௌசல்யாதேவி
படையதமிகுத்தராமர் பாதமேறப்பிவெய்யோன்.
புடையதுகுழக்காட்டிற் போய்வாரேன்சரணமம்மா.

(வ-ம்) அகோவாருங்களம்மா மாமிமார்களே உங்களுடையகிருபாகடாட்சத்தினல் இப்பவும் நான் வனத்திற்குப்போகவேணுந்தடைசெய்யாமல் அனுப்பிவையுங்களம்மா மாமிமார்களே.

மாமிமார்கள் சீதைக்குச்சொல் திபிதை.

அரிவையேசீதாகேளாய் அடீக்குமோவனத்திற்போகத்
தெரிவையர்தோழிமார்கள் சேரவேகூட்டிக்கொண்டு
அருவனநீதல்னிற்சென்று அருமுனிவோரைக்கண்டு
திரமுடன்சரணஞ்செய்து சீக்கிரந்திருப்புவாயே.

(வ-ம்) அகோவாருமம்மா சீதாய் இப்போது நீவனத்திற்குப்போகவேணுமென்கிறபடியினல் நம்முடைய தாதிமார்களையழைத்துக்கொண்டுசென்று ரிஷீஸ்வரர்களைக்கண்டு தெரிசனஞ்செய்து சீக்கிரம்வருவாய்சீதா.

சீதையார்-வசனம்-மகாபாக்கியம்அம்மா மாமிமார்களே!.

சீதை-பரதருக்குச்சொல் திபிதை.

மைர்கினபரதசத்துருக்கா வார்த்தைநான்சொல்லக்கேளும்
அச்சுதருங்களண்ணர் அருளினல்வனமேபார்க்க
இட்சணஞ்சென்றகுற்ற விருடிகடமைப்பணிந்து
பட்சமாய்வருவேநீங்கள் பதனமாயிருந்திடீரே.

(வ-ம்) அகோவாருங்கள் மைத்துனராகியபாதசத்துருக்கரே நான்வனஞ்சென்று ரிஷீஸ்வரர்களைத்தெரிசனஞ்செய்துவருமளவும்பத்திரமாயிருங்கள் மைத்துனமாரே.

பரதர் சத்துருக்கர்சொல்-வ-ம்-அப்படியே போய்வருவாயம்மா.

லட்சுமணர்-சீதைக்குச்சொல்-திபிதை.

என்னிடமாயேவாராய் யித்தனைநேரமட்டும்
என்னதான்செய்தாயம்மா யித்தநிமிஷத்தில்நானும்
இத்திலந்தன்னிற்றேரை யியனுடனேட்டுதற்குக்
கன்னியேலட்சுமித்தேவி கடிகினில்ரதத்திலேறாய்.

வ-ம்-அகோவாருந்தாயேஎத்தனைநேரமாச்சுது பொழுதுவிடியப்போகின்றது சீக்கிரமாய்வந்துரதத்தின்மேலேறுந்தாயே.

பொதுதிபிதை.

பத்தியாமாமிமாராைப் பணிந்தவர்விடையுக்கொண்டு
முத்திசேர்வரமும்பெற்று மொய்க்குழல்சீதையாரும்
வஸ்திரம்பதக்கமுத்து மாலையுமெடுத்துக்கொண்டு
சித்திரதத்தின்மீது சீதையுமேறினளே.

சீதைதேரில்ஏறுகிறதரு-இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

பல்லவி.

சீதாலட்சுமிமாதுசிரோன்மணி-தேரினிலேறினளே - என்னம்மா

அநுபல்லவி. (தேரினிலேறினளே.

மாதுலட்சுமிமங்கைசிரோன்மணி வனசாரிபோனாளே (சீதா

சரணங்கள்.

ஏதுகாரியமென்று மனிதர்கள் ளெங்கித்தியங்கிடவே
  ஈதுகாரியமென்று மனதில் தியக்கங்கள்கொள்ளாமல் (சீதா)
வாது பேசியராவணன்சேனையை வதைத்திட்ட நாயகியாள்
  சூதுபோலேநடந்திடுங்காரியத் தோஷமறியாமல் (சீதா)
வெற்றிபேசியராவணன்சேனையை வேரூடனேபிடுங்கிச்
  சுத்தமற்றிடலங்கையழித்திடத் தோல்விட்ட நாயகியாள்சீதா
முத்துமார்பிலணிந்தபதக்க மொய்த்துநெருக்கிடவே
  கொத்துமோகனமாலையசைய கொந்தளவோலைமின்ன (சீ)
பூமிதன்னிலுதித்திடுஞ்ஜானகி போகதுரந்தரியாள்
  மாமிமார்கள்வழிவிட்டனுப்ப மனமதுதான்மகிழ்ந்து (சீதா)
கானகந்தன்னில்வாழுமிருஷிகள் கன்னிமார்தங்களுக்கு
  மானமொய்த்திடும்ஆடைகள் பூஷணமாலைகள்கைபிடித்து ()
வீடுதோறுமிருக்கின்றமாதர்கள் தேடியேவந்துதொழ
  காடுதன்னிலிருக்குமிருஷிகளைக் காணவேவேணுமென்று (சீ)
வேதநாதமுழங்கிடமெல்லியர் வெண்சாமரம்வீச
  நாதகீதந்தொனித்திட நரிபர்நாட்டியஞ்செய்திடவே ()

சீதை லட்சுமணருக்குச்சொல்-வசனம்.

அடேசுவாருந்தம்பி லட்சுமணா கானகத்தில்வாழுமிருஷிகளின் கன்னிமார்களுக்கு ஆடையாபரணம் பூஷணவர்க்கங்கள் எடுத்துக் கொள்ளுந்தம்பி மைத்துனா.

(லட்சுமணர்-வசனம்) அப்படியே யெடுத்துக்கொண்டேனம்மா.

லட்சுமணர்சொல்-தரு-இ-ம்-கலியாணி-மீசுரதாளம்.

என்னதுரிதமம்மா வனம்போக எதுதுரிதமம்மா
  கன்னல்மொழியாளே கானகந்தனைநோக்கி
உன்னிதமாகரத யோ[illegible]த்தே என்ன
  கோட்டைகொத்தளந்தாண்டினோம்தாயேசீதாய்
பாட்டைபேட்டைகள் தாண்டினோம்
  நாட்டுக்குநாயகமான சீதாதேவி காட்டுக்குப்போகாதங் க
பொறுதிபிதை. (டினமாய்வருகுது என்ன
இளை[illegible]யாரொருகாலத்தும் அசைந்திடாதந்தானிப்போ
[illegible]யவேஅச்சொடித்து பாரினில்விழுந்ததென்று

கைதனை முறித்துக்கொண்டு கனத்ததோரச்சைப்பூட்டி
உய்யவெதிர்நிறதேலை யோட்டினூர்வனத்தைநோக்கி.

(வ-ம்) அசோதெப்படியென்றால் ஒருகாலத்திலுமொடியாத அச்சு இன்றையத்தினம் ஒடிவானேன் சீதையை அநியாயமாய்ச் காட்டில்விடப்போகிறபடியினாலே ஒடிந்தது என்னபிழைவரு மோதல்லதுவேறேஅச்சுப்பூட்டி வனத்தைநோக்கி யோட்டுவோ மென்றலட்சுமணர்மனதிலெண்ணிபூட்டியோட்டுகிறவிதங்காண்க.

லட்சுமணர்பிரலாபிக்கிற கண்ணிகள்- இ-ம்- எதுகுலகாம்போதி ஆ-ம்

என்னசெய்யப்போறேன் என்னுயிர்பாக்கனே ராமராமா
முன்னாட்செய்தவினை முடிந்துதேயிக்குமே ராமராமா
கற்பெனுஞ்சானகி கடியுற்றபாவமோ ராமராமா
உன்வாக்குதவறாமல் வந்தேனேவனத்திற்கு ராமராமா
கல்லைப்பெண்ணாக்கிய காரணமோராகு ராமராமா
என்னைகடக்கையில் அச்சுமுறிந்துதே ராமராமா

சீதைசொல்லுகிறது,

வன்னமாஞ்சிகரத்தேரும் வனமதுபோகும்போது
புன்னைமாமரமுந்தேக்கும் பொருந்தியவனத்தில்வாழும்
தன்னிகரிணையில்லாத சற்குணபட்சியெல்லாம்
துன்மைசேர்சகுனமாகத் தோன்றுதலக்ஷமணரே

(வ-ம்) அசேவாருத்தம்பிலட்சுமணா அயோத்தியைவிட்டுவனத் திற்குப்போகிறபோது இந்தவனத்தில்வாழப்பட்ட பட்சிகளெ ல்லாம் அவசகுனமாகுது பாருந்தம்பிமைத்துனா-

சீதைசொல்-சகுனக்கண் [illegible] -ம்-முகாரி-ஆதிதாளம்.

பூனைகுறுக்கிடுது தம்பி
போகவொண்ணுதநாமுங்கானகத்தில் நான்
என்னசெய்வேனெதுசெய்வேன் தம்பி
யேகவொண்ணுதநாமுங்கானகத்தில் அய்யோ
மொட்டைப்பாப்பாத்திபிதோவாறாள் தம்பி
மோசம்வரும்காட்டிற்கேகொண்ணுது இதவும்
என்றலவிதிப்படியோ தம்பி
யேகவொண்ணுதநாமுங்கானகத்தில் இதோ
பார்ப்பாரொருவனிதோவாறான் தம்பி
பாருமைப்பாயெதிராகவோடிக் கொண்டு
இச்சகுனம்பொல்லாது தம்பி
யேகவொண்ணுதநாமுங்கானகத்தில் இப்போ
விறகுதலையொருவன்வாறான் தம்பி
மேவிநடக்கொணுதகானகத்தில்
என்னொனட்கருடமிடுத்துசெக்கான் தம்பி

எதிராகவருகிறான்பாருமிதோ தம்பி
ஊரில்நகைகள்செய்யும் தட்டான்
ஒண்டியாகவருகிறான்பாரும் தம்பி
கூடியழுகிறாள்வேடச்சி தம்பி
கூசாமலோட்டுகிறிரதத்தையுமே தம்பி
வருகுதையாடாம்புயெதிரக
வழிநடைக்கண்டுநாமுப்போகொண்ணாது இதுவும்
என்றலைவிதிப்படியோ தம்பி
ஏகவொண்ணாதுநாமுங்கானகத்தில் (சாப்புதாளம்.

சீதைக்கும் லட்சுமணருக்குந்தர்க்கம்-கண்ணிகள் இ-ம்காம்போதி

சீ, துன்மையாய்ச்சகுனங்கள் தோற்றுதுபாராயா லக்ஷுமணரே
நன்மையோவனம்போக நன்றல்லவேஷாணும் லக்ஷுமணரே
ல, அன்னமேநீயொன்றும் அஞ்சிடவும்வேண்டாந்தாயேசீதாய்
மன்னாகுராமனை மனதில்நினைந்துகொண்டுநாயேவாரும்
சீ, வலியனுங்கட்டுது மனத்துயராகுதே லக்ஷுமணரே
மெலிவானகாட்டினில் மேவவொண்ணாதையா லக்ஷுமணரே
ல, நலிவானவார்த்தைகள் நவின்றிடவும்வேண்டாந் தாயேசீதாய்
சலியாதேயுனக்கொரு தாட்சிவாராதொன்றுந் தாயேவாரும்
சீ, கருடனுங்கட்டுது நரிகுறுக்கோடுது லக்ஷுமணரே
பரிவுடன்வனம்பார்க்கப் பதறிநடக்கொணாது லக்ஷுமணரே
ல, தெரிவையேநீயொன்றுஞ் சிந்தனைபடவேண்டாந் தாயேசீதா
குருவருளாலே குறையொன்றும்வாராது தாயேவாரும்
சீ, வாட்டமாய்நரையாளு[illegible]டமாகுதே லக்ஷுமணரே
காட்டுக்குள்ளேபோகவுங் காலமல்லவே லக்ஷுமணரே
ல, காட்டிலுள்ளராஜர் நம்மைத்தடுத்தாலும் தாயேசீதாய்
வாட்டியுயிரை வாளுக்கேற்றுவேன் தாயேவாரும்
சீ, விச்சுளிகட்டுது மைத்துனஇதோபாரும் லக்ஷுமணரே
இட்சணம்அயோத்தி யேகுவதேநன்மை லக்ஷுமணரே
ல, அச்சம்நீயெண்ணாதே அடவிபோவோமென்று தாயேசீதாய்
இட்சணமிருகத்தை யேற்றுவேனமலோகம் தாயேவாரும்
சீ, காவென்றுகூவியே காகமுங்கட்டுதே லக்ஷுமணரே
வாவென்றுநீயுவனத்தில்நடக்கிறீர் லக்ஷுமணரே
ல, ஆவென்றநீரும்அ[illegible]றுவதேனம்மா தாயேசீதாய்
உன்னுவுவாண்டு நலக்குதேவேலியுந் தாயேவாரும்
சீ, நெருப்புமெதிர்வர நின்றுதளர்ந்தேனே லக்ஷுமணரே
[illegible]ருப்புமெக்குலதேவைதிருப்பாமற்போறீரே லக்ஷுமணரே
ல, விருப்பமாய்கானக மேவிவந்தோமம்மா தாயேசீதாய்
வெம்பிஅயோத்திசேர்ந்தால்ஸ்ரீராமரேதுசொல்வார்(தாயே

சீ, என்னசொன்னாலு மிராங்காமத்போரீரோ   லக்ஷமணரே
என்னவகைசொல்லுகிறீர் எதுமறிகிலேனே   லக்ஷமணரே
ல, என்னசொல்வேனம்மா விசுபமாய்முனிவரைத் தாயேசீதாய்
முன்னேகாணவேணும் முடிநடந்துவாரும் தாயேவாரும்
சீதைசொல்-கண்ணிகள்-இ-ய்-எதுகுலகாம்போதி-மிசுரதாளம்
இந்தச்சகுனமெத்த விந்தையாய்க்காணுது
என்னலட்சுமணரே என்னையா   ஏதையாமைத்துனரோ
வந்தபொழுது   வலியனுங்கட்டுது
வரிமபோலட்மணரே வனப்போக   தர்மமோமைத்துனரோ
குந்திக்குந்தியாந்தை   கோவென்றுகூவுதே
கோலமோலக்ஷமணரே இதுவென்ன   சீலமோமைத்துனரோ
கோவென்றுவேடர்கள்   கூடியழுகிறார்
குறியீர்லக்ஷமணரோ அதோயெதிர்   அறியீர்லக்ஷமணரே
இன்றுமனதிற்   கவலைக்குள்ளாகுதே
என்செய்வேன்லக்ஷமணரோ   அல்லாமலஞ்சுறேன்-மைத்துனரே
மிஞ்சிவனத்தினிற்   போவதுநலமல
விதியோலக்ஷமணரோ அல்லாமல்   மதியோமைத்துனரே
நாடிநடையிட   மாகவருகுது
ஓகோலக்ஷமணரே மனத்துயர்   ஆசாதுமைத்துனரே
உத்தமராமருக்குக்   குற்றப்வருகுது
உரியோலட்சுமணரோ வருப்விதி   பதிவென்மைத்துனரே

சீதை-லக்ஷமணருக்குச்சொல்லுகிறது.

லட்மணருசொல்லக்கேளீர் த[illegible]லவிவ்வனத்தில்
துட்சணநிமித்தந்தா[illegible]ந தோன்றிட்டதாகாதையா
பட்சிகள்சகுன[illegible]ளவிப் பார்வனம்போகொணுது
இட்சணமபோத்திநோக்கி மியலுடன்திருப்புந்தேனா.

(வ-ம்) அகோவாருந்தம்பி லட்சுமணரே சகுனங்களெல்லா மெதுவாயிருக்கின்றது ரதத்தைத்திருப்பி அயோத்திக்கு நடத்து ந்தப்பி மைத்துனரே.

(சீதை பிரலாபிக்கிறகண்ணிகள்-இ-ம்-நீலாம்புரி-திரிபுடைதாளம்.)

நாடுமயோத்திவிட்டு நான்வரவோகாடதனில்
பாம்புக்குழுக்காச்சுதையோ பட்சமுள்ளல[illegible]மணரே
காட்டிலுள்ளபட்[illegible]யெல்லாங் கனத்[illegible]பாகுதையோ
நாட்டிலில்லாவிதிவசமோ நானித[illegible]குஎன்[illegible]செய்வேன்
தாவீழுகயோகோட்டான்கூவத் தர்மமல்லவனத்திற்போக
எட்டினிலயன்விதித்த வெழுத்திதுவோவென்னசெய்வே[illegible]
காட்டில்நுயல்கிறுக்கிடுதே கருங்குருமான்கட்டுதையோ
நாட்டிலில்லாசகுனமிதோ நனையானுங்கட்டுதையோ

அருமையான சகுனமையா அதோபாருங்லக்ஷமணரே
கருடன்வலமாகுதையோவிதத்தென்ன செய்வேன் லக்ஷமணரே
கட்டுக்காடைவலமாகக் காகமுந்தான்கட்டுதையோ
மட்டில்லா சகுனமையோ வனத்திற்போகவொண்ணுதையா
ஏதுபோற்சகுனமெல்லாம் வழியிற்றடையாகுதைய்யா
ஏதுசெய்வேன்லக்ஷமணரே யென்மனதுவேகுதையோ
சாகிறபோதுந்தான் சகுனந்தள்ளிப்போவதுண்டோ
ராகவரோடென்ன செய்வேன் லக்ஷமணரேயேதுசெய்வேன்.

சீதைலட்சுமணருக்குச்சொல் திபதை.

நன்றல்லச்சகுனமெல்லாம் லட்சுமணரோநீர்கேளீர்
இன்றைக்குமேதிரும்பி யிராவுக்குநின்றுதங்கி
நின்றுட நாளைக்கெல்லாம் லட்சுமணுவருவோங்கண்டாய்
சென்றிடவயோத்திநோக்கித் திருப்புவீர்தேரைநீரே

(வ-ம்) அகோவாருந்தம்பி லட்சுமணு சகுனநன்றாயிருக்கவி
ல்லையென்று நான்சொன்னால் அதற்குப்பிரதியுத்தாஞ் சொல்லாம
ல்ரதத்தைநடப்பிக்கிறாய் இன்றையதினம் அயோத்திக்குப்போய்
நாளையத்தினம்வருவோமேயல்லாமல் இன்றைக்குப்போகப்போ
காது ரதத்தைத்திருப்பி அயோத்திக்குவோட்டுத்தம்பி லக்ஷமணு.

லட்சுமணர் சீதைக்குச்சொல் திபதை-

நற்பனவனுதித்தந்தோன்றுதிருப்புந்தேவியென்
னிப்படிச்சொல்லமோ என்னிடதாயேவாரீர்
அற்பமாய்வருவதெல்லாம் அவதியேசிதறுங்கண்டாய்
நற்பதம்பணியுராமர் நல்லரு[illegible] நினைத்திடவே.

(வ-ம்) அகோவாருமம்மாசீதாய் எ[illegible] வார்த்தைசொல்லுகிறு
ய்இப்படிசொல்லலாமோ அற்பமாய்வ[illegible]ப்பட்ட பட்சிசாதிகளுக்
குப்பயந்து அயோத்திக்குப்போய்விடுகிறதா அதுகெட்டதுநீர்ர
குநாயகரை மனதிற்றியானப்பண்ணினால் ஒருதீங்கும்வாராது தாய
த்திரியப்படவேண்டாம் சும்மாவாருந்தாயே.

சீதைசொல் பிரலாபக்கண்ணிகள் - இ-ம்-முகாரி- ஆதிதாளம்.

என்னதீங்குவருகு[illegible]தையோ வெந்தனுக்குலட்சுமணரோ
என்னமென்றெறு[illegible]றே வென்னசொல்வேன்மைத்துனரோ
நாட்டிலில்லாவிதியிலெ[illegible] நானிதற்குஎன்னசெய்வேன்
எட்டிலயன்விதித்த வெழுத்திதுவோவறிகிலேனே
பெண்பிறந்துபட்டகுறை போதுமையாவெந்தனுக்கு
அன்[illegible]ன்வார்த்தைதள்ளாமலே அருமைபடவிட்டுனாயா
வ[illegible]ம்பார்க்கவந்திடத்தே மனத்துயரம்போதுமையா
னைத்தேதாயோத்திவிட்டுக் கலக்குறேனைமைத்துனரே

சீதைலட்சுமணருக்குச்சொல் கொச்சகம்,

இன்னிமித்தங்கண்டோ இளையவோ நம்மூவருக்கும்
மன்னவர்க்குநன்மையுண்டு மற்றவர்க்குமேகத்தான்
துன்னுமுகத்திராசர்களுஞ் சோர்வின்றிவாழ்வடையார்
என்னியாமெந்தனிட காரணத்தில் செப்பலறியேன்.

(வ-ம்) அகோவாருந்தம்பிமைத்துனா இந்தாகுணத்தில்குணம் அயோத்திபாபுரியாளப்பட்ட ரகுநாயகருக்கும் மற்றுமுண்டானவர்களும் ஒன்றுமில்லை என்னுடைய வித்தியினவன்மை நான் அறியமாட்டேன் தம்பிமைத்துனரே.

(சீதைசொல்பிறலாபக்கண்ணிகள்-இம்-கண்டா சாபுதாளம்)

வருகிறவிதியிது வழியில்தக்காதென்பார் லக்ஷமணரே-அந்த
மலரயன்சொற்படி யெவராலுந்தவாது லக்ஷ்மணரோ
அருமொழிவார்த்தைக்கு அப்ரியநீர்சொன்னீர் லக்ஷமணரே
ஐயோபெண்பிறப்பு ஆகாதாகாதென்பார் லக்ஷமணரே
வையகத்தார்சொல்லும் வார்த்தைபோலாச்சுதே லக்ஷமணா - இப்ப
ஒருத்திபெண்பிறந்து உண்டோமலாமேனே லக்ஷ்மணரோ
பருத்திபடாதபாடு பட்டுஉழலுகிறேனே லக்ஷமணரே-ஐயா
திருப்புந்தேனா அயோத்திக்குப்போய்ச்சேரும் லக்ஷமணா
இனிசெய்வதறியேநான் தெரியசொல்லுங்காணும் லக்ஷமணரே

சீதைலக்ஷமணருக்குச்சொல்-திபிதை.

அடவியில்வந்தேடபிப்போ ஆனதோரிஷியைக்காணேன்
பிடிமதிமன்னர்கோவே பெரும்புலிமிருகங்கண்டேன்
வடிவுள்ளரிஷிகள்தம்மை வனத்திலிற்காண்கிலேனே
திடமுடனெந்தனுக்குச் …ரியுரையுமோவே.

(வ-ம்) அகோவாருந்…மைத்துனா இந்தவனத்தில் முனிவர்களைக்காணவேணுமென்…தோம் ஒருவரையுங்காணகிலோம் துஷ்டமிருகஜாதிகளைக்கண்டோம் ரிஷிகளிருக்கப்பட்டவனம் இன்னம் எத்தனை தூரமிருக்கின்றதோ எனக்குத் தெரியச்சொல்லும் மைத்துனரே,

சீதைக்கும் லட்சுமணருக்கும் தர்க்கம்-கண்ணிகள்-இராகம்-
முகாரி-ஆதிதாளம்.

லட்ச, தாயேசீதாகேளுமம்மா
தழைத்தவனந்தோப்புக்கப்பு…தான்
தூயதோர்முனி ஆசிரமங்கள்… இதோ
தோணுதியாரம்மா தூரமில்லை
சீதை, தூரமெட்டாத்தூரம் வந்தோந்தம்பி இங்கே
தோணுதுக்கங்கள் தோணுதையா
இருக்காமேனன் பெருக்காமேனன் ஒரு

அருமைரிஷி பேச்சுக்காமேனன்

லட்சு, செய்யலாவதென்னவம்மா முன்பு
செய்தவிதிப்படிதப்பாது
அப்பநீஎன்றுதே மனதில்
அனந்தரிஷிகளைச் சேர்வைசெய்வோம்

சீதை. வனத்தில்நாளைவந்தரிஷிகளை நாம்
வண்மையுடனே சேர்வைசெய்வோம்
இனித்தான்திருப்புந்தேனா தம்பி
இன்னேரம்போய்ச்சேர்வோம் அயோத்திக்கு

சீதைலட்சுமணருக்குச்சொல் திபிதை,

முன்னம்நாமடவிதன்னில் மூவரும்வந்தபோது
இன்னிலத்ததிசயங்க ளியானையுங்கண்டோமிப்போ
வன்னமாயன்னப்பட்சி வனத்தினிற்காணேனையா
என்னதானெனக்குமிப்போ திளையவாயுரைசெய்வீரோ

(வ-ம்) அகோவாருந்தம்பிமைத்துனருமுன்னாலுங்கள்தமையன் ரகுநாயகருடன்நீரும்நானும்மூவரும்வனத்திற்குவந்தபோதங்கே ரிஷிகளுடையபன்னசாலைகளும் பூங்காவனங்களும் அன்னப்பட்சிகளும்ரிஷிகளையுங்கண்டோமே இப்போதுஒருஅதிசயமுங்காணேம் அந்தவனம்எந்தவனம்சொல்லுந்தம்பி மைத்துனரே.

லட்சுமணர்சொல் திபிதை.

தாயேகேள்சீதாயிப்போ சந்தேகப்படவேவேண்டாம்
வேயதாய்வனங்கடந்து மீண்டிடும்போதிலப்பால்
தூயதோர்தென்னந்தேக்கும் துலங்கியமயிலுமன்னம்
நேயமாய்தங்யுந்தோப்புந் நிமிஷத்திற்காண்பிப்பேனே:

வ-ம்-அகோவாருமம்மாசீதாய்நீவிசாரப்படத்தேவையில்லை இந்த மூங்கில்வனங்கடந்துஅப்பாற்போனால் கானனங்களும்ரிஷிகளுடையபன்னசாலைகளும் ஆசிரமங்களும் விநோதமானபட்சிகளும் ஒருநிமிஷத்திற்குள்ளேகாண்பிக்கிறேன் சும்மாவாருமம்மாசீதாய்

(லட்சுமணர் சொல்-கண்ணிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதி-)

அன்னையேவாருமம்மா அடவியில்முன்னமேவாருமம்மா
இன்னிதமாக முனிவோர்கள்வாழ்கின்ற
உண்மையாய்ப்பாருமம்மா என்னம்மணிஉண்மையாய்ப்பாருமம்மா
கற்பகச்சோலைகளும் அடவியி லற்புதஆலைகளும்
விற்பனர்வாழ்கின்ற ஆசிரமங்காணுது
மெல்லியேபாருமம்மா என்மதனி மெல்லியேபாருமம்மா
சந்தனதேக்குமரம் அடவியில் செந்தூரப்பாக்குமரம்
இந்தவனத்தி லதிசமாய்க்காணுது
என்றுமேவாருமம்மா என்மதனி யென்றுமேவாருமம்மா

வேதமுனிவோர்கள் தவஞ்செய்யும் வேள்விகள்சாலையிது
போதரவாகினோர்ஸ்நானஞ்செய்யும்
புண்யத்தடாகமிது எனமதனிபுண்யத்தடாகமிது
சத்தரிஷிகளெல்லாமிவடத்தில்நித்தந்துதிகள்செய்வார்
உத்தமியேசீதாய்பத்தியுடன்றொழுதேன்
சித்தமகிழுமம்மாஎன்மதனிசித்தமகிழுமம்மா

சீதைலட்சுமணருக்குச்சொல் திபதை.

நதியிதுகண்டோமிப்போ லட்சுமணாநீதான்பாராய்
விதம்பெறக்குயில்கள்கூவும் வேதனையிவர்களுக்கும்
முதியதாயிருந்தபேர்க்கு மூழ்கியதபோதனர்க்கும்
கெதிபெறயிவர்கட்கெல்லாம் கிளர்த்துகைகூப்புவேனே.

(வ-ம்) அகோவாரும் தம்பிலட்சுமணா இதோநதியைக்கண்டேன் இதோயாகசாலைகளைக்கண்டேன் ரிஷிகள்வாசஞ்செய்யும் ஆசிரமங்களைக்கண்டேன் ரிஷிகள்படிக்கப்பட்ட வேதகோஷ்டங்கள் என்காதிலே அடிபடுகுது இந்தரிஷிகளை தெரிசனம்பண்ணவேணுமென்றால் இந்தகங்காநதி யெக்கண்டமாய்ப் பெருகிவருகின்றது நானென்ன செய்யப்போகிறேன் தம்பிலட்சுமணரே

(லட்சுமணர்சொல்-வ-ம்.) அகோகேளுந்தாயே சீக்கிரமாக இந்தநதியில் ஸ்நானஞ்செய்துஜெபதபமுடித்துக்கொள்ளும்இதோ ஓடக்காரனை அழைப்பிக்கிறேனம்மா சீதாய்

பொதுதிபதை.

தெரிசனைகண்டபோது தேன்மொழிசீதையாரும்
பெருகியகங்கைதானும் பொட்டெனவெழுந்துநிற்க
பரிவுடன்தீர்த்தமாடிப் ...க்குடன்பூசைசெய்து
அரிசினிவிருக்கும்போ..து அண்டையிற்குகன்வந்தானே

ஓ..க்கா.. வருகிற-பொதுதிபதை.

கோபமாய்க்குகனைப்பார்த்து கொள்ளையாய்க்கங்கைக்கப்பால்
போகவேகாரியமுண்டு பொட்..னவோடந்தள்ளும்
பாகமாயமைபுமென்ன பரிவாயப்போதுதானே
குகையாயோட்க்காரர் குழுந்திடக்குகன்பால்வந்தார்.

குகனும்-ஓடக்காரனும்வருகிற-கண்ணிகள்

இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

நலையிலுருமாலைவளைதடியும் நல்ல நர்ழச்..புஞ்சல்லடமும்
வன மூலிகைகைகொண்டு நல்குகனும்.. துதோணிகுன்
ஆணிமுத்துபவழங்களாம் நல்ல ஆயிரமாத்துத்தங்கங்களாம்
காணிக்கையாகக்கொண்டு நல்லகுகனும் வந்தானதோணிகுன்
அப்புவில்லெடுத்துக்கொண்டு நல்ல ஆறுமூன்றுயிரந்தொடுத்துக்

கொண்டுகொம்புத்தேனுங்கொண்டு நல்ல குகனும்வந்துதோணி னல், தாமரைமலர்கொண்டு எங்கள் தாயார்சீதைதலைபக்கரை வென்று, ராமர்க்கடிமையென்ற கங்கா நதியோடக்காரர்தோணிஞர் ஓடக்காரர்சொல்கண்ணிகள்-இ-ம்-சங்கராபரணம்-மீசுரதாளம்.

ஆருங்காணுமிப்போநம்மையழைத்தது
 அகத்தியஞ்சொல்காணும் நீங்கள்
ஊரைவிட்டுயிந்தப் பாரில்வந்ததேது
 உண்மையைச்சொல்வீர்காணும் (ஆருங்)
இந்தஅம்மையிடஅழகுமொழிஇலும்நா
 னெங்குங்காணேன்காணும் (ஆருங்)
இருட்டுவேளைதன்னிற்றிருட்டுத்தனமாக
 யெங்கேபோறீர்காணும் (ஆருங்)
ராஜாதிராஜரோ நகரைவிட்டுக்குடி
 நாடியேபோவாரோ (ஆருங்)
மெய்புகழ்சொன்னல்வகைக்குவேடங்கள்
 வேண்டித்தருவேன்காணும் (ஆருங்)
வானவர்தேவரோவழிதப்பியிந்த
 வனத்திலேவந்தீரோ (ஆருங்)
அன்னநடையாளும்ரதிபோலுங்காணுது
 மகாலட்சுமிதானோ (ஆருங்)

லட்சுமணர்குகனுக்குச்சொல் திபிதை.

வைகையிலோடந்தள்ளும் வண்மையாங்குகனேகேளாய்
செய்கைகொள்ராமர்தேவி சீதையாம்லோகமாதா
உய்யவேவனங்கள்பார்க்க உதிக்குமுன்போகவேணும்
ஐயமில்லாமலோட மருகினில்லமைத்திடாயே.

(வ-ம்) அகோவாரும்பிள்ளாய் குகனே குறாயசருடையதேவி யாகிய சீதாங்கனியம்மன் சூரியோதயத்திற்கு முன்னேதெண்ட காரண்ணியவனத்திக்குப்போய் ரிஷிபத்தினிமார்களைச் சேர்வை செய்யவேணுமென்று புறப்பட்டபடியால் சீக்கிரமாக ஓடத்தை கொண்டுவாருங்குகனே (குகன்-வ-ம்) அப்படியேநல்லதையா.

ஏலப்பதம்-கண்ணிகள்.

ஏலேலோ ஏலேலோ-ராமஜெயம்
 ஏலே[illegible]-ஏலேலே (ராமஜெயம்)
தேக்குமரங்களிலே (ராமஜெயம்)
திரள்பலகைதனைச்சேர்த்து
வாகான அச்சணிந்து-வகைவகையாய்வட்டமிட்டு
 தீர்க்கமுடன்கழுங்காலிதிரட்டியதிற்றாணிருத்தி (ஏலே)
ஏக்கமுடன்பொன்னதனால்இசைத்துஅதில்மச்சணிந்து

(தா) சிக்காரமாய்ச்சமைத்த ஓடத்தின் மீதில்
சீதையும்லட்சுமணரும்வந்துமேற்கொள்ள
லங்காரமாகவேகுகன்மனுஷர்வந்து
ஓடமேதள்ள அலைமோதிலுள்ள அடிமெள்ளமெள்ள
ஆடிக்க பாடிக்க தேடிக்க கூடிக்க (ஏலேலோ)
விசையானகங்கைதனில் விட்டுவரும்ஓடந்தன்னை
அசையாமல்நாற்புறமும் அமர்ந்திருக்கும்ஓடக்காரர்
திசையானகுகனுமதில் திடமுடனேசுற்றிவர
(தா) அலைக்குதடா ஒருபுறமாய் அடிமரத்தைச்சாயித்து
நிலைக்குதில்லையிவ்விடத்தில் நங்கூரம்பாச்சி
இதோ ஆச்சுது யிவடம்விட்டுப்போச்சுது (ஏலேலோ)
கருணிதரும்தாமரையும் நல்லகடல்தமைக்கும்அல்லிகளும்
படல்போலேஆமைகளும் பவழக்கொடிநண்டுகளும்
திடமுடனேபாம்புகளும் திரளானநதிதனிலே
(தா) லட்சுமணர்சீதையை நிறுத்திமெள்ளயேற்றி
இக்ஷணம்ஓட விட்டு யெடுத்துப்பிடிமுறுக்கி
முனைதடியைக்குறுக்கி முளையடித்துப்பூட்டி (ஏலேலோ)

இதுவுமது-ஓடக்காரர்சொல்லல்

ஸ்ரீராமாராம ஜெயம்-சீதா பதிராமாராமஜெயம்
சீர்மேவுங்கோசலையில்வாழ் சீர்பெருகுங்கனகவல்லி
கார்மேவுமேனியுள்ள கமலமாதுபாதந்தன்னை
(தா) அச்சுதானந்தனென்னு மெச்சுகோவிந்தன்
ஆலிலையின்மேற்றுயிலும் அமரர்கள்முகுந்தன்
நச்சரவின்மீதுதுயில் பச்சைநிறவண்ணன்
நம்பினேன்வைகுந்தன் செம்பொன்மலர்பாதம் (ஸ்ரீராமா)
படல்போலேஆமைகளும் பவழக்கொடிநண்டுகளும்
திடமுடனேபாம்புகளுந் திரளானவோடந்தன்னில்
(தா) லட்சுமணருஞ்சீதையவ நிறுத்தியேமெள்ளமெள்ள
நாற்புறமும்லங்கரைப் போடவேசொல்ல
அக்ஷணங்குகன்மனிதர் ஆர்ப்பரித்துநல்ல
அருமைசீதையரு மேறிவருங்கப்பல் (ஸ்ரீராமா)
வேலைநிகர்விழிபதினால் வெருட்டுகின்றமாதரொனும்
காலநிடவலைநீக்கிக் கார்த்தென்னைக்கடதேற்றும்
(தா) தாரணியிலோலமெனும் யானைதுயர்தீர்த்த
தாரணனே பூரணனே ஆரணனேகோவே
வேதாகமப்பொருளே யென்றுமேதேவர்
மேவிப்பணிவைகுந்தன் பதஞ்சதஞ்செஞ்சே (ஸ்ரீராம)

ஓயாமல்மோதுகின்ற ஓசைநீர்க்கடல்தனிலே
சாயாமலோடுகின்ற சமுசாரமாக்கலத்தில்
(து) ஸ்ரீராமவென்றதனைநின் பாதத்திற்சேர்க்கும்
விண்ணுமண்ணும்போற்றரிய நண்ணுமணிவண்ணன்
நீடாழியிற்றுயிலும் நீலமணிவண்ணன்
நித்தம்பணிவைகுந்தன் முத்திதரும்பாதம் (ஸ்ரீராம)
பார்புகழுங்கோசலைவாழ் பார்த்தாமன்பதம்பணியும்
சீர்மிகுந்தவால்மீகர் திருவடியைப்போற்றிசெய்து
(து) ஆசையெனுமோடமதை நேசமாய்க்காட்டி
அடியனுக்கடியனெனு மொருவன்பதப்பற்றி
மீகாமனாகவரும் வாசையைநிறுத்தி
இன்பமுடன்வைகுந்தன் செம்பொன்மலர்ப்பாதம் (ஸ்ரீரா)
தேக்குமரமதனாலே தீர்க்குமிந்தக்கப்பலிது
சிந்தையாய்ஓடமது லட்சுமணருஞ்சீதை
(து) தள்ளவேஓடமதை மெள்ளவேஅப்பால்
கங்காநதிவாழும் கனமிகுந்தபச்சைக்
கிள்ளையும்பஞ்சவர்ணக் கிள்ளைகள்சூழும்
மங்களமதாகவேதான் ஓடத்தைப்பாயிடாயிப்போ (ஸ்ரீரா)
கங்காநதியிலே விஷ்ணுவைவைத்து
குஸ்திரப்பலகை தொண்ணூற்றொன்பதுகட்டி
(து) அக்காலுந்தங்கையொரு பிராக்கியேற்றி
அடிமத்தளமொன்று யிலையாய்ப்பரித்து
நிட்சயமாகவே கோலமீனும்பாள்
ஞானமுடன்போகுதடி வால்மீகர்வனமே (ஸ்ரீரா...)

சீதை லட்சுமணருக்குச்சொல்-கண்ணிகள்-இம்
எதுகுலகாம்போதி-அடதாளம்,

நாமுங்களையேறிகங்கா நதியோடமுந்தாண்டி
நாமும்வருகையிலே சகுனங்கள்நன்றாகத்தோற்றவில்லை
நானும்வரமாட்டேன் லக்ஷ்மணரோ நன்றாகத்தோற்றவில்லை
நாளைவருவோமையா அயோத்திக்குராதத்தைத்திருப்புமையா
யாளிகள்கூளிகளும் வனக்கரிகண்ட பேரண்டங்களும்
கூளிகள்யாளிகளும் வனந்தனில் கூவுதுபாருமையா
இளையபெருமாளே லக்ஷ்மணரேயிந்தசகுனமெல்லாம்
பிழையாகக்காணுது வனந்தனில்போகவுமொண்ணாது
வனம்பார்க்கபோகையிலே லக்ஷ்மணரேவழிதடையாகுது
இனமாகவூர்சேர்ந்து லக்ஷுமணரேயின்னொருநாள்வருவோம்
அச்சிமுறித்ததுவோ லக்ஷ்மணரோ ஆகாதுஆகாது
இட்சணமயோத்திக்கு லக்ஷ்மணரோ பயனுடன்போவோம்வாரீர்

லட்சுமணர்சொல்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-சாபுதாளம்.

எனம்மாவென்தாயே என்னம்மணி யிந்தசகுனமெல்லாம்
கானகப்போகையிலே யென்னம்மணி கண்டதோஷமில்லை
அம்மம்மாவென்தாயே யென்னம்மணி ஆலோசனைபண்ணுநீர்
சும்மாநடவுமம்மாவனத்திற்கு வெகுதூரம்வந்துவிட்டோம்

(பொது) சீதைமனங்கலங்க லக்ஷ்மணரும் தீம்பாயிருக்குதென்று பாதைவழிவிட்டுக் குறுக்கே தேரைநடத்திவிட்டார்.

சீதை லட்சுமணருக்குச்சொல் திபதை,

அக்கரைதாண்டியிப்போ அடவியில்நடக்கும்போது
திக்கெனச்சாலைசோலை சீருடன்கண்டோமிப்போ
நற்குணமுடையயென்தன் ரகுபதிக்கிளையகோவே
பக்குவத்துடனேயென்முன் பகருவாய்நன்றாய்த்தானே.

(வ-ம்) ஆனால்சேனுந்தம்பி லக்ஷ்மணா நமக்கு முன்னாலே இருண்டசோலைகளி தோற்றுகிறபடியால் அந்தவனம்யார்வனம் எனக்குத் தெரியச்சொல்லுந்தம்பி மைத்துனா-

லட்சுமணர்-சீதைக்குச்சொல்-கண்ணிகள்-இ-ம்-
புந்நாகவராளி-சாபுதாளம்.

அன்னையேகுருவஷிஷ்டரியவனம் பாராய்
அத்தனைத்துதிக்குஞ்சித்திரஆசிரமம் பாராய்
பன்னுமறையோர்வாழும்பாரவனம் பாராய்
பத்தியுடன்யாகசாலைபன்னகம் பாராய்
கன்னல்விலைகுழுஞ்சோலை அன்னையே பாராய்
காசிபர்வாழ்கின்றவனக்காணுது பாராய்
உன்னிதயிருண்டவனமுன்னிலே பாராய்
கன்னிகளுறைபுத்திவ்யகானகம் பாராய்
தென்திசையுந்தெற்குவனைந்தோணுது பாராய்
சிறியவிஸ்வாமித்திரமுனிசூழ்வனம் பாராய்
வர்னமானமமரர்வனங்களைப் பாராய்
மாதவதுர்வாசமுனிவாழ்பதி பாராய்

பொது [illegible]தை.

அக்கரைதன்னிலேறி ஆரண்யம்பார்த்தபோது
துக்கிதாகவேதான் துறவும்வழிநடந்து
அக்கினியெரியவங்கோ ராவணுபயத்தேயோட
சிக்கெனவிருண்டகாட்டிற் சீதையைக்கொண்டுசென்றார்

(வ-ம்) அந்தச்சமையத்தில் சீதையம்மன் நதியிலேஸ்நானம்பண்ணிரதத்தின்மீதேறினபோது லட்சுமணப்பெருமாள் ரதத்தைமுடிக்கிக்கொண்டு தண்டகாரண்ணியம் வருகிறபோது அங்கே

அக்கினிக் குழிக்குழிவெல்லெரிகின்ற இராவிகாரணு காரணத்தைத் கொண்டுபோன விதங்காண்க.

பொது திபதை,

அரியதாப்புலிகள்சிங்கம் யானையுக்கரடிமானும்
நரியுடன்சிவிங்கிடன்றி நாடியவனத்தில்வந்து
அரிவையையிவ்வனத்தி லகலவிட்டேகவென்று
பிரியமாய்சருத்திலப்போ பிரியவும்வகைநினைந்தார்.

(வ-ம்) அந்தச்சமயத்தில் தெண்டகாரண்ணியவனத்தில்மனிதர்களுக்குப் பகையாயிருக்கப்பட்ட அநேகமிருகஜாதிகளிருக்கலட்சுமணப்பெருமாள் கண்டுஇந்தவனத்தில்தானே ரகுநாயகர்லட்சுமிதேவியை விட்டுவரச்சொன்னாரென்று மனதில்வியாகூலப்படுகிறவிதங்காண்க.

சீதைசொல் கண்ணிகள்-இ-ம்எதுகுலகாம்போதி ஆதிதாளம்.

என்னசொன்னார்தம்பி யென்னசொன்னார்சுவாமி
என்னசொன்னார்நாத ரேதுசொன்னார்
முன்னேபாவிராவண னென்னைச்சிறையெடுத்தான்
சொன்னகலகத்தாலே உன்னைவிடச்சொன்னாரோ (என்ன)
மன்னரகுராமருக் கென்னகுறைசெய்தேனோ
தன்னந்தனியாளாக வென்னைவிடச்சொன்னாரோ
துன்னுங்கமுசலை கைகேசிசுமித்திரைக்குத்
துன்பஞ்செய்தேனென்று யின்பம்விடச்சொன்னாரோ (எ)
பரதர்சத்துருக்கருக்கு பழுதுசெய்தேனென்று
நிறையக்காட்டிலென்னைத் துறையாய்விடச்சொன்னாரோ
நிறையும்வசிஷ்டர்பாதம் உறையாய்மறந்தேனென்று
மறையும்புகழும்ராமர் அறையாய்விடச்சொன்னாரோ (எ)
மறையவனை மூதிய குலையோநானறியேனே
பிறையணியீசன்விட்ட சிறையோநான்குறியேனே (என்ன)

சீதை-லக்ஷமணருக்குச்சொல்திபதை.

எந்தனைக்கொண்டுவந்த யிளையகோசொல்லக்கேளும்
உந்தனல்ம[illegible]கிற்றக்[illegible]கேதுமேயிருப்பதேனோ
சுந்தரமுகங்களெல்லாஞ் சோர்ந்திடக்கருமமேது
எந்தனுக்கறியநன்றாய் யிக்ஷணமியப்புவீரோ.

(வ-ம்) அகோவாருந்தம்பிலட்சுமணா அயோத்தியிலிருந்துதெண்டகாரண்ணியவனம் வருகிறபோது உன்னுடைய முகங்களெல்லாம் செந்தாமரைப்புஷ்பம்போலிருந்ததே இங்கேவந்தமாத்திரத்தில் முகங்களெல்லாம் வியாகூலமானதென்ன எனக்குத்தெரியச்சொல்லுதம்பி லட்சுமணா

லட்சுமணர்-சீதைக்குச்சொல்-தரு-இ-ம்-ஆகிரி ஆதிதாளம். பல்லவி
என்னசொல்லுவேனென்னம்மா யேதுசொல்லுவேன்

அநுபல்லவி.

அன்னமேயென் னண்ணர்சொன்னசொல்
வன்னியில்மெழுகாயுருகுதே (என்ன)

சரணங்கள்,

பாவியானேனே என்னம்மா
ஆவியானவென்னண்ணருரைத்தசொல்செப்புவதெப்படி (என்)
வாய்திறந்துயான்சொல்வோமென்றால்
மனதுபிதறுதுவலுமைசிதறுதுவகையுமெப்படிசெப்புவேன் (எ)
தசரதர்குலமுன்னுலேதிக்குவருகுதெங்கே
ராமருமுங்கில்வனத்தில்விடுவென்றார் (என்ன)

இதுவும் லட்சுமணர்சொல்-தரு-இ-ம்- எதுகுலகாம்போதிமிசாதா

பல்லவி·

எப்படிசொல்லப்போறேன் ராமர்சொன்னதை
யேதென்றுசொல்லப்போறேன்

அநுபல்லவி.

எப்படிசொல்லப்போறே னிசைந்ததொருவார்த்தையை
நற்படியாய்ச்சொல்ல நாவெழுமோதாயே (எப்ப)

சரணங்கள்.

மன்னவன்ராமச்சந்திரன் மனமகிழ்ந்துசொன்னதை
யென்னமாய்மனம்வந்து யியம்பிடுவேனம்மா
அன்னமே அண்ணன் சொன்னவார்த்தையோ
இன்னமாயிருக்குது செவிதனிற்கேழ்க்கலாமோ (எப்)
சொல்லவென்றாலென்மனந் துடிக்குதுதேகமெங்கு
முல்லைநகையாளே மொழிவேனோயிவ்வசனம்
அனலிலெழுந்தசீதாவடுக்குமோ யிந்தவார்த்தை
மனம்வந்தராமர்சொன்னவசனமோருதுகண்மணி (எப்)

லட்சுமணர்-சீதைக்குச்சொல்-கொச்சகம்,

என்னுடையதாயேகே ளிசைந்ததோர்வார்த்தையைநீ
மன்னாரகுராமருன்னை வனத்தில்விடச்சொன்னாரே
சொன்னமொழிகூறநெஞ்சந் துடிக்குதம்மாதேகமெங்கும்
இன்னவசனங்கள்சொல விசைந்திடுமோமனமதுவும்.

(வ-ம்) அகோசோணுமம்மா ரகுநாயகர்சொன்ன வார்த்தையை என்னவென்று சொல்லப்போகிறேன் சொல்லவேணுமென்றால்நாவுகூசுகின்றது எப்படிசொல்லப்போகிறேன் ரகுநாயகருக்குவேண்டியபிரியவசனஞ் சொன்னேன் கேளாமல்உன்னைவனத்தில் விட்டு என்னை அயோத்திக்குவந்து சேர்ச்சொன்னாரம்மா,

பொது த்விபதை.

உரைத்ததோர்வசனங்கேட்டு வொண்டொடிசீதையாரும்
அறுத்ததோர்கதலிபோலே அலறியேவீழ்ந்து
வெறுத்துமேகலையுமாகி மேதினிதனிற்பணிந்து
வருத்தமாய்த்துயரத்தோடே மாயனைநினைந்துசொல்வாள்,

சீதை லட்சுமணருக்குச்சொல்த்விபதை,

விதியெனக்கிதுவோவையா விமலரேயிளையகோவே
மதிமிகுமிராமருக்கு வன்பிழைசெய்ததுண்டோ
துதிமிகுமுங்களண்ணர் சொல்வினைத்தவறிடாமல்
மதிமயக்கத்தாலியானும் வனம்பார்க்கவந்திட்டேனே

(வ-ம்) அகோவாருந்தம்பி லட்சுமணா என்னுடையவிதிஇப்படியிருந்தது ரகுநாயகருக்குநான்செய்த அபசாரங்கள்மெத்தவுண்டோ அவருடைய வார்த்தையைத் தள்ளாமல் வனம்பார்க்கவந்தேன் இவ்வனத்தில்பெண்சிவனாகிய நான் என்னசெய்வேன் மைத்துனா.

சீதை-பிரலாபிக்கிறகண்ணிகள்-இ-ம். கண்டா-மீசுரதாளம்

திருந்தியவனத்திலன்று சீதைநான்பிறந்தபோது
ராகவாஹரிராகவா
வருந்தியஅரக்கனென்னை வலுமையாலெடுத்தபோது
ராகவாஹரிராகவா
மாங்களைத்தழுவிக்கொண்டு வஞ்சியென்றெனையழைத்த
ராகவாஹரிராகவா
திரமுடனேயந்தவார்த்தை சிந்தையில்நினைவில்லையோ
ராகவாஹரிராகவா
கன்றிழந்தபசுவைப்போல் கானகத்திற்றேடிநீரோ
ராகவாஹரிராகவா
வண்ணமானஅயோத்திதனில் வாழ்ந்துநாமிருந்தோமே
ராகவாஹரிராகவா
இன்றவர்பிரிந்தவகை யெவ்வகையோவறிகிலேன்
ராகவாஹரிராகா
என்னசெய்வேன்மைத்துனனே எதுசெய்வேன்லக்ஷ்மணரே
ராகவாஹரிராகவா

சீதைக்கும்-லட்சுமணருக்கும் தர்க்கம்-கண்ணிகள்-இ-ம்
முகாரி ஆதிதாளம்.

(சீ) ஐயையோதம்பிலக்ஷ்மணரே (இல்)
வன்னீதமிந்தவுலகிலுண்டோ
(ல) செய்தவினையாலேயம்மா
தீங்குகளானதையென்சொல்வேன்

(சீ) என்னகுற்றஞ்செய்தேனென்று — சுவாமி
இந்தவனத்தில்விடவேசொன்னார்
(ல) அன்னையேவண்ணானொருவனம்மா — உன்னை
ஆக்ஷேபித்தஅபவஞ்சொன்னான்
(சீ) மாசில்லாதஅக்கினியில் — தம்பி
மீண்டுவருவதுண்டோலக்ஷுமணனே
(ல) ஏசுறுகுலமென்று — ராமர்
இந்தவனத்தில்விடவேசொன்னார்
(சீ) அன்னமாஞ்சந்திரவதியாள் — பட்ட
ஆபத்தைச்சொல்லிடலாய்வருமோ

லக்ஷுமணர்-சீதைக்குச்சொல் திபதை.

காட்டினில்ஓட்டிவிட்ட காரணஞ்சொல்லுமியல்நீர்
வாட்டமாஞ்சிந்தையாரே வண்ணானன்மொழியைக்கேட்டு
நாட்டினிலுள்ளபேர்கள் நகைப்பர்களென்றுமென்று
தேட்டமாம்புகழ்சேர்ராமர் செப்பினாரென்னசெய்வேன்.

வசனம்.

அகோகேளுமம்மா சீதாய் நாட்டிலுண்டானபேர்களெல்லாம் நம்மைமறுக்கிறார்களென்று ரகுநாயகர் மகாகோபமாய் உன்னை இந்த வனத்திலே விட்டுவரச்சொன்னாரம்மா.

பொது திபதை,

மைத்துனர்மொழியைக்கேட்டு மயக்கியேமூர்ச்சையாகி
[illegible]ந்தவேம்பதுவேராய் மேதினிதனில்விழுந்து
பித்தரைப்போலவாயாற் பிதற்றியேயுளறிநின்று
சித்தமும்ராமாவென்று சீதையும்புலம்புவாளே.

சீதை-பிரலாபிக்கிறகண்ணிகள்-இ-ம். முகாரி ஆதிதாளம்.

என்னசெய்வேன்மைத்துனா-இதற்குநான்
ஏதுசெய்வேன் லக்ஷுமணா ராமர்
சொன்னதற்கெழுந்திருந்து-என்னையிந்தச்
சூதுகள்செய்தாரோ (என்ன)

சூதுகளறியாத நான்பாவி சொன்னேனொருவார்த்தை- அதை
வாதென்றெண்ணிக்கொண்டு என்னைவனந்தனிற்றள்ளிவிட்டார் (என்ன)
சித்திரக்கூடந்தனிலே-இருவருஞ்சேர்ந்திருக்கையிலேஅப்போ
[illegible]த்திரத்திக்கொண்டுகாகாசுரன்ஸ்தனத்தைக்குத்தினனே
குற்றமேசெய்தானென்று-ரகுராமர்கோபத்துடனெழுந்து பிரம்
அஸ்திரமிதுவென்றுதர்ப்பையெடுத்தருகணையுந்தொடுத்தார்

எத்திசையுமோடி காகாசுரன் எங்குக்கதியில்லாமல்
சத்தியமுள்ளவனென்று ரகுராமனைச்சரணமடைந்தானே (என்)
சரணமடைந்தவனை ரகுராமர் தற்காக்கவேணுமென்று
மரணமடையாமலொருகண்ணை வாங்கியேவிட்டாரே (என்ன)
பிள்ளையுமில்லாமல் ரகுராமர் வெகுநாள்தவமிருந்தார் இப்பொ
பிள்ளையுண்டானபோதே வனத்தினிற்போவென்றுதள்ளிவிட்டார
எத்திசையுந்துதிசெய் ரகுராமர் எங்கும்பரந்தஜோதி
புத்திரனில்லாத்தாயாம் என்னைப் போவென்றுதள்ளினாரோ (என்)
குறைதயறியாமல் நான்பாவி சொன்னேனொருகோடி எத்தன்
மகிழ்ச்சியறியாமல் ரகுராமர் வனந்தனிற்றள்ளிவிட்டார் (என்ன)
மாமிகமுசலையாள் என்னைவனப்போகவேண்டாமென்றாள் அவர்கள்
சொல்லைத்தடுத்துவிட்டு வனம்பார்க்கத் தூரவேவந்தேனையா
பாதசத்துருக்கருடனே நானும் பட்சமாய்ச்சொல்லிவந்தேன்
பாதசத்துருக்கருடன் என்மீதில் பட்சம்வைத்திருப்பார்களோ
பஞ்சணைமீதினிலே ரகுராமர் பரிவாயிருக்கையிலே
அஞ்சலிசெய்துகொண்டு ரகுராமர் அடைக்கலஞ்செய்துதந்தார்

சீதை லட்சுமணருக்குச்சொல்லுகிறது,

கருணைசேர்ராமபத்திரர் கட்டுரைமறந்திட்டாரோ
வருவதுமுன்புநானு மாதவர்க்குறைசெய்தேனோ
இருவருமகிழ்ச்சியாக யிருந்திப்போவனத்திலோட்ட
குருவருள்சிறுமைதானோ கொடியபாதகஞ்செய்தேனோ.

(வ-ம்) அகோவாருந்தம்பி லட்சுமணா ரகுநாயகர் கிருபாகடாட்சமில்லாமல் இந்தவனத்தில் விடச்சொன்னது நான்முன்புசெய்த தவக்குறையோ அல்லதுகுருகடாட்சமோ நான்செய்த பாவமோ என்னையிப்படி மோசஞ்செய்யலாமோதம்பிலட்சுமணா.

சீதைக்கும் லட்சுமணருக்கும் தர்க்கம். கண்ணிகள் - இ-ம்.

எதுகுலகாம்போதி - மிசுரதாளம்

லட்சுமணர்சொல்லல்

எப்படிசொல்லுவதோ என்னம்மா என்மனம் யான்துணிந்தது
உன்னைக்கைப்பிடியாக அண்ணருன்னைக்காட்டில்விடச்சொன்னார்

சீதைசொல்லல்

காட்டில்விடவோஎன்னை அரக்கரைக்கண்டித்துச் சிறைமீட்டினார்
கட்டிடிகமாய்வனத்தில் என்னைத் தள்ளிவிடவந்தீரோ

லட்சுமணர்சொல்லல்

நாட்டிலுள்ளோர்கள் மற்றராஜர்க ளேசவெல்லாவுலகினோ
கூட்டியென்னைத்தொடர்ந்து இந்தக்கோலவனம்விடச்சொன்னார்

சீதைசொல்லல்

பாரினிற்பெண்களிலே என்னைப்போல் பாவியொருவரில்லை
வாராவிதியெனக்கு ஐயோ வருகுதேயென்னசெய்வேன்

சீதைசொல் கண்ணிகள்-இ-ம் முகாரி-ஆதிதாளம்

என்னசெய்வேன்ராகவரோ யேதுசெய்குவேன்லட்சுமணரே
மன்னவர்தன்னைக்காணேன் வன்மைசேரயோத்திகாணேன்
என்னுடையமாமிகாணே னினிமையுள்ளபரதர்காணேன்
உன்னியகுருவசிஷ்ட ரொருவரையுங்கண்டிலேனே
பொன்னுமணியாசனத்தைப் புகழநான்காண்பதென்றோ
கன்னியர்கள்வேறேகாணேன் கானகத்திலாருங்காணேன்
உன்னிதமாம்நாரிபோல ஒருசகிகண்டிலேனே
என்னுடையநெஞ்சுதானும் இரும்பினால்வகுத்தவாரோ
மன்னனைமறந்துநானும் மடியவோயிங்குவந்தேன்
தன்மையோவனத்தில்விட ஞாயமோமைத்துனரே
கன்னலானமேனியெல்லாங் கருகிடுதுபாருமையா
மன்னராகுராமர்சொன்ன வார்த்தையைத்தவறிடாமல்
என்னையித்தக்காட்டில்விட்டு நீயேகுவரோ என்னசெய்வேன்

சீதைலட்சுமணருக்குச்சொல் விருத்தம்.

தவமதுசெய்தகெர்ப்பந் தரித்ததோராறுமாதம்
பவமிடியக்காற்காடு பார்க்கவேவந்தேனையா
கவலையிலென்னைச்சொல்லிக் கருதிநீர்தயையில்லாமல்
அவலமாய்வனத்திலோட்ட வகுக்குமோவிணையதோவே,

வசனம்.

அகோவாருந்தம்பி லட்சுமணா என்வயிற்றில் ஆறுமாதத்திய கெர்ப்பபாக்கியமிருக்க நான்மகிழ்ச்சியாய்வனம்பார்க்கவந்தேன் உங்கள்தமையனார் வார்த்தை[illegible]த்தள்ளாமல் நீர்தான் என்னமாய் மனம்வந்து காட்டில்விட்டுப்போறீரையா லட்சுமணா,

சீதைக்கும் - லட்சுமணருக்கும் தர்க்கம்-கண்ணிகள்-இ-ம் ஜம்படை.

சீதைசொல்லல்

என்னசெய்வேன்மைத்துனரே யேதுசெய்வேன்லட்சுமணரே
என்னையித்தக்காட்டில்விட்டு யேகுவீரோவையா

லட்சுமணர்சொல்லல்

என்னவென்றுசொல்லுவீரம்மா யிப்படியுஞ்சொல்வீரோ
மன்னவர்க்குவார்த்தைதப்பி வருத்திருஞ்சொன்னேனே

சீதைசொல்லல்

உன்விதமாய்ராகவர்க்கு மொருகுறையுஞ்செய்தறியேன்
அன்னிதமாய்காட்டில்விட்டா ரலையவிதியாச்சே

லட்சுமணர்சொல்லல்

அலையவேவிதியென்ன அஞ்சிடவேண்டாமம்மா
நிலையுடனேமுனிவர்வந்து நிவர்த்துவார்துயரம்

சீதைசொல்லல்

செந்தணலிற்புகுந்தியானும் வந்ததுவுங்கண்டிருந்துஞ்
சந்தேகமாகினரோ சதிர்புனையும்ராயர்

லட்சுமணர்சொல்லல்

சதிர்புனையும்ராமரென்னைத் தயவதாய்வரவழைத்து
அதிதுரையாய்வனத்தில்விட்டு அயோத்திவரச்சொன்னர்

சீதைசொல்லல்

மைந்தனைநான்பெற்றபின்பு வனந்தனிலேவிட்டொணாதோ
சிந்தையிகத்தளர்ந்தியானுந் திகைக்கிறேனேஐயா

லட்சுமணர்சொல்லல்

திகைத்திடவேண்டாமம்மா தேவாருளாலே
மகத்வமுள்ளரிஷிகள்வந்து மாற்றுவார்துயரை

சீதை லட்சுமணருக்குச்சொல் திபதை,

ஐயனேமுன்னிருந்த அருஞ்சிறையும்போதாமல்
வையகத்தோரேயிப்போ வனத்தினில்விடச்சொன்றோ
உய்யுமியல்பறியா துதித்தகர்ப்பபாக்கியத்தைச்
செய்யலேயுந்தன் திருக்கண்ணாற்பாருமையா

வசனம்.

அசோவாருந்தம்பி லட்சுமணா நான்பெண்பிறந்தது எனக்குப்போதும் முன்புலங்கையிற் சிறையிருந்தேன் இப்போது உங்கண்ணா ரகுநாயகர்வார்த்தையைத் தள்ளப்போகாதென்று வனத்தில்விட்டுப்போரீரோ என்வயிற்றிலிருக்கும் கர்ப்பத்தைப்பாருந் தம்பி லட்சுமணா.

லட்சுமணர்-சீதைக்குச்சொல்-கொச்சகம்.

ஐயையோயிப்பழியை அன்னையேதொலைக்கவென்றால்
வையகந்தன்னிலித்த வார்த்தையொவ்வாதுகண்டாய்
செய்வதென்றில்லையேயோ சிவனையும்போசகுலனன்
வையகத்தையாள்ராமர் மனதினில்வாழ்குவரோ

வசனம்.

அசோவாருமம்மா சீதாய்இப்பேர்ப்பட்ட வார்த்தையைநீ சொல்லலாமா உன்வயிற்றின் கெர்ப்பத்தை நான்பார்ப்பேனோ என்னசெய்யப்போறேனம்மா மதனி.

லட்சுமணர் - பிரலாபக்கண்ணிகள்-இ-ம் - பைரவி - சாபுதாளம்.

ஏதுகாரணத்தினாலே யிவ்வசனங்கேட்க்கலானேன்
இந்தப்பழிக்காளாகினேனே ஹரிகரிராமச்சந்திரா
பாதகனுமிவிட்டேன் பாதனைப்போலொளியாமற்
பரதேசியாகினேனே ஹரிகரிராமச்சந்திரா
சிதான்செய்கையினாற் சீவனைவிடவுமன்ற
வேதனைசெய்வேனையா அரிகரிராமச்சந்திரா
இளங்கொடிசீதையாரே யெந்தனுக்கு இந்தப்பாவம்
வந்திடுமென்றறியேனையா அரிகரிராமச்சந்திரா
சிந்தையில் நினைந்துசொல்ல தீருமோபழியாவுங்கள்
விந்தையாகவந்ததையோ அரிகரிராமச்சந்திரா
நிந்தனையாயித்தவார்த்தை யெந்தனுக்குநீர்சொல்லவும்
உந்தன்மனதுமிசைந்ததோதான் அரிகரிராமச்சந்திரா

லட்சுமணர்-சீதைக்குசசொல்-திபிதை,

ஏனம்மாஉந்தன்சிந்தைக் கித்தனைதுயரம்வேண்டாம்
கானகம்வந்தோமென்று கருத்தினிலஞ்சவேண்டாம்
வானவரிஷிகளானோர் வந்துமேதுணையேசெய்வார்
தானுமேஅயோத்திக்கேக நன்மையாய்வாக்குத்தாராய்.

(வ-ம்) அகோவாருமம்மாசீதாய் இந்தவனத்தில் வந்தோமென்று நிதாபத்திரியப்படவேண்டாம் உனக்குஇவ்வனத்தில் தேவர் ரிஷிகள்வந்து துணைசெய்வார்கள் யானஅயோத்தியோய்ச்சேர்வதற்குச் சந்தோஷமாகச் செலவுகொடுமம்மா மதனி.

சீதை லட்சுமணருக்குச்சொல்-திபிதை

உந்தனைவெறுப்பதேனோ உலகமேயாளுமர்தன்னை
சிந்தையில்நினைத்துக்கொண்டு நீமெழுகாவதல்லால்
எந்தவிதியேயல்லா லென்னையுவெறுப்பதேனோ
நிந்தனையானேனென்று னீரதற்கென்னசெய்வீர்:

(வ-ம்) அகோவாருந்தப்பிலட்சுமணா என்றலைவிதி இப்படியிருந்தால் என்னையுமனம்நோகப்போகாது சகுநாயகலர் என்மறக்குக்காணப்போகிறேன் தப்பிமைத்துனா.

சீதைபிரலாபக்-கண்ணிகள்-இ-ம் கெண்டா-அடதாளம்,

பொல்லாததாடகை புஜபலந்தன்னையே ராமராமா உ..னை
வில்லாற்செயித்தோனே மீண்டுகாணுமதேப்போராம்ராமா
எந்லையிலொருவரு மெநிரில்லையென்றீரோ ராமராமா எல்லை
நல்லமணஞ்செய்தது நப்பிக்கைதந்தீரோ ராமராமா
ஜயாநிருப்பி அயோத்தியில்வந்தோமே ராமராமா நீ

அன்றுவில்வளைத்தென்னை அருமணஞ்செய்தீரோ ராமராமா
அகலிகையாகைக்கல்லைப் பெண்ணாக்கிவைத்தீரோ ராமராமா அந்த
வல்லமையாலே மனங்குளிர்ந்தேனே ராமராமா
வையகம்புகழ்கின்ற அயோத்தியில்வாழ்ந்தோமே ராமராமா நாம்
எல்லாரையும்போலே யிடலாகவாழ்ந்தோமே ராமராமா
மாமிசொல்லாற்காட்டில் தம்பியுடன்போனோமோ ராமராமா அன்று
மாரீசன்வனந்தனில் மானாகவந்தானே ராமராமா
பொன்னிறமானைப்பிடியென்றுசொன்னேனே ராமராமா அப்
வந்தமானைத்தேடி வனந்தனிற்போனீர் ராமராமா (போ
அன்றுராவணன்கையி லகப்பட்டசிறைபோல ராமராமா நீர்
இன்றுகாட்டில்விட யெந்தன்விதிப்படியோ ராமராமா
விமலர்பாதந்தன்னை விட்டுக்காட்டில்வந்தேன் ராமராமா அந்தக்
கமலபொற்பாதத்தைக் காண்பதென்றைக்கையோ ராமராமா

சீதைசொல்சேபத்தியம்-இ-ம்-புந்நாகவராளி

ஓகோலக்ஷ்மணா வுமக்கிது ஞாயமோ
ஒவ்வுமோ வும்மிடமை நீதானும்
வெகுதேயென்மனம் விசாரங்களாகுதே
யென்னகாரணமோ யென்கர்மந்தானோ
ஜனகன்றன் வயிற்றினிற் பிறந்ததோஷமோதான்
தசரதன்மகனுக்கு வாய்த்த ஜனனமோதான்
அசலகவன்றன்சொல் புதுமைகேட்டு
அழைத்துவந்துவிடலாமோ லக்ஷ்மணா லக்ஷ்மணா,

சீதைசொல்-கண்ணிகள்-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

பெண்பாவமென்றிதை யெண்ணாமல்ராமரெனைப்
புல்போலே மனம்நோகச்சொன்னாரோ
இல்லறத்திருந்தவென்னை லக்ஷ்மணாநீதான்
இவடந்தனில்விட்டுப் போதீரோ
எல்லாரையும்போல் வாழ்ந்திருப்போமென்று
எண்ணினதெல்லாங் கனாவால் முடிந்ததையோ
கோட்டைக்குள்வேலகிற் பழித்தசொல்லாமரி
கேட்டவுடன்வனத்தில் தான்விடவும்
நாட்டிலேகீர்த்திப்பெற்ற மைத்துனரோடுமெக்
காட்டிலென்னைவிட்டுப் போதீரோ
பேருலகில்தவக்கொடி யெய்தாத்பின்னை
பெற்றயிக்காட்டில் விடலாகாதோ
காருள்ளவனந்தனில் விட்டுவந்தேனென்று
[illegible] சொல்லையா

தரணிபுகழயோத்தி ராமருக்குச் சீதை
சரணம்பணிந்தாளென்று சொல்லுந்தம்பி
சிரணியாதசத்துருக்கருக்கு இந்தச்
சேதியெல்லாந் தெரியச்சொல்லுமையா
ஐயர்குருவசிஷ்ட மாமுனிக்குஞ்சீதை
அடிதொழுதாளென்று சொல்லுந்தம்பி
அந்தநற்குமுதனனுமார் சாம்புவர்க்கும்
ஆயிரந்தெண்டஞ்சொல்லுந் தம்பிலக்ஷுமணனே.

சீதை-லட்சுமணருக்குச்சொல்-விருத்தம்

பூமியிற்பிறந்தவெர்தன் பெண்வதைதனைக்கொள்ளவே
ராமருமென்மைநோக்கி களித்துடன்கடுகடுத்து
தாயிஷ்டமாயிற்றென்று சபித்திக்கோபங்கொள்வார்
போயினியினியகோவே பூபதிஅயோத்திநாடே.

(வ-ம்) அகோவாருந்தம்பி லட்சுமணு பூமியில்நான் பெண்பிறந்து எனக்குப்போதும் என்தலைவிதி யிப்படியிருந்தது நானென்ன செய்யப்போகிறேன் உங்கள்தமையனாகிய ரகுநாயகரிந்தேரமென்னென்று உமதுபேரிற் கோபங்கொள்ளப்போகிறார் நீர யோத்திபோய்ச் சேருந்தம்பி லட்சுமணு.

பொது விருத்தம்.

திக்கெனவெழுந்திருந்து சீதையைத்திரும்பிப்பார்த்து
மிக்கெனவனுப்பவேதாலி சலித்தவர்மனதுநொந்து
முடுக்கியேவழிநடந்து மெய்க்குழற்சீதைதன்னை
அடுக்கடிதிரும்பிநின்று அயோத்திக்குப்போகின்றாரே.

(பொது-வ-ம்) அகோதெப்படியென்றால் அந்தசமயத்தில்சீதாலட்சுமி அனுப்பிவைக்க லட்சுமணராகவ மெழுந்திருந்தபின் நாராணம்பண்ணிக்கொண்டு சீதாங்கனியைப்பார்த்து துயரப்பட்டுக்கொண்டு அயோத்திக்குப்போகிற விதங்காண்க,

கண்ணிகள்-இ-ம்-கண்டார-ஆதிதாளம்.

அண்ணிசீதையைவிட என்மனமாய்ப்பதைத்துனிந்தேன். ராமராமா
அண்ணிபெண்ணுசீதையார்க்கு ஆதாரொருவருண்டோ ராமராமா
பாதகனுவிட்டேன் பாதனைப்போலொளித்திடாமல் ராமராமா
பாவப்ப[illegible]ப் பதைக்குதைபோதிசோகமெல்லாம் ராம[illegible]மா
[illegible]தரா[illegible]கொர்த்தமக யன்புடனேதன்னிடாமல் ராமரா[illegible]
கொக்குசபாலகானகத்திற்கோதையைவிடத்துணிந்தேன் ராம[illegible]
எண்ணெ[illegible]தாய்சீதை [illegible]சேருவாளோ ராம[illegible]
கண்[illegible] அயோத்தி [illegible] ராம[illegible]

இதுவும் லட்சுமணர் பிரலாபிக்கிற-தரு-௰ம்
ஏதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

வனதேவதைபோகூதிபுக்களம்மா
வனதேவதையோகூதிபுங்களம்மா

அநுபல்லவி.

கனமாமிதிலையில் ஜனகன்றன் மகளான
கன்னிசீதையைமனங் கலங்கவிட்டுப்போறேன் (வன)

சரணங்கள்.

இருளானகாட்டினி லொருவர்துணையுமில்லை
ஆருமதியானகத்தி லத்தாமாய்விட்டுப்போறேன் (வன)
அண்டாண்டபட்சிகளா அம்மனைக்காத்திடுங்கள்
வண்டணிசீதைதன்னை வனத்தில்விட்டுப்போறேன் (வன)
பஞ்சவர்ணக்கிளிகளா பறவையேஅன்னங்களா
அஞ்சாமல்கானகத்தி லந்தாமாய்விட்டுப்போறேன் (வன)

பொது-வ-ம்- இப்படியாக லட்சுமணப்பெருமாள் சொல்லிக் கொண்டு வருந்தருணத்தில் சீதையானவள் லட்சுமணனாக்காணமை ற்போகிறவரைப்பார்த்துச் சொல்லுகிறவிதங்காண்க.

சீதைசொல் கொச்சகம்.

மனமதுமிகவுநொந்து மனக்குறைகடன்னுடனே
எனமாகவேசீதை யெடுத்துரைப்பாளிடக்களிலே
எனையிவையாய்மிருகங்களுக் கெழுதினீரோபிரமலிபி
பிணமாகவேறானும் பெண்பிறந்தேனோபாவி.

சீதைசொல்-பத்தியம்-௰ம்-சண்டா

ஓகோலக்ஷமணா வுமக்கிதுஞாயமோ
போகுதேவும்முடைய புத்திதானோ
வேகுதேயென்மன மிகவுவிகற்பங்க
ளாகுதேயிர்ம்மலயிப்படி விதித்ததோர்தான்
சாகிறபேர்போலே தயக்குதேயென்மனம்
தவித்துயிப்படிகாட்டி விருப்பதேனோ
பூமிதனிற்பெண்ணாகப் பிறந்ததேதோ
புவிஜனகராஜனென்னையெடுத்து வளர்த்ததேதோ
ராமர்கையிலென்னைக் கொடுத்ததன்மையேதோ
ராவணன்சிறையெடுத்துப் போனதன்மை
மாயமாயாத்தீர்குல மாண்டதேதோ

காடுதேர்போலே தயங்குதேயென்மனம்
தனித்துயிப்படிக்காட்டிலிருப்பதேனோ
பூமிதனிற்பெண்ணாகப்பிறந்ததேதோ
புவிஜனகராஜனென்னையெடுத்துவளர்த்ததேதோ
ராமரென்கையிலென்னைக்கொடுத்ததுநன்மையேதோ
ராவணன்சிறையெடுத்துப்போனதுநன்மை
மரியாதைக்கார்குணமாண்டதேதோ
மதிலிலங்கைவிபீஷணர்க்குவந்ததோ
ராமருடனயோத்தியினில்வாழ்ந்ததேதேதோ
ரசகுலிவந்ததல்லோ இந்தகுறி

(பொது-வசனம்) இப்படியாகச் சீதைவனத்தில் ஒண்டியாய் இன்னாருமற் புலம்புகிறபோது லட்சுமணர் அயோத்தியைநோக்கி வருகையில் ரகுநாயகர் லட்சுமணர் வரவில்லையென்று அனுமாருடன்சொல்லித் துயரப்படுகிற விதங்காண்க.

ஸ்ரீராமர்-அனுமாருடன்-துயரப்படுகிற-கண்ணிகள்.

இ-ம்-புந்நாகவராளி-ஆதிதாளம்.

என்னதான்செய்வேனடா அனுமானே-தம்பி
இந்நகர்வரக்காணேனே அனுமானே
வீரமானமேனியாளை அனுமானே-தம்பி
வனத்தில்விடப்போனவனை அனுமானே
என்னகாரணமோதான் அனுமானே-தம்பி
யின்னம்வரக்காணேனே அனுமானே
பத்தினிசீதையாளை அனுமானே-தம்பி
பாங்குடன்கொண்டுசென்றான் அனுமானே
சித்தமதிலேகோபமாகி அனுமானே-தம்பியைச்
சினங்கொண்டுசெயித்தாளோ அனுமானே
கன்னிகைசீதையாளும் அனுமானே-தம்பி
காட்டிற்புலம்பிடவே அனுமானே
இந்நகர்வாராமலே அனுமானே-தம்பி
யெங்கேயிருக்கின்றானோ அனுமானே
காட்டில்விடப்போனதொரு அனுமானே-தம்பி
சாலையைக்காணேனிப்போ அனுமானே
தாவிழுகமாய்நீயோடி அனுமானே-தம்பி
தம்பியைப்பார்த்துவாடா அனுமானே

பொது-திபதை.

சொன்னசொல்லதனைக்கேட்டுக் கருக்கினிலனுமார்தானும்
இந்நிலத்தனைவிட்டு யெழும்பிஞாலயத்தில்

பன்னகரியோடேகோவும் வருகிறவேகங்கண்டு
பன்னகரிக்கதிக்கையிட்டு மகிழ்வுகொண்டிருந்தாரங்கே

(வ-ம்) அகோதெப்படியென்றால் அந்தச்சமயத்தில் அனுமார் பார்த்து லட்சுமணர் வருகிறசேதிசொல்ல லட்சுமணர்வந்து ரகுநாயகர்க்குச் சரணஞ்செய்து சொல்லுகிறவிதங்காண்க.

லட்சுமணர் ஸ்ரீராமருக்குச்சொல்-திபதை.

கட்டளைப்படிக்குநானுங் காரிகைசீதைதன்னை
வட்டமாந்தேரிலேற்றி வனந்தனிற்கொண்டுசென்று
சட்டமாய்த்தேவர்காணச் சகத்திலுள்ளோரும்பார்க்க
இஷ்டமாய்விட்டுவந்தேன் விளையடிசரணமையா

(வ-ம்) அகோவாருஞ்சுவாமி தங்களுத்தாரப்படிக்கு என்தாயாராகிய சீதாலட்சுமியை வனத்தில்விட்டு வந்தேன்சுவாமி.

ஸ்ரீராமர்சொல்-பத்தியம்-இ-ம்-கண்டா

தம்பிநானென்னசெய்வேன் ஜானகிதன்னையே
நம்பிநானிருந்தேனே நஷ்டஞ்செய்தாய்
துணைமையாய்மனதிலே குடிபரமாயிருப்பாளே
துர்ச்சனஞ்செய்லாமோ சீதையாது
வம்பிலாச்சகஞ்சொல் வார்த்தையால்நானுமே
மனைவியைக்காட்டினில் விடவுஞ்சொன்னேன்
கொம்புபோற்கருகியே கோதையாள்சீதையுங்
கொல்லைகளுந்துங்கியே யுருகிறளோ
என்னதானொந்துமே வருகிறளோ
மன்னவெனைத்தூஷித்து வருந்துறளோ
அன்னடையானவள் மனங்கலங்கிறளோ
மின்னற்கொடியானவ ளென்னசொன்னாள்.

ஸ்ரீராமர்சொல்-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்

பல்லவி.

என்னசொன்னாள்தம்பி லக்ஷ்மணா சீதை-எது சொன்னாள்தம்பி

அநுபல்லவி.

என்னசொன்னாள்தம்பி யெனது ஜானகிதானும்
சொன்னவசனந்தன்னைச் சுகமாய்ச்சொல்லுந்தம்பி (என்ன)

சரணங்கள்,

வில்லினைவளைத்து மணமுப்புணர்ந்தபோது
...இக்கணைசொன்னேனென்ற தயந்துசொன்னாளோதம்பி (என்ன
...ந்தைமிகக்கலங்க சீதைமெத்தவுந்நொந்து
...யங்கிவழுதுகி யேதுமென்றுளோ... (என
...பிரவனத்தினிற் கன்னிசீதையாரும்
...ற்றின்நாயகமேக கலங்குறளோதம்பி (என

ஆருமற்றபாவி யானாயினேனென்று
தேராயென்றுபார்த்ததைத் திரிப்பவரில்லையென்று (எம்ம)

லட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல்-தரு-பியாக்-ஆதிதாளம்.

பல்லவி.

பதைக்குதன்றோ மனம் பதைக்குதன்றோ சொல்ல
நாடிக்குதன்றோ கொலை நடுக்குதன்றோ

சரணங்கள்.

வேதையர்க்குதேவேந்திரன் கோதையைவிட்டபின்பு
சிறைபடுத்துபரம் ஆதியேசொல்லமாட்டார் (பதை)
கண்ணினிற்காண்பதெப்போ என்றுபார்சீதைதன்னை
[illegible]ண்ணியமோவனத்தில்திண்ணமாய் விடச்சொன்னீர் (பதை)
கா[illegible]னில்விருகத்துடன் தாக்ஷிகமாயென்றுபாரும்
வேஷ்டைகள்படவேண்டாம் வீட்டுக்குப்போம் தம்பியென்றாள்
பட்டந்தரித்தபெண்ணை பிஷ்டமாய்விடச்சொன்னீரோ
பொட்டெனவேகாட்டில்விட்டுச்சட்டமாய்வந்தேனன்றோ (பதை)

லட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல் திபதை-

என்னென்றுசொல்வேனன்றோ யென்மனம்பதைக்குதிப்போ
அன்னமாஞ்சீதையாளை அடவியில்விட்டபோது
கண்விழிதன்னைநொந்து சாபித்தாளசரணமென்று
என்னையேபோகுமென்று யேக்கியேபுலம்புகின்றாள்

(வ-ம்) ஆகோகேளும் அன்றுவே காட்டில்விட்ட மாத்திரத்தி
ல் பயமதிந்து தேவரீர் பாதத்திற்கும் வசிஷ்டருக்கும் மாமிமார்
மூவருக்கும் சரணஞ்சொல்லச்சொல்லிஎன்னைப் போகும்படியா
ய்ச் [illegible]வுகொடுத்தாள் சுவாமி.

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-வசனம்.

அகோவாரும் தம்பிலட்சுமணா சீதை யென்னமா யிருக்கிறு
ளோ யெனக்குத் தெரியச்சொல்லுந் தம்பிலட்சுமணா.

லட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல்-வசனம்.

அகோவாருஞ்சுவாமி மிகவும் விசனத்துடன் மனம்நொந்தி
ருந்தாள் சுவாமி.

ஸ்ரீராமர்-பிரலாபிக்கிற-தரு-இ-ம்-ஆஹிரி-அடதாளம். (பல்லவி.

மனதுநொந்தாளோ பென்ஜானகி மனதுநொந்தாளோ

அநுபல்லவி.

மனதுமிகநொந்தாளோ-மங்கையாள்சீதையும்
அங்குமிருகவேனம் அடவியில்விட்டேனென்று (மன)

சரணங்கள்.

என்னைக்காணவருவாளோ யென்றுஜானகிசீதா
உத்தரவுதச்சொல்லுந் தம்பி உயிர்விடுவேனென்றுநினைா (மன..)

விந்தைபோலென்றவள் சிந்தையில்லைநந்திட
அந்தகாரமான அடவிதனிலேயவள் (மனது)
மாதுசீதையாளை மணமும்புணர்ந்தபோது
வாதுசொன்னராமர் வார்த்தைதப்பினரென்று (மனது)
ஆதியிற்கௌசிகர் அடவுடனகூடவே
மேதினியில்நடந்து மிதிலைசென்றோமென்று (மனது)

இதுவும்-ஸ்ரீராமர்-சொல்காம்போதி-தரு-இ-ம்-ஆதிதாளம்.

பல்லவி,

ஜானகிபெண்ணே ஜானகிநாயகி நானென்னசெய்குவேன் அடி

சரணங்கள்.

கன்னலே மணி பொன்னலே அடி
அன்னமேயுனைப் பிரிந்தேனடி (ஜானகி)
மருவியே சுகந் தருவையே அடி
அருவையே யுன்னை மறந்தேனடி (ஜானகி)
காட்டிவிருப்பையோ உயிர் தரிப்பையோஇனி
யெப்பிறப்பில் நானுன்னைகாண்பேனடி (ஜானகி)
போதும்போதும் போதுபோதும்நீ
பெண்பிறந்து பட்டகொள்ளைகள் (ஜானகி)

பின்னும்ஸ்ரீராமர் பிரலாபிக்கிற கண்ணிகள்-இ-ம்
எதிருலகாம்போதி. ஆதிதாளம்.

கற்புடையசீதைதன்னை தம்பி அடாதம்பி
காட்டில்விட்டுவந்தபோது தம்பி அடாதம்பி
அக்கமுருகினளோ தம்பி அடாதம்பி
ஆவிதடுமாறினளோ தம்பி அடாதம்பி
கன்னிபெண்ஜானகியாள் தம்பி அடாதம்பி
கதறிபுலம்புவாளோ தம்பி அடாதம்பி
பொன்மணியாள்சீதையாரும் தம்பி அடாதம்பி
புலம்புதவிக்கிறளோ தம்பி அடாதம்பி
மாதுபெண்ஜானகியாள் தம்பி அடாதம்பி
மனதுருகிவாடுறளோ தம்பி அடாதம்பி
நீதிநெறியறிந்த தம்பி அடாதம்பி
நிந்தனைசெய்தாளோ தம்பி அடாதம்பி
மாதுகுணம்வந்ததோடா தம்பி அடாதம்பி
வேறுபடச்செய்தாளோ தம்பி அடாதம்பி

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-விருத்தம்

என்னதான்செய்வேன்தம்பி யெந்திலமயவனுக்காக
இந்நிலந்தன்னிலுள்ளோர் நீயாவரும்நகைத்திடாரோ

பின்னொன்றுசீதையாளை வெகுதூரத்தில்விட்டேன்
வண்ணமாம்லக்ஷ்மணாநீ வனமினிற்செல்லுவாயே

(வ-ம்) அகோவாருந்தம்பி லக்ஷமணா லோகநிந்தையை ஒருத்தரும் நிறுத்தக்கூடாது மானம் பெரிதேயல்லாமல் சீதைபெரிதல்ல நீ அந்தப்புறம்போ தம்பிலக்ஷமணா.

பொதுதியிசை.

போனவர்தம்மைநோக்கிப் புரிகுழற்சீதையாரும்
காலகற்சென்றபின்பு கண்கள்நீரதாய்
மாநிலந்தனில்விழுந்து மயக்கியேமூர்ச்சையாகி
வானவர்முனிவரெல்லாம் வந்துமேபார்த்திருந்தார்.

(பொருள்-வசனம்) அந்தச்சமயத்தில் சீதாதேவி அயோத்தியை [illegible]போகிற லட்சுமணைப் பெருமாளைப்பார்த்து மூர்ச்சையாகி பூமியில்விழுந்ததைத் தேவஸ்திரீகளும் தேவர்களும் ஆகாயத்தில் நின்றுபார்த்து அவர்களும் விசனமடைய அப்போது சீதை மூர்ச்சைதெளிந்து புலம்புகிற விதங்காண்க-

சீதை-பிரலாபிக்கிற-கண்ணிகள்-இ-ம்-கன்னடா-மிசுரதாளம்.

என்னசெய்வேன்மைத்துனரே யேதுசெய்வேன்லக்ஷமணரே
லக்ஷமணா-தம்பி மைத்துனா
என்னையித்தக்காட்டில்விட்டு யேகினீரோமைத்துனரே
லக்ஷமணா-தம்பி-மைத்துனா
வர்ணமதிற்சூழயோத்தி மாநகர்க்குச்சென்றீரையா
லக்ஷமணா தம்பி மைத்துனா
[illegible]மானதேதிசைநீ வனந்தனிலேகொண்டுவந்து
[illegible]-தம்பி-மைத்துனா
இவ்வனத்திலென்னைவிட்டு யெவ்வனத்திற்போனீரையா
லக்ஷமணா-தம்பி-மைத்துனா
சொன்னதொரு[illegible]மார்வார்த்தை தடுக்குடனேதள்ளாமல்
லக்ஷமணா-தம்பி-மைத்துனா
என்னைநீயிவ்வனத்தில் விளையவேவிட்டுப்போனீர்
லக்ஷமணா-தம்பி-மைத்துனா
விவேகமில்லாதென்னையிங்கே விட்டுநீர்போகுவீரா
லக்ஷமணா-தம்பி-மைத்துனா
நலமுடனேகாட்டில்விட நன்மையோயுங்களுக்கு
லக்ஷமணா-தம்பி-மைத்துனா
என்னசெய்வேன்லட்சுமணரே யிவ்வனத்தில்விட்டுப்போனீர்
லக்ஷமணா-தம்பி-மைத்துனா
வண்ணமதிற்சூழயோத்தி மாநகர்க்குப்போனீரையா
லக்ஷமணா-தம்பி-மைத்துனா

தோகைகரூசல்யாள்தேவி சுமித்திரைகைகேசியாளும்
லக்ஷ்மணா-தம்பி-மைத்துனா
ஜெகப்புகழுமகிபர்கள் சேதியுமறிகிலாரோ
லக்ஷ்மணா-தம்பி-மைத்துனா
பரிவுடனிருந்தவென்னைப் பிரித்தனிபோலாக்கிவிட்டீர்
லக்ஷ்மணா-தம்பி-மைத்துனா
ஒருவருத்துணைகள்காணே னுபாயருமறிகிலேனே
லக்ஷ்மணா-தம்பி-மைத்துனா
எரியுதையாவழிநடந்து யென்னசெய்வேன்ரகுநாதா
லக்ஷ்மணா-தம்பி-மைத்துனா
இவ்விபவனத்திலென்னை யுண்மையாய்விட்டதனித்தீர்
லக்ஷ்மணா-தம்பி-மைத்துனா
பாவியையுமதுவாளால் மேவியேதுணித்திடாமல்
லக்ஷ்மணா-தம்பி-மைத்துனா
பாரவனந்தன்னிலென்னைப் பதைக்கவிட்டுப்போனீ[illegible]யோ
லக்ஷ்மணா-தம்பி-மைத்துனா

சீதைசொல்-நிதிகை,

அருவனந்தன்னில்விட்டு அலையவேசெய்தராமா
கருணைதானற்பினீரோ காரணமிதியின்காரோ
மருமணஞ்செய்யும்போது வந்திடும்பெரியோரெல்லாம்
இருதாம்வனத்திற்போவாவென்றுமேயுரைத்திட்டாரோ

(வ-ம்) ஐயையோ ரகுநாயகனே என்பேரிற் கருணைதப்பினீரோ ஆதியிலேகலியாணஞ் செய்கிறபோது பெரியோர்கெ[illegible]ம் இரண்டுதாம் வனம்போவாயென்று வாழ்த்தினாரோ ஐயையோ நானும்மைவிட்டு யெப்படி பிரிந்திருப்பேன் ஸ்வாமி.

சீதைபிரலாபிக்கிற கண்ணிகள்-இ-ம்-நீலாம்பரி-ஆதிதாளம்-

ஆடகமாமண்டபமும் அரிவையர்கள்காணேனேயோ
கொடெனுமூ[illegible]பாக்கிகூட்டமுங்காணேனேயோ
பட்டணத்துராஜதேவி பாக்கியருங்காணேனேயோ
கிட்டநின்றவர்க்கைசொல்லுங் கினிமொழிகளைக் காணேனேயோ
நாடோறுஞ்சலியாதோயிந்த நலதியவார்த்தைகேட்டு
காடுதானசலியாதோயிப்போ கன்னியர்கள்நகையாரோ
சின்னவயதிலென்னைச் சனகராஜன்பட்டணத்தில்
வர்ணமிலேத்தாதொழுதித்து வந்தார்க்குமபிட்டீர்
என்னபிழைகாரணமோ பென்னுடையதீவினையோ
எல்லாம்பிரித்தக்காட்டில்விட்டு யேகினீரோ அயோத்தியில்

சீதைசொல் கொச்சகம்.

மன்னன்ரகுபதிதன் வார்த்தைதனைத்தள்ளாமல்
என்னையித்தக்காட்டில்விட்டு யேகினீரோமைத்துனரே
பின்னையொருவரில்லை புலிகள்சிங்கம்வாழிடத்தே
என்னமனைத்துணிந்து யிருப்பேனிளையவரே

(வ-ம்) தம்பியைத்துரை உங்களண்ணன் வார்த்தையைத் தள்ளாமல் என்னையிந்தவனத்தில மிருகஜாதிகள் வழுப்பட்ட விடமென்றறிந்தும் இரவிகாணாமல் இருள்சூழ்ந்துகொண்டிருக்கிற வனத்தில் விட்டுப்போகத்தமனமவத்துதல்லவா இந்தவனத்திலே நான் என்னமா யிருக்கப்போகிறேன் ராகவா.

சீதைசொல் பிரலாபக்கண்ணிகள்-இ-ம்-கண்டா- அடதாளம்.

உந்தனுக்கு[illegible]குற்றம் ஒருநாளுஞ்செய்ததில்லை ராமராமா-இப்
எந்தன்மே[illegible]குற்ற மேதென்றறியேனே ராமராமா (போ
எந்தநாளு[illegible]திணையடிமறவேனே ராமராமா-இப்போ
உந்துதிருமே[illegible]ன் மனத்துயரந்தன்னை ராமராமா
உந்தனிருபத[illegible]த ஒருநாளுமறவேனே ராமராமா-இப்போ
பெற்றென்மாமியாரை பெருநாளுமறவேனே ராமராமா
மைந்தனில்லையென்று மாதவஞ்செய்தீரே ராமராமா-அந்த
மைந்தருடனென்னை வனத்தினில்விட்டீரே ராமராமா
மைந்தருடனாச்சென்றுமனதுகுளிர்ந்தேனே ராமராமா-இப்போ
வனத்திலேவந்துதான்மனதுதளர்ந்தேனே ராமராமா
எந்தனுருயிரை யிவ்விடத்தில்விடுவேனே ராமராமா - ஐயோ
சந்ததியாலேநான் சாகவுமொண்ணாதோ ராமராமா
மைந்[illegible]டனே வனத்தில்மடிந்தாக்கால் ராமராமா - தேவரீ
ர்ந்தராமாயி[illegible]ர்க்குமூம்வாராதோ ராமராமா

சீதைசொல்-திபதை.

என்னிடவிதியின்வன்மை யிப்படியிருந்ததையோ
மன்னவர்பதியைவிட்டு வந்திடுமிருகங்களோடே
பின்னியகாடுபார்க்கப் பிரியவும்விட்டாராமா
என்விடவுயிரையிங்கே யிழக்கவும்விடுவேனையா

(வ-ம்) ஐயையோ ரகுநாயகரே என் விதி யிப்படியிருந்தது இந்தவனத்தில் விட்டதுறைக்கு நானென்ன செய்யப்போகிறேன் என்னுயிரை மாய்த்துக் கொள்ளுகிறேனையா.

சீதைபுலம்பல்-கண்ணிகள்-இ-ப்-மகாரி-அடதாளம்.

என்னசெய்வேன்தெய்வமே இனியேதுசெய்வேன்தெய்வமே ராம
பொன்னின்பாதந்தனக்கென்ன நான்பிழைசெய்தேன் ஐயையோ
விதித்தவிதியிதுவோ அல்லாமல் விமலராருட்படியோ
மதித்திடுங்காட்டிலேயான் ஆமிடங்கிடந்தயங்குவேனே

தந்தைதனை விட்டேன் என்சாமிபதங்கள்விட்டேன்
எந்தன்மாமியைவிட்டேன் காட்டி லேக்கிப்புலம்பலுகின்றேன்
பரதலக்ஷ்மணனைவிட்டேன் இந்த பாரிலயோத்திவிட்டேன்
இரவிபரிசேனைவிட்டேன் எந்தன் சேடியர்தன்னைவிட்டேன்
அனையமனைபலமையா எங்க ளரிமறைபவரோ
சமையமெலைக்காக்க இருமோ யோ சாமிஅனையுமையா

சீதைசொல்-இபிதை,

ஐயையோராமராமாயிவேளையோலே அம்மைத்தாயேவுசலையே
பொய்யாமொழிசேர்பாதனே போதபாலஞ்செய்தேனோ
மெய்யாயுயிரைவிடவென்றால் வேறேர்கதியுமெனக்கில்லை
செய்யாகாரியங்களுமிது ஜெனித்தகர்ப்பந்திதாமே

(வ-ம்) அரிகரிராகவா நம்பிமைத்துன பாதசத்[illegible]க்கர் என் மாமிமார்களே நானென்னபாவஞ்செய்தேன் இப்[illegible]பாதுவுயிரை விடுவோமென்றால் வயிற்றிலே கெர்ப்பபாக்கிய [illegible]க்கின்றது உயிரைவிட்டால் சொற்சப்பகவியில்லை ஆனபடியினால் என்னசெய் வேன் நீங்கள் செய்யாதகாரியஞ் செய்துவிட்டீர்க[illegible] நான்பெண் ணிவன் என்ன்செய்வேன் மாமிமார்களே.

சீதைசொல்-இபிதை-

இந்தநல்வனத்தில்வாழு மியலுள்ளபுட்களேதான்
சொந்தமாய்வனத்திலுள்ள துஷ்டவிலங்கினங்கள்
சந்தயாய்நிலறத்தென்றோடு தனிவார்த்தைசொல்லென்றேநீர்
வந்தனமிகவுஞ்செய்வேன் வந்தெனைக்காத்திடீரோ

(வ-ம்) அரிகரி நான்பெண்ணிவன் இந்தவனத்தில் தவிக்கிறேன் உங்களுக்குக்கொஞ்சமாகிலும் இதக்கமில்லையோ நீங்கள்வந்[illegible]னைத் தினைக்காக்கொண்டுநானென்னசெய்யப்போறே[illegible]பட்சிகளே

சீதை-புலம்பல்-கண்ணிகள்-இ-ப்-ருகாரி ஆதிதாளம்.

பூஞ்சோலைக்குள்ளிருக்கும் பள்ளிமான்பைங்கிளிகளா
சாஞ்சாடியேநடக்கும் சாதகமாம்அன்னங்களா
பஞ்சவர்ணக்கிளிகளே பன்னகமேயிவ்வனத்தில்
சஞ்சலமில்லாமலென்னைத் தற்காத்துக்கொள்வார்காணேன்
வேதானந்த[illegible]ளே வீரியமாக்கவுரிகளே
கண்டபே[illegible]டங்களே காண்டாமிருகங்களே
இருள்வ[illegible]த்துமத்தகமே இருகலைபட்சிகளே
பூகப்[illegible]சாகைகளே பருஷமாமிருகங்களே
ஸ்ரீ[illegible]மர்தேவியானும் தெண்டகாவனத்தில்வந்தேன்
வந்[illegible]நீக்கவெனத்தனைமேட வார்த்தைகள்பேசொணாதோ
இருக்கிறபட்சிகளா எந்தனையக்காத்திடீரோ
பாத[illegible]த்திருக்கவோ பர்வியில்கேவென்னசெய்வேன்

வனப்பட்டியாகினேனே வையகத்திலென்னைப்போலே
பெண்பிறந்தபாக்கியமையோ பேருலகில் நானறியேன்
மன்னசுருதாதவென்னை வன்காட்டில்தவிக்கவிட்டார்
சொன்னதொருவார்த்தையெல்லாம்சொற்பனத்தில்தான்மறவேன்
என்னசெய்வேன்சகுதாதா யேதுசெய்வேன்லஷ்மணரே
பரதசத்துருக்கரே பாவியிக்கேயென்னசெய்வேன்
மாமிமாரேயென்னசெய்வேன் வாழ்வரசேயேதுசெய்வேன்
ஏதுசெய்வேனென்வயிற்றில் வேதனையாய்வந்துதையோ

சீதைசொல் கொச்சகம்.

ஐயையோவென்றுபரம் ஆற்றுவாரொருவரில்லைப்
பைய[illegible]லக்ஷ்மணரும் பதியேகாட்டில்விட்டார்
[illegible]ன்னாரொருத்தி தவிக்கவு' நீதியுண்டோ
உய்யவோரிஷிகளுக்கு உரைப்பதுவுங்கேட்கிலையோ

(வ-ப்) ஐயை:யோ இந்தவனத்தில் தவிக்கிறேனே என்துயரத்தை ஆற்றுவா[illegible]க்காணேன் நான்பெண்சிலை புலம்புகிறது தேவர்களுக்குப்ரிஷிகளுக்குக் கேழ்க்கவில்லையோ இப்படியாதவிக்கவும் நீதியுண்டோ ராகவா.

பூமிதேவிவருகிற-பொதுநிலை.

பூமியிற்பிறந்தசீதை புலம்பிடும்வார்த்தைகேட்டு
தாமிஷமில்லாமற்றன் சடுதியிற்பூமிதேவி
நாமினிலட்சுமிக்கு நல்லுடனுரைக்கவென்று
வாமமாஞ்சீதைமுன்னே வந்துடன்கூறுவாளே.

பூமிதேவிவருகிற-தரு-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம் (பல்லவி.

[illegible]ளே பூமிதேவி வனத்துக்குள்ளே
வந்தாளே பூமிதேவி

அநுபல்லவி.

வந்தாளேபூமிதேவி வனத்திற்சீதையைத்தேடி
செந்தாமரைகள்போல சிலம்புகலகலென்ன (வந்தா)

சரணங்கள்.

நெற்றியிற்திலதப்பொட்டு சுற்றிலுமுக்காமயிட்டு
கைத்தலவளைகுலுங்க மெத்தனநடைநடந்து (வந்தா)
பட்டம்பரமூர்த்தவிரிக்கப் பலமலருஞ்செழிக்க
எட்டுத்திசையுந்தொழவென்றாய்சீதைமகிழ (வந்தா)
என்மகளேசீதையம்மா வென்னத்திற்குப்புலம்புகின்றாய்
முன்னாளிற்சந்திரவதி முறையிடலையோ வன்று (வந்தா)

(வ-ம்) அகோவாருமம்மா நீயிந்தவனத்திலே என்ன காரணத்தினால் தாபத்திரிபப்படுகிறாய் சொல்லுமம்மா.

சீதைசொல்-வசனம்.

நாமென்னவென்று சொல்லப்போகிறேன் ரகுநாயகர் நிஷ்டூரமாய்க் காட்டில்விட்டார் நானென்னசெய்யப் போகிறேனம்மா.

பூமிதேவி வசனம்.

ஆனாலென்னமாயிற்று விதியினுடைய வன்மையானால் விட்டது சந்திராவதியும்தமயந்தியும் வனத்திலே தாபத்திரியப் படவில்லையா நீயென்விசாரப்படுகிறாய் உனக்குரிஷிகள்வந்து துணை செய்வார்கள் சும்மாயிருமம்மா சீதா நான்போய் வருகிறேனம்மா.

பொது திபதை,

திருவநாகமண்டலந்தெண்டெனபலை கரத்திற்கொண்டு
பருமணிருத்திராட்சம் பன்னநீரெக்குந்தன்ன
அருந்தவமுனிவரெங்கே யறையும்வால்மீகர்தா[illegible]ம்
கருணையாஞ்சீதைபக்கல் கடுகியேவருகுவாரே

வால்மீகர்-சிஷியருக்குச்சொல்-வசனம்,

அடாவாடா மவுனசிந்தாமணி துன்மார்க்கசிந்தாமணிநம்முடையவனத்தில் யாரோபெண்குரலாய் கேட்கின்றது போய்பார்த்துவருவோம் தெண்டுகமண்டலமெடுத்துக்கொண்டு வாரும்பிள்ளாய்(சிஷியர்வால்மீகருக்குச்சொல்-வசனம்) அப்படியேயெடுத்துக்கொண்டோம் சுவாமி.

வால்மீகர்-வருகிற-சன்னிகள்-இ-ம்-மோசனம்-மீசபதாளம்.

திருமணித்தாழ்வடமுந் திருநாமவொளியுடன்
அருமறைமாதவமுனி தோணினார்
சடைமுடியதிரவே சாஸ்திரத்தில்வல்லமுனி
திடமுள்ளநடையுடன்முனி தோணினார்
விரித்தசடையுடனே வெண்புலித்தோல்பே[illegible]ந்து
வருத்தமாஞ்சீதைபக்கல் வந்துதோணினார்

வால்மீகர்-சிஷர்களுக்குச்சொல் வசனம்,

அடாவாடா மவுனசிந்தாமணிதாம்பூசைபண்ணவேணும் கிழக்கேநந்தவனத்திற்குப்போய் புஷ்பங்கொண்டு வாரும்பிள்ளாய் அடாதுன்மார்க்கசிந்தாமணிமேலண்டை வனத்திற்குப்போய்புஷ்பங்கொண்டுவாரும்பிள்ளாய் (அப்படியேசெய்கிறோஞ்சுவாமி

வால்மீகர்--சீதைக்குச்சொல்-திபதை,

ஆதிலட்சுமி-யைப்போல வமைந்தயென்றுமேயிங்கே
சோதனைப்பார்க்கவேண்டி தாய்வனம்வந்திட்டாயோ
மாதுமையாளோநீயும் வானவர்தேவிதானோ
போதவேயெந்தனுக்குப் பொருந்தநீ பதில்சொல்வாய்

(வ-ம்) அகோவாருந்தாயே நீயென்னகாரணத்தினால் இந்த வனத்தில்வந்தாய் உன்னைப்பார்த்தால் சூரியவமிசம் போற்காணுது

116583

அதுவுமன்றி ஆதிலட்சுமியைப்போலிருந்தோனுதி சோதனையார்க்கவந்தாயோ நல்லது உனபேரென்ன நீ ஆருடையதேவி எனக்குத் தெரியச்சொல்லுந் தாயே.

சீதை-வால்மீகருக்குச்சொல் த்விபதை.

ஆரென்றுகேட்டீரையா அதிசீலனுமையாளும்
பாரினிலயோத்தியாளும் பரப்பிரமசொரூபமான
காரணதசரதற்குக் கருத்துள்ளகுமாரனான
நாரணன்தேவிதானும் தனிமையாஞ்சீதையென்பேர்

(வ-ம்) அகோவாருஞ்சுவாமி நான் ஜெனகராஜனுடைய பெண் என்பேர்சீதை நான் ரகுநாயகருடையதேவி இந்த ஆரணியத்திலே வந்தவிக்கிறேன் தேவரீருடையநாமதேயம் அடியாளுக்குத்தெரியச்சொல்லுஞ்சுவாமி.

வால்மீகர்-சீதைக்குச்சொல் த்விபதை.

கன்னிகைசீதையே நீ கருத்திலஞ்சவேண்டாம்
வன்னமாம்வனத்தில்வாழும் வான்மீகிரிஷியென்போம்
முன்னியகாரணங்கள் முடிந்தவுடன்தீரவேணும்
என்னகாரணத்தினாலே யிவ்வனம்விட்டாரம்மா

(வ-ம்) அகோவாருமம்மாசீதாய் நீ மனதில் வேறொன்றும் சஞ்சலப்படவேண்டாம் இந்தவனத்திலிருக்கப்பட்ட வால்மீகரிஷியென்பேர் முன்னால்செய்தவினைப்பயன் தீரவேணும் ரகுநாயகர் இந்தவனத்தில்என்னகாரணத்தினால்விட்டார் எனக்குத் தெரியச்சொல்லுமம்மாசீதாய். (சீதை-வால்மீகருக்குச்சொல் த்விபதை.

துஷ்டனிராவணனென்னைச்சிறையில்வைத்த
தோஷத்தாலவன்குலத்தைச்சுட்டிலங்கைப்
பட்டணத்தைவிபீஷணர்க்குதவினானும்
பரிவுடன்தீயினிற்குளித்துப்பலரும்போற்ற
திட்டமுடனயோத்திவந்துவாழுநாளிற்
றேசத்திலேயிதைச்செப்பினார்களென்றே
தொட்டமுடிராமனென்னைவனத்தில்விட்டார்
சுவாமியுமைக்கண்டேனென் துயர்விண்டேனே.

(வ-ம்) அகோகேளுஞ்சுவாமி சண்டாளராவணன் என்னைச்சிறையெடுத்ததற்கு அவன்குலத்தையும் அவனையுஞ்சுருவறுத்து இலங்கையையாள விபீஷணர்க்குப் பட்டங்கட்டி நானும் அக்கினியிற்குளித்தெழுந்து அயோத்திவந்து அரசுசெய்து வரும்நாளையில் அதுகுற்றமாக உலகத்தில் வசைச்சொல்லுண்டாயிற்றென்று ரகுநாயகர் என்னைக்காட்டில்விட்டார் இவ்விடத்தில்தான் துயரப் பட்டுக்கொண்டிருக்கையில் தேவரீரைக்கண்டேன் உம்முடைய பாதாரவிந்தஞ் சரணஞ் சரணஞ்சுவாமி.

வால்மீகர்-சீதைக்குச்சொல்-திபதை.

சீதையேயுன்வயிற்றில் திருந்தவேதரித்தகெர்ப்பம்
பூதலமெச்சவேதான் புத்திரனாகப்பெற்று
ஆதியாமயோத்தியெல்லாம் ஆளவேகடவீரிப்போ
தீதில்லாஆசிர்மத்திற் சீக்கிரம்வாருந்தாயே

(வ-ம்) எழுந்திருமம்மா சீதாய் உன்வயிற்றிற் தரித்தகெர்ப்பம் அயோத்தியாபுரியை ஆளக்கடவது சுகமாயிருக்கவேணும் நம்முடைய ஆசிர்மத்திற்குப்போவோம் வாருமம்மா.

சீதைசொல்-கண்ணிகள்-எதுகுலகாம்போதி-டீசா[illegible]

அன்னைபிதாகுருதெய்வமும்நீயையா முனிநாதா - இன்று
அனாடியேனும்மை அடைக்கலங்காளையா முனிநாதா
முன்னேயென்னபாவஞ்செய்துபிறந்தேனோ முனிநாதா - இந்த
வன்னக்காடுதன்னில்வந்துதவித்தேனே முனிநாதா
தசரதராமருக்குத்தயைசற்றுமில்லாமல் முனிநாதா - என்னை
நிசமதாய்வனந்தனில்நிஷ்டூரமாய்விட்டார் முனிநாதா
வாதையாயிவ்வனம்வந்துதவித்தேனே முனிநாதா - இந்தப்
பேதையைரட்சிக்கிற்புண்ணியமுன்னுடையா முனிநாதா
நீதிதப்பிராமர்நெடுங்காட்டிலோட்டினார் முனிநாதா - இப்போ
ஆதிமுனியேநீரும் ஆற்றினீரென்றுக்கம் முனிநாதா
மாற்றிநீரெந்தன்மனதுகவலையை முனிநாதா - இதற்கு
மாறுவுபகாரமேதுமறியேனே முனிநாதா
உற்றுருறவின்முறைஉள்ளவள்நானையா முனிநாதா - இப்போ
சுற்றம்போல்வந்து துயரத்தைத்தீர்த்தீரே முனிநாதா
வாராபுதிருமயோத்தியைக்கண்டாற்போல் முனிநாதா - இதற்கு
மாறுவுபகாரமேதுமறியேனே முனிநாதா

சீதைசொல்-திபதை

மாதவமுனியேயெந்தன் வசனமேகேளுமையா
சூதுபோல்ராமர்செய்த துயரத்தைத்தீர்த்தீரையா
போதுகாலங்கள்வந்தால் பூவையரொருவரில்லை
ஏதுநான்செய்வேனையா யிணையடிக்கமலம்போற்றி

(வ-ம்) அகோவாருஞ்சுவாமி எனக்குப் போதுகாலங்கள் வந்தால் பெண்துணை யொருவருமில்லையே இதற்கு நானென்னசெய்யப்போகிறேன் சுவாமி,

வால்மீகர்-சீதைக்குச்சொல்-திபதை

நம்பிட ஆசிர்மத்தில் நங்கைமாரனேகருண்டு
செம்மையாயேவற்செய்வார் சீருடனிருப்பாயம்மா
இம்மையில்வேணபாக்ய பிக்ஷணமழைப்பிப்பேனென்
செம்மையாயாசிர்மத்திற் சீக்கிரம்போவோம்வாராய்

(வ-ம்) அதோவாருந்தாயே நம்முடைய ஆசிரமத்தில் ஏவற்றொழில்செய்ய வேணபேர் கன்னிமார்களுண்டு உனக்கொரு குறைவுமில்லை ஆசிரமம்போவோம் வாருமம்மா சீதாய்.

சீதையும்-வாக்மீகரும்-ஆசிரமம்போகிற-கண்ணிகள்

இ-ம். எதுகுலகாம்போதி-மிசுரதாளம்,

முனிவருஞ்சீதையை முக்கியமாயழைக்கவே
வனிதையராலாத்திபெற்ற மாதுநடந்தாள்
வனத்தினில்வாழ்கின்ற வால்மீகியாசிரமத்தில்
மனமகிழ்ந்து சீதையும் வந்துபுகுந்தாள்
கன்னியரானபூவனமும் வால்மீகாசிரமத்தில்
கன்னியெனுஞ்சீதா தேவிகண்டுமகிழ்ந்தாள்
கானகமயில்போற்சீதை காசியமுனிவர்பின்னே
தேனெனுமொழியாள் சீதசிருடன்வாராள்
கண்டவுடன்சீதையாரைக் கானகத்தில்வாழ்மாந்தர்
சென்றுமலர்தான்சொரிய செந்திருவாராள்

பொது திபிலை.

வனத்தினிற்சீதைதானும் வைபோகமாகவேதான்
கனத்ததோரிஷியோர்தாமுங் கருணையாய்வைத்திருந்தார்
மனத்தினிற்றுயரந்தீர்ந்து மகாதேவியென்னுஞ்சீதை
தினத்துடனாசிரமத்திற் சிறப்புறவிருந்தாளப்போ

(வ-ம்) அந்தச்சமயத்தில் சீதாதேவி யிருக்கையில் போதுகாலம் வந்து சகிக்கமாட்டாமல் தாபத்திரியப்படுகிற விதங்காண்க.

சீதைசொல்-கெர்ப்பத்தரு-இ-ம்-ரூபகப்-திரிபுடைதாளம்

மானினங்கள்மயிலினங்கள்வனத்திலுள்ளகுயிலினங்கள்
அன்னங்களேகிளிகளே யெந்தனடிவயிற்றைநோகுதையோ
பெண்பிறந்துபட்டகுறை போதுமையாயெந்தனுக்கு
என்னசெய்வேனொருக்காணேன் எங்கணாகுறாதா
சந்ததியைப்பெற்றெடுத்தால் சந்தோஷமாய்வருகுவீரோ
எந்தடவோதானறியேன் என்னுடையஅத்தையம்மா
வந்துதையோவயிறுநோவு வாதைப்படயேதுசெய்வேன்
சுந்தரமாம்ராகவரே தொங்குதொங்குநோகுதையோ
அத்தையரேயென்னசெய்வேன் அடிவயிற்றைநோகுதையோ
கன்னியர்களாருமில்லை கட்டிப்பிடிப்பாராருமில்லை
என்னாரசோமயத்திரா யேதுசெய்வேன்லட்சுமணரே
பாதரேசத்திருக்காயென் பரிதாபந்தெரியாதோ
ஆரிருந்துமென்னபலன் என்னடிவயிற்றைநோகுதையோ
பூமியிற்பெண்பிறந்து போதுமையாயெந்தனுக்கு.

(வ-ம்) அரிகரி என்னுடையபாக்கியர்கள் அண்டையிலிருந்தவி

சிதிக்கொண்டு உபசாரணைபண்ணுவார்கள் இவ்விடத்தில் ஆரையுங் காணோம் என்னசெய்வேன் ராகவா,

சீதைசொல்-திபிதை.

குழல்சேர்முலையாள்பாங்கி சகத்துடனருகிற்காணேன்
மாதவர்தேவிமார்கள் வந்துடனிருப்பார்காணேன்
போதுகாலங்கள்நோவு பொறுக்கவுமுடியவில்லை
பாதகந்தீர்க்காமல பத்திரரேயருகில்வாரீர்

(வ-ம்) என்னண்டையில் யாருங்காணேன் போதுகாலம் வந்து பொறுக்கப்போகவில்லை என்னைப்பாதகமாக்கிவிட்டீரோ நீராகிலும் அருகில்வாரும் ராகவா,

சீதைசொல்-கன்னிகள்-இம்-ஏதுகுலகாம்போதி-ஆதிதாளம்

என்னசெய்வேனொருத்தியே நுசெய்வேனருங்காணேன்
மன்னராகுநாதனென்னை வன்காட்டில்தயங்கவிட்டார்
மன்னியதோர்கானகத்தில் வயிறுமெத்தநோகுதையோ
நித்திரைகள்பண்ணவில்லை நெடுநேரமாகுதையோ
குற்றமில்லாரகுபதிக்குக் கொடும்பாவமேதுசெய்தேன்
அத்தையரோநீரும்வந்து ஆதரித்துக்கொள்ளுமம்மா

சீதைசொல்-திபிதை,

என்னிடஅத்தையாரே யெப்படிபொறுப்போனம்மா
சென்றிடும்பரிவாரங்கள் சீர்களுமில்லையம்மா
உன்னிடஅருளேயன்றி யொருவருங்காணேனம்மா
மன்னியகாட்டினுள்ளே வந்துநீதுணைசெய்வாயே.

(வ-ம்) அகோவாருமம்மா மாமிமார்களே எப்படிபொறுப்பேன் என்னுடைய சிறொல்லாங்குலைந்து இங்குவந்து அலைகிறேன் உங்களுடையஅருளேயல்லாமல் வேறேதுணைகாணேன் நீங்களாகிலும்வந்து யென்னைக்காப்பீரம்மா மாமிமார்களே!

சீதை-வால்மீகருக்குச்சொல்-திபிதை.

ஐயையோவொருகாலத்தில் ஆரையும்பிரிந்ததில்லை
உய்யவேவயிறுமெத்த வுளைக்குதயினியென்செய்வேன்
வையகவனத்தில்வாழு மாதவமுனியேஐயா
மெய்யதாயெந்தனுக்கு வேணதற்கென்னசெய்வேன்

(வ-ம்) அகோவாருமையா முனிநாதா யெனக்குக்கெர்ப்பவாதனைப்பொறுக்கப்போகவில்லை எனக்குவேண்டியதற்கு யென்னசெய்யப்போறேன் சுவாமி. (வால்மீகர்-சீதைக்குச்சொல்-திபிதை.)

சுந்தரத்தாயேநீதான் சோபங்கள்படவேவேண்டாம்
சுந்தனாருளினாலே சுமடைந்தென்றுய்வாழ்வாய்
சிந்தையிற்றுயரம்வேண்டாம் தசரதராயர்போலே
அந்தமாயயோத்தியாள அரசனைப்பெறுவாயம்மா

(வ-ம்) அகோவாருமம்மா சீதாய் உனக்கு ஒருகுறைவும் வருகிறதில்லை உனக்குவேண்டியபத்திற்கு நான்தருவிக்கிறேன் சுப்பிரமணியர்கடாட்சத்தினால் மைந்தனைப்பெற்று அயோத்தியை அரசாளப்போறான் நீயும்பார்ப்பாயம்மா.

இதுவும்-வால்மீகர்-சீதைக்குச்சொல்-திபிதை.

கானகம்வந்தோமென்று கருத்தினிலஞ்சவேண்டாம்
வானவர்தேவிமார்கள் வந்துடன்றனையேசெய்வார்
வேணதோர்பாக்கியங்கள் மிகுதியாய்த்தருவேனம்மா
ஜானகிவளைப்புகுந்து சஞ்சலந்தவிராட்டியே

(வ-ம்) அகோவாருமம்மாசீதாய் இந்தவனத்திலே வந்தோமென்று தாபந்திரியப் படவேண்டாம் இதோகன்னிமாரை யழைப்பிக்கிறேன் நீ அலையிலே போயிருமம்மா.

சீதை-வால்மீகருக்குச்சொல்-திபிதை,

சஞ்சலமெனக்கேதையா தாளிணைகண்டபோதே
நெஞ்சினிற்றயரந்தீர்ந்தே னிலத்தினிற்றரித்தேனையா
மிஞ்சியேகெர்ப்பந்தானும் வேதனையாகுதிப்போ
என்செய்வேன்முனிவரோயிவ் விடர்தனையறிகிலேனே

(வ-ம்) அகோவாருஞ்சுவாமி முனிநாதரே எனக்கொரு சஞ்சலமுமில்லை தேவரீரைக்கண்டமாத்திரத்தில் இடறுகளெல்லாம்போய் விட்டது கெர்ப்பவேதனை சகிக்கவில்லை அதற்கென்ன செய்வேன் முனிநாதரே.

பொது திபிதை,

மாவிடதேவியாரின் மனமதைத்தேறச்செய்து
வால்மீகரிஷியுமப்போ வன்மையாய்த்தியானஞ்செய்து
சோலமுங்குணமுமன்புங் கொண்டநற்கன்னிமாரை
சீலமாய்ச்சிருஷ்டிசெய்து சீதைமுன்னனுப்பினரே

(வ-ம்) அகோதெப்படியென்றால் சீதையின்மனதைத்திடப்படுத்தி வால்மீகரிஷியானவர் தம்முடையகியானதிருஷ்டியால் கன்னிமார்களையுண்டாக்கி பணிவிடைசெய்ய சீதைமுன்பு அனுப்பிவைத்தலைக்காண்க.

ரிஷிகன்னிகள்-வருகிற-தரு இ-ம்எதுகுலகாம்போதி-அடதாளம்.

பல்லவி.

வந்தனரிஷிகன்னிகள்வந்தனர்பாரீர்

அநுபல்லவி,

மந்திரமிகுந்தரிஷி வால்மீகராருளினாலே
அந்தமுள்ளசேலைகட்டி விந்தையாய்பொன்னேலையிட்டு (வந்

சரணங்கள்,

நெற்றியிற்றிலர்தப்பொட்டு வைத்துமேமுக்காடுமிட்டு
லைத்தலவிளகுலுங்க தந்ததைகள்போலமேபேசி (வந்த)

கொடியிட்டுவஞ்சிடமே அடியிணைசிலம்படைசய
வடிவாளஸ்தனங்குலுங்க முடிதனில்மல்லிகைசூட்டி (வந்த)

வால்மீகர்-கன்னிமார்களுக்குச்சொல்-திபிதை-

சுந்தரக்கன்னிமாரே சொல்லுவேன்கேளீரிப்போ
அந்தங்கொள்ராமர்தேவி யானவள் துணையில்லாமல்
சிந்தையற்றியக்குகின்றாள் சீக்கிரம் நீங்கள்சென்று
சந்தருஷிடியாகப்பக்கஞ் சார்ந்தேவல்தனைச்செய்வோ.

(வ-ம்) அகோவாருங்கள்பெண்களே ஸ்ரீராமர்தேவியாகிய சீதா ங்கனி துணையில்லாமல் சஞ்சலப்படுகின்றாள் ஆகையால் நீங்கள் போய்பாதுகாத்திருங்கள் பெண்களே (கன்னி-வ-ம்) அப்படியே செய்துவருகிறோஞ் சுவாமி. (கன்னிகள்-சீதைக்குச்சொல்-திபிதை.

இந்தபாவனத்தில்மீது யேனம்மாபுலம்புகின்றாய்
மந்திரகன்னிகைகள் வால்மீகரனுப்பவந்தோம்
உந்தனுக்கருமேதாங்க ளொருமையாயிருக்கவல்லோம்
சந்ததிபெறுவாய்நீயுஞ் சஞ்சலம்விடுவாயம்மா

(வ-ம்) அகோவாருமம்மா சீதாய் இந்தவனத்தில் வந்தோமென் றுநீதாப்ந்திரியப்படுகிறாய் வால்மீகரனுப்பிய மந்திர கன்னிகளா கிய நாங்கள்வந்தோம் நீநல்லபுத்திரனைப் பெறுவாய் பயப்பட வேண்டாம் பன்னசாலையறையே வாருமம்மாசீதாய்,

சீதை-கன்னிமார்களுக்குச்சொல்-கொச்சகம்.

மங்கையர்க்கரசியாரே வருத்துதேகெர்ப்பமது
சங்கையாம்மெய்யுந் தளருதேயென்னசெய்வேன்
இங்குநீங்கட்களித்து யேதாவதோர்கதையைப்
பொங்குமுடன்சொன்னாற் புண்ணியமுண்டுங்களுக்கே

(வ-ம்) அகோவாருங்களம்மா கன்னிமார்களே எனக்கானால்கெர் ப்பவேதனைச் சகிக்கக்கூடவில்லை யதாவது ஒருபுண்ணியகதைகளை ச்சொல்லிக்கொண்டு வாருங்களம்மா.

கன்னிமார்கள்சொல்-வசனம்.

நாங்கள்காட்டில்வாழப்பட்டவர்களாச்சுதே எங்களுக்கு என்ன கதைதெரியும் நீசொன்னால் நாங்கள்கேட்டுக் கொண்டு வருகிறோ மம்மா சீதாய் (சீ-வ-ம்) ஆனாற்சொல்லுகிறேன் கேளுங்களம்மா க ன்னிமார்களே.

சீதைகன்னிமார்களுக்குச்சொல்-அகவல்- இ ப்-மோசனம்

ஜாக்கிரிடவுபத்திரத்தால் அன்றுதேவர்முறைகள்கேட்டு
தரணிதனில்மாயவனார் தசரதர்க்குப்பிள்ளையாகி
ஸ்ரீராமருடன்கூடலக்ஷமணரும்பரதருமாய்
தாரியானசத்திருநாமம் தகமையாகநால்வராகி
விடருநம்பி விசுவாமித்திரர் வேள்விதன்னைமுடிக்கவேண்டி

தாடகையைவதைசெய்து தனியில்வேள்விதனைமுடித்து
அகலிகைதன்னைமங்கையாக்கி அட்சணமேமிதிலைசென்று
மகிமையுடன்வில்வளைத்து மாலையிட்டுவருகையிலே
பாசுராமர்கையின்வில்லை பாரியதோர்பலம்பரித்து
துரிதமுடனயோத்திவந்து சுகமுடனேவாழ்கையிலே
பிழை[illegible]சொல்கைகேசியாலே பெரியவனம்போகையிலே
[illegible]பொடித்து அளையுடுத்தி தண்டகாவனஞ்சேர்ந்தோம்
பாரியதோர்லட்சுமணரும் பாக்குடனேகூடவர
காரணமென்றெழுந்திருந்து கங்கைதனில்வந்துநின்று
பாதரும்பின்னேவர பாங்குடனேகண்டுநின்று
பெரியஅரசன்சேதிகேட்டு பெருங்கவலைதான்மூழ்கி
இராமர்பாதருக்குத் திருவடியைக்கொடுத்தனுப்பி
காரணமாய்வந்துநின்ற கரதூஷணரைக்கருவறுத்து
சூர்ப்பனகைமூக்கரிந்து சுகித்திருக்கும்வேளைதனில்
மாரீசனுமானாய்வர வதைத்தவனை அட்சணமே
அச்சுதனைத்தான்தேடி லட்சுமணரும்போகையிலே
பிட்சையென்றுவந்தானே பெரும்பாவிராவணனும்
பன்னகசாலையுடன் பதிவிருந்துபேர்த்தெடுத்தான்
அந்நிலையிற்சடாயுதானும் அமர்பொருந்தும்வேளையிலே
திரைகடலைத்தான்கடந்து திடமசோகவனத்திலென்னைச்
சிறையில்வைத்துராவணனுந் திரிசடையைக்காவல்வைத்தான்
ராமரும்லட்சுமணரும் நல்வனத்திற்றேடிவந்தார்
சேதமஞ்சடாயுசொல்லத் திருவடியிற்சேர்த்துக்கொண்டார்
வாலிதன்னைமார்பிளந்தார் வடிவுள்ளசுக்ரீபர்க்குக்
கோலமுடன்கிஷ்கிந்தைக் கொற்றவனாப்பட்டங்கட்டி
அனுமானைத்தூதனுப்பி அன்றிலங்கைச்சுட்டெரித்து
கனமாகச்சேதிசொல்லக் கடல்தாண்டிவானரங்கள்
குப்புடனேராமர்சென்று கொடியலங்கைப்போய்புகுந்து
கும்பகர்ண[illegible]காயன் கூடியதோரிந்திரசித்தை
சித்திரவதைசெய்தபின்பு சிரம்பத்துடையோனுக்குச்
சத்துருவாய்விபீஷணர்தன் றமையனிட உயிர்நிலையின்
உற்றதோருபாயமெல்லாம் உகமையுடன்ராமர்கேட்டு
வெற்றியுள்ளராமபாணம் விட்டளவில்ராவணன்றன்
அற்றுவிழமார்பிளந்து அமிர்தநிலைகண்டறிந்து
தத்திவிழராவணனைத் தாம்வதைத்துவிபீஷணர்க்கு
இலங்கைதனைப்பட்டங்கட்டி ராச்சியத்தைபாரென்று
பெ[illegible]ங்கமுடன்சிறைமீட்டி போதவே[illegible]ர்க்கி

அக்கினியில் நான்மூழ்கி அயோத்தியில்வாழ்ந்திருந்தோம்
திக்கிலுள்ளோர்சொலென்று திறமுடனே லட்மணரும்
பாரியதோர்தேரிலேற்றிப் பாங்குடனேகொண்டுவந்து
வீரியமாய்வனத்திலென்னை விட்டவரும்போனாரம்மா
என்னுடையசதைதமிதுகள் எந்நிலைமையேகேட்டிரோதாய்
[illegible]செய்வேனம்மமாரே இனியுங்கள் துணைதானே

சீதை-கன்னிகளுக்குச்சொல்-வசனம்,

அம்மா கன்னிமார்களே எனக்கானால் வயிறுநோவு பொறுக்[illegible]வில்லை என்தந்தையாகிய வால்மீகருக்குச்சொல்லி ஒரும[illegible]ச்சியை அழைப்பிக்கச் சொல்லுங்களம்மா (கன்-வ-ம்)அப்[illegible]செய்கிறோமம்மா.

கன்னிகள்-வால்மீகருக்குச்சொல்-வசனம்.

அகோவாருஞ்சுவாமி நம்முடைய ஆசிரமத்தில் சீதைமிகவுங்கெர்ப்பவேதனை தாளமாட்டாமல் தாபத்திரியப்படு[illegible]ள் சீக்கிரம் ஒருமருத்துவச்சியை அழைப்பிக்கவேணுஞ்சுவாமி.

வால்மீகர்-வ-ம்-அப்படியேயிதோ அழைப்பிக்கிறேன்.

வால்மீகர்-சிஷர்களுக்குச்சொல்-திபதை

நிலைபெறுஞ்சிஷரேயிந் நிமிஷத்திலிருவருந்தான்
மலையடியோரஞ்சென்று மருத்துவக்கிழவியைக்கண்
டிலகும்முனிவருன்னை இட்சணமழைத்தாரென்று
நலம்பெறவழைத்துக்கொண்டு-நமதிடம்வருகுவீரே.

(வ-ம்) அடாவடா மவுனசிந்தாமணி அப்பா தன்மார்க்கசிந்தாமணி நம்முடையமலையடிவாரத்துக்குப்போய் மருத்துவக்கிழவியைஅதிசீக்கிரமாய் அழைத்துக்கொண்டு வாருங்களடா-(சி.வ-ம்) அப்படியே அழைத்துக்கொண்டு வருகிறோ[illegible]ஞ்சுவாமி

சிஷர்-மருத்துவக்கிழவிக்குச்சொல்-வசனம்-அடிமாட்டி (என்டாபோரண்டிகளே) வால்மீகமகாமுனி அழைத்து[illegible]கொண்டுவரச்சொன்னார்வாடி(கி-வ-ம்) வால்நீண்டமுனியழைத்தால் நான் வருகிறதா(சி.வ-ம்) அடியடி அப்படியல்ல மகாதபோதனராகிய வால்மீகமகாரிஷியடி(கி-வ-ம்)அப்படியா இதோவருகிறேன்.

பொது திபதை.

நசைத்திடுதலையும்பீளை நாடியகண்ணும்வாயில்
நுரைத்திடுநீருங்கையில் நுவன்றிடுதடியுதன்றுய்த்
திரைத்திடுமெய்யுப்பீறற் சேலையுங்கலையநீடிற்
சிரைத்திடுமிகமருத்வக் கிழவியுமிதோவந்தாளே.

பொது-வ-ம்-அகேசதெப்படியென்றால் மருத்துவத்தி[illegible]கதே[illegible]சிந்த மலையடிவா[illegible]லிருக்கப்பட்ட மருத்துவக்கிழவி வருகிற[illegible]விதங்காண்க.

மருத்துவக்கிழவிவருகிற-தரு-இ-ம்-பூரிகலியாணி ஆதிதாளம்

பல்லவி.

கிழவிவந்தாளே மருத்துவக் கிழவிவந்தாளே

அநுபல்லவி.

அழைத்தசேதிலைய பதிகுவோமென்று
தழைத்தஆசிர்மந்தன்னிற்போகவும் (கிழவி)

சரணங்கள்,

வனத்தில்வால்மீக னென்னையழைத்திடுக்
கனத்தசேதியை விதத்துடன்கேழ்க்க
தள்ளாதேதள்ளாதே கள்ளப்பசகளே
துள்ளிவிழாதேநீர் மெள்ளநடவுங்கள், (கிழவி)

அஷ்டதிசையிலும் இஷ்டமாய்த்தேடினல்
சட்டமுடனெனைப்போற் கெட்டியில்லையென்று
துரப்பேஙகளடா சோரப்பசகளே
வெருவந்தீரானுல் சிறியடிப்பேனென்று (கிழவி)

சுங்கானும்வாயினிற் றந்திப்புகையெழ
தொங்குமுலையிரண்டும் மங்கனிலத்தில்விழ
துஷ்டப்பயல்களே வெட்டிநின்றடுங்கள்
வெட்டியுதைத்திடுவேன பட்டிமக்களேயென்று (கிழவி)

சிஷர்-வால்மீகருக்குச்சொல் வசனம்,

சுவாமி சுவாமி மருத்துவக் கிழவியை இதோ அழைத்துக் கொண்டுவந்தோமையா.

வால்மீகர்--கிழவிக்குச்சொல்-திபிதை,

மருத்துவக்கிழவிகேளாய் மாயவன்ராமர்தேவி
வருத்தமாய்க்காப்பநோயின் வாதைகள்படமாட்டாமல்
கருத்தின்றுயரமாகி கலங்கிறுளாசிர்மத்தில்
திருத்தமாய்பார்த்தாயானுற் செம்பொனுமளிப்பேனனே.

(வ-ம்) அடிவாடி மருத்துவச்சி ஸ்ரீராமருடைய தேவியாகிய சீதாங்கனி மெத்தவயிறும்நாவுபொறுக்கவொட்டாமல் தவிக்கிறுள் சீக்கிரமாய்ப்போய் என்மனது சந்தோஷம் வரும்படியாய்ப்பார்த்தையானல் உனக்குவேணதுதருகிறேன் போய்ப் பத்திரமாய்ப்பாரடிமருத்துவச்சி.

மருத்துவச்சி வால்மீகருக்குச்சொல் வசனம்.

அப்படியே பார்க்கிறேனையா

மருத்துவச்சி சொல் - வசனம்.

ஆரடிஅம்மா-கன்னிமாரே (ஏண்டியம்மா) என்னடியம்மா அழுதுக்கொண்டிருக்கிறுய்.

சீதைசொல்-வசனம்.

எனக்கு வயிறுநோவு பொறுக்கப்போகயில்லையே நே செய்யப்போறேனம்மா.

மருத்துவச்சிசொல் வசனம்.

அம்மா வொருநாளும்பிள்ளைபெறுதவளாச்சே தலைச்சனுன படியிருமே அப்படிதானிருக்கும் காக்கைகையேயினகொ... அகை யாதா கைப்பட்டகண்ணுனது அறுகாதா அறுமேயால ... பிள்ளையிருந்தால் உலைக்காமலுந் துளைக்காமலு மிருக்கும ... யத் தைப்பெற்றவர்களெல்லாம் பயப்படும்போது தலைச்சன்பிள்ளைக் காரிக்குத் தைரியமிருக்குமா பயப்படாதே சும்மாயிரு இன்னஞ் சற்றுநேரத்துக்குள்ளே தின்னுவோம் பன்னசாலை அறையிலே போவோம்வாருமம்மா சீதா

சீதைசொல்-கெற்பவேதனை-கண்ணிகள்-(௰)ம்
எதிருகுலகாம்போதி-ரூபகதாளம்.

முதல்மாதந்தன்னிலேதா னுனுமம்மாதலை
முழுகிக்குளித்தேனடி அம்மமாரே
அதுவேகுளிபதாக நின்றதடிகெர்ப்பம்
அதிலேகறுகறுத்து தம்மமாரே
இரண்டாந்தான்மாதத்திலே யெந்தனுக்கேஅம்மா
நல்மசக்கைகொண்டுதடிஅம்மமாரே
கண்டபுளிமாங்கனியும் காட்டுக்களாக்காய்மே
லிச்சைகொண்டேனடிஅம்மமாரே
மூணாந்தான்மாதத்திலே முகம்வெளுத்தேயெந்தன்
முலை நுனிகறுத்ததடி அம்மமாரே
காணப்படாதசிறு நூல்போலிடையது
காணப்பெருத்ததடி அம்மமாரே
நாலாந்தானமாதத்திலே யெந்தனுக்கேகெர்ப்பம்
நாடிநிலைத்துமுலை யிரண்டிலேயும்
பாலாய்சுரந்துசுரந்து நுனியெழும்பிநுனி
பசபசென்றூறச்சடி அம்மமாரே
அஞ்சாந்தான்மாதத்திலே யெந்தனுக்கேகெர்ப்பம்
அழகொழுகியேயிருக்கு மேனியெல்லாம்
மஞ்சள்நிறமாச்சுதடி யெந்தனுக்கேசிறு
வயிறுஞ்சனத்ததடி அம்மமாரே
ஆறுந்தான்மாதத்திலே பஞ்சணைக்கேநானும்
அடியெடுத்தெடுத்துவைக்க யெந்தனுக்கே
பேருசிருந்ததடி மெள்ளமெள்ளநடந்
திடப்போனுந்துறந்தோமடி அம்மமாரே

ஏழாந்தான்மாதத்திலே வஷிஷ்டர்வந்தே நாள்பார்த்
தெனக்குஸ்ரீமந்தஞ்செய்தார் அம்மமாரே
தாயார்வரிசையெல்லா மெந்தனுக்கே தந்தை
தானுமேமத்துவைத்தாரடி அம்மமாரே
எட்டாந்தான்மாதத்திலே யெந்தனுக்கே இந்த
விடைபூறுவந்ததடி அம்மமாரே
...டலைசெய்தாதிமானாக் காணேனடி இந்தக்
காட்டில்விட்டுவிட்டாரடி யெந்தனையுந்தான்
ஒன்பதாமாதத்திலே பக்கத்துணையாயெனக்
கொருவருமில்லையடி அம்மமாரே
தென்பில்லாஇவ்வனத்தில் நானறனித்தே இங்கே
தேடிநின்றபெண்துணை அம்மமாரே
பத்தாந்தான்மாதமடி யிதுவெனக்கே அம்மா
...ரதவிக்கவிட்டாரடி யென்னையுந்தான்
வெற்றிறகுராமருக்கு நான்செய்தகுற்றமது
யிப்படியிருந்ததடி அம்மமாரே

சீதை-சொல்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

அண்டையில்வாருங்களம்மா கன்னிமாரே
அண்டையில்வாருங்களம்மா

அநுபல்லவி.

அண்டையில்வாருங்களம்மா பண்டுநான்செய்தவினை
தெண்டகாரண்யத்தில் ஒண்டியாய்தவிக்கிறேன் (அ)

சரணங்கள்.

தலையைச்சுழட்டுதம்மா தண்ணீர் தாகமெடுக்குதம்மா
தக்குமேயிந்தவுயிர் நீக்குமோபோய்விடுமோ
பக்குவமதாகநீங்கள் ஒக்கத்துணையாய்க்காரும் (அண்)

எங்கும்வலிக்குதம்மா எந்தனிடுப்புநோகுதம்மா
பேதாயெனக்கு வேதனையாகுதே
மாதரேநீங்களெல்லாம் ஆதரவாய்க்காரும் (அண்)

சீதைசொல்கண்ணிகள்-இ-ம்-எதுகுல்காம்போதி-ஆதிதாளம்-

அம்மமாரேநானென்னசெய்வேன்-என்
னடிவயிற்றைப்புண்ணாய்நோகுதடி-அடி
தோழிமாரேநானென்னசெய்வேன்-என்
தொடைகளெல்லாம்புண்ணாய்நோகுதடி-அடி

பாக்கிமாரோ நானென்ன செய்வேன் - என்
பக்கமெல்லாம்புண்ணாய்நோகுதடி - நல்ல
தயிரின்மேலேயெனக்குயிச்சையடி - அடி
தாதிமாரேயிதுவென்னலச்சையடி அடி
இந்தகண்டமாத்திரந்தப்பிப்பிழைத்தேனானால் - நான்
இனிபுருஷனோடேயென்றுஞ்சேரேனடி

கிழவி - சிஷியருக்குச்சொல் - வசனம்,

அருணுடன்ஜானகிக்கு ஆனதோர்வயிற்றிற்கெற்பந்
திரளுடன்றிங்கள்பத்துஞ் சென்றுபூரணமதாகி
அரியமைந்தனைப்பின்று ளச்செய்திமுனிவருக்குப்
பிரியசிஷர்களேயோடி பொட்டெனச்சொல்லுவீரோ.

வசனம்

அடாவாடா போரீர்களடி சீதையானவள் கோடிசூரியப்பிரகாசமாய் அந்தஅயோத்தியையாளத்தக்கபுத்திரனைப் பெற்றாளென்று முனிவருக்குப்போய்ச் சொல்லுங்கள் சிஷர்களே.

சிஷர்கள்சொல் - வசனம்.

ஆ - ஆ - தம்பிபிறந்தானா சந்தோஷம் சந்தோஷம் கையிலெடுப்போம் முத்தங்கொடுப்போம் இனிகுறைவில்லை இதோவோடிஎங்களையாகிய வால்மீகருக்குச்சொல்லுவோம் அடிபாட்டி,

கிழவிசொல் - தரு - இ - ம் - மூகாரி - சாபுதாளம்,

பல்லவி,

பிள்ளைபிறந்தது - நல்லசெள்ளுமணிபோல பிள்ளைபிறந்தது

அநுபல்லவி.

தெள்ளியரகுநாதர் தேவிதிருவயிற்றில் (பிள்ளை)

சரணங்கள்.

காலலைசக்கிக்கையசைக்கிக் கண்சிமிட்டிவாய்திறந்து
கோலமுலைப்பாலுண்ண கூவாகூவாவென்று (பிள்ளை)
கொஞ்சிக்குளிப்பாட்டிக் கோதாட்டிசீராட்டி
வஞ்சிசீதையிற்றிரு வயிற்றிலுச்சிதமான (பிள்ளை)
நல்லபிள்ளையிதுவென்று நாயகிமார்கூறிடவே
எல்லவருமோடிவந்து யெடுத்தெடுத்துக்கொஞ்சிடவே (பிள்ளை)

சிஷர் - வால்மீகருக்குச்சொல் - திபதை.

பத்தாமாத்துத்தங்கம் பசும்பொன்னையுருக்கிவார்த்த
சித்திரப்பதுமைபோலே ஸ்ரீராமமூர்த்தியாரின்
பத்தினிசீதையாரும் பரிவுடனிப்போதல்ல
புத்திரனைப்பெற்றாள்சுவாமி பொற்பாதம்போற்றிபோற்றி

வசனம்.

அகோவாருஞ்சுவாமி எங்களம்மையாகிய சீதாங்கனி யானவள் பத்துமாதத்துத்தங்கம்போல் ஒருபாலகனைப்பெற்றாள்சுவாமி.

பொது இசைகவி,

செந்திருவானசீதை சிறுவனைப்பயின்றாளென்று
அந்துமிவாத்தியங்கள் அலங்கவேகாளமூத
இந்திரர்மற்றுந்தேவ ரிஷிகளும்பார்த்திருக்க
வந்துவால்மீகர்தாமும் வழங்குவார்வேணதெல்லாம்.

வால்மீகர்-சிஷிருக்குச்சொல்-வசனம்

அடாவாடா மவுனசிந்தாமணி அப்பா தன்மார்க்கசிந்தாமணி ஒருசகடையின்பேரில்சர்க்கரையும் இரண்டு சகடையின்மீது விளையுக்கொண்டுவாருபிள்ளாய் (சிஷர்-வ-ம்)அப்படியேஇதோ கொண்டுவந்தோம்சுவாமி.

பொது-தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

(யா
சர்க்கரைவழங்கினாயா வால்மீகர்தானுஞ் சர்க்கரைவழங்கினா

அநுபல்லவி.

மைக்குழலாள்சீதையாரு மைந்தனைப்பயின்றாளென்று
அக்குவலயங்கள்முற்றும் ஆனதோர்விளைகளீந்து (சர்)

சரணங்கள்.

ஜனகராஜன்மகளான ஜானகியென்னுமம்மா
திலகரும்போற்புத்திரனைச் சீர்பெறவேயீன்றதினால் (சர்க்)

நல்லோர்முதற்பெரியோ ரெல்லோர்களுந்தழைக்க
வல்லமைக்கோற்பிடித்த மன்னவர்களும்பிழைக்க (சர்க்)

வேதமுதற்கலைகள் விரும்பித்துதிகள்பண்ண
மாதவர்களும்வந்து மனதிற்களிப்புறஎண்ண (சர்க்)

சீதை-தாலாட்டு - கண்ணிகள்-இ-ம்-நீலாம்புரி.

ஆராரோ-ஆராரோ-ஆராரோ-ஆராரோ.

சீரானஅயோத்தியில்வாழ் தசரதனார்பேரனைப்
பேரானராமரிட பிரபலத்தால்வந்தபிள்ளாய் (ஆராரோ)

காரணந்தொலைக்கவெந்து கனமாம்பதியைவிட்டு
ஆரண்யந்தன்னில் அலைந்தலைந்து வாதைபட்டு (ஆராரோ)

பூரணமாம்வால்மீகர் புண்யத்தால்வந்தபிள்ளை
நாரணனார்போல்விளங்க நன்மையுடன்வந்தபிள்ளை (ஆராரோ)

பேர்கமிகுஞானப் பொக்கிஷமேமுக்கனியே
வேதமெயின்னிலையென விளங்கவந்தகண்மணியே (ஆராரோ)

சீதை-வால்மீகருக்குச்சொல் திபதை.

ஐயனே முனிவர்கோவே அளித்திடும்பாலனுக்கு
வெய்யவன்குலத்தைப்போல விளங்கவேநாமகர்ணஞ்
செய்யவும்வலுமைதன்னில் ஸ்ரீராமர்க்கதிகமாக
வையகத்துறையவித்தை வன்மையைக்கற்பிப்பீரோ.

வசனம்.

அகோவாருஞ்சுவாமி முனிநாதரே அடியாள்குமாரனுக்குப்பெயர்கொடுத்துச் சகலவித்தைபுத்திகளையும் அனுக்கிரகஞ் செய்யவேணுஞ் சுவாமி;

சீதைவால்மீகருக்குச்சொல்-தரு-இ·ம்·புந்நாகவராளி-ஆதிதாளம்

பல்லவி,

புத்திரர்க்குப்பேரிடவேணும் சம்பிரமுடனே
புத்திரர்க்குப்பேரிடவேணும்

அநுபல்லவி.

வெற்றியுள்ளமுனிநாதா விளங்குங்கமலபாதா
பத்தியுடனட்சரிசி பயறுதேங்காயெள்வழங்கி (புத்)

சரணங்கள்.

இத்திசையுரியோர்களும் மற்றுமுள்ளபெரியோர்களும்
கொற்றவரனைவருஞ்சுற்ற பத்தியுடனேநான்பெற்ற (புத்தி)
கோத்திரங்குடிவிளங்கப் பார்த்திருந்தபேர்க்கெல்லாம்
நேத்தியாகச்சொர்க்கத்தோணும் சாஸ்திரத்திலுள்ளபடி (புத்தி)
எவருமெந்திரியின்றி யெந்தன்வயிற்றுதித்த
தவபலசுதனுக்குத் தகுமானயோகந்தன்னிற் (புத்தி)

வால்மீகர்-சீதைக்குச்சொல்திபதை:

தன்மைசேர்சீதாய்கேளாய் தாவமிப்பாலனுக்கு
உண்மையாய்ப்பெயருமிட்டு வொழுங்குடன்வித்தைசொல்ல
திண்மையாய்நதிக்குச்சென்று சீக்கிரம்ஸ்நானஞ்செய்து
வண்மையாய்த்தீர்த்தம்புஷ்பம் வளமுடன்கொண்டுவாராய்

வசனம்,

அகோவாருமம்மாசீதாய் உன்குமாரனுக்குநாமகரணம்பண்ணிவைப்போம் நீநதிக்குப்போய் ஸ்நானஞ்செய்து புஷ்பமுந்தீர்த்தமுங் கொண்டுவருவாயம்மா.

சீதை-வாலமீகருக்குச்சொல்-திபதை.

ஆலமதுண்டயீச னடியிணைதுதிக்குமையா
சாலவுநதிக்குச்சென்று சலதியில்ஸ்நானஞ்செய்து

சீலமாய்ப்புஷ்பந்தீர்த்தம் சீக்கிரங்கொண்டுவாரேன்
பாலனைவிட்டுச்செல்லேன் பார்த்திருமுனிவர்கோவே

(வ-ம்) அகோவாருஞ்சுவாமி முனிநாதரே நான்நதிக்குப்போய் ஸ்நானஞ்செய்து புஷ்பமுந் தீர்த்தமுங்கொண்டு வருகிறேன் குமாரன்தொட்டிலிலிருக்கின்றான் பார்த்துக்கொள்ளுஞ்சுவாமி.

சீதைகெங்கைக்குப்போகிற-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்

பல்லவி.

கங்கைக்குப்போருளே-சீதாங்கனி
கங்கைக்குப்போருளே

அநுபல்லவி.

கங்கைக்குப்போருளே மங்கைசீதாங்கனி
தங்கக்குடங்கொண்டு மங்களமாகவே (கங்கை)

சரணங்கள்,

காலிற்சிலம்பு கலீல்கலீலென்னவே
காயகமெங்கினும் ஜோதிகள்மின்னவே (கங்கை)
வால்மீகராலேதன் மகனுக்குப்பேரிட
சீலமாய்ச்சலம்புஷ்பம்சீராய்க்கொண்டுவரவே (கங்கை)
நீரிற்குளித்துநல்ல நியமநிஷ்டைமுடித்து
பூரிப்புடனேராமர் பொற்பதத்தைத்துதித்து (கங்கை)

பொது திபதை.

சீதையுநதிக்குப்போகச் சிறுபேகுழந்தைதானப்
போதழச்சீதைகேட்டுப் பொட்டெனவோடிவந்து
காதலாய்த்தூக்கிக்கொண்டு கடுகவேபுட்பம்நீரும்
நீதமாயெடுத்துக்கொண்டு நெறியுடன்வரவேபோனாள்

வசனம்

அகோதெப்படியென்றால் சீதைநதிக்குப்போனபோதுகுமாரனழுகிற சத்தங்கேட்டு சீதையோடிவந்து குமாரனை யெடுத்துக்கொண்டு புஷ்பமும்நீருங் கொண்டுவரப்போகிற விதங்காண்க,

சீதைசொல்-கண்ணிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி-மீசாதாளம்.

கெங்கைநீராடிகிளிமொழியாள்சீதை
தங்கக்குடங்கொண்டு தண்ணிக்குப்போனாள்
அங்கொருவானரந் தன்பிள்ளைதன்னை
டணைத்துக்கொண்டுருறக்கோடவேகண்டு
மகனையெடுத்துமார்பிலணைத்துக்கொண்டு
கொஞ்சியேமகனேநீயுஞ்சியுண்ணடா

கொந்தளமார்பனே கோசலைபோனே
கோதண்டராமரயோத்திக்கரசே
வீட்டிற்பிறந்தநீ வீற்றிருந்தாலடா
வேணபேர்வேதியர் சாஸ்திரப் பார்ப்பார்
காட்டிற்பிறக்கநீ கையிலேந்திக்கொண்டேன்
கண்மணியேநீ நீராடவாராய்
கொப்பறையிற்றண்ணீர் வைத்துவிளாவி
குளிப்பாட்டிதிருவீடிகழிப்பாளேமாமி
அப்பாஉன்னையர் அயோத்திக்குராமர்
கற்பூராலாத்தியெடுப்பார்சாமி.

பொது-வசனம்.

அந்தச்சமயத்தில் வால்மீகரொழுந்திருந்து குழந்தையைத் தொட்டிலிற்காணமல் வியசனப்படுகிறவிதமெப்படியென்றால்.

வால்மீகர்சொல்-தரு-இ-ம்-எ திகுலகாம்போதி-ஆதிதாளம்

பல்லவி,

எங்கையோகாணேனே சீதாப்பிள்ளை எங்கையோகாணேனே

அநுபல்லவி.

எங்கையோகாணேனே யிங்கேயிருந்தபிள்ளை
மங்கைசீதைவந்தால் வாய்விட்டழுவாளே (எங்)

சரணங்கள்.

யோகநிஷ்டையானும் ஏகநிஷ்டைகள்செய்ய
வேகக்கறடிபுலி தாகக்கொண்டெடுத்ததே (எங்)

பாதகமாகவே பாலனைப்போக்கினேன்
மாதுசீதைவந்தால் ஏதென்றுசொல்லுவேன் (எங்)

செந்தாமரைமுகத்தாள் வந்தால்மிகவுமனம்
நொந்தழுதிடுவாளே எந்தவிதஞ்சொல்வேன் (எங்)

வால்மீகர்-சிஷர்களுக்குச்சொல்-வசனம்

அகோவரும்பிள்ளாய் மவுனசிந்தாமணி, அடாதுன்மார்க்க சிந்தாமணி, சீதைபிள்ளையைத்தொட்டிலில்வளர்த்திவிட்டுநதிக்குப் போனேனே அந்தப்பிள்ளை யெங்கேயோகாணேமே யென்னசொல்லுங்களடா (மவுனசிந்தாமணிசொல்-வ-ர்-சுவாமி, சுவாமி, நாங்கண்ணைமூடிக்கொண்டு காலைத்தூக்கிக்கொண்டு மண் விண்ணின் வகையறிய யென்னைக்கொண்டிருந்தேனே எனக்குத்தெரியாது சுவாமி, (துன்மார்க்கன்சொல்-வ-ம் சுவாமி, சுவாமி, நான்தலைகீழாய் நின்று சங்கரனைச்சரணடைவேனுமென்று தவம்புரிந்திருந்தேனே அ

நியமாட்டேன்சுவாமி (வால்மீகர்சொல்-வசனம்) அடடா நீங்கள் குருவுக்குமிஞ்சின சிஷர்களோ ஆம் ஆம் சுவாமி(வால்மீகர்சொல் வசனம்)அடா சீதைவந்தால் பிள்ளையெங்கேயென்று பிரலாபிக்கப்போறாளே அவள்வருமுன்பாகத் தெர்ப்பையினால் ஒருபிள்ளையைச் சிருஷ்டிக்கவேணுமடா சிஷர்களே(சி-வ-ம்) ஆம் ஆம் அப்படிதான் செய்யவேணுஞ் சுவாமி,

பொது-திபிதை.

பாலனுமிலாததாலே பரிகியேவிசாரமிட்டு
சாலவேதருப்பைபுல்லைத் தக்ஷணமந்திரித்துக்
காலசூரியனைப்போல்நற் காந்திகொள்மைந்தனுக்கி
ஆலியதொட்டில்வைத்து அலரவேயாட்டினாரே

சீதை-வால்மீகருக்குச்சொல் திபிதை.

மாதவாவேதமோர்ந்த மறையவாதவத்தோர்க்கெல்லாம்
ஆதியேமுனியேயீதே தநிசயமதியேனையா
ஜோதியாய்த்தொட்டில்மீது சுகமுடனிருந்தசேயைக்
கோதைநானெடுத்துப்போனேன் குழந்தைவேறேதுசொல்வீர்

(வ-ம்) அகோவாருமையா முனிநாதரே நானென்னுடையகுழந்தை அழுகசத்தங் கேட்டுவந்து எடுத்துக்கொண்டு போனேனிந்தக்குழந்தையேது ஆச்சரியமாயிருக்கின்றது சொல்லும்சுவாமி,

வால்மீகர்-சீதைக்குச்சொல்வசனம்.

அகோவாருமம்மா சீதாய் நீகுமாரனை யெடுத்துப் போனதை நான் அறியமாட்டேன் தொட்டிலைநான் பார்க்கும்போது பிள்ளையில்லாதபடியினால் என்மந்திரத்தினாற் சிருஷ்டித்தேன் இதுவும் உன்னுடைய பிள்ளைதான் எடுத்துக் கொள்ளுமம்மாசீதாய்.

சீதை-வால்மீகருக்குச்சொல்-திபிதை.

இதுவுமுன்பாக்கியந்தானோ யென்னிடமதிஷ்டந்தானோ
சதுர்முகனருளினாலே நயவதாய்பிழைக்கவேணும்
அதலைவகளாகாமுன்னம் அன்புடனிவர்களுக்குப்
பதமுடன்பேருமிட்டுப் பகருவீர்வித்தைதாமே

(வ-ம்)அகோவாருஞ்சுவாமி இதுவும்முன்செய்த பாக்கியந்தான்இவர்களிருவரு நன்றாய்ப்பிழைக்கவேணும் ஆகையால்வல்லமை பொருந்தும்படியாய் நாமதேயமமைத்து வித்தைபுத்திகளைகற்பிக்கவேணுஞ்சுவாமி.

பொது-விருத்தம்.

குசலவனென்றசொல்லிக் கூறியேபேருமிட்டுத்
திசைபுகழ்சீதைதானுஞ் செப்பவேகீர்த்திபெற்று
நிசமதாயயோத்தியாளும் நீணிலத்தரசசென்று
இசைகொளுமுனிவர்தன்று மியம்பியக்ஷதைகளிட்டார்

பொது-கண்ணிகள்-இ-ம்-புந்நாகவராளி-ஆதிதாளம்.

பாலகருடன்கூடிஇவர்கள் பரிவாய்விளையாடி
கோலிகெச்சகாயாடிஇவர்கள் குதித்துலைகோத்தாடி
பட்டணத்துள்ளோரும்இவர்களைப் பார்த்துக்களிப்பாரும்
கெட்டியிவர்கள்நன்றுநல்ல கீர்த்தியடைவாரென்று
சொல்லிமகிழ்வாரும் பார்த்துத்துதித்துப்புகழ்வாரும்
வல்லவரென்பாரும் ராமரிட வடிவேயென்பாரும்

சீதை-வால்மீகருக்குச்சொல்-வசனம்,

அகோவாருஞ்சுவாமி என்குமாரர்களாகிய குசலவர்க்கு ஸ்ரீராமனைப்போல் நாலுவேதமும் ஆறுசாஸ்திரமும் வில்வித்தைகளெல்லாம் அனுக்கிரகஞ்செய்யவேணும் சுவாமி வால்மீகர்-வ-ம்-ஆனலப்படியே சொல்லிவைக்கிறேன்உன்குமாரர்களைவரச்சொல்லும்மா(சீ-வ-ம். அப்படியே வரச்செய்கிறேன் சுவாமி

சீதை-குசலவருக்குச்சொல்-வசனம்.

அப்பா என்கண்ணின்மணிகளே உங்களை ஐயராகிய வால்மீகர் வரச்சொன்னார் போங்களேப்பா(குசலவர்கள்-வசனம்) அப்படியேபோகின்றோந்தாயே.

குசலவாள்வருகிற-தரு-இ-ம்-பைரவி-திரிபுடைதாளம்

பல்லவி.

வந்தானே குசலன்வந்தானே-லவன்வந்தார்வாசிக்கவந்தாரே

அநுபல்லவி.

செந்தாமரையுதித்த வெந்தாய்சீதையாள்பெற்ற
மைந்தரிருவரும் வால்மீகரிடத்தில் (வந்தானே)

சரணங்கள்.

நற்றவர்போற்றிய ராமரருளிய
சித்திரபாலகர் வெற்றியுடனே (வந்தானே)

சிற்றடியான சிறுவரிருவரும்
சத்தியவார்த்தை தாங்கள்பகர்ந்துமே (வந்தானே)

கைத்தலந்தன்னிலே பத்தியாய்விலைபெற
தீத்தனுகியமுனி பக்கமதனிலே (வந்தாரே)

குசலவர்வால்மீகருக்குச்சொல்-திபிதை.

மும்மலமொழித்துநின்ற முனிவரேபோற்றிபோற்றி
தம்மைத்தானறிந்தஞான தத்துவப்பொருளேபோற்றி
எம்மைநீரழைத்தசேதி யியம்புவீர்கருணைசெய்து
செம்மையாயேவல்தன்னைச் சிருடன்செய்வோஞ்சுவாமி.

(வ-ம்) சரணஞ்சரணஞ்சுவாமி எங்களை யழைப்பித்தகாரியம் அருளிச்செய்யவேணும்சுவாமி.

வால்மீகர் குசலவர்க்குச்சொல்-வசனம்.

வாழிவாழி குசலவர்களே உங்களுக்கு வித்தியாப்பியாசம் செய்யவேணும் என்செவிக்கருகாமையில் வாருங்களப்பா குசலவர்களே (குசலவர்-வசனம்) அப்படியேயிதோவந்தோம்சுவாமி.

வால்மீகர்குசலவர்க்குச்சொல்-உபதேசஓரடி- தரு

இ-ம்-புந்நாகவராளி-மிசுரதாளம்.

பல்லவி.

ஓமெனுமட்சரமொன்றே அதில் உயிரொழுத்தானதுமொன்றே

அநுபல்லவி.

சோமன்சடைதனி லேந்தியகர்த்தனுஞ்
சுகமாகிநின்றதுந் தவமாலுயர்ந்ததும் (ஓமெனு)

சரணங்கள்.

மாயச்சமுசார வீடு-என்று
மாதவன்பாதத்தைத் தேடு
உபாயத்தாலேநீ பாவத்தைநீக்கிடு
உம்பர்கோன்பாதத்தையுண்மையாய்நோக்கிடு (ஓமெ)

வால்மீகர்குசலவருக்குச்சொல்-வசனம்.

அகோவாருங்கள் குசலவர்களே ஞானந்தெரிந்துகொண்டீர்களே இனிவில்வித்தை போதிக்கிறேன் இடதுகையில் வில்லைப்பிடித்துக் கொள்ளுங்கள்-வலதுகையில் அம்பைப் பிடித்துக்கொள்ளுங்கள் வில்லைவளைத்துநாணியேற்றுங்கள் பார்ப்போம்

வால்மீகர்-குசலவருக்கு-வில்வித்தைகற்பிக்கிற-ஓரடி- தரு

இ-ம்-புன்னாகவராளி-ஆடதாளம்-

பல்லவி,

இடதுகையில்வில்லைப்பற்று அதில் எடுத்தொருநாணிலையேற்று

அநுபல்லவி.

சுடுதியிலோரம்பை முடுக்கியேயெடுத்துக்கொள்
சத்துராதிமார்புக்குச் சரியாகப்பார்த்துக்கொள் (இட)

சரணங்கள்.

மார்புக்கும்நாபிக்கும்நேரு-அதன்
மத்தியிலேகுறி பாரு
பாருக்குள்ராசனை அணுவாகப்பாத்திடு
வீறுஞ்சிங்கத்தை வேல்கொண்டுமோட்டிடு (இட)

வால்மீகர்குசலவருக்குச்சொல்-வசனம்,

தெரிந்துகொண்டீர்களா (குசலவர்-வ-ம்) தெரிந்துக்கொண்டோம்சுவாமி.

பொது த்விபதை,

திரமுடன்சாஸ்திரங்கள் சிறுவருங்கற்றபின்பு
அருள்புரிசீதைதானும் அகமகிழ்ந்திருக்குங்காலை
கருணைவால்மீகர்தன்னைக் கருத்துடனழைக்கவேண்டி
வருணராஜேந்திரன்றானு மகிழ்வுடன்வருகின்றானே.

(பொது-வசனம்) அஃதெப்படியென்றால் பாலகரிருவருஞ் சகல-கலைக்கியானங்கள் கற்றபின்பு வருணராஜன்யாகஞ்செய்யவேணுமென்றுவால்மீகனை யழைக்கவருகிற விதங்காண்க.

வருணராஜன்-வருகிற-ஓரடி-தரு-இ-ம்- புந்நாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

வருணராஜன்வந்தான். உதார. வருணராஜன்வந்தான்

அநுபல்லவி.

தருணத்திலுதவி தந்திடுந்தயாநிதி (வருண)

சரணங்கள்.

நவமணிமுடிதன்னை நல்ல நாணயகிரீடமின்ன
கவலையில்ராஜனென்ன உயர் கதிமிகுமிவனென்ன
தவறவிலாதநற் றதியிலுதவிசெய்
நாயகவிசுவாசநாயகனென்றிடும் (வருண)

வருணன்-வால்மீகருக்குச்சொல்-த்விபதை.

நித்தமோமுனிவரோநன் னிஷ்டைசோதிவாரோநீர்
பத்தியாய்மனமகிழ்ந்து பாதாளவுலகந்தன்னில்
உத்தமவேள்விதன்னை வுண்மையாய்ச்செய்துவைக்க
சித்தமோவருகவேணுந் திருவுளமகிழ்ந்துதானே,

வசனம்,

அகோவாருஞ்சுவாமி முனிநாதரே பாதாளஉலகத்திலேயாகஞ்செய்யவேணும் நீர்வந்து உம்முடையகையினால் அதை முடிப்பிக்கவேண்டும் எழுந்தருளும்முனிநாதரே.

வால்மீகர்-குசலவருக்குச்சொல்-விருத்தம்

பாலரோகேளீர்யானும் பாதாளலோகந்தன்னிற்
சீலமாம்வருணன்பின்போய்ச் சீக்கிரம்வருவேன்யானும்
சோலைசேர்பூவனத்தைச் சுற்றியேகாத்திருங்கள்
சாலவேமலர்தனக்குச் சனுதியொருவன்போவீர்:

வசனம்.

அகோவாருங்கள் குசலவர்களே வருணராஜன்பாதாளவுலகத்திலே யாகஞ்செய்யப்போறானாம் நாம்போகவேணும்நீங்களிருவரும் பூவனத்தைப் பத்திரமாய்ப்பார்த்துக்கொண்டிருங்கள் தாயாருக்குப் புஷ்பம்வேணுமென்றால் ஒருவன்போய் கொண்டுவந்து கொடுங்கள்பிள்ளாய் (குசலவர்-வசனம்) அப்படியே செய்கிறோம் சுவாமி.

வால்மீகர்-சீதைக்குச்சொல்-விருத்தம்.

அன்னையேசீதாய்நீயும் அஞ்சிடவேண்டாமம்மா
என்னிடஆசிரமத்தி லிருந்திடாய்மைந்தரோடும்
வன்னமாயாகஞ்செய்ய வருணன்பின்சென்றியானும்
தன்மையாயுடனேயிங்கு சனுதியில்வருவேனம்மா.

(வ-ம்) அகோவாருமம்மா சீதாய் வருணராஜன் யாகஞ்செய்யவேணுமென்றுஎன்னையழைக்கிறான்நான்போய்வருகிறேன் இங்கேபாலகரும்நீயும் சுகமாயிருங்கள் சனுதியில்வந்து சேருகிறேனம்மா (சீதை-வசனம்)அப்படியேபோய்வாருஞ்சுவாமி,

பொது விருத்தம்.

உயர்முனியுப்பாதாளத் துலகினிற்சென்றபின்பு
வயல்திறையயோத்திவாழு மன்னனும்பூகமாக
இயதுடனஸ்வமேத யாகமேபண்ணவேண்டி
நயமுடனநம்பிமார்க்கு நவில்வரப்போகிறானே,

(பொது-வசனம்) அந்தச்சமயத்திலே வருணராஜன் யாகத்திற்குவால்மீகர் போனபிறகு அயோத்தியில்ரகுநாயகர் வசிஷ்டரையழைப்பித்திறவிதக்காண்க.

ஸ்ரீராமர்-லக்ஷ்மணருக்குச்சொல்-விருத்தம்,

புடைதிரைக்கடல்சூழ்வையம் புகழ்ந்திடவேவிளங்கும்
அடல்கொண்டசெல்வமாருநாய் அவமானத்தைச்செய்யத்

திடமுடன் குலம்விளங்கச் சீக்கிரம்சென் றுநீயும்
சடைமுடி வசிஷ்டர்தம்மைத் தக்ஷணமழைத்துவாராய்-

(வசனம்) அகோவாருந்தம்பி லட்சுமணா நம்முடைய குலகுரு வாகிய வசிஷ்டரை அழைத்துவாரும்பிள்ளாய் (லக்ஷமணர்-வ-ம்) அப்படியேஅழைத்துவருகிறேன் அண்ணாவே.

லட்சுமணர் வசிஷ்டருக்குச்சொல்-வசனம்.

அகோவாருஞ்சுவாமி வசிஷ்டமகாமுனிவரே சரணம்சரணம் நங்களை ஸ்ரீராமர்வரச்சொன்னார்சுவாமி (வசிஷடர் வசனம்) ஆனாற்போவோம் வாரும்லட்சுமணரே.

வசிஷ்டர்வருகிற-பொதுவிருத்தம்

காத்தினிற் (?)கொண்டு காவிவேஷ்டியுந்தரித்து
திருத்தமாய்த்தர்ப்பைப்புல்லுஞ்செபமாலையொருகையேந்தி
அருத்தியாய்ரவிகுலத்திற் கண்ணலாம்ராமர்முன்பு
வருத்தமில்வசிஷ்டர்தாமு மகிழ்வுடன்றோன்றினரே.

(வ-ம்) வாரும்பிள்ளாய் சிஷியா தெண்டுகமண்டலம் எடுத்துக் கொள்ளும்பிள்ளாய் அப்படியே யெடுத்துவருகிறேன்சுவாமி.

வசிஷ்டர்வருகிற-கண்ணிகள்-இ-ம்-பூரிகலியாணி-ஆதிதாளம்.

நரைத்ததாடியும்விரித்தசடையும் நளினமானதண்டுகோலும்
வருத்தமானநடையுடனே வசிஷ்டரும்வந்துதோணினார் (நரை)
பருத்தபுஸ்தகக்கமண்டலமும் பாதக்குறடேந்தரித்துக்கொண்டு
தரித்தநாமம்பூணூலும் சதிரானமரவுரியும் (நரைத்த)
சோதியானமாதவபாதர் பாதமேமனதிலெண்ணி
ஆதியானவேதமுனி வந்தருளினாரையா (நரைத்த)

வசிஷ்டர் கட்டியக்காரனுக்குச்சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா ரகுநாயகருடனேவசிஷ்டமகாமுனிவர் வந்திருக்கிறோமென்று சொல்லும்பிள்ளாய் (கட்டியன் வ-ம்) அப்படியேசொல்லுகிறேனையா.

கட்டியக்காரன்-ஸ்ரீராமருக்குச்சொல்-வசனம்.

அகோவாருஞ்சுவாமி நம்முடைய ஆசாரவாசலில் வசிஷ்டமகாமுனிவர் வந்திருக்கிறார்சுவாமி (ராமர்-வசனம்) மகாபாக்கியம் கட்டியக்காரா.

ஸ்ரீராமர்சொல்-தரு-இராகம்-தோடி-அடதாளம்.

பல்லவி-

தெரிசனஞ்செய்வோம்வாருந்- தம்பிமாரே
தெரிசனஞ்செய்வோம்வாரும்

சரணங்கள்.

காதிற்குண்டலமும் அழகான கையிற்கமண்டலமும்
நீதியானவொரு வதிஷ்டரிருபதத்தில் (தெரி)

கரைத்தசடைமுடியும் அழகான களினந்திருமண்காப்பும்
பருத்தவிருதோளும் தமபிமாரோ பண்பானவச்சகைகைகளும் (தெரி)

மூவேழிருபக்கொரு தலை முறைக்கும்பகவிதருஞ்
சிவிலுயர்வதிஷ்டர் திருவடிதனைப்பணிந்து (தெரி)

ஸ்ரீராமர்-வதிஷ்டருக்குச்சொல்-வசனம்.

சரணஞ்சரணஞ்சுவாமி வதி-வ-ம) வாழிவாழு குருந்திரும்பிள்ளாய்

வதிஷ்டர்-ஸ்ரீராமருக்குச்சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் ராமபத்திரா என்னை யழைப்பித்தகாரி யஞ்சொல்லும்பிள்ளாய்.

ஸ்ரீராமர்-வதிஷ்டருக்குச்சொல்-திபதை.

எந்தனற்குருவேகேளீ ரிப்பொழுதஸ்வயாகம்
உந்தனறிருக்கரத்தா லுகமையாய முடிக்கவேண்டுஞ்
சந்தமாயதற்குவேண சாமக்கிரிகைகளைத்தாங்கள்
தொந்தமாய்ச்சொன்னலிங்கே சுருக்கினிற்றருவிப்பேனே.

வசனம்.

அகோவாருஞ்சுவாமி வதிஷ்டரே அஸ்வயாகஞ் செய்யவேணும் அதற்குவேண்டிய சாமக்கிரிகைகளைச்சொன்னல் அழைப்பிக்கிறேன் உமதுகையினுல் முடிப்பிக்கவேணுஞ்சுவாமி.

வதிஷ்டர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபதை.

உன்னிடதேவியன்றி யுயர்ந்திடுமியாகமிபபோ
மன்னவாமுடிந்திடாது மகிழ்வுடன்முடித்தோமானுன்
என்னதான்சொல்வார்மூத்தோ ரியல்பல்லவிக்ஷணத்தில்
கன்னியாஞ்சிதைதன்னைக் கனிவுடனழைப்பிப்பாயே.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் ராமபத்திரா அஸ்வயாகஞ்செய்யவேணு மென்றால்உன்தேவிஇல்லாமல்முடியாது ஆகையால்சீதையை அழைப்பியும்பிள்ளாய் ராமபத்திரா.

ஸ்ரீராமர்-வதிஷ்டருக்குச்சொல்-திபதை.

அடவிபோஞ்சீதைதன்னை யழையுமென் றீரேயையா
புடர்மதிமன்னவரென்னைப் போகவேசுதைத்திடாரோ
மடமயிற்சீதையைப்போல் வளமுடன்பொன்னாற்செய்து
திடமுடனவேள்விதன்னைத் தேவரீர்முடித்திடீரே.

வசனம்.

அகோவாருஞ்சுவாமி கானகஞ்சென்ற சீதையை நானழைப்பே னேயாகில் நாட்டிலுள்ளராஜாக்கள் நகையார்களாதனபடியால்சீதை யைப்போல் உருவம் பொன்னாற் செய்துவைத்து யாகத்தை நிறைவே ற்றிவையுஞ்சுவாமி.

வசிஷ்டர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபதை.

எங்கனும்புகழ்படைத்த யிராமரேசொல்லக்கேளீர்
துங்கமாந்துரகமொன்று துரிதத்தில்வேணுமிப்போ
இக்கதுதானுமில்லை யெப்படிவேள்விசெய்வோம்
உங்களால்முடியாதப்பா உற்றதுசொன்னேன்பாராய்.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் ராமபத்திரா இந்தயாகத்திற்குஒருபுரவி வேணும் அதுகிடையாது ஆகையால அருமையா யிருக்கின்றதுரா மபத்திரா (ஸ்ரீ-வ-ம்) அப்படியாஇதோ அழைக்கிறேன் சுவாமி (வசி-வ-ம்) ஆனலநம்முடைய அயோத்தியாபுரி பட்டணமுழுதும் அலங் கிர்தஞ்செயயச்சொல்லும் பிள்ளாய் ராமபத்திரரே.

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல் வசனம்.

அகோவாருந்தம்பி லட்சுமணாநாம் அஸ்வயாகஞ்செய்யவேணும் அயோத்தியாபுரி பட்டணத்து வீதிகளெல்லாம் அலங்காரம்பண்ண த்திட்டஞ்செயயும் தம்பிலட்சுமணா(லட்-வ-ம்)அப்படியேசெய்துவை க்கிறேன் அண்ணாவே.

லட்சுமணர்-கட்டியக்காரனுக்குச்சொல்-திபதை.

படைத்தலைவீரர்தம்மைப் பருந்திருபுறமாய்நீகேளிக்
கடைத்தலைவாயல்நிற்கும் கட்டியக்காராகேளாய்
வடித்தமிழயோத்திமுற்று மலங்கிர்தஞ்செப்தபின்னும்
திடத்துடன்யாரும்வந்து சேரவிங்கறிக்ககசெய்வாய்.

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா ரகுநாயகர் அஸ்வயாகம் பண்ணிவைக்கப்போகிறாரென்று நம்முடைய அயோத்தியாபுரிபட்ட ணமும் மற்றுமுண்டான தேசாதிதேசமும் அறியப்பண்ணி நம்மு டையபட்டணவீதிகளெல்லாம் அலங்கிர்தம்பண்ணிசிறுபிள்ளைமுதல் ஆயுதமெடுத்துக்கொண்டு வரச்சொல்லித் திட்டம்பண்ணும் பிள்ளா ய்கட்டியக்காரா.

கட்டியக்காரன்-வசனம்.

அப்படியேசெய்துவைக்கிறேன்-சுவாமி

கட்டியக்காரன் அயோத்தியாபுரியி லிருக்கப்பட்டவர்களுக்குத் திட்டம்பண்ணுகிற வசனம்.

அகோவாருங்கள் அயோத்தியாபுரி பட்டணத்துச் சனங்களே நம்முடைய ரகுநாயக ராஜாவர் அஸ்வமேத யாகஞ் செய்யப்போ

ருராம் நீங்களெல்லோரும் பொழுது விடிகிறதற்குள்ளாகத் தெருக்களெல்லாம் அலங்காரஞ்செய்து பெண்கள் தவிர மற்றவர்களெல்லாம் ஓடிப்போங்கள்சொன்னேனென் சொன்னேன் ஆ,ஆ ஓடிப்போகவேண்டாம் நம்முடைய ரகுநாயகர் யாகத்திற்கு வரவேண்டியது.

கட்டியக்காரன்-ஸ்ரீராமருக்குச்சொல்-வசனம்.

அப்படியே அயோத்தியாபுரிபட்டணமுழுதும் திட்டம்பண்ணினேன் சுவாமி.

பொது திபதை.

வள்ளலாமுனியுரைக்க வாய்மையைக்கேட்டுராமர்
உள்ளதேர்குதிரையெல்லா முடன்வரவந்துபார்த்து
வெள்ளையாயிலட்சணத்தில் வீரமுமுள்ளதாகத்
தெள்ளியயாகத்திற்குத் தேசியைக்கொண்டுவந்தார்.

ஸ்ரீராமர்-வசிஷ்டருக்குச்சொல்-வசனம்.

அகோவாருஞ்சுவாமி நாம்யாகஞ்செய்கிறதற்கு அந்தமுள்ளதாய் சவுரியமுள்ளதாய் திரேகத்திற் சுழிகளில்லாததாய் மூக்குள்ளதாய் நாலுகாலும் நடுநெற்றியும் வெண்மையாய் செவிமுன்பார்வையாய் இப்பேர்ப்பட்ட பஞ்சகலியாணிபுரவி கொண்டுவந்தோம் இது யாகஞ்செய்யலாமோ பாருஞ்சுவாமி.

வசிஷ்டர்ஸ்ரீராமருக்குச்சொல் திபதை

லட்சணமுள்ளதிக்க நலமுள்ளதேசிதானும்
இட்சணஞ்சிங்காரித்து யிபல்பெறபட்டங்கட்டி
தெட்சணங்கிழக்குமேற்கு திக்கினிலனுப்பிப்பார்க்க
தட்சகனுஞ்சத்துருக்கன் றனைநீயனுப்புவாயே.

வசனம்.

அகோவாம்பிள்ளாய் ராமபத்திரா இந்தப்புரவி மகாலட்சணமுள்ளது இதுயாகத்திற் கேற்றதுதான் இதனைச்சிங்காரித்து வீரபட்டமுங்கட்டி இதன்பின் ரதகஜதுரகபதாதிகளையுங் கூட்டி நாற்திக்குமனுப்பி இதற்குநாயகனாக உம்முடையதம்பி சத்துருக்கனையனுப்பிப் பார்த்துவரச்சொல்லும்பிள்ளாய்.

ஸ்ரீராமர்சொல் வசனம்.

அப்படியேசெய்கிறேன் சுவாமி

ஸ்ரீராமர் சத்துருக்கனுக்குச்சொல் வசனம்.

அகோவாருந்தம்பி சத்துருக்கா நான்சொன்னபடி பெருதுவாய்தம்பி (சத-வ-ம) அப்படியேயெழுதுகிறேன் அண்ணாவே,

அறிக்கை

இதனை லம்பக்காறுதேசத்தரசர்களுக்கும் அறிவிப்பது யாதெனில், அயோத்தியாபுரியை அரசுசெய்கின்ற ஸ்ரீராமபிரான் அஸ்வமேதயாகஞ்செய்கின்ற நிமித்தியார்த்தமாகத் தேசியின்பின் சத்துருபயங்கரன் தனுர்வேதசாஸ்திரன் ரணரங்கசூரனான சத்துருக்கன் வருகிறான் வல்லமையுள்ளவர்களானால் தேசியைப்பிடித்து கட்டியுத்தஞ்செய்து வெற்றியடையலாம் அப்படியுத்தஞ்செய்யச் சக்தியற்றவர்களானால் கப்பங்கட்டவேண்டியது என்றெழுதி யதுதேசியின் (லலாடத்திற) கட்டுங்கம்பி சத்துருக்கா.

சத்துருக்கர்வசனம்.

அப்படியே தங்களுத்தாரப்படி யெழுதிக்கட்டினேன் சுவாமி

ஸ்ரீராமா சத்துருக்கருக்குச்சொல் திபிதை.

தம்பிசத்துருக்கா நீதான் சதுரங்கசேனையோடும்
செம்மையாய்வாதயவோசை சிறந்திடச்சென்றேயிந்த
அம்புவிதானிலிருக்கும் அஸ்வத்தையறிப்பண்ணி
சம்பிரமதாகயிங்கு சனுதியில்வருகுவாயே

(வ-ம்) அகோகேளுப தம்பி சத்துருக்கா இந்தக்குதிரையைச்சிங்காரித்து வீரபட்டங்கட்டி யதகஜதுரகபதாதிகளையுங் கூட்டிக்கொண்டு நீயுஞ்சென்று நாலுதிக்கும் அறியப்பண்ணிவைத்து வாருந்தம்பிசத்துருக்கா (சத்துருக்கர்-வ-ம்) அப்படியேசெய்துவருகிறேன் அண்ணாவே.

சத்துருக்கர்-இராஜர்களுக்குச்சொல்-திபிதை.

மண்ணுலமன்னரேயிச் சதிருளதாகந்தன்னை
வண்ணமாயலங்கரித்து வீரபட்டங்கட்டிவைத்தேன்
பண்ணுமவீரசூர மன்னவரொவரானாலும்
இன்னுமுன்னேதப்பிடித்தால் ஜெயம்பெறச்சண்டைசெய்வீர்

வசனம்.

அகோவாருங்கள் ராஜாக்களே யாராகிலுஞ்சூராதி சூரர்களாகம்முடைய குதிரையைப் பிடித்துக்கட்டி வந்தெதிர்த்தால் நீங்களும்சண்டைசெய்யுங்கள் ராஜாக்களே.

ராஜாக்கள்-வசனம்-அப்படியேசெய்கிறோமையா

குதிரைபுறப்படுகிற-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி சாபுதாளம்.

பல்லவி.

வீரபட்டங்கட்டிவிட்டார்காண்
வீரபட்டங்கட்டி விட்டார்காண்

அநுபல்லவி.

வீரபட்டங்கட்டிவிட்டார் சூரமுனைவதேசிதன்னை
பாரினிலெவராகிலுமெதிர்த்தாற காரியமுடிப்பேனென்று (வீர)

சரணங்கள்.

பேரிகைமுரசுவிம்ம காரிடிமுழக்கஞ்செய்ய
வாரிபோலிடிமுழங்க பாரினவன்னர்மயங்க (வீ௩)

வெற்றியுள்ளராஜராஜேனோர் யித்தலத்திலவந்தெதிர்த்தால்
சுத்தமாகவெட்டுவேனென்று பற்றிஜெயங்கொள்வனென்று ()

வெய்யவன்குலம்விளங்கச் செய்யவேஅயோத்திராமர்
வையகமறியவிப்போ பையவேதுரகத்திற்கு (வீர)

சத்துருக்கர்-இராஜர்களுக்குச்சொல்-திபிதை.

வாகுடன்குதிரைதன்னை வண்ணமையாய்நடத்திக்கொண்டு
போருவீர்நான்குதிக்குப் புகழுவேவருவேனியாலும்
சாகசமுள்ளோரேனும் க்ஷத்திரியராஜரேனும்
வேகமாய்வந்தெதிர்த்தால் விருதுகள்பறிப்பேனானே

வசனம்.

அகோசேனுங்கள் ராஜர்களே வீரியமுள்ளராஜாக்கள் வந்தெதிர்த்தால் அவர்களை நான் சுமமாவிடுகிறதில்லை விருதுகளைப்பறித்துக்கொண்டு துறத்துகிறேன் பாருங்கள்ராஜாக்களே.

சத்துருக்கர்வருகிற-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

வந்தானேசத்துருக்கன் வாதுகூறியே

அநுபல்லவி.

விந்தையானபுரவிதன்னை வீரபட்டங்கட்டிவிட்டு (வந்)

சரணங்கள்

சிந்தையில்மகிழ்ச்சிபொங்கச் சேனையும்பரிகளுடன்
வந்தெதிர்த்தமன்னவரை வாதுலகேற்றுவேனென்று (வந்)

சேனைக்கதிகாரிவந்து தென்புசொல்லவேதமாகி
நானேராஜனென்குலம்போல் ராசரொவருமில்லையென்று (வந்)

நித்தநித்தஞ்சத்தமான வெற்றியென்குலம்விளங்க
பத்தியானதீயிலமாது பாயவும்குலம்விளங்க (வந்)

இத்தலத்திற்பேர்பெற்றவன் எவனெனன்புரவிதன்னை
நெற்றிதனில்வீரபட்டம் நீங்களபாருங்களென்று (வந்)

பொது நடிதை.

தாண்டியேதுரகந்தானுந் தனைதனிறகால்வையாமல்
மாண்டிட்டசேனையெல்லாம் வகைபெறஉதைத்துக்கொண்டு

மீண்டுதான்வேகமாகி வெகுண்டுமேபுரவிபோக
ஆண்டசத்துருக்கன்சேனை யலறிபேதின்றிட்டாரே

சேனதிபதி சத்துருக்கருக்குச்சொல்-திபிதை
வானுறுந்தேவரேனு மறித்துடன்பிடிக்கமாட்டார்
தானதுபூமிதில்லா தைரியவஸ்வந்தானும்
கானகமகன்றுபோச்சு கைதனிற்பிடிபடாமல்
தானதுவலறிகின்றும் நடுத்துமேபிடிக்கலாமே.

வசனம்.

அகோவாருமையா சத்துருக்கராஜாவே குதிரை ஒருவர்கையிலும் பிடிபடாமல் ஆகாயமார்க்கத்திலெழும்பி வனத்தைநோக்கிப்போகுது யென்னசெய்யப்போகிறேருஞ் சுவாமி.

சத்துருக்கர்-இராசர்களுக்குச்சொல்-திபிதை.
வனத்தினிலோடிப்போன வடிவுள்ளதுரகந்தன்னை
குனித்துமேகிரிச்சிச்கொட்டி கொப்பெனப்பிடித்துவாரீர்
கனத்ததோரியாகத்துக்குக் காரியமுதவவேணும்
அனர்த்தம்வந்தணுகாமுன்ன மயோத்திநாம்சேரவேணும்.

வசனம்.

ஆகோகேளும் ராசர்களே யாகத்திற்குக் குதிரையுதவவேணும் எப்படியாகிலும் உபாயமாய்ப் பிடித்துவாருங்கள் பிடித்துவந்தபேருக்கு வெகுமதிசெய்விக்கிறேன் ராஜாக்களே.

சேனைகள்-குதிரையைத்தேடிவருகிற-கண்ணிகள்
இ-ம்-எதுகுலகாம்போதி-மிசுரதாளம்.

அஷ்டதிக்கதிரவேகொக்கரித்துக்கொண்டு
அஸ்வத்தைத்தேடிவாரார்
கஷ்டிவாராமலேராமபத்திரருக்கு
நாமிருந்தென்னபலன்
விட்டபுரவிதன்னையெட்டுதிக்கிலுங்காணோம்
வேதனைக்கென்னசெய்வோம்
பட்டங்கட்டிவிட்டபுரவிபிடிக்கவே
படைத்தலைமன்னவர்கள்
முன்னேசொல்லிவைத்தமுடுக்குமிழந்தோமே
மோசங்கள்வந்ததென்று (அஷ்ட)

பொதுதிபிதை

இப்படிஇருக்கும்போது யிருடியாசிரமஞ்சேர்ந்த
செப்புமாஞ்சீதையாள்தன் சிறுவருமெழுந்திருந்தான்
தப்பின்றித்தாங்கள்கற்ற தனுர்விதனைபரீட்சைபார்க்கக்
கொப்பெனவேட்டையாடக் குசலவர்வருகின்றுரே

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் வால்மீகராசிரமத்தில் சீதையின் குமாரர்களாகிய குசலவாள்வேட்டைக்குவருகிறவிதங்காண்க.

குசலவர்வருகிற-தரு இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

வருகிறார்குசலராஜர்-வருகிறாரேயிதோ

அநுபல்லவி.

மருவும்லவகுமாரன் வருகையிலடிகொண்டு (வருகிறா)

சரணங்கள்.

அங்கியையுமேற்றரித்து வங்கியையாசையாய்ப்பூண்டு
அடவுடன்வேட்டையாட ஆயுதவகையுடனே (வரு)
சிரசினிற்கின்னரஞ்சு சரிகையுருமாலைகட்டி
அரையினிற்கால்மட்டுஞ் சரிகைகிசாருதொட்டு (வரு)

குசலவர்சீதைக்குச்சொல்-திபிதை.

எங்களைப்பெற்றதாயே யினியதோர்வார்த்தைகேளும்
சங்கையில்நாங்கள்கற்ற தனுர்வித்தையறியவேணும்
பொங்கமிவ்வனத்தில்வேட்டைப் புகழுடனாடிவாரோம்
எங்களையனுப்புமுந்த னிணையடிசரணமம்மா:

வசனம்.

அகோகேளுந்தாயே நாங்களிதுவரைக்கும் ஆயுதவித்தை கற்றதைப் பரிட்சைபார்க்கவேணும் ஆகையால் இன்றையதினம் இங்குண்டாகிய வனத்திற்சென்று வேட்டையாடிவருகிறோம் செலவுகொடுத்தனுப்புமம்மாதாயே.

சீதைகுசலவர்க்குச்சொல்-திபிதை.

என்னிடமக்களேயிவ் விருள்வனமறியீர்நீங்கள்
வன்னமாம்வேட்டையாடி வனத்திலேநல்லோர்பொல்லார்
முன்னமேவந்தெதிர்த்தால் மோசமாமதனினாலே
சின்னங்களாகுமென்றன் சிந்தையில்நினைக்கிறேனே

வசனம்.

அகோவாருங்கள்குசலவர்களே இதுவரைக்கும்நீங்கள்வேட்டைக்குப்போய் அறியமாட்டீர்கள் வேட்டைக்குப்போனால் யாராகிலும் வந்தெதிர்த்தால் சின்னமாகுமென்றுநினைக்கிறேன் மைந்தர்களே.

குசலவர்கள் சீதைக்குச்சொல்-திபிதை.

என்னென்றுசொன்னீரம்மா யிப்படிசொல்லலாமோ
உன்னிடதிருவயிற்றி லுதித்தனம் தாயேகேளும்
வன்னவால்மீகர்தாமு மகிழ்ந்துசொல்லுபதேசத்தால்
வன்னியவேட்டையாடி வருகுவோம்விரைவிற்றானே.

வசனம்.

அகோவாருங்காயே என்னவார்த்தைசொன்னாய் உன்னுடையதிருவயிற்றில் நாங்கள்பிறந்ததுகண்டும் இப்படி சொல்லலாமோ வால்மீகருடைய சிஷ்கடை அப்படிபழுதுவராது யாராகிலும் வந்தெதிர்த்தால் எங்கள்சக்கரத்தினால் ஜெயமபெற்றுவந்து உன்னுடைய பாதாரவிந்தஞ் சேர்வைசெய்வோமம்மா,

சீதைகுசலவருக்குச்சொல் - வசனம்

ஆனாற்சீக்கிரம்போயவாருங்கள்-என்சண்மணிகளே

குசலவர்வேட்டைக்குப்புரப்படுகிற-தரு.

இ-ம்-சங்கராபரண-மீசுரதாளம்.

பல்லவி.

வேட்டைக்குப்புறப்பட்டாரையா-குசலராஜர்
வேட்டைக்குப்புறப்பட்டாரையா

அநுபல்லவி.

வேட்டைக்குப்புரப்பட்டார்கள்-திட்டியதோரம்புகொண்டு
போட்டியாகவந்தெதிர்த்தால் மீட்டுவோம்சரங்க ளென்று (வேட்)

சரணங்கள்.

சாலவேமனதுபொங்க பாலகரிருவர்தாமும்
வேல்விழிமிகத்துலங்க நீலவர்ணகச்சைகட்டி (வேட்)
கத்திக்குட்பிடியம்பு கச்சைக்குளிருக்கிகட்டி
வெற்றிவீரியங்கள்பேசி வேடிக்கையாய்கைவீசி (வேட்)
காட்டினிற்கலைமிருகம் கரும்புலியாளியெல்லாம்
பூட்டியேசிரத்துணிந்து தாஷ்டீகமாய்வருவதற்கு (வேட்)
சிங்கங்காடியானை திரளாகவருகுது
யெங்குமோடாமற்கட்டி யெய்புவோம்கணைகளென்று (வேட்)

குசலவன்லவனுக்குச்சொல்-திபிதை.

தம்பிநீலவகுமாரா சனுதியில்வாராயிப்போ
வம்பெனுமிருகஜாதி வருகிறதனேகமாகச்
செம்மதாய்காணிபூட்டி துரிதமாயெய்யவேணும்
அம்புமேயெடுத்துக்கொள்ளா யடவியின்வேட்டை பார்ப்போம்

(வ-ம்) அகோவாருந்தம்பி லவகுமாரா இந்தவனத்தில்மிருகஜாதிகள் விஸ்தாரமாய்க்காணப்படுகிறது இதுகளைப்பிடிக்கவேணும் அம்பையெடுத்துக்கொள்வேட்டையாடுவோம் (லவன்சொல்-வசனம், அப்படியேயெடுத்துக்கொண்டேனண்ணாவே.

குசலவாவேட்டையாடுகிற-தரு - இ-ம்-காம்போதி-திரிபுடைதாளம்.

பல்லவி.

வனத்தில்வேட்டையாடினாரையா-குசலராஜர்
வனத்தில்வேட்டையாடினாரையா

அநுபல்லவி.

கனத்தசிலைகள் தனையுமெடுத்து
கரும்புலிகளை மிகவுமடித்து (வனத்தில்)

சரணங்கள்.

சிலைகள்தனையுமெடுத்து வருங்கலைகள்மிகவும்பிடித்து
மலைகள்மூயலையடித்து வருமயிலினங்களைப்பிடித்து (வனத்தில்
வெல்லுங்கணையையெடுத்து வரும் வேங்கைகளையுமடித்து
கொல்லும்படைகளெடுத்துவருங் குயிலினங்களைப்பிடித்து (வனத்தி)

பொது விருத்தம்.

இருவருங்கானிற்கூடி யிபலுடனன்றாய்வேட்டை
புரிந்தபேகைசலித்துட் புகழுடன்பிரிந்துபாலர்
மருவியேவனத்திற்பின்னும் வாய்த்ததோர்பலாதிகொய்து
திரும்பிடும்வேளைதன்னிற் சிறுவனும்பரியைக்கண்டான்.

(பொது-வ-ம்) அஃதெப்படியென்றால் அந்தச்சமையத்தில்குச லவர்வனத்தில் வேட்டையாடி கைசலித்து இருவரும் இணைபிரிந்து கந்தமூலபலாதிகளைக்கொய்து வருகிறசமையத்தில் சிறியவனாகப்பட் ட லவகுமாரன் அஸ்வத்தைக்கண்டு சொல்லுகிறவிதங்காண்க.

லவன்சொல் விருத்தம்.

இதுயாவர்குதிரைநாம்வா ழெழில்வனம்வருவதென்ன
புதுமையாய்ப்பணிகள்மிக்கப் பூட்டியுந்நுதலிற்பட்டம்
அதிவீரசூராமரஸ்வமென் றிருப்பதாலும்
ததியிதுவிட்டேன்வந்தோரைச் சண்டையில்வெல்லுவேனே

(வ-ம்) ஆ-ஆ, இதுயாவருடைய குதிரை அனேகம்பணிகள்பூட்டி நெற்றியில் ஸ்ரீராமருடைய பிரதாபத்தையெழுதிக் கட்டியிருக்கின்றது ஆகிலும் நமமுடையவனத்தில் வருவானேன். இனி விடுகிறதில்லை இதனைத்தேடிவந்தவரைச் சண்டையில் வெல்லுவேன் சத்துராதிகளைக் கொல்லுவேன் இதோயிந்த வாழைமரத்திற் கட்டிவைத்தேன்

சத்துருக்கர் சேனைகள் குதிரையைத்தேடிக்கொண்டு
வருகிறகண்ணிகள்-இ-ப-எதுகுலகாம்போதி-ரூபகதாளம்

அந்தவேளைதன்னில்ராஜராட்விதன்னிற்பரியைத்தேடி
வந்தனர்பரிகாணுமல் மனமதுகான்தளர்ந்து
விந்தையானவனங்களெல்லாம் வேகமாகத்தேடிவாரார்
சிந்தைதனிலமெத்தநொந்து தேசிகனைததேடிவாரார்
பந்தயங்கள்பேசிக்கொண்டு பரிதனைத்தேடிவாரார் (அந்த)

சேனைகள் லவனுக்குச்சொல் விருத்தம்

இந்தமாவனத்தில்வந்த யெழிலுறுநற்குதிரைதன்னை
விந்தையாய்க்கட்டிவைத்து விளையாடும்பிள்ளையார்நீ

சந்தமாம்வீரரோடு சவுரியமுனக்கடாது
அந்தமாங்குதிரைதன்னை அவிழ்த்துநீவிடுகுவாயே.

(வ-ம்) அகோவாருந்தம்பி உன்னைப்பார்த்தால் சிறுபிள்ளையாயிருக்கின்றது இந்தக்குதிரையைப் பிடித்துகட்டிவைத்தாயே உனக்கென்ன வீராதிவீரருடன் வீம்புவேண்டாங் குதிரையை அவிழ்த்துவிடுவாய்தம்பி.

லவன் சேனைகளுக்குச்சொல் திபதை.

குதிரையைப்பிடித்துக்கட்டிக் கொண்டவன்லவனென்கண்டீர்
பதறியேயெத்தனேடே பராக்கிரமஞ்செய்யவேண்டாம்
சிதறியேயோடிவந்த சேனையைக்கொல்வேனனே
மதியுடனுயிர்காப்பாற்றி வனத்தைவிட்டோடுவீரே,

வசனம்.

அகோவாருங்கள் ராஜாக்களே குதிரையைப்பிடித்துக் கட்டினவன் நான்றான் என்பேர்லவன உங்கள்பராக்கிரமம் என்முன்னில்லாது உயிரைக் காப்பாற்றிக்கொண்டோடிப்போங்கள்மன்னவர்களே.

பொது-திபதை.

சேனைகள்கோடிகோடி திரள்பரிகாலுகோடி
யானைகளிரண்டுகோடி அணிமணித்தேர்கள்கோடி
மாணிலந்துளெழும்ப மலைகளும்பொடியதாக
வானவர்பார்த்திருக்க வந்தனர்பாலர்முன்னில்.

லவன் ராஜர்களுக்குச்சொல்திபதை

மலையெனநீங்களென்னை வந்துமேவளைத்துக்கொண்டீர்
மலையெனப்பஞ்சுசேர்ந்தால் வன்னிமுன்னிற்குமோதான்
சலமுடன்றிரிபுரத்தைச் சங்கரனெரித்தாப்போலே
கலமுள்ளவரனிலேல நருக்குவேனொடியிற்றனே.

வசனம்.

அகோவாருங்கள் ராஜாக்களே என்னைநீங்களெதிர்த்தால் நான் பயப்படுவேனோ முன்னால்சிவன் திரிபுரத்தை பெரித்ததுபோல் உங்களையெரித்துப்போடுவேன் ஓடிப்போங்கள் ராஜாக்களே.

ராஜர்களுக்கும் லவனுக்கும்-தர்க்கம்-இ-ம்.

சங்கராபரணம் அடதாளம்.

ராஜாக்கள் ஓடிப்போங்களென்று வேடிக்கைப்பேசுறாய்
சொல்லல் கூடிபரவிதன்னைக் கொண்டுபோவோமே
லவன் கொண்டுபோவோமென்று ஏதுகிறீர் வீரரே
சொல்லல் கண்டீரோசிலைகையிற் காலனைப்போலே
ராஜாக்கள் காலனென்றாலும்நாம் கட்டிப்போடுவோம்போடா
சொல்லல் பாலனென்றேயஞ்சிப் பார்க்குறோம்...

லவன் போடாவாட்டாவென்று புகல்கிறுயென்றனைச்
சொல்லல் சாடுறேன்பாணத்தாற் றவித்திடப்பாரீர்
ராஜாக்கள் யாரொன்றுஎங்கள்மேற் பாணத்தைப்போடுருய்
சொல்லல் கூரம்பினுலுன்னைக் கொல்லுவோம்பாராய்
லவன் கொல்லுகிறேம்பாரென்று வல்லமைப்பேசுறாய்
சொல்லல் நில்லுங்கள்சொல்லுகிறேன் நிமிஷத்திற்பாரீர்
ராஜாக்கள் நிமிஷத்திற்பாரொன்று நெடியவில்தொடுக்கிருய்
சொல்லல் துமிசஞ்செய்யப்பாணந் தொடுக்கிறோம்பாராய்

சேனைகள்பிரலாபப்பட்டுஓடுகிற-தரு-இராகம்-மோகனம்-ரூபகதாளம்

பல்லவி.

சாத்தினன்சாத்தினனே பாணத்தினலே சாத்தினன்சாத்தினனே

அநுபல்லவி.

சாத்தினன்பாணத்தாலே க்ஷணத்தில்மனுஷவயெல்லாம்
ஆத்தினருபோலே அகணிகிழித்தாற்போலச் (சாத்தி)

சரணங்கள்.

ஓடயிடங்காணேமென்ன செய்வோமையோ
கேடுகாலம்வந்து கிட்டிமூட்டிவெட்டி (சாத்தி)

வேறு-மேற்படி-ராகதாளம்.

சாடிசாடிவிட்டான் தரையில்லுதிரமோடக்
காடுசெடிகள்தன்னிற் கணக்கவோடவொட்டாமல் (சாடி)
வாதுபேசிவந்த வல்லாளகண்டரெல்லாம்
போதும்போதுமென்று பிணத்தின்கீழ்மடியவே (சாடி)
ஒருகோடிசேனையு மொன்றுகமடிந்தார்கள்
எருவானராஜாக்க ளெதிர்த்தப்போர்க்களத்தில் (சாடி)

சத்துருக்கனமடம - ஒருவன்வந்துசொல்-தரு
இ-ம்-எதுகுலகாமபோதி-சாபுதாளம்.

பல்லவி.

தப்பிவந்தேனையா பதலமாய் தப்பிவந்தேனையா

சரணங்கள்.

தப்பிவந்தேனையா சாகப்பயந்துநான்
கொப்பனவயோத்தியிற் க்ஷாபல்வாழவே (தப்)
எப்படியுந்தேடி யிககேவருவாச்சான்
இப்படிஇனியிங்கே யிருக்கவுமொண்ணுது (தப்)

சேனுதிபதிசத்துருக்கருக்குச்சொல்-திபதை.

அரசர்களாம்சேனைசமிதபாலகன்றன்
புாவியை ... டிப் போனசேனைகளெல்லாம்

தரணியிலுருட்டிவிட்டான் தப்பினேனொருவனாக
விரைவினிலோடிவந்து விட்டேனுன் சரணமையா.

வசனம்.

அகோவாருமையா சத்துருக்கமகாராஜாவே ஒருசிறுபிள்ளை யாரோ ராஜவம்சம்போற்காணுது அவன் நம்முடைய குதிரையைப் பிடித்துக்கட்டி எதிர்த்தவர்களையெல்லாம் வெகுவாய்மாய்த்துவிட்டான் நான் மாத்திரந்தப்பித்துக்கொண்டோடிவந்துவிட்டேன் சுவாமி.

சத்துருக்கர்-சேனாதிபதிக்குச்சொல்-திபிகை.

சிறுபிள்ளைபோலேவந்து சேனையைக்கொன்றானென்றாய்
பரிதியின்குலத்தில்வந்த பையலாமவனைநாமும்
அரிதியாய்க்கொல்லொணாது அவனையுமூர்ச்சையாக்கி
இரதத்திற்கட்டிக்கொண்டு யீக்ஷணம்வருவோம்வாரீர்

(வ-ம்) அகோகேளும்சேனாதிபதியே சிறுபிள்ளையாகொன்றவன் நல்லது அவனைக்கொல்லாமல் மூர்ச்சையாக்கி ரதத்திற்கட்டிக்கொண்டு வருவோம் வாரும்சேனைகளே.

பொது-திபிகை.

திக்கெனச்சத்துருக்கர் தினகரனுதயம்போலப்
பக்குவரதத்திலேறிப் பரிதனையதட்டிபோட்டக்
கொக்கரித்துக்கொண்டு கோபமாய்வனத்தில்வந்து
இம்கிறலவனைப்பார்த்து னிலையுடனியம்புவாரே

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் சத்துருக்கர்தேரிலேறி ரணக்களம் வந்து லவனைப்பார்த்துச் சொல்லுகிறவிதங்காண்க

சத்துருக்கருக்கும்-லவனுக்கும்-தர்க்கக்-கண்ணிகள்.

இ-ம்-மோகனம்-மிசுரதாளம்.

சத்துருக்கர் ஆரடாசிறுபிள்ளாய் போரடாசெய்கிறாய்
சொல்லல் வீறிடச்செய்கிறேன் பாரும்வீரா

லவன் செய்யுறேனென்[illegible]றுநீ வையுறாய்ராஜனே
சொல்லல் [illegible]ய்யுறேன்வா[illegible]யா லோடிப்போகாய்

சத்துருக்கர் ஓடவேவந்துகா[illegible]ன் உடனேயுந்தனை இப்போ
சொல்லல் வாடடச்செய்கி[illegible]றன் பாரும்பாலா

லவன் ஆலமாயென்கணை கோலமாய்வருகுது
சொல்லல் சாலவேயோடுவாய் ரா[illegible]வீரா

சத்துருக்கர் பாலகாம்பாம்புகண் ட[illegible]மோதடையினால்
சொல்லல் பற்றியேஜாடுறேன் பா[illegible]ம்பாலா

லவன் வெற்றியாய்க்கூடியே சுற்[illegible]ய[illegible]காய்
சொல்லல் சற்றுநானுஞ்சேனை பாரும்வீரா

சத்துருக்கர் அஞ்சினனென்றுநீ மிஞ்சியேபேசாதே
சொல்லல் பஞ்சுபோற்ஜாடுகிறன் பாரும்பால
லவன் என்செய்வேனென்றுநீ மிஞ்சியேகீழ்விழப்
சொல்லல் பஞ்சுபோற்ஜாடுவேன் பாரும்வீரா
சத்துருக்கர் விட்டிடுபாணங்கள் பட்டுமேசிறுலவன்
சொல்லல் திட்டெனப்பூமியில் விழுந்தனனே

பொது விருத்தம்.

முடிகியேசத்துருக்கர் முன்னுதாய்ப்பாணமெய்யக்
கடுகெனவதுவும்வந்து காளையாம்லவன்கழுத்தில்
தொடுமலர்மாலையாகத் துன்னச்சத்துருக்கர்தானும்
மடமயிற்சீதையாளை மைந்தனிவனென்றுவாரேனே

சத்துருக்கர்-லவனைக்கட்டல்-கண்ணிகள்-இ-ம்
எதுகுலகாம்போதி-ஆதிதாளம்:

ஏரணிசத்துருக்கர் பிடித்ததோர்சிலையறுத்து
வீரியமாகவேதான் விளையாடயிங்குவந்தீர்
தார்குழற்சீதைதன்னைச் சதிருடன்போற்றிசெய்து
ஏரணிசிலையைவாங்கி யியலுடனேகும்போது
ஓடியேமன்னன்வந்து ஒடித்ததோர்வில்லினாலே
நாடியேபாலன்வீழ்ந்து நடுங்கவேதானடித்தான்
வாடியேலவகுமாரன் வலியதோர்வில்லினாலே
நீடியேபூமிதன்னில நின்றவன்முன் விழுந்தான
எடுத்தனன்சத்துருக்கராஜன் ரூபமுமராமனென்று
துடைத்தனன்மேனிதன்னைச் சுனையுளநீரினாலே
திடுக்கெனப்பாலன்றன்னைத் தேரினிற்கட்டிக்கொண்டு
விடுத்தனன்குதிரைகொண்டு வேந்தனுமயோத்திநோக்கி
சத்துருக்கர்சேனைகளைத் திருப்பிக்கொண்டுபோதல்-கண்ணிகள்.
இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம.

பல்லவி.

ஜெயங்கொண்டுவாராரோ-சத்துருக்கரும்ஜெயங்கொண்டுவாராரே

சரணங்கள்.

ஜெயங்கொண்டுவாராரோ ஜெயலவனைப்பிடித்து
மயக்கொண்டவுலகத்திலமைந்தனென்றறிந்து (ஜெய)
சேனைகாவலர்சூழத் திமிதிமியென்னவே
திரளாய்வாத்தியஞ்ஜாடயானைமாவுநெருக்க (ஜெய)

பொது விருத்தம்.

சந்தோஷமாகராஜன் தனித்திடலவனைக்கட்டி
அந்த[illegible]யாத்திநோக்கி அடவுடனடக்கும்போது

கந்தங்கொள்கன்னிமார்கள் கண்டிந்தச்செய்திதன்னைச்
சுந்தரச்சீதைமுன்போய்ச் சோபமாய்ச்சொல்லுவாரே

வனக்கன்னிகள்-சீதைக்குச்சொல்-தரு-இ-ம்
எதுகுலகாம்போதி-ரூபகதாளம்.

பல்லவி.

சீதாயென்னசொல்வோம்-லவன்சேதி-மாதாயென்னசொல்வோம்

அநுபல்லவி,

சீதாயென்னசொல்வோ மாதாவுன்மைந்தனை
ஏதோராஜர்காட்டிற் சூதாயெடுத்துப்போறார் (சீதாய்)

சரணங்கள்

தனியேலவன்காட்டில்வருகவே-பின்பு
தாஷ்டீகதுரகமொன் றுருகவே
மூனைவன்கண்டுகோபம்பெறுகவே-அதை
மூர்க்கமுடன்கட்டியிறுக்கவே
விரிவாய்வீரர்கூடிவேகத்துறகக்கேட்கக்
குருமுனியருளாலேகொன்றானவர்களைச் (சீதாய்)
கண்டுராஜர்தேரிலேறியே-உந்தன்
காளைமீதிற்சரமாரியே
விண்டுபாலன்றன்னைமீறியே-காளை
வேதைகொண்டுசோர்ந்தாறியே
தண்ணியானைகள்தங்கள்துரகங்களைச்
சதைக்கத்தேரிற்கட்டிப் பதைக்கக்கொண்டுபோறார். (சீதா)

பொதுப்பிதை

மைந்தன்றன் வார்த்தைகேட்டு மாநிலந்தனில்விழுந்து
சிந்தையுங்கூடுமென்னச் சிறுவனைநினைத்துவாடிச்
சுந்தரமுகங்களெல்லாஞ் சோர்ந்துமெய்மறந்துவாடிச்
சிந்தையில்ராமாவென்று சீதையும்புலம்புவாளே.

சீதை-பிரலாபக்கண்ணிகள்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

ஐயையோநானென்னசெய்வேன் லவகுமாரா-மகனேயென்
னுசையுள்ளசண்மணியே லவகுமாரா
என்னமாய்மனந்துணிந்து லவகுமாரா மகனே
யென்னுயிர்தரிப்பேனையோ லவகுமாரா-நீ
சொன்னதொருவார்த்தைகேட்டு லவகுமாரா-மகனே
துடிக்குதையோதிரேகமெல்லாம் லவகுமாரா
சூட்சியான்வாய்மொழியா லவகுமாராமகனே-வெகு
தாஷ்டீகங்களசொன்னயடா லவகுமாரா
கட்டவுன்னைராஜர்வந்தா லவகுமாரா-அப்போ
வெட்டவுனைகையிலில்லையோடா லவகுமாரா

எட்டுத்திசைராஜரெல்லாம் லவகுமாரா-உனக்
 கீடல்லவென்றுசொன்னாய் லவகுமாரா
மன்மதனைப்போலவுன்னை லவகுமாரா-நான்
 வனத்தில்வேட்டைபோகவிட்டேன் லவகுமாரா
காட்டிற்குநீபோறபோது லவகுமாரா-அங்கே
 போட்டிவந்துநேர்ந்ததோடா லவகுமாரா
வேட்டைக்கிநீபோறபோது லவகுமாரா-வெகு
 தாஷ்டீகங்கள்சொன்னையடா லவகுமாரா
கூடியேவனத்திற்போனீர் லவகுமாரா-மூத்தக்
 குசலனெங்கேபோனானடா லவகுமாரா

சீதைசொல்-திபிதை.

வையகமாள்வாயென்று மனமகிழ்ந்திருந்தயென்னை
உய்யவேயடவிதன்னி லொண்டியாய்விட்டாயோடா
பையவேதேரிற்கட்டிப் பாரினிற்போரோதான்
ஐயையோமகனேநீதா னலறியேபயந்தாயோடா

வசனம்.

அப்பாமகனே லவகுமாரா அயோத்தியைப்பட்டங்கட்டிக் கொண்டு அரசாட்சிசெய்வாயென்றிருந்தேன் இப்போது என்னையலையும்படியாய்க் காட்டிலேதவிக்கவிட்டாய் உன்னைத்தேரிற்கட்டிக்கொண்டு போனார்களே நான்பெண்சிவன் என்ன செய்வேன் மகனே

சீதை-பிரலாபத்தரு-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி

திக்கினிவேறுமுண்டோ-ஜெகந்தனில்-திக்கினிவேறுமுண்டோ

அநுபல்லவி.

திக்கினிவேறில்லைச் சிறுவனுமுடிந்தானே
ஒக்கவேயவனுடன் உயிரைமாய்த்துக்கொள்வேன் (திக்)

சரணங்கள்.

பெற்றவையெனக்குபத்தியெரியுதடா
 இத்தரணிமீது சீவனைவிடுவேண்டா (திக்)

பத்துமாதஞ்சுமந்து பெற்றவயிரெனக்கு
 மெதுதக்குழம்பியே வேதனையாச்சுதடா (திக்)

சீதை சொல்-திபிதை.

உந்தனைப்பெற்றபின்பு வொருகுறையெண்ணாமற்றான்
செந்திருவயோத்திராமர் சேதியையமறந்திருந்தேன்
பந்தமாய்க்குதிரைக்காகப் படைதனிலகப்பட்டாயோ
எந்தனுருயிரையிப்போ தெயுடன் விடுவேன்பாந்தா

வ-ம். அப்பாலகுமாரா உன்னைப்பெற்றபின்புஎன் துயரமெல்லாமறந்திருந்தேன் என்பிராணநாயகரான ரகுநாயகனையு மறந்தேன் இப்போது ஒருகுதிரைக்காகச் சண்டைபண்ணிக் கட்டுப்பட்டாயோ இனிஎன்னுயிரை இங்கேவிடுகிறேனடா மகனே.

சீதைபுலம்பல்-தரு-இ-ம்-ஆகிரி-அடதாளம்.

பல்லவி.

வந்தவேளையிதுவோ-வனந்தனில்-வந்தவேளையிதுவோ

அநுபல்லவி.

வந்தவேளை தன்னில் வனத்தினில்வேட்டைபோன
சொந்தமைந்தனைநான் துடிக்கக்கொடுத்தேனே (வந்த)

சரணங்கள்.

செந்திருவயோத்தி தசரதராமா
சொந்தநாயகனைத் துயரத்துடனேவிட்டு (வந்த)

மைந்தரிருவர்கள் வனத்தினிற்போகவும்
சிந்தைதளர்ந்துநான் சிவனைவிடுவேனே (வந்த)

சீதைசொல்-திபதை.

என்னிடதந்தைதானு மிவ்விடம்வந்தாரானால்
அன்னியசிறுவனெங்கே சொல்லெனமுன்கேட்பாரே
என்னென்றுசொல்வேனையோ இப்பழிக்கியாதுசெய்வேன்
சின்னதோர்புத்தியாலே சிறுவனையனுப்பினேனே.

வசனம்.

ஐயையோ என்தந்தையாகிய வால்மீகர்வந்து எங்கே உன்குமாரர் இவ்விடம் பூங்காவனத்தைக் காத்துக்கொண்டிருக்கவும் உனக்குக்காவலாய் வைத்துப்போன மைந்தனெங்கேயென்றால் என்னசொல்வேன் அரிகரி

குசலன்வந்து சீதைக்குச்சொல்-திபதை.

என்னிடதாயேகேளாய் யித்தனை துயரமென்ன
மன்னியவேட்டையாடி மகிழ்வுடன்லவனைநானு
முன்னமேயனுப்பினேனே மோசம்போனேனோகாணேன்
அன்னையேயெந்தனுக்கு அருளிச்செய்திடுவாயே

(வ-ம்) அகோகேளுந்தாயே நாங்கள்உன்னிடத்தில் செலவுபெற்று வேட்டைக்குப்போய வேட்டையாடித் தம்பியாகியலவனை முன்னம் வீட்டிற்கு அனுப்பிவைத்தேனே அவனெங்கே நீ, பிரலாபிக்கிறதேது மென்ன சொல்வாய்தாயே.

சீதை-குசலனுக்குச்சொல் திபதை.

பூவனந்தன்னில்வந்த பரிமயலவனுக்கட்டச்
சேவகர் திரண்டுவந்து செத்தனர்தம்பிகையால
பாவிபாமன்னர்வந்து பார்தனில்விழவடித்துத்
தாவியேகட்டிக்கொண்டு சனுதியாய்ப்போகினாராம்.

வசனம்

அகோவாராய்மகனே வனத்தில்ஒருகுதிரைவந்ததாம் அந்தக்குதிரையை லவன்கட்டினனும் யாரோராஜாக்கள்வந்து சண்டைசெய்து லவனைப்பிடித்துத் தேரிற்கட்டிக்கொண்டுபோனார்களாம் அதுகேட்டு என்வயிறுபத்திக்கொண்டெரியுதடா மகனே.

குசலன்சீதைக்குச்சொல்-திபதை.

எந்தனைப்பெற்றதாயே யித்தனைத்துயரமென்றான்
மைந்தநானிருக்கவுந்தன் மனதினிற்கிலேசமாமோ
எந்தனைமனுப்புமம்மா யிட்சணமவரைக்கொன்று
சந்தமாய்லவனைக்கூட்டிச் சனுதியில்வருகுவேனே.

வசனம்.

அகோகேளுந்தாயே உனக்குத் துயரம்வேண்டாம் நானிருக்கவென்னகுறை என்னையனுப்பிவைத்தால் அவர்களைக்கொன்று லவகுமாரனை யிட்டுக்கொண்டுவருகிறேனம்மா.

சீதை குசலனுக்குச்சொல்-திபதை.

அண்டர்வந்தெதிர்த்தபோதும் அசுரர்களெதிர்த்தபோதும்
எண்டிசையுள்ளராஜ ரவர்கள்வந்தெதிர்த்தபோதும்
கண்டிதஞ்செய்வதாகக் கலக்கமில்லாள்நானனல்
கொண்டவிக்கணையால்மன்னர் கூட்டத்தைவென்றுவாராய்

வ-ம். அகோவாரும்மகனேமும்மூர்த்திகள்வந்தெதிர்த்தாலும் அசுரர்கள்வந்தெதிர்த்தாலும் மண்டலாதிபதியாகியராஜாக்கள்வந்தெதிர்த்தாலும் நான்பதிவிரதையாயிருக்கிறது மெய்யானல் இந்தப்பாணம் எதிராளிகளைக் கண்டிக்கவேண்டியது நீபத்திரமாய்லவனைமீட்டுக்கொண்டு சீக்கிரமாய் வருவாய்மகனே-

(குசலன்-வ-ம்) அப்படியே வென்றுவருகிறேன்தாயே,

பொது திபதை.

பட்டயம்பரிசுசத்தி பாரிபசிலைகள்பாணம்
திட்டெனவாங்கிக்கொண்டு சீருடன்கவசம்பூண்டு
மட்டறச்செல்லுஞ்சேனை வாரியைக்கொல்வெனென்று
கிட்டியேகுசலன்வந்து கிரியெனத்தோன்றினனே,

குசலன்சொல்-கண்ணிகள்-இ-ம்-பமுனைகலியாணி-அடதாளம்.

ஆரடாவனந்தனி லானைசேனையுடன்
போர்செய்துலவனையே பிடித்துப்போரவர்கள் (ஆர)
பாரடாயென்னிட பாணத்திரந்தனைக்
கூருள்ளவாளினற் கொல்லுவேனுன்னையே (ஆர)
சேரவேவந்துளன் சேதியைக்கேட்டுநீ
போர்செய்துகுதிரையைப் பிடித்துப்போவீரோ (ஆர)

ஈரேழுலகந்தனி லெனக்கெதிரேவந்தால்
பாரில்விழுந்திடவே பாணத்தைவிடுவேன் (ஆ)
எராணிசிலைகையி லெடுத்தவர்களாகில்
மாரிபோற்சரங்களை வரவிடுபார்ப்போம் (ஆ)

சேனாதிபதிசத்துருக்கருக்குச்சொல்-திபதை.

கண்டீரோவரசேயிக் காளையின்சுருபந்தன்னைக்
சண்டனோவன்றியிந்தச் சங்கரன்றூதன்றானோ
கொண்டலன்சுரூபன்றானே குமாரனோவறியோமையா
அண்டமும்நடுங்குதந்த வடைக்கலங்காருமையா.

வசனம்.

அகோவாருஞ்சுவாமி சத்துருக்கமகாராஜாவே இதோவருகி றவன் ஆரோ,சண்டனோ அல்லவென்றமிண்டனோ, காலதூதனோ குமாரவேளோ, எங்களுக்குப்பயமா யிருக்கிறது காக்கவேணுஞ் சுவாமி.

சத்துருக்கர்சேனாதிபதிக்குச்சொல் வசனம்.

பயப்படாதிர்கள் அவனைச்செயிக்கப்போகாதா சேனாதிபதிகளே

குசலன்ராஜர்களுக்குச்சொல்-திபதை.

[illegible]ந்தியஉங்கள்வீர முடுக்குஞ்சாமர்த்தியமெல்லாம்
எந்[illegible]லைகைப்பாணத்தாலேயேங்கியேசாகவேண்டாம்
சத்தவென்றம்பிதன்னைச் சலுதியில்விட்டுநீங்கள்
சித்தையிற்சீவன்றப்பிச் செல்லுவீர்வனத்தைவிட்டே.

வசனம்,

அகோவாருங்கள்ராஜாக்களே என்விருதாவிற்சாகவேணும்சு கமாய் குதிரையையும் லவனையும்விட்டு நீங்கள்உயிர்தப்பிப் பிழை யுங்கள் ராஜாக்களே.

சத்துருக்கர்.குசலனுக்குச்சொல்.திபதை.

சிறுபிள்ளைபோலேவந்து சேனையைக்கொல்வேனென்றாய்
அறிவையோயெங்கட்சேனை அரசர்கள்வலுமைதன்னைத்
திறமைசேரமரின்சேதி தெரியுமோவுந்தனுக்கு
நிறைபவேசொரிந்தாற்பாணம் நிலைநிற்கமாட்டாய்நீயே

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் சிறுபிள்ளைபோற்காணாது நீயாமெங் கள்சேனையெல்லாங் கொல்லுகிறவன் எங்கள் சேதியையறிய மாட் டாய் சிறுபிள்ளையானபடியால் உனக்குத்தெரியமாட்டாது வீணா ய்மடிந்து போகவேண்டாம் ஓடிப்போவாய்தம்பி.

பொது-திபதை.

யானைகள்பட்டுவீழ அடர்ந்திடும்புரவிவீழ
சேனையும்பொடியதாகத் தோணிமடிந்துவீழ

மாநிலத்தனில்ரத்தாறு மதவுகள்போலேயோடே
ஜானகிமைந்தனன்றாய்ச் சாடினான்க்ஷணத்திற்றானே

சத்துருக்கர்-குசலனுக்குச்சொல்திபதை-

ஆரடாசிறுபிள்ளாய்நீ அசுரர்வங்கிஷமோசொல்லாய்
பாரடாயெந்தன்கையின் பாணத்தைதொடுத்தேனுகிற்
சாரவேயென்றுநீயுஞ் சரிசெய்துநிற்கமாட்டாய்
காரியமதனைச்சொன்னேன் காலையேவிலகிப்போடா

வசனம்.

அடா நீ அசுரர்வங்கிஷம்போற்காணுது என்னுடைய பாணத்தைத்தொடுத்தேனுகில் நிற்கமாட்டாய் இந்தப்பாலவனம் அறியும்படியாய்ச் சொல்லுகிறேன் நீ அடிபட்டு விருதாவாய்ச் சாகவேண்டாம் சுமாய் விலகிப்போய்பிள்ளாய்:

சத்துருக்கருக்கும்-குசலனுக்கும்-தர்க்கம்-கண்ணிகள்,

இ-ம்-மோகனம்-மிசாதாளம்.

குசலன் — விலகிப்போகாவென்று வீரியம்பேசாதே
சொல்லல் — நலங்கிவிழபாணம் நான்விடுவேனே
சத்துருக்கர் — விடுவேன்பாணமென்று வீரியம்பேசாதே
சொல்லல் — சடுதியிலுனைவிழச் சாடுவேன்பாராய்
குசலன் — சாடுவேன்பாரென்று சவுரியம்பேசுறாய்
சொல்லல் — போடுறேன்பாணங்கள் பிடியடாபார்ப்போம்
சத்துருக்கர் — பிடியென்றுபாணத்தைபொடியாய்க்கணைதொடுத்து
சொல்லல் — வடிவுள்ளபாணத்தை வரவிடுபார்ப்போம்
குசலன் — பார்ப்போமென்றென்னுடன்பராக்ரமங்காட்டாதே
சொல்லல் — தோர்ப்புகெலிப்புனக்குத்தோற்றுதுபோம்போம்
சத்துருக்கர் — போவென்றுபின்னையும் பிதத்தாரவென்னடா
சொல்லல் — பாவம்பாலனென்று பாணமொன்றெடுத்தே
பொதுவில் — எடுத்துக்கணைதொடுத்து மிடுக்குள்ளபாலனை
சொல்லல் — அடிக்காமற்பிடிக்கச் சத்துருக்கரும்விழுந்தார்

பொது திபதை.

தேரினிற்கட்டுபட்ட சிறுவனையவிழ்த்துவிட்டார்
தீரனாய்வந்தஅண்ணன் திருவடிதெண்டனிட்டான்
பேரணிகுகினாதன்னைப் பிடித்தவர்கட்டிக்கொண்டு
வீரியமாகவேதான் விளங்கியேயிருக்கின்றாரே

இதுவுமது

பையவேரணக்களத்திற் பட்டவர்கீழ்விழுந்தார்
தொய்யாமற்பிழைத்தபேர்க ளோடியேவனமறைந்தார்

செய்புவதினியாதென்று திடுக்கிட்டுமனமயங்கி
ஜயகோவென்றயோத்தி அட்சணமோடலுற்ருர்

வசனம்

அகோதெப்படியென்ருல் சிறுபிள்ளைகையில் அடிபட்டசேனைகளயோத்தியைநோக்கிப் போகிறவிதங்காண்க.

சேனைகள் அயோத்திக்குப் பிறலாபித்துக்கொண்டு போகிற
தரு-இ ம்-எதுகுலகாம்போதி-மிசரதாளம்,

பல்லவி.

ஒருமட்டாய்மடிந்தாரையா ராமர்சேனை
ஒருமட்டாய்மடிந்தாரையா

அநுபல்லவி.

ஒருமட்டாய்வனந்தனி லோடிமடிந்தபேர்க்கு
எரியிட்டுச்சுடுவோமென்ருலெருமுட்டைகிடையாது (ஒ)

சரணங்கள்.

யானைகள்சேனைகள் அடர்ந்தபரியினங்கள்
கானகந்தன்னிலே கலக்கவேபோர்செய்து (ஒரு)
தோரணிதன்னுடே யோணிராஜர்கள்
ஆரணியந்தனி லடவாகப்போர்செய்து (ஒரு)
[illegible]ள்ளராஜர்கள் வாதுகூறிவந்து
ஒருவருமெதிரில்லாச் சிறுபிள்ளைதன்கையால் (ஒரு)

சேனைகள்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

திருவ்ள அயோத்தியாளுந் தசரதராமாகேளீர்
ஆரண்யஞ்சிறவாரோ அஸ்வத்தைப்பிடித்துக்கட்டி
பெருவ்ளமன்னரோடே பெருஞ்சமர்செய்துவந்தார்
தாரணிதனிலுன்றம்பி சத்துருக்கர்விழுந்தாரையா

வசனம்

அகோவாருஞ்சுவாமி ராமபத்திரரே ஆரணியத்தில் ஆரோசிறுபிள்ளைகள் அஸ்வத்தைப் பிடித்துக்கட்டிக்கொண்டார்கள்நாங்கள்சென்று குதிரையைவிடச்சொன்னல் விடுகிறதில்லையென்று எதிர்த்து உயித்திபஞ்செய்து சத்துருக்கர் மூர்ச்சையாய் விழுந்துபோனர்சுவாமி.

ஸ்ரீராமர்-சேனைகளுக்குச்சொல்-திபிதை.

ஜெயம்பெற்ருேர்சிறுவர்தானே திரும்பினேர்நீங்கள்தானே
பயந்துமேசொல்கிறீரோ பகருமப்போர்க்களத்தில்
தயங்கியேசத்துருக்கன் ருனுமேவிழுந்திட்டானு
உயர்ந்தவர்ஜெயித்தவாறு முறுபமுமுரைத்திடீரோ

(வ-ம்)அகோவாருங்கள் சேனுதிபதிகளேசிறுவாரஜெயித்தபேர்கள்நீங்கள்பயந்து சும்மாசொல்லுகிறீர்களோ சத்துருக்கன்விழுந்

துபோனது நல்லதுஜெயித்தவர்கள் ரூபத்தை யெனக்குத்தெரிய
ச்சொல்லும் சேனாதிபதிகளே.

சேனைகள்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபதை.

வாதுசேர்சிறுவர்தங்கள் வடிவதுவுமைப்போலுற்றார்
பூதலத்தினிலுள்ளோராப் புதல்வருக்கெதிருமில்லை
வேதனேசிறுவர்நின்று மிகுசரத்தொடுத்தாலையா
நாதனேயவர்கள்கையில் நாங்களுந்தப்பிவந்தோம்

வசனம்,

அகோவாருஞ்சுவாமி ராமபத்திரரே வனத்தில் சண்டைபண்ணுகிற சிறுவர்கள் ஐந்தெழுத்துப்பாலனையும் தங்களைப்போலிருக்கிறார்கள் அவர்களுக்கு எதிரானராஜாக்கள் இந்தஎட்டுத்திக்கிலுமில்லை அவர்களால் சத்துருக்கர் மூர்ச்சையானார் நாங்கள் தப்பிவந்தது மகா அருமைசுவாமி.

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-கண்ணிகள்
இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

என்னவித்தையென்னவித்தை-தம்பிகேழ்க்க
யென்மனம்பதைக்குதடா தம்பி

அநுபல்லவி.

மன்னவரிதையறிந்தால்-தம்பி வ…பற நகைத்திடாரோ-தம்பி

சரணங்கள்.

கற்றிடும்பாணவித்தைதம்பி-கடவிற்கனாத்திட்டாயோ- தம்பி
சுற்றிவருஞ்சேனையோடுதம்பி சோர்ந்துமூர்ச்சையானயோடா()
சிற்றடிசிறுவர்கையில்-தம்பி-தேங்கியேமூர்ச்சையானயோதம்பி
பெற்றிடுந்தாய்கேட்டலடா-தம்பி-பிரிதியென்னசொல்வேனடாத

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-திபதை. (ம்பி

தம்பிலட்சுமணரேகேளாய் சடுக்கெனவேகியிட்போ
அப்பிணாற்செயித்தபால ரவனையும்பிடித்துக்கொண்டு
தென்புள்ளகுதிரைதன்னைச் சீக்கிரமாய்க்கட்டிக்கொண்டு
தம்பிசத்துருக்கர்கூட சனுதியில்வந்திடாயே

வசனம்,

அகோவாருந்தம்பி லட்சுமணா வனத்திற்சண்டை பண்ணுகிற சிறுவனைப்பிடித்துக்கொண்டு குதிரையையும்விடுவித்துக்கொண்டு சேனைகளையும் தம்பிசத்துருக்கனையும் எழுப்பிக்கொண்டு சீக்கிரம் வருவாய் தம்பிலட்சுமணா.

லட்சுமணர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபதை.

மன்னவர்க்கரசேயுந்தன் மலரடிசரணமையா
சொன்னசொற்படியேயிட்போ துய்யதோர்வனத்திலேகி

அன்னகர்சென்றுதம்பி-அஸ்வமும்பாலர்கூட
இன்னகர்கொண்டுவாரோ-னிணையடிபோற்றிபோற்றி

(வ-ம்) அகோவாரும் அண்ணாவே அப்படியே சென்று நம்முடைய அஸ்வமும் தம்பி சத்துருக்கனையும் அந்தச் சிறுவர்களையும் கூட்டிக்கொண்டு வருகிறேன் அண்ணாவே.

பொது-திபதை

தேர்களுமூன்றுகோடி சேனைகளளவுமில்லை
வீரியயானைமாவும் வேணதுகோடிமேவ
கூரியபாணம்வில்லுங் குறிப்புள்ளசூலம்வாளும்
சேரவேதானெடுத்துச் சீக்கிரம்பயணமானார்

(வ-ம்) அகோதெப்படியென்றால்லட்சுமணப்பெருமாள் ரகுநாயகர்சொன்னமாத்திரத்தில் அளவில்லாதசேனைகள் தேர்கள்யானைகள்-பாணம்-வில்-சூலமுதலாகியது மெடுத்துக் கொண்டு வருகிறவிதங்காண்க.

லட்சுமணர்-புறப்படுகிறதவண்ணிகள்-இ-ம்-முகாரி-திரிபுடைதாளம்

கொடிமுடியதிரவே கொக்கரித்து ஆர்ப்பரித்துக்
கடகடென்றுதேர்களோட்டி கானகத்திற்றேடிவாரார்
கொட்டியவிருதுமேளம் கோடையிடிபோல்முழங்க
[illegible]டைசர்சேனை லட்சுமணருந்தோணினரே
மட்டிலாதராசமபா[illegible] வாகுடனேவில்லெடுத்து
பதினெட்டுப்படைத்தலைவர் பாங்குடனேதேர்களோட்டி
எதிரில்லையென்றுசொல்லி யெதிர்த்துடனேமுன்னடக்க
வடிவுள்ளலட்சுமணரும் வந்துமுன்றோணினரே

பொது-திபதை

திடவரைப்பொடியதாகத் தருக்குடன்ரதங்களோட்டி
திடமுள்ளயானைசேனை தெளிவுள்ளபரிகளோட்ட
பொடியினால்மேகமேவப் புழுதியுங்கதிரைக்கப்பக்
கொடியபோர்க்களத்தைத்தேடிக் கொக்கரித்துடன்வந்தாரே

வசனம்.

அகோதெப்படியென்றால் சேனாதிபதிகள் ரதங்களை யதட்டியோட்டிப் பூமியெல்லாங் கிடுகிடென்று நடுங்கும் படியாய் தூசெழும்ப சூரியன் மறையும்படியாய் அதிவீரத்துடனே ரணக்களம் வருகிறவிதங்காண்க.

சேனாதிபதி-குசலவருக்குச்சொல்-திபதை-

இன்றெங்கள்புரவிதன்னை யியலுடன்விடாமற்போனால்
நன்றல்லநீயும்பாராய் நாங்களுமிகுத்துவந்தோம்
வென்றுங்கள்செருக்குமாற வெருவியேபின்கட்டாகப்
பன்றிகள்போலக்கட்டிப் பதிகொண்டுபோவோம்பாரீர்

வசனம்.

அகோவாருங்கள்தம்பிமார்களே நீங்கள்புரவியை விடுவதில்லையா நாங்கள்வெகுஜனங்கள் வந்திருக்கிறோம் சும்மாய் குதிரையைவிட்டுப்போங்கள் பிள்ளாய்.

லவன்-இராஜர்களுக்குச்சொல்-திபதை.

புரவியைவிடுவதில்லைப் புல்லரசர்களேகேளீர்
விரவினால்மலைகள்போலே வேணதருவிருவித்து
திரளெனவன்னிகூடித் திக்கெனும்வாறுபோல
உருளவேசேனையெல்லா மொருவனேகொல்வேன்பாரீர்

வசனம்.

அகோவாரும் ராஜாக்களே நான்குதிரையை விடுகிறதில்லை நீங்கள் என்னைமிரட்டினால் நான்பயப்படுவேனோ அப்படி பயப்படுவதில்லை இதோபார்த்தீர்களா உங்கள்சேனையோ மலைகள்போல விழுந்தது நீங்களுஞ் சாகவேண்டாம் ஓடிப்போங்கள் ராஜாக்களே இனியிருந்தால் நான் ஒருவனே கொல்லுவேன்.

சேனாதிபதிகளுக்கும்-குசலவருக்கும்-தர்க்கம்-கண்ணிகள்
இ-ம்-சங்கராபரணம்-மிச்ரதாளம்.

ராஜாக்கள் ஓடிப்போங்களென்று வேடிக்கைப்பேசுறாய்
சொல்லல் கூடிப்புரவிதன்னைக் கொண்[illegible]
லவன் கொண்டுபோவோமென்று குதிக்கிறீர்வீணா
சொல்லல் அண்டினுலுங்களை அதஞ்செய்திடுவேன்
ராஜாக்கள் அதஞ்செய்யுமுன்னிட ஆண்மையைக்காட்டுவோம்
சொல்லல் இதக்கமாய்ப்பாலரென் றெண்ணினேம்போடா
லவன் போடாவாடாவென்று புகல்கிறீர்நீங்களும்
சொல்லல் சுடோபாணத்தாலேசாடுறேன்பாரீர்

பொது-திபதை.

கவலையில்லாமல்வந்திங் காளைகளாலேநாமும்
அபஜெயமானோமென்று அலறிடக்காலசித்தன்
பவனியைவெட்டிவென்று பாலருங்களைகளேவி
நவமணித்தோராத்து நகைத்திடச்செய்திட்டாரே

சேனாதிபதிகள்-பிரலாபித்தோடி-லட்சுமணருக்குச்சொல்
கண்ணிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்,

என்னசெய்வோம்லட்சுமணரே எதுசெய்வோம்லட்சுமணரே
வீரனமானராஜரெல்லா மடிந்தார்களிவ்வனத்தில்
சிறுபிள்ளையிருவர்களுந் தேடியேகானகத்தில்
கடுகியேவருகிறார்கள் கலங்கியேயோடிவந்தோம்
மலைக்குமலைநடுவே லட்சுமணரே
மகாரிஷியெல்லையிலே லட்சுமணரே

கலங்கித்தவிக்கிறோமே லட்சுமணரே
காளகத்திராஜரெல்லாம் லட்சுமணரே

பொது திபதை.

பயப்படவேண்டாம்நீங்கள் பரிவுடன்வாரீரென்று
ஜெயப்படிலட்சுமணருமப்போ செத்தவர்தமையெழுப்பி
தியப்புறந்தம்பிமூர்ச்சைத் தெளிவித்துப்போரினின்று
நயப்புறக்குசலவர்க்கு நன்மொழிகூறுவாரே

வசனம்.

அகோதெப்படியென்றால் லட்சுமணரானவர் சேனைகளுக்கு தைரியஞ்சொல்லி போர்க்களம்வந்து இரதகஜதுரக பதாதிகளுடன்எழுப்பி சத்துருக்களையும் மூர்ச்சை தெளிவித்து குசலவர்களைப்பார்த்துச் சொல்லுகிற விதங்காண்க.

லட்சுமணர்-குசலவர்க்குச்சொல் திபதை.

வடிவினில்நீங்கள்க்ஷத்திரிய வம்ஷம்போற்காண்பதாலே
திடமுடனுனுமஸ்திரஞ் சீருடன்றொடுக்காமுன்னம்
கடிகியேயுங்கள்பேருங் கதித்ததாய்தந்தைபேரும்
அடவுடன்றெரிவதாக அறைந்திடவேண்டுமிப்போ

வசனம்.

அ[illegible]மாரர்களே உங்களைப்பார்த்தால் க்ஷத்திரியவம்மிசம்போற் காணுகின்றது நீங்களார் உங்கள்பேரென்னசிறுபிள்ளையா யிருக்கிறீர்கள் சீக்கிரஞ்சொல்லுங்கள் சிறுவர்களே.

குசலவர்-லட்சுமணருக்குச்சொல்-வசனம்.

அசோவாரும்ராஜரே பனங்காட்டுநரி சலசலப்புக் கஞ்சுமா அஞ்சாது (அதுபோல) எங்களை மிரட்டவந்தாய் நாங்கள்பயப்படுவதில்லை உன்னு லானதைப்பாரும்.

லட்சுமணர்-குசலவர்க்குச்சொல்-திபதை.

எந்தனற்புரவிதன்னை யிப்படிபிடிக்கலாமோ
வந்தவர்புரவிகேட்டால் வப்பரிதனைவிடாமல்
சொந்தமாய்ச்சேனையெல்லாந் துணுக்குறக்கொல்லலாமோ
உந்தன்பேர்தந்தைபேரு முரைத்திடாயினியானாலும்

வசனம்.

அகோவாருஞ் சிறுவர்களே என்னுடைய குதிரையைப்பிடித்ததுமல்லாமல் வந்துகேட்ட சேனைகளையும் கண்டித்தீர்கள்இது ஞாயமாஇனியாவது உங்கள்தாய்தந்தைபேரையும் உங்கள்பேரையுஞ் சொல்லுவீர்கள் சிறுவர்களே.

குசலவர்-லட்சுமணருக்குச்சொல்-திபதை.

பந்தயம்பேசிமெத்தப் படைவந்துசெயித்திடாமல்
எந்தனூர்தந்தைதாய்பேர் எங்கள்நல்பேரும்பின்னும்

விந்தையாய்க்கேட்டவுந்தன் விவேகமும்மட்டோதான்
சந்தமாமுனக்குவீரந் தானுமிச்சண்டைசெய்வீர்

வசனம்.

அகோவாரும் ராஜாவே மெத்தவுஞ் சபதம்பேசிவந்தவாகள்மா ண்டதைக் கண்டிருந்தும் நீவந்தஎங்கள தாய்தந்தைபேர்எங்கள்பேர் கேட்கவந்தாய் படுகளத்தி லொப்பாரியா கூடாது உன்னால்சாமார்த் தியமுண்டானால் பாரும்பார்ப்போம்.

லட்சுமணருக்கும்-குசலவருக்கும்-தர்க்கம்-கண்ணிகள்.

இ-ம்-மோகனம்-அடதாளம்.

லட்சுமணர் வாடாசிறுபிள்ளாய் வார்த்தைகள்தப்புறும்
சொல்லல் ஈடோநீயிப்போ வெதிர்த்துபேச
குசலவர் எதிர்த்துப்பேசாமல்நா னிதக்கமாய்ப்போசவோ
சொல்லல் ஏதுக்கோடாஉனக்குநா னுறவுண்டேசொல்லாய்
லட்சுமணர் சொல்லென்றுசிறுவாநீ மல்லாகவருகிறாய்
சொல்லல் வல்லுயிர்தன்னைநான் மாய்க்கிறேன்பாராய்
குசலவர் வல்லுயிர்தன்னைநீ சொல்லுந்தவறிடாமல்
சொல்லல் எல்லோரும்பார்க்கவே யேகிடீர்பாணம்

குசலவர் லட்சுமணருக்குச்சொல் திபிதை

என்னுடன்சொன்னவார்த்தை யிபலுடன்மறக்கவேண்டாம்
உன்னிடம்வலுமையுற்று ஓயித்தியஞ்செய்யும்பார்ப்போம்
அன்னிலையில்லாவிட்டால் அடர்த்திடவிப்போதானும்
மன்னியஅஸ்திரந்தன்னை வாகுடன்றொடுத்தேன்பாராய்.

வசனம்.

அகோவாரும்ராஜாவே இப்போது சொன்னீரே அந்தவார்த்தை யை மறந்துவிடவேண்டாம் உன்னாலே திராணியுண்டானால் பாணந் தொடுஇல்லாவிட்டால் நானடிக்கிறேன் பாரும் நீரென்னை மிரட்ட வேண்டாம்நீர்வில்லெடுத்து மிரட்டினால் நான்பயப்படுவேனோஇதோ பாணந்தொடுத்தேன் பாரும்ராஜாவே.

லட்சுமணர்சொல்-திபிதை.

என்னதான்செய்வேனையோ சிறுவர்கள்மானத்தாலே
சின்னபின்னங்களாகச் சிதைக்கிறாரிவர்கள்முன்னே
சென்னியிற்பிறைமுடித்த சிவனுமேநிற்கமாட்டார்
மன்னியவயோத்திராமர் மகிமையோவரிகிலேனே.

வசனம்.

ஹரிகரி இந்தச்சிறுபிள்ளைகள் சற்றாகிலும்பயப்படாதவர்களோடே என்னமாய் சண்டைசெய்வேன் ராகவா.

தரு-இ-ம்-புன்னாகவராளி-மிசிரதாளம்

லட்சுமணர் சொல்லல்.

புரவியைநானிப்போவிடுவேனோ உன்னுடன்
போர்செய்யநான்பயப்படுவேனோ

அழிவையோயெங்கள் தன் யானைசேனையெல்லாந்
  திறமையாய்ப்பேசுராய் கிதைக்கிறேன்பாரடா (புர)
மெத்தமெத்தபேசி விருதுசெலுத்தாதே
  — நத்திவிழுகிருய் பாரடாஉன்னை
இத்தலமறியவே குத்தியெறிகிறேன்
  சித்தத்தில்வைத்து நீகூறடா
அத்துமத்தில்லாமல் அதட்டுகிருய்மெள்ள
  யெத்திக்குத்திச்சுற்றிப் பற்றிப்பிடித்திடுவேன் (புர)

குசலவர்சொல்லல்.

ஆகட்டுமுங்களை விடுவேனோநீங்கள்
  அடர்ந்துவந்தாற் பயப்படுவேனோ
வேகத்துடனிங்கே விருதுபேசிவந்தீர்
  சரசத்தினாலே சதைக்கிறேன்சேனையை (ஆகட்)
காட்டில்வந்தவுன்னை வாட்டிடாமல்நானும்
  கையிலாகாதென்று போவேனோநீ
கூட்டிவந்தசேனையைக் கொல்லாமலேயிப்போ
  கொஞ்சத்திற்சண்டையை விடுவேனோ
ஏட்டிபோட்டிபண்ணி யெதிர்த்தசூரரையெல்லாம்
  எட்டிக் கிட்டிக் கட்டி வெட்டித்துணித்திடுவேன் (ஆகட்)

லட்சுமணர் சொல்லல்.

வெட்டித்துணிப்பேனென்று வெட்டுத்திக்கழியவே
  திட்டமாய்ச்சொன்னாய்நீ பயலே-இதோ
ஒட்டிக்குதிரையைப் பட்டணமேவுன்னைக்
  கட்டிக்கொண்டுபோவேன் கையினாலே
கெட்டுப்போகவேண்டாந் துஷ்டப்பயல்களே
  கூட்டி மாட்டி ஆட்டி வாட்டுவேனயினாயும் (புரவி)

குசலவர் சொல்லல்.

உருட்டவந்தாயென்னை மிரட்டவேண்டாமுன்
  பிறட்டுகளெல்லா மறிவேண்டா:அடா
இருட்டுப்பயலேநீ வரட்டுத்தவளைபோலே
  அதட்டினாலென்ன பயமடா
முறுக்குப்பயதினால் நொறுக்கவுன்னாலாமோ
  விட்டுக்கட்டுசுட்டுக் கொட்டைப்பறப்பிடுவேன் (ஆகட்)

லட்சுமணர்குசலவருக்குச்சொல் திபிதை.

எதடாசிறுபிள்ளாய்நீ மிக்கவுனக்கடினஞ்சொன்னாய்
சூதடாசெய்தேயம்பால துள்ளவேவிழவடித்தாய்
வாதடாசெய்யவேணடாம் வண்மையாய்நாகம்விட்டுப்
போதடாபோகுமுன்னே புனிதனையோடிப்போடா

வசனம்.

அதோவாரும்பிள்ளாய் எங்கள்குதிரையைப் பிடித்துக்கட்டிஅத ன்பின்வந்த சேனைகளையெல்லாங்கொன்றவனீயா நல்லதகுதிரையை விட்டுக் குறியாய்வோடிப்போனலாயிற்று இல்லாவிட்டால் அனியா யமாய் மடிந்துபோவாய் பாரும்பிள்ளாய்

லவன் லட்சுமணருக்குச்சொல் திபிதை.

புற்றினியீசல்கூடிப் பெரும்போக்குப்புறப்பட்டாற்போல்
இத்தனைசேனையோடு மேதடாயிங்குவந்து
சற்றுமஞ்சாமலென்முன் சாமர்த்தியம்பேசித்தோற்ற
க்ஷத்திரியநீயோயானும் சண்டையில்வென்றிடாயே.

வசனம்.

அடாவாடாராஜனே புற்றிலேயீசலானது பெரும்போக்குவந் தாற்போல் சேனைகளைக்கூட்டிக்கொண்டுதோற்றும் சாமார்த்தியம்பே சுகிறாய் நல்ல க்ஷத்திரியனானால் என்முன்னே நில்லடா பார்ப்போம்,

லட்சுமணருக்கும்-குசலவர்க்கும்-தர்க்கம்-இ-ம்.

புன்னாகவராளி-அடதாளம்.

லட்சுமணர் சொல்லல்
சண்டைசெய்யவுன்னா லாகுமோசிறுபிள்ளாய்
தனுவெடுக்கவகையுண்டோ

குசலவர் சொல்லல்
வகையென்றுசொல்வது மலைபொருந்தியபின்பு
வல்லமைகாணுவாய் ராஜனே

லட்சுமணர் சொல்லல்
வல்லமைபேசியே வில்லைநீயெடுக்கிறாய்
வாணுலழிக்கப்போறேன்பாலா

குசலவர் சொல்லல்
வாணுலழிப்பேனென்று வலியவில்கொடுக்கிறாய்
வரவிடுத்தேனஸ்திரம்பாராய் ராஜனே

லட்சுமணர் சொல்லல்
விடுத்திட்டனஸ்திரந் தடுத்ததுமேசிலைபத்தா
யெடுத்தேதொடுக்கிறேன்பாரும்பாலா

குசலவர் சொல்லல்
தொடுக்கிறேன்பாரென்று துடிக்கிறாய் ராஜனே
மடித்திட்டபாணமிதோபாராய் ராஜனே

லட்சுமணர் சொல்லல்
மடித்திடும்வலுமைகள் எடுத்துநீபேசுறாய்
முடிக்கினேன்மோகன அஸ்திரம்பாராய்

குசலவர் சொல்லல்
முடிக்கியோராஜனே மடித்திடமூர்ச்சையாய்
தொடுத்தவன்குசலவனபாராய் ராஜனே

லவன்குசலவனுக்குச்சொல் திபிதை.

விட்டதோர்பாணந்தன்னை விழுந்திடவறுத்தேன்பாராய்
பொட்டெனவில்லினுரி பூமியிற்பொடியதாகத்
திட்டெனவிழவறுத்தேன் சிருடன்சனங்களெல்லாம்
பட்டதோர்மன்னன்வீழ்ந்தான் பார்த்திடாயணுமிப்போ.

வசனம்.

அகோவாரும் அண்ணுவே அதிவீரபராக்கிரமத்துடனே வில்லை வளைத்து நாணியேற்றிப் பாணந்தொடுத்தான் தொடுத்தபாணத்தைத் தடுத்து பாணம்விட்டு அறுத்தேன் அவன்படுத்தான்பாரும் அண்ணுவே.

சேனைகள்-பிரலாபித்து வருகிற-தரு-இ- ம்-காம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

சேவகம்வேண்டாமடா - அண்ணமாரே-சேவகம்வேண்டாமடா

அநுபல்லவி,

சேவகம்வேண்டாமடா சிறுபிள்ளையவன்மெத்த
சாவுக்குத்துணிந்தல்லோ சதைக்கிறான்சேனையைச் (சே)

சரணங்கள்.

கூவாதேவாடாநீ கொப்பெனவென்பின்னே
தீவரமாயோடி செடியிற்பதுங்குவோம் (சேவ)

ஆவுமேய்த்துண்டாலும் அடவாய்த்திரியலாம்
சாவுகளில்லாமல் தனியேபிழைக்கலாம் (சேவ)

வல்லாளகண்டனை வாளாலேவெட்டுறான்
யெல்லாரையுங்கொல்கிறானிந்தசிறுபிள்ளை (சேவ)

சேனாதிபதி-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

ஓடியேநாங்கள்சென்று ஓயாமற்சண்டைசெய்தோம்
நாடியேசிறுவரானோர் நம்மிடபடையையெல்லாம்
கூடியேகொன்றுபின்பு கோலலக்ஷமணருஞ்சோர்ந்து
வாடியேவிழுந்தார்வாச மலரடிசரணஞ்சுவாமி.

வசனம்.

அகோவாருஞ்சுவாமி ரகுநாயகரே நம்முடைய சேனங்களெல்லாம் அந்தசிறுவர்கையினால் மடிந்தார்கள் அதில் லட்சுமணரும்மூர்ச்சையானார்சுவாமி.

பொதுதிபிதை.

ஏங்கியேதரையில்வீழ்ந்து யிளையவர்சேதிகேட்டு
தாங்கியேமனந்தளர்ந்து சதிர்ப்பரதனையும்பார்த்து
பாங்குள்ளசிந்தையின்றி பண்ணப்போம்யாகத்தாலே
தீங்குவந்ததென்று சிந்தையிற்றுயரமானார்.

வசனம்.

அகோதெப்படியென்றால் லட்சுமணர் மூர்ச்சையானசேதிகேட்டு ஸ்ரீராமர் துயரப்படுகிறவிதங்காண்க.

ஸ்ரீராமர்-பிரலாபக்கண்ணிகள்- இ-ம்-எதுகுலகாம்போதி திரிபுடைதாளம்.

அதிகாயனிந்திரசித்து அரக்கர்முதற்சேனையெல்லாம்
மதியாமல்வின்றுவெட்டிவலியதோர்தம்புநீயே

சதிரானவீரியத்தைத் தளர்த்துநீமறந்தாயோடா
எதிரானபேருமில்லை என்றல்லவோநானிருந்தேன்
பரதரேசேதிகேளும் பாலருந்ரூபம்நாளும்
திறமுள்ளசீதைதன்னைச் சினந்துநாம்வனத்தில்விட்டோம்
இருவரையுந்தேறிலேற்றி யின்னகர்கொண்டுவந்தால்
தெரியுமோவவர்கள்தம்மைச் சேதியுங்கேழ்க்கலாமே
என்னசெய்வேன்பரதரே யிளையவனும்விழுந்திட்டானும்

பரதர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.

போனவர்தம்மைநோக்கிப் புலம்பவும்நீதியுண்டோ
கானகமெரித்திடாமல் கண்டதுபோலிருப்பார்
வானவரெதிருமில்லை வண்மைசேர்தம்பிமார்க்கு
யேனையானொந்துசொன்னீ ரெந்தனையனுப்புவீரே.

வசனம்.

அகோவாருஞ்சுவாமி ரகுநாயகரே தம்பியையத்தத்திற்கு அனு ப்பிவிட்டுப் புலம்பலாமோ அதுநல்லதல்ல அவர்களேது மூர்ச்சை யாகிறது அவர்களுக்குத் தேவர்களுமீடல்ல ஆனாலும் என்னமாயிற்று என்னையனுப்பிவித்தால் நான்போய்செயித்துவருகிறேன் அண்ணாவே

ஸ்ரீராமர்-பரதருக்குச்சொல்- திபிதை.

பரதரேகேளாய்நாமும் பண்ணப்போமஸ்வயாகம்
குறைவறமுடியவேணுங் கொப்பெனப்படையைக்கூட்டி
இரதங்கள்துரகமியானை யித்துடனேடியிப்போ
திறமுள்ளதம்பியோடுஞ் சிறுவரையழைத்துவாராய்.

வசனம்.

அகோவாருந்தம்பி பரதா நாம்செய்யப்போகிற அஸ்வயாகங்கு றைவறாமல் முடிக்கவேம் ஆகையால் சேனைகள் யானைரதங்களைக்கூ ட்டிக்கொண்டுபோய் தம்பிமாரும் குதிரையும்சேனைகளையும் அந்தச் சிறுவர்களையும் கூட்டிக்கொண்டு வாரும்பரதா (பரதர்-வ-ம்-) அப்ப டியே சென்றுவருகிறேன் அண்ணாவே.

பொது திபிதை.

தேருடன்யானைசேனை தீரனுமனுமாரோடுங்
காரணமானராஜர் கருத்துள்ளஜாம்புவந்தன்
வீரியஅங்கதனுங்கூட வேணதோரிராஜர்சூழ
பாரிபதேரிலேறிப் பரதருந்தோணினாரே

வசனம்.

அகோதெப்படியென்றால் ஸ்ரீராமரிடத்தில் பரதர்செலவுவாங்கி க்கொண்டு ரணக்களம் வருகிறவிதங்காண்க.

பரதர்வருகிற-கண்ணிகள்-இ-ம-எ துகுலகாம்போதி-திரிபுடைதாளம்

பரதரும்அனுமாரும பாங்குடையசாம்புவனும்
வெற்றியுள்ளராஜர்களு மற்றுமுள்ளசேனைகளும்

வீரமுள்ளரணகளத்தை வேகமுடன்தேடிவாரார்
ராமபாணங்கையிலெடுத்து தாமிஷங்களில்லாமற்றான்
கோபமாகிப்பரதரும் கொக்கரித்துநாணிபூட்டி
அண்டப்புவனமெல்லாம் அலறிடவேதேர்களோடே
தெண்டிரைதான்படைத்த தேவர்கள்தாம்பார்க்க
பண்டியேரணக்களத்தில் வாகுடன்பரதர்வாரார்
வாகுடனேபரதரும் வடிவுடையசேனைகளும்
சேவகர்புடைசூழ தேரிலேறிபரதர்வாரார்
வெற்றியுள்ளயானைசேனை வேணபரிதன்னுடனே
சித்திரரதத்திலேறி பரதர்வந்துதோணினரே

பொதுத்விபதை

பட்டதோர்தம்பிமாரைப் பரதிருமந்திரத்தால்
திட்டெனவெழுப்பிக்கொண்டு சீருடன்கவசமாட்டி
மட்டிலாரணக்களத்தை வகையுடன்வந்துபார்த்து
சட்டமாய்மனதிற்கோபந் தான்கொண்டுகூறுவாரே.

பொதுவசனம்.

அகோதெப்படியென்றால் பரதரானவர் போர்க்களம்வந்துபார்த்து மந்திரத்தால் தம்பிமார்களையும் மற்றவர்களையும் எழுப்பிக்கொண்டு பரதர்சொல்லுகிற விதங்காண்க.

பரதர்-குசலவருக்குச்சொல்-த்விபதை

உங்களைப்பார்த்தாற்சிறுவ ருகளமையாயிருக்குதிப்போ
இங்குள்ளபலனுவைக்கொன்று யெதிரில்லாச்சூரரானீர்
சங்கையிலென்கணைக்குச் சற்றுமேநிற்கமாட்டீர்
திங்கள்சேர்முடியாரன்றிச் செகந்தனிலொருவருண்டோ

(வ-ம்) அகோவாருங்கள் தம்பிமார்களே உங்களைப்பார்த்தால்சிறுவராககாணுகிறது எங்களுடைய சேனையெல்லாம் கொன்றுஎதிரில்லையென்றிருக்கிறீர்கள் யென்கைபாணந்தொடுத்தால் நீங்கள் நிற்கமாட்டீர்கள் என்விருதாவில் மடிந்துபோகிறீர்கள் குதிரையைவிட்டுவிடுங்கள் தம்பிமார்களே.

லவன்பரதருக்குச்சொல்-த்விபதை.

சிறியதோர்நெருப்புமல்லோ ஜெகமெலாம்தகனஞ்செய்யும்
பறிவுடனைந்தனோடு பராக்கிரமம்பேசவேண்டாம்
கறுவியேவந்தசேனை களைச்கொல்வேன்தப்பாமற்றான்
குறியதாயுயிர்பிழைத்துக் கொட்டெனவோடிப்போவாய்,

வசனம்.

அகோவாம்ராஜாவே சிறியவனென்று மனதிலெண்ணவேண்டாம் சிறுநெருப்பானது பெரியவூரைக் கொளுத்துவதுபோல் உங்களைப் பஸ்மீகரப்படுத்திப்போடுவேன் ராஜாவே.

பாதருக்கும்-குசலவருக்கும்-கண்ணிகள்
இ-ம்-மோகனம்-ஆடிதாளம்.

பாதர் சொல்லல்	வாரீர்சிறுவரே வல்லமைபேசுரீர் தேரீரெந்தன்கைக் கணைபல்லபாரீர்
குசலவர் சொல்லல்	இணையல்லபாரொன்று ஏனனுசெய்கிறாய் கணையொன்றவிடுக்குமேல் கலங்கவேசிராய்
பாதர் சொல்லல்	கலங்கவேசேனைதனைக் கண்டித்தபேருந் துலங்குமஸ்திரமொன்று தொடுத்தனன்பாராய்
குசலவர் சொல்லல்	கொடுத்தஅஸ்திரந்தன்னை தூள்படச்சாடியே தாய்யகணைகளமிகத் தொடுத்தனம்பாராய்

பொது-திபதை.

குன்றெனுந்தேரினோடே, தொஞ்சரங்தொடுத்தபோதில்
நின்றிடுஞ்சேனையெல்லாம் நெருங்கியேவிழுந்ததப்போ
வென்றியேபரதர்மீதில் வெகுசரந்தொடுத்தபோதில்
கன்றியேபாதர்தாமுங் கலங்கியேமூர்ச்சையானார்.

வசனம்.

ஆகோதெப்படியென்றால் ஒருவர்க்கொருவர் யுத்தம்பண்ணிபா தர்சேனை யனைத்தும்மடிந்தது அந்தரணக்களத்தில் பாதருமூர்ச்சை யானார் அதில்தப்பிபிழைத்தபேர்கள்அயோத்தியைநோக்கிப் போகிற விதங்காண்க.

சேனைகள்பிரலாபித்து-அயோத்திக்குச்செல்கிற-த-ரு
இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

இனியென்னசேவகந்தான்-சிறுவரோடே
இனியென்னசேவகந்தான்]

அநுபல்லவி.

இனியென்னசேவக மிந்தச்சிறுவர்கள
சனியனபோலரசரைச் சாடுரார்மடியவே (இனி)

சரணங்கள்.

அனியாயமாகவே அனேகம்படைகளை
தனியாகக்கொன்றதைச் சாற்றிடலாகுமோ (இனி)
இக்கிருந்தாலவர்கள் இனிவிடப்போறதில்லை
போக்கயாயோடிப் பிழைப்பதேநன்மைகாண் (இனி)
தேடுறார்சிறுவர்கள் சிலைபிலம்புதொடுத்து
ஓடிப்போய்ராமருக் குரைப்பதேநன்மைகாண் (இனி)

சேனாதிபதி-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை
மன்னவர்சேனையெல்லாம் மடிந்ததுகளத்திலிட்போ
முன்னமேயெதிர்த்துநின்றோர் மூர்ச்சையாய்விழுந்தாரையா
இக்கிலந்தனில்நமக்கு யிவர்களேயெதிரியானோர்
சின்னவரென்றன்னோரைத் தேவரீர்நினைக்கவேண்டாம்

(வ-ம்) அகோகேளுஞ்சுவாமி ராமபத்திரரே நம்முடைய சேனைக ளெல்லாம் ரணக்களத்தில் மடிந்துபோய்விட்டது அதில்பாதருமூர்ச் சையானோர் இனிமேலவர்களே நமக்கெதிரியானோர்கள் அவர்களைச்செயி க்கக்கூடாது சுவாமி.

ஸ்ரீராமர் விசனப்பட்டுச்சொல் திபிதை.
இந்தமாமொழிகள்கேட்க யென்னுயிர் துடிக்குதையோ
பந்தமாமுயிரதான பரதர்லட்சுமணரோடு
அந்தமாஞ்சத்துருக்க ரானவர்மூர்ச்சையானால்
எந்தனலஸ்வயாக மெவ்வாறுமுடியுந்தானே.

வசனம்.
அப்பா பரதா லட்சுமணசத்துருக்கா நீங்கள்மூவரு மூர்ச்சை யானால் இனிநானெப்படியிருப்பேன் அஸ்வயாகமும் எவ்வாறுநிறை வேறும் தம்பிமார்களே.

ஸ்ரீராமர்சுக்ரீபருடன் பிறலாபிக்கிற-தரு-இ-ம்-
துசாவந்தி ஆதிதாளம்.
பல்லவி.
இனியென்னசெய்வேன் நம்பிசுக்ரீபனே
இனியென்னசெய்வேனையோ
அநுபல்லவி.
தனியேயிருந்தநாம் தரணியாளலாமோ
அனியாயமாய்த்தம்பி அடவியிற்கொடுத்தேனே (இனி)
சரணங்கள்
ஆனைசேனையாவும் அடங்கலுந்தோற்றேமே
நானேயரசாள நாட்டிற்றரிப்பேனோ (இனி)

தம்பிகளைக்கொடுத்து தனித்துநானிருப்பேனோ
அம்புவியறியவே அனுத்துமடித்துக்கொள்வேன் (இனி)

அந்தச்சிறுவர்கையி லன்னோரைக்கொடுத்துநான்
சிந்தைகலங்கித் தியங்கித்தவிக்கிறேனே (இனி)

ஸ்ரீராமர்-சுக்ரீபனுக்குச்சொல்-திபிதை.
காமினிபோகவேணும் நலமுள்ளதம்பிமார்கள்
பூமியில்விழுந்திட்டாராம் பொல்லாதபசகளாலே
தாமிஷப்படாதுதேரைச் சஞ்சியிலழைத்திப்போது
க்ஷேமமாய்பயணபேரி சீக்கிரமுழக்கிவைப்பாய்.

வசனம்.

அகோவாருஞ் சுக்கிரீபா என்னுடையதம்பிமார்கள் அந்தப் பசகளாமேலே பூமியில்லிருந்தார்களாம் நாம்போகவேண்டும் கார் மேகமென்னப்பட்ட தேஜைகொண்டுவா நம்முடையசேனைகளு க்குத்தெரியும்படியாய்ப் பயணபேரி முழக்கச்சொல்லும்பின்னா ய் சுக்கிரீபா.(சுக்-வ-ம்) அப்படியேசெய்துவைக்கிறேன்சுவாமி.

ஸ்ரீராமர்-ரணக்களம்வருகிற-கவ்வணிகள்-இ-ம்
எதுகுலகாம்போதி-சாபுதாளம்.

பூமிபாரமெக்கும் பொடிபடரகுநாதர்
நாமிஷமில்லாமலே தரணியில்தேஜைபோட்டி
பாதகவனத்திற்சென்று பாரியதம்பிமார்கள்
மோதமாமூர்ச்சைதன்னைச் சுருக்கினிற்தீர்க்கப்போனார்
தானவனாச்செயித்திடும் தன்மைபோல்ரகுராமர்
வானவர்கள்போற்றிசெய்யவனத்திற்குப்போனார்பாரீர்
ஆதியாஞ்சோதியான அயோத்தியாளும்ரகுராமர்
நீதியானதேரிலேறி நெளிந்திடபூமிதானும்
வாகெனுமனுமார்சேனை வந்துமுன்றோணினாரோ

ஸ்ரீராமர்சொல்-திபதை.

பாதலட்சுமணனோதம்பி பரக்குள்ளசத்துருக்கா
அரனிடவலைகையால்வந்த அனுமந்தாசாம்புவந்தா
உறமுள்ளவரக்கர்மாய்கை யொடுங்கிடமாய்த்துநீங்கள்
சிறுவர்கைப்பாணத்தாலே ஜெகந்தனில்மூர்ச்சையானீர்.

வசனம்.

அப்பா பரதாலட்சுமணசத்துருக்கா அனுமந்தா ஜாம்புவந் தாவெகுவீரசூரபராக்கிரமப்பொருந்திய ராவணன் இந்திரஜித்து அவர்களுடையசேனையெல்லாம் ஒருநிமிஷத்திற்குள் ஜெயித்தீர்க ளே அப்போர்க்கொத்தபலன் எங்கேபோய்விட்டது இனிநான்பூ மியிலிருக்கமாட்டேன் தம்பிமார்களே.

சேனாதிபதி ஸ்ரீராமருக்குச்சொல்-திபதை.

தரணிவாழ்ராஜருக்குள் சாகசமிகவுமுள்ள ;
இரணியகுலத்தோரான ராட்சதமாய்கைதானோ
அரனிடஇருமையபுண் அறிகிலோமவர்கட்குற்ற
சுருபமுந்தேவரீர் லக்குறைதடையொன்றில்லை

வசனம்.

அகோவாருஞ்சுவாமி ரகுநாயகரே இந்தப்பூமியிலிருக்கிற ரா ஜாக்கள் இவர்களுக்கு நிகராய்ச் சொல்லக்கூடாது ஆனாலும் இர ணியகுலமோ ராட்சதமாய்கையோ இவன்இருமையுண்டோ அறி

யமாட்டோம் அவர்களுடைய சுரூபம் தேவரீருடைய சுரூபத்திற்குச் சரிப்பாயிருக்கின்றது சுவாமி.

பொதுதிபிதை.

சுடுருசுக்ரீபர்தானும் பெருப்வெள்ளம்சேனையோடு
கூடவேகுஞ்சரங்கள் குதிரைகள்வெகுவாய்சூழ
நாடியேபோர்க்களத்தில் நடந்தனருயித்தியமாக
நீடியேபாலர்தாமும் நிபுணராயெதிர்வந்தாரே

ஸ்ரீராமர்-குசலவருக்குச்சொல்-திபிதை.

சிலையுடன்கணைகைக்கொண்ட சிறுவரேகேளீருங்கள்
குலமென்னதந்தைதாயர் குறிப்புடனுங்கட்குத்தான்
இலகியபேர்தானென்ன யிவையெலாமெந்தனுக்கு
நலமுடன்விபரமாக நவில்விரிப்போதுதானே,

(வ-ம்) அகோவாருங்கள் தம்பிமார்களே உங்கள் குலமென்னதாய்தந்தை யார் உங்கள்பேரென்ன எனக்குத்தெரியச் சொல்லுங்கள்சிறுவர்களே. (குசலவர்கள்ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை.)

இப்படியாகவந்தோ ரியாவருங்கேட்டுச்சண்டை
செப்பமாய்செய்துதோற்றுச் செருக்களமூர்ச்சையானார்
சொற்படிநீங்கள்சும்மாய் துரிதமாய்போடிப்போவீர்
அப்படியல்லவென்று லமர்செய்வோம்வருகுவீரோ,

வ-ம்-அகோவாருப்ராஜனே உன்னைப்போல்தான்வந்தராஜாக்களெல்லாம் என்னைக்கேட்டு வெகுவாய் சவுரியம்பேசி எங்கள்பாணத்தினுல் மூர்ச்சையானுர்கள் அப்படியாகாமல் நீயும் வந்தவழியைப்பார்த்துக்கொண்டு ஓடிப்போம்ராஜனே.

ஸ்ரீராமருக்கும் குசலவருக்கும்-தர்க்கம்-கண்ணிகள்

இ-ம்-சங்கராபரணம்-அட்டதாளம்.

ஸ்ரீராமர்-சொல்லல்.

ஓடிப்போகாதேநில்லு ஒரு உத்திரவாகிலுஞ்சொல்லு-அடா
உன்கையிலாகுமோமல்லு இதோர் ஓச்சியெடுக்கிறேன்வில்லு
வேடிக்கையாகவே விளையாட்டுப்பேசாதே
வீரனுனுவென்றுமே வில்லெடுபார்க்கலாம் (ஓடிப்)

குசலவர்சொல்லல்.

அதட்டிமிரட்டுறேயென்று உங்க ளா[illegible]மகளானதுமன்று
யானைமுன்னேசிங்கம்பின்னுநீ ஆச்சரி[illegible]யென்ன சொன்னு
பகைக்காட்டுநரியது சலசலப்புக்கஞ்சி
பயப்பட்டுவோடுமோ திகைப்பட்டுதோடுமோ (அதட்)

ஸ்ரீராமர்-சொல்லல்.

பிரசண்டகோதண்ட மெடுத்தேன அதிர்
சேனைமரப்ச்சாத்தொடு[illegible] இந்த

புவியாகாயத்தையும்விடுத்தேன் உன்னைப்
போகவொட்டாமலேதடுத்தேன்
விபரீதமாய்ச்சரந்தொடுத்தேன் இனிமேல்
வில்லைப்போட்டுவிட்டுச்சொல்லாமலேயோடிப்போ (ஓடி)

குசலவர்-சொல்லல்.

சிறுபிள்ளையென்றுநீபார்த்தாய் நாங்கள்
சினத்தாலுன்னுயிர் தானவார்த்தாய்-எங்கள்
சேவகம்நீயெங்கேபார்த்தாய் உன்னைச்
/ சிதைக்கிறேன்பாணங்கொண்டெய்தாய்
மரிபடாதப்ாணம்வருகுதிதோபாரு
மன்னனேஉன்னுயிர்வதைக்குமுன்னேடிப்போ (அதட்)

ஸ்ரீராமர்-சொல்லல்.

வருணாஸ்திரமிதோபூட்டினேன் பின்பு
வாய்வாஸ்திரமிதோமாட்டி[illegible]னன்-இதோ
பிரமாஸ்திரமொன்றுநீட்டினேன் உன்மேற்
பெரியதாகியமந்திரம்நாட்டினேன்
என்னுடைய அஸ்திரமேகமாய்வருகுது
சொன்னாலுங்கேட்கிலைதடித்திதோவிழப்போறாய் (ஓடிப்)

குசலவர்-சொல்லல்.

விடுத்த அஸ்திரமெல்லாந்தடுத்தேன் வந்த
வீரசூரர்தன்னைமடித்தேன்
தொடுத்தபாணம்அற அடித்தேன் இப்போ
சோர்ந்துவிழராஜனைமுடித்தேன்
அபரிமிதமாகவே அலைகொண்டசேனையைக்
காற்றிலிலவம்பஞ்சாய்த் தூற்றிவிட்டேன்கேளீர், (அதட்)

பொது-திபதை.

விளங்கியகுசலராஜன் வீறுடன்கொக்கரித்து
தெளிந்தவரிரண்டுபேருஞ் சேனையைப்போற்றிசெய்து
வளர்ந்ததேர்சேனையெல்லா மாண்டபின்மனதுவிதி
கிளர்ந்தெழுவனத்தைநோக்கிக் கிட்டியேபார்த்திருந்தார்.

லவன்சொல்-கண்ணி[illegible]-எதுகுலகாம்போதி ஆதிதாளம்.

நல்லதுகண்டாயன்[illegible]ம்பிடபாணம்பூட்டி
செவ்வியேஉல[illegible]லாந்[illegible]ந்தேலுஞ்சுற்றிவந்து
வல்லமை[illegible]பாச[illegible]ம்மை வகையறச்சுற்றிக்கொண்டு
எல்லையில்ம[illegible]தரிமாண்டார் எத்திசைவண்மைபாராய்
தப்பி[illegible]ந்தோர்போகத் தைரியமானபேர்கள்
மெத்த[illegible]வசூழ்ச்சையாகி மெலிவுடன்கிடப்பாரன்று
சாடவேபாணத்தாலே தயங்கியேவிழுந்திட்டாரே

பொது-திபிதை.

பட்டதோர்சேனையெல்லாம் பரிவுடனின்றுபார்த்து
இட்டதோர்குண்டலங்க ளியம்பணியாடையெல்லாம்
திட்டெனத்தாப்பரித்துச் சீதைக்குக்காட்டவேண்டி
கட்டியேதேரில்வைத்துக் கருத்துடனிருந்திட்டார்கள்.

லவன்-குசலனுக்குச்சொல்-கண்ணிகள்-இ-ம்-நவரோஸ்மிசாதாளம்

பாரினிலரசர்கள் பரிதனைக்காணமே
படவெண்ணிமடித்தார்கள்பாரும் அண்ணா
சிருடனவரவர் தேசத்திலிருக்காமல்
சிந்தைமயக்கினார்பாரும் அண்ணா
ஆராகிலுமின்னம் அசகாயம்பட்டபேர்
அமர்த்திங்கிருப்பார்கள்பாரும் அண்ணா
தோராகப்பே...ம்வாய்...தெருக்கிருக்குஞ்சேனை
பூராயமாய்வெள்ளப்பாரும் அண்ணா
ஏதத்திற்குப்புரவி நலமுடன்கட்டமற்ற
ஒருபுரவியைதன்றாய்ப்பாரும் அண்ணா
இத்தலந்தன்னிலே செத்தாப்போலிருக்கும்
பத்தியிழுக்குப்போவோம்பாரும் அண்ணா
குத்துயிராயிருந்தாலும் குத்துப்பட்டிருந்தாலும்
அத்தையாகிலுமொன்றுபாரும் அண்ணா

லவன்குசலனுக்குச்சொல்-திபிதை.

இத்தனை தூரம்வந்தோ மேத்ததோர்பரியைக்காணேம்
சுற்றியேபார்த்துவந்தோம் துய்யனேயொன்றுங்காணேம்
குத்துயிரிருந்தாலுந்தான் கொண்டுநாம்போவோமென்றால்
இத்திசைதன்னிற்காணே மிருந்தவர்முழித்தல்பாரீர்,

(வ-ம்) அகோவாரும்அண்ணாவே இத்தனை தூரம்பார்த்துவந்தோம் எங்குப்ஒருகுதிரையாவது காணேம் காலாள்களிருந்தாலும் பிடித்துக்கொண்டு போகலாமென்றால் அதுவுமில்லை இதோபார்த்திரா அண்ணா திருட்டுமுழி முழித்துக்கொண்டுதலையெடுத்துமறைக்கிறார்கள் இ...ர்களையாவது பிடி...க்கொண்டுசீக்கிரமாய்ப்போவோம் வாரும்அண்ணாவே.

பொது திபி...

இ...முடனிரண்டுபேரும் ரணக்களந்தன்னிறப...க்க
அனும...ந்தன்காப்புவானும் அடிக்கடிமூச்செறிந்து
மனதினிற்கபடமாகி மாண்டவர்போற்கிடந்த
தனதாய்க்குசலவர்களானோர் சதிருடன்பிடித்துக்கொ...டார்.

(பொது-வ-ம்) அகோதெப்படியென்றால் அனுமானையும்சாம்புவந்தனையும்பிடித்துக்கொண்டுகுசலவர்கள் போகிறவிதங்க ாண

லவன் குசலவனுக்குச்சொல்லிக்கொண்டு ஆசிரமம்போகிற
தரு-இ-ம்-கல்யாணி-ரூபகதாளம். (பல்லவி,
வாரும்வாருமண்ணா ஆசிரமம்போவோம் வாரும் - வாருமண்ணா
அநுபல்லவி.
ஆருமெதிரிலை அடவிவிட்டோமூருஞ்
சீருடன்முன்னை சேருவோமேயிப்போ (வாரும்)
சரணங்கள்,
வந்துவெகுநேரமாச்சுதே நாமிங்கே
சிந்தைகலங்கித் திகைக்கிருளோதாயும் (வாரும்)
இந்தக்காடியும் அந்தக்குரங்கையும்
முந்திவிட்டோமாகில் சந்தோஷப்படுவாளோ (வாரும்)
இந்தப்பணிகளெல்லா மெடுத்துக்கொ... ரோமும்
சிந்தைமகிழவே சீதைக்... னவைப்போம் (வாரும்)
குசலவர்கள்-சீதைக்குச்சொல்-திபதை.
அன்னையேயுந்தனதிவ்ய அடியிணைகமலம்போற்றி
மன்னவரெங்கள்வில்லால் வதைத்துமேகீர்த்திபெற்று
பொன்மணிபாடையெல்லாம் பொருந்தவேயெடுத்துக்கொண்டு
உன்னியகாடிமந்தி யுபாயமாய்ப்பிடித்துவந்தோம்
(வ-ம்) அகோசேளுந்தாயே எங்கள்மேரில் சண்டைக்குவந்தே திர்த்தராஜர்களைவென்று அவர்களுடைய கிரீடங்கள் மதாணிப் பதக்கம் ஆடையாபரணங்களெல்லாம் நாங்கள்விளையாடுகிறதற்கா டுத்துக்கொண்டு இந்தக்காடியும் குரங்கையும் பிடித்துக்கொண்டு வந்தோமம்மா.
சீதைசொல்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-மிசரதாளம்
ஆ ஆ அனு... மீ தன்ன குறை
ஐயையோ அனுமானே
பாரினிலங்கைக்குப்பெருங்கடல்தாண்டிய
பலனையெங்கேவிட்டுப் பாலர்க்கடங்கினாய் (ஆ ஆ அனு)
அனுமார்சொல்லல்
அன்னையேசொல்லுகிறேன் ஸ்ரீராமர்
அஸ்வயாகஞ்செய்யவே...
மன்னராமர்புரவியை வையகஞ்சூழவிட்டா...
அந்தப்புரவிகட்டி சிறுபலர் அரசனாமடித்தாரம்மா (அ...னே)
சீதைசொல்லல்
சாமியும் ...மாரோ பரதருஞ்
சமர்செய்யமுனைந்தாரோ
பூமிபுகழ்கீர்த்திபெற்றலக்ஷ்மணரும்
போர்செய்யவந்தாரோ (ஆ ஆ அனு)

அனுமார்சொல்லல்.

அவரும்வந்தாரம்மா சிறியவர்மேல்
ஆயுதமுந்தாரம்மா
வந்தவர்தங்களையே-இந்தப்பாலர்
வதைத்துமேமூர்ச்சைசெய்தார் (அன்னை)

சீதைசொல்லல்

மைந்தனுமாரோ-ஸ்ரீராமர்
தந்தையென்றுரைக்கொணுமோ
விஜயலக்ஷ்மணர்பரதர் சிறிய
தந்தையென்றுரைக்கொணுமோ (ஆ ஆ அனு)

அனுமார்சொல்லல்

தந்தையென்றறியேனம்மா-தாயேசீதாயுன்
மைந்தரென்றறியே[illegible]
இந்தசேதியறிந்தால் கட்டுபட[illegible]
இந்தவிதியேனம்மா (அன்னை)

சீதை-சொல்லல்

விதியென்றுசொல்வீரையா-உப்பிட
வீரமெங்கேவொளித்தீர்
வீரியசவுரியத்தால் சிறியோரை
வெல்லவகையில்லையோ (ஆ ஆ அனு)

அனுமார்-சொல்லல்

வெல்லவகையேனம்மா இவர்கோலம்
சொல்லமுடியாதம்மா
சண்டைமுனையிலம்மா இவர்கள்விடும்
சரங்களெமந்தானம்மா

சீதை-சொல்லல்

சாமிதானெங்கே உடன்பிறந்த
தம்பிமார்மூவரெங்கேங்கள்
மாமிமாரெங்கே குலகுரு-வசிஷ்டனெங்கே
என்னகாரணமையா கட்டுப்பட்டது எதுகாரணமையா (ஆ ஆ அனு

அனுமார்-சீதைக்குச்சொல்-திபிதை.

அண்டர்கள்போற்றுமெங்க ளன்னையேசேவாய்சீதாய்
கொண்[illegible]ராமர் கொடும்பரியாகஞ்செய்ய
மண்டலம்பரியைவிட்டு வரும்போதுபிடித்துக்கட்டி
தண்டகாரணபாலர் தானைகளைமூர்ச்சைசெய்தார்

(வ-ம்) அகோ வாருந்தாயே ராமர் அஸ்வமேத யாகஞ்செய்ய ஒருபுரவியைபூமிப்பிரதக்ஷணமாகவிட்டார் அந்தப்புரவியானது ஓடி ஓடிப்போய்அது அதைஇந்தப்பிள்ளை பிடித்துக்கட்டி

லவத்திருந்தார் அக்கினைக் கேட்கவந்தசேவகனை அடித்துக்கொன்
றான் அதையறிந்து சத்துருக்கர்வர அவனையும் மூர்ச்சைசெய்தா
ன் இந்தப்பெரியபிள்ளைவந்து சத்துருக்கனையும்ராமலட்சுமணனை
யும் பரதனையும் மூர்ச்சைபாக்கி அவர்களுடைய ஆபரணக்களையெ
டுத்துக்கொண்டு யெங்களையும்பிடித்துக்கொண்டுவந்தார்களம்மா.

பொது திபதை.

சாம்புவனுமானுக்கு ஜானகிவிட்டுகொடுத்து
வேம்பெனப்பாலர்செய்த வினையெனுமக்கிரமத்தால்
விம்புள்ளராகவர்க்கு விபாகூலம்வருமேயென்றே
தீம்பினல்மதிமயங்கிச் சீதையும்கூறுவாளே.

சீதைபுலம்பல்-கன்னிகள்-இ-ம்-முகாரி-அடதாளம்.

தந்தைதனையுதைத்தயெற்றன்[illegible]ர்களே இதைத்
தாரணியோர்கேட்கக் காரண[illegible]மே பாலர்களே நானும்
இந்தப்பாவக்குறையை யெத்[illegible]பிறப்பில்தீர்ப்பேன்-பாலர்களே
எங்கையோமானபிடிக்கும்தெ[illegible]திருந்தேனே பாலர்களே-இப்போ
துங்காமலெந்தன் தலையிலிடித்தது பாலர்களே
அங்கரும்பத்தி அனலாயெரியுதே பாலர்களே-இந்த
பிள்ளையுமில்லாமற் பெருந்தவமிருந்தேனே பாலர்களே நீங்கள்
பிள்ளையிருந்து பிதாவைக்கொன்றீர்களே பாலர்களே
எள்ளளவுதானி மிருக்கமிழந்தேனே பாலர்களே-என்
வள்ளலைக்கொன்று வனுமையடைந்தீரே பாலர்களே
வில்லும்முனையினிற் கொல்லுமரசனை பாலர்களே-உங்கள்
வல்லமையி[illegible]லே வெல்லத்தகுமிந்நேரா பாலர்களே
இன்னந்தனித்து யிருக்கத்துணிவேனோ பாலர்களே-நான்
இரணமாவியைத் துறந்தணுசெய்வேனே பாலர்களே

சீதைசொல்-திபதை.

கோத்திரத்தனைமுக்கவென்று குழந்தைகள்பெற்றதற்குச்
சாத்திரவிதியைமீறித் தந்தையைக்கொல்லவந்தீர்
எத்திய தீயில்வீழ்ந்தே யென்னுயிர்தரிக்கமாட்டேன்
போற்றியமுனிவர்செய்த பிழைபொறுத்தென்னைச்செப்பீவேன்

குசலவர்-சீதைக்குச்சொல்-கண்ணிகள்-இ-ம்

எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

அல்லவேயென்னசெய்வோம் அரும்பாவியானோமம்மா
தந்தையெனவறிந்தவர்கள் தரணியிலிருக்கொணாதே

ஆவியைவிடுவோமம்மா அன்னைநீகாண்பதற்கு
மேவியநணலைமூட்டி வேகமாவிழுவோமம்மா
ஐயமொன்றறிந்தோமானா லர்ச்சித்துதொழுதிடோமோ
ராமமொன்றறிந்தோமானால் நாங்கள்விளையாடோமம்மா
அப்பனைவதைத்தபாவம் ஆர்முழுகித்தீர்த்திடுவோ-உன்
னுள்ளளவுதாவிக்கம்மா நாங்கள் காலதாகவந்தோமேதான்

குசலவர்-சீதைக்குச்சொல்-விருத்தம்;

அன்னையேயென்னசெய்வோம் ஆவியைவிடுவோமிப்போ
உன்னியதந்தைதன்னை புண்மையாய்வதைத்ததாலே
பன்னியகாசிபோயும் பாவமுந்தீராதம்மா
வன்னியிற்குதி[illegible]மெ[illegible]ள் [illegible]தாவேசிலவுநாசீர்.

வசனம்.

அகோவாருந்தாயே பிதாவைக்கொன்ற நாங்கள் காசியாத்திரைசென்றாலுந்தீராது ஆகையால் அக்கினிவளர்த்தி அதில்விழுகிறதேயல்லாமல் வேறென்னசெய்வோமம்மா.

சீதைசொல்-தரு இ-ம்-ஆதி-பீசுரதாளம்.

பல்லவி.

முனிநாதனைக்காணேனே இன்னமெங்கள்
முனிநாதனைக்காணேனே

அநுபல்லவி.

முனிநாதனைக்காணேன் முடுகிவராயின்னம்
அநியாயமோதெய்வ மலைச்சல்படுத்துதே (முனிநாத)

சரணங்கள்.

பட்டயிடத்திற்படுங் கெட்டகுடியேகெடும்
எட்டபடியுலகிற் கட்டியகதையாச்சே (முனி)
ஐயாதுநாதர் மெய்யனைக்காணேனே
தய்யாம்வால்மீகர் செய்யன்வரக்காணேனே (முனி)
மன்றுள்பாவக்குறை யென்றுசெய்தேனையோ
இன்றுசலாயிக்கிந்த யிடர்வாலாச்சதே (முனி)

நாரதர்-பாதாளலோகம்வருகிறது-பொதுவிருத்தம்.

நீச்சரைப்பாற்சீதைகானிற் றனளூம்வார்த்தையெல்லாம்
உற்றநாரதருங்கேட்டு வுளமிகமயங்கியப்போ
சித்ரபாதாளலோகஞ் சென்றுவால்மீகருக்குப்
பத்தியாயுரைப்பதாகப் பரிவுடன்வருகின்றாரே.

(பொது-வ-ம்) அதோதெப்படியென்றால் சீதையாள் புத்திரரால் நடந்தசேதியை பாதாளலோகஞ்சென்ற வால்மீகருக்கு நாரதர்சொல்ல வருகிற விதங்காண்க.

நாரதர்வருகிற-தரு-ஆ-ம்-பூரிகல்யாணி-ஆதிதாளம்-பல்லவி.

நாரதர்வந்தாரே மகாமுனி நாரதர்வந்தாரே

அநுபல்லவி.

காரணகாரியங் கண்டறிந்திடுங்
கலகத்தினில் மிகச்செறிந்திடும் (நாரதர்)

சரணங்கள்.

சடைமுடியசைந்தாட-கரக[illegible]வடமொலிபாட
இடையின்வேஷ்டியாட-பீதாம்[illegible]-விருச்சுங்கிரீடங்கள்நீட
படைமன்னர்கள் யாவரும்பணிந்திடும்
பாதம்வருந்தவே நாதகீதத்துடன் (நாரதர்)
வருணகீடத்திற்போன-அந்த-வால்மீகர்க்கினிதான
கருணைவாரிதியான-ஞானக்-காட்சியினில்மேலான
பெருமைமிகுந்த சீதையின்சேதியைப்
பிரியத்துடனே தெரிவித்திடவே (நாரதர்)

நாரதர்-வால்மீகருக்குச்சொல்-விருத்தம்.

திடங்கொள்வால்மீகரோடும் சீதையின்மைந்தர்தானும்
அடவியிற்போர்கள்செய்து அயோத்தியாளரசர்தம்மைப்
படியினில்மூர்ச்சையாக்கிப் பாலர்கள்தாய்பாற்சென்றார்
கொடியிடையழுகின்றாளக் கோலத்தையறிகிலீரோ.

வசனம்-அதோயாருமையா வால்மீகமகாரிஷியே சீதாதேவிமைந்தரிருவரும் அயோத்தியையாளப்பட்ட ஸ்ரீராமனையும் அவர்தம்பிமார்களையும் மூர்ச்சையாக்கிவிட்டார் அதுகேட்டு சீதாதேவிபுலம்புகின்றாள் நானதைச்சொல்லவந்தேன் நீர்சிக்கிரம் ஆச்சிரமம்போமையா வால்மீகமகாரிஷியே (வால்மீகர் நாரதருக்குச்சொல்-வ-ம்) அப்படியாயிதோபோகிறேன் நாரதமுனிவரே.

பொது விருத்தம்.

சீதையாள்புலம்பும்போது திருந்துநாரதருமப்போ
மேதினிவார்த்தையெல்லாம் விளம்பினார்பாதாளத்தில
காதலாய்முனிவர்கேட்டுக் கடினவேகத்திலேறிப்
போதவும்வால்மீகர்தானும் பூவனம்வருகின்றாரே.

(பொது - வசனம்) அதோதெப்படியென்றால் அந்தச்சமயத்திலே ராமலட்சுமணர்பரதசத்துருக்கர் குசலவர்களுடைய பாணத்திலே மூர்ச்சையாய்விழுந்தசேதியை நாரதரால் வால்மீகர்கேள்விப்பட்டு தம்முடைய ஆசிரமம் வருகிறவிதங்காண்க

வால்மீகர்வருகிற-தரு: இ-ம்-சங்கராபரணம்-அடதாளம் (பல்லவி)

வந்தனர்வால்மீகர் மனதில்மகிழ்வுகொண்டு

வந்தனர்வந்தனரே (அநுபல்லவி)

அந்தமாய்நாரதர் சொல்லியமொழிகேட்டு

அகத்தில்சஞ்சலங்கொண்டு (வந்தனர்)

சரணங்கள்

காடுமலைகள்விட்டு கான்யாருவழிதாண்டி

நாடுஞ்சிசையின்முன்பு (வந்தனர்)

காமக்குரோதத்தை நீக்கியருட்பழுத்த

தனிஷ்டைதனையுடைய (வந்தனர்)

பவமாம்வினைதன்னைப் பரிகாரஞ்செய்திடும்

பாக்கியசிலாக்கியரிஷி (வந்தனர்)

சீதை-வால்மீகருக்குச்சொல்-திபிதை

என்தவபேமுனிவர்கோவே யென்னி பாலகர்க்கு

தந்தையைக்கொல்வதற்கோ தனுர்கோடிவித்தைசொன்னீர்

எந்தனுக்குசந்தாலி யிருக்கவேமனதுவைத்து

சுந்தரராமர்சேதி சோகைகனுரைக்கக்கேளீர்.

சீதைசொல்-கண்ணிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி-ரூபகதாளம்.

ஐயரேநீர்சேதிகேளீர் யாகஞ்செய்யப்போனபின்பு

உய்யவேவனத்திற்பாலர் உண்மையாய்வேட்டைபோனார்

வையகம்புகழும்ராமர் வண்மையுடன்யாகஞ்செய்ய

அப்பவோர்புரவிதன்னைச் சிறுடனேபட்டங்கட்டி

மெய்யனுஞ்சத்துருக்கர் வேந்தர்கள்திரளாய்கூடி

வையகமுழுதுஞ்சுற்றி வருகையிலேதாகஞ்சீறி

வெய்யவனறியாககாட்டில் வேகமாய்குதிரைவர

பையலானவனுங்கண்டு பாக்குடனேபிடித்துக்கட்டி

செய்யவேசேவகர்கூட சேதிதன்னைக்கேழ்க்கலுற்றார்

கேட்டசொருதூதவரை மாட்டினார்சரங்களாலே

தாஷ்டியாகச்சத்துருக்கர் தனுவெடுத்துவிட்டிடவே

பூட்டியசரந்தானிந்த புரிபலவன்மூர்ச்சையானான்

நாட்டிவிலவனைக்கொண்டு நலமுடனேபோகையிலே

தீட்டயசிலைவிழிபாள் சேயிழையாளோடிவந்து

காட்டிபலவனூர்சேதி கானதிந்தருகும்போது

வேட்டைப்போனகுசலன்தேடி வில்லேந்தது

போட்டியாகவந்தெதிர்த்த புஜபலனைமூர்ச்சைசெய்தான்
சத்துருக்கலட்சுமணருந் தாவியதோர்பரதரும்
உத்தமராமபத்ரர் ஒன்றுந்தப்பிப்போகொட்டாமல்
வெற்றியாகச்சரங்கள்பூட்டி வேதையாகமூர்ச்சைசெய்தான்
நற்றியேயவர்பூஷணங்கள் ஞாயிறொளிசிரீகடங்கள்
வெற்றியாயாடையெல்லாம் விளையாடவேணுமென்று
சுற்றியேமூட்டைகள்கட்டித் துரிதமுடனவருமகயிலே
புத்தியிலுயர்ந்தவீரர் புஜபலவனுமான்றன்னை
சத்தியவான்சாம்புவனைத் தகையாற்கயிற்றுங்கட்டி
வெற்றியாகக்கொண்டுவந்தார் வேடிக்கையறிந்திலீரோ
ஐயரோநீர்செய்தகோலம் ஆவியைவிடுவேனிப்போ
மங்கிலியபிட்சையையா மாதவரேதாருமையா
ஐயரேயெழுப்புமையா அருமுனிபராசர் [illegible]ரேவ
சாமியையெழுப்புமையா தையலாள் [illegible]ழைக்கவேணும்
லட்சுமணர்பரதர்தம்பி ஞாயிறொளிசத்துருக்கர்
உத்தமரோசேனையெல்லாம் ஓதியயெழுப்புமையா
இப்பொழுதெழுப்பினாலே யென்னுயிர்தரிப்பேனையா
பாலர்கள்முகத்தைப்பார்த்து யென்பத்தாவையெழுப்புமையா
சரணஞ்சரணமையா தவத்திற்சிறந்தவரே
வால்மீகர்சீதைக்குச்சொல்-விருத்தம்
அஞ்சிடவேண்டாமம்மா அமர்க்களந்தன்னிலிப்போ
குஞ்சிடுமாமார்சேனை துரைகளையெழுப்பித்தாரேன்
மிஞ்சியமூர்ச்சையாகி விழுந்திடுமிராமர்தன்னை
அஞ்சனவிழியாளே நாமுடனுடன்பார்ப்போம்வாராய்.

(வ-ம்) அம்மா வாருமம்மா நீபயப்படவேண்டாம் ஸ்ரீராமருடைய தம்பிமாரையும் சேனைகளையும் எழுப்பித்தருகிறேன் மூர்ச்சையாயிருக்கின்ற ரகுநாயகரைப்பார்ப்போம் வாருமம்மா.

சீதைசொல்-வ-ம்-அப்படியேபோவோம் வாருமையா
பொது-விருத்தம்.
கண்டனள்சீதைதானுங் கார்முகில்ராமனென்னும்
விண்டுவையயர்ந்திப்பூமி விழுந்தவள்மூர்ச்சையாகிக்
கெண்டைசேர்விழியாள்ராமர் கீர்த்திக்குறைவாமென்று
வண்டணிகுழலாளசீதை மயங்கியேபுலம்புவாளே.

சீதை-புலம்பல்-கண்ணிகள்-ரு-ம்-காம்போதி-மிச்சாதாளம்

ஐயோநானென்செய்வேன்விபகுமுகே — ராமராமா-உங்கள்
ஆணைகளொன்கைப்பா அடவியில்விட்டீரோ — ராமராமா
கூடிவிராவண[illegible]ன குமபகர்ணனறியனை — ராமராமா-அன்று
கொன்ற[illegible]மனை[illegible]ளித்தீரோ — ராமராமா

ஆழியில்மாயனணைந்தல்வளர்ந்தாற்போல் ராமராமா-இந்தச்
சூழியகாட்டில் துலங்கவிதியேனோ ராமராமா
பாலர்களைபாணத்தாற் பட்டகளையிதோ ராமராமா-இந்தப்
பாவியைப்பார்த்தொருபால்மொழிபேசீரோ ராமராமா
வாயைத்திறந்தாலுன் வாய்முத்துச்சிந்துமோ ராமராமா-உந்தன்
மாயத்தைவிட்டு மறுவார்த்தைசொல்வீரோ ராமராமா

சீதைசொல்-கவி,

ஐயையோவென்னுயி ராகியநாதா
உய்யவேவனத்தி லுமதுபாலகரால்
மெய்சோலாந்தளர்ந்து விழுந்திரோவதனை
லையனேவுமக்கு அணைந்தலோவறியேன்.

சீதைசொல்பிரலாபக்கண்ணிகள்-இம்-எ தகுலகாம்போதிமிசுரதாளம்

முகமது[illegible]ரூப மு[illegible]ணி கண்கள்ரெண்டும்
செகந்தனிலக்ஷமணரே [illegible]ய்வதுநித்திரையோ
வனத்திற்பதினாலுவருஷம் வாராதகித்திரைகள்
மகனிடவாளினாலே மயக்கமாய்விழுந்திட்டீரோ
பத்திரமாய்ப்பேர்களெல்லாம் பார்க்கையாளுமென்று
இத்திரத்தைவிட்டுநாங்க ளேங்கும்போதில்லாவித்திரை
சுத்தமானமைந்தராலே துஞ்சுநீரோபாதரே
அன்னவேசீமையாண்டு வன்னீதம்வாராமலேதான்
சொன்னபடியிருவராகி சுகத்துடனிருந்தநீங்கள்
வர்ணமானமைந்தன்கையில் மயங்கினீரோசத்துருக்கா

சீதை-வால்மீகர்க்குச்சொல்-விருத்தம்

மாதவமுனிவரேயென் மன்னவர்முதலானோரைப்
போதுபோமுன்னேயிங்கப் புனிதரையெழுப்புமையா
சீதளமுகத்தைப்பார்த்து சேனைநாளாச்சுதிப்போ
ஆதிபேமுனியேநீரு மனுக்கிரகஞ்செய்குவீரோ.

வ-ம- அகோவாருமையா முனிநாதரே பொழுதுபோமுன்னேராம லட்சுமணர் பரதசத்துருக்கனை என்மேல் அனுக்கிரகஞ்செய்துஎழுப்பவேணுங்[illegible]ாமி

(வால்மீகர்-வசனம்) அப்படியே நல்லதம்மா சீதாய்

வால்மீகர்-சிஷருக்குச்சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய்விவேகசிந்தாமணி, அப்பா துன்மார்க்க சிந்தாமணி தென்றிசமண்டலத்தில் ஜலங்கொண்டுவாரும்பிள்ளாய்.

வால்மீகர்ஸ்ரீராமர்முதலானவர்களை எழுப்புகிற-கண்ணிகள்

இ-ப-பூபாளம மிச்ரதாளம

ஆதிமூலத்தருளானதாறகிருபை ஹரிராகுராமரே யெழுந்திரும்
ஜோதிகயிலாயர்கிருபையால் சுந்[illegible]ரதரே யெழுந்திரும்

இஷ்டமுடையதேவராருளினால் மிகுஅக்ஷயலட்சுமணு யெழுந்திரும்
சந்திரமுனிவர்களருளினால் ஆசைசத்துருக்கரோதீ யெழுந்திரும்
பத்தும்எட்டும்படைத்தலைவரோ நீங்கள்பாரியசூரரே யெழுந்திரும்
வாழ்வீர்வாழ்வீரென்றுநூமேயிந்த மண்ணுள்ளகாலமும் வாழ்வீரே
அக்ஷயமென்றும்வாழ்வீரேயிந்த மண்ணுள்ளகாலமும் வாழ்வீரே

ஸ்ரீராமர்மூர்ச்சைதெளிந்தெழுந்து வால்மீகருக்குச்சொல் திபிதை.

எங்களையெழுப்பிவிட்ட யிசைபெறுமுனிவரேகேளீர்
உங்கள்தன்மையேதெய மூணாத்திட வேணுமிப்போ
சங்கையில்லாமல்வென்ற சமர்த்துள்ளசிறுவராரோ
இங்குடன்விபரமாக வெந்தனுக்குரைசெய்வீரே.

வசனமு—அகோவாருமையா முனிநாதரே நாங்கள்மூர்ச்சையாயிரு ந்தவரை எழுப்பிவிட்டீரே நீங்களார உங்களநாமதேயமென்ன மகா வீராதிவீரரயிருக்கிற இந்தஇரண்டுபிள்ளைகளார்தெரியச் சொல்லுஞ் சுவாமி.

வால்மீகர்-ஸ்ரீராமருக்குச்சொல்-திபிதை

பலமிருந்தாகுராமா சீதைதன்னைப்
பகரரியகாட்டில்விட்டா யவள்மெலிந்து
ஜலம்பெருக அழுகையிலியானுங்கண்டு
சாதகங்கள்சொல்லவொரு தனையனின்றாள்,
தலமிருந்த தர்ப்பையிலொருவனைத்தான
சமைத்தனன் வால்மீகர்சாம்றக்கேளும்
நலமிருநதயிவர்களுக்கு மணமியற்றி
நாடுமிளவரசு பட்டங்கட்டுவாயே.

(வசனம்) அகோவாரும்பிள்ளாய் ராமபத்திரா உன்தேவியாகிய சீதையை அமோகமானகாட்டில் நீவிட்டமாத்திரத்தில் அவள்கோடு கேடென்றுபுலம்பும்போது யான்கண்டு கம்முடைய ஆசிரமத்திற்கு அழைத்துக்கொண்டுபோனேன் அவ்விடத்தில் இந்தமூத்தபிள்ளையை ப்பெற்றாள் இகோயிந்தஇளையபிள்ளையைநான் தருப்பையினாற்சிருட் டித்தேன் இந்தஇரண்டுபிள்ளைகளின் பெயரோ மூத்தவன் குசலன்இ ளையவன் லவன் என்பேர்வால்மீகர் ஆகையால்உனது தேவியானசீதை யையும் இப்பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டுபோய் அயோத்தியா புரியில இவர்களுக்குத் திருமணமுடிப்பித்து குசலனுக்கு இளவரசு பட்டங்கட்டி வாழ்ந்திரும்பிள்ளாய் ராமச்சந்திரா,

ஸ்ரீராமர்-வால்மீகருக்குச்சொல்-திபிதை.

மாதவமுனியேயுந்தன் மலரடிபோற்றிபோற்றி
காதின்மேற்கேழ்க்கக் கருதுதிற்சந்தோஷமானேன்

ஆதலால்தேவரீரும அயோத்திக்குவந்துதாங்கள்
ஓதியவாறேசெயய வுடனிருந்திடவேவேண்டும்.

வசனம்-அகோவாருஞ் சுவாமிமுனிநாதரே நடந்தவிர்த்தாந்தங்களை யெல்லாங்கேட்க அதிகசந்தோஷமானேன்தாங்கள்சொல்லியவண்ணம் சிறுவர்களுக்கு விவாகமும இளவரசுபட்டமும் நடத்துவதற்குத் தாங்களும் அயோத்திக்கி வரவேண்டியது சுவாமி.

வால்மீகர்-வசனம்-அப்படியேவருகிறேன் ராமச்சந்திரா

குசலவர் ஸ்ரீராமர்முதலோருக்குச்சொல்-திபிகை.

மறைமுறைநெறிபநிந்தமன்னவா னின்றாள்போற்றி
திறமிகும்பிதாவேயிந்தச் சிறியரைக்காப்பாய்போற்றி
அறிவிலாச்சிறியோர்செய்த அபசாரம்பொறுப்பீர்போற்றி
சிறியகன்னைதகளேயுங்கள் இவ்விபமலர்த்தாள்போற்றி.

குசலவர் [illegible]கு-ஸ்ரீராமர்[illegible]தலானோர்வாழ்த்து-திபிகை

புதியினிவிளையில்லாத பாக்கியரேநீங்கள்வாழி
சதுர்மறையுணர்ந்தயெங்கள் தவங்கடேநீங்கள்வாழி
மதியினிலுணர்ந்தநேத்ர மணிகளேநீங்கள்வாழி
அதிவிதரணைச்சிங்கார அமுதரேநீங்கள்வாழி

சீதைஸ்ரீராமருக்குச்சொல்-திபிகை

என்னுயிர்க்குயிரதான யிறைவரேநின்றாள்போற்றி
துன்னுமென்கண்ணுளாடுஞ் சோதியேநின்றாள்போற்றி
மன்னவரவணங்குகின்ற வற்புதமலர்த்தாள்போற்றி
கன்னிலையயோத்திவாழும் நான்மறைப்பொருளேபோற்றி.

ஸ்ரீராமர்-சீதைக்குச்சொல்-திபிகை.

அஞ்சுகமொழிக்கிசைந்த அமிர்தமேவாழி[illegible]ழி
ரஞ்சிதவிளக்கேயெந்த ஜைபகிவாழிவாழி
வஞ்சியராருமெச்சு மதியெனும்வதனவாழி
அஞ்சிடவேண்டாஞ்சீதா யனுதினம்வாழிவாழி

மைத்துனர்கள் சீதைக்குச்சொல்- திபிகை

பெற்றிடும்தாய்க்குமேலாய்ப் பெட்புருந்தாயேயெங்கள்
குற்றங்க[illegible]விர்ப்பாய்பானு குலமெனுவிளக்கேபோற்றி
கற்புவால்மீகர்கிருபா கடாக்ஷத்தாற்சிறுவர்தம்மைப்
பெற்றசானகியேயுந்தன் பிரசமாமலர்த்தாளபோற்றி

சீதைமைத்துனருக்குச்சொல்-திபிகை.

பேதையாள்பயின்றயிந்தப் பிள்ளைகள்செய்குற்றத்தை
ஏதொன்றுமனதில்வையா திருக்குமைத்துனரேவாழி
நீதமாயென்னையபோது நிரந்தரம்பாதுகாக்கப்
போதமாமனதிலென்னும் புனிதரேவாழிவாழி.

ஸ்ரீராமர்-தேரின்மீதேறிச்சொல்- தரு-[illegible]-கொடி-ஆதிதாளம்

பல்லவி.

போவோம்வருவீர்கள-அயோத்திக்குப்-போவோம்வருவீர்கள்

அநுபல்லவி.

திவேழுந்து திக்குந்தியான வால்மீகரே
செப்பும்தம்மாமோ இப்போதேகாய் (போவோம்)

சரணங்கள்.

அனுமானே சாம்புவனே கிலசித்தனே
அடல்கொளரணப் ராஜனே
தனதாஞ்சுவேல ராஜனே மகாப்பிரதாபங்
தங்குமக்ஷ யந்தனே
கலமிருமாருதியின் காளையெனவுதித்த
கனிவுள்ளயக்ஷயங்க அனுமானேயெல்லவரும் (போவோம்)

படிபுகழ்ராக தீரரே விஸ்வாசமிகப்
படைத்தக்கட்மய வீரரே
கெடிபெருஞ்சேனை வீரரே கரிபரிதேர்க்
கெல்லா மதிகாரரே
வடிவுள்ளவாள்சூலம் வளைதடிசக்கரங்கள்
வன்மையுடன்கைக்கொண்ட தளகர்த்தராஞ்சூரரே (போவோம்)

உத்தம சானகியே யெந்தனுடைய
உயிராகு வைதேகியே
புத்தமுத தேனே அன்னமெனவே
பொருந்தமினிய மானே
இத்தரையினிலயாரு மிணையின்றியேயுதித்த
சித்தசனைபழித்த செல்வக்குசலவரோ (போவோம்)

பொது திபிதை.

வையகத்துள்ளோர்போற்ற மாதவர்மிகவும்வாழ்த்த
துய்யவில்லயோதநிமேவிச் சுகமுடன்வந்தேர்மியாரும்
பையவேயமுதுட்கொண்டு பன்மணிகொலுவிற்சேர
ஐயனும்ராமச்சந்த்ர ரப்போதங்கூறுவாரே.

(பொது-வசனம்) அகோகெப்படியென்றால் ஸ்ரீராமருடன்சகலரு க்கொலுவில்வந்து வீற்றிருக்கையில் ரகுநாயகர்சொல்லுகிற விதங் காண்க.

ஸ்ரீராமர் சத்துருக்கருக்குச்சொல் திபிதை.

சமையத்தினுசிதஞ்சொல்லுந் தம்பிசத்துருக்காகேளாய்
அமைவுறமஸ்வமேதகம் அன்புடன்செய்வதற்கு
சமதுபட்டணங்கள்முற்றும் நலமுடனலங்கரிக்க
விமலமாய்ச்சேருவைக்கு விளம்புவாய்கிரைவிற்றுனே.

(வசனம்) அகோவாருந்தம்பி சத்துருக்கா நம் அஸ்வயாகஞ்செய்யவேணும் ஆகையால் நம்முடைய அயோத்தியாபுரி முழுதும் பச்சைப்பந்தல்களிட்டு அலங்காரஞ்செய்யும்படியாய்ச் சேர்வைக்காரனுக்குத் திட்டஞ்செய்வாய் தம்பிசத்துருக்கா (சத்துருக்கர்சொல்-வ-ம்) அப்படியேசெய்கிறேனண்ணாவே.

சத்துருக்கர்சேர்வைக்காரனுக்குச்சொல்-திபதை

காரியாகாரியங்கள் களமுடன் நிந்தியற்றுஞ்
சேருவைக்காராகேளாய சீக்கிரமாகச்சென்று
பாரியயோத்திமுற்றும் பார்ப்பவர்மகிழ்வதாகச்
சீரதாயலங்கரித்துச் சீக்கிரம்வருகுவாயே

(வ-ம்) அகோவாருஞ்சேர்வைக்காரா நம்முடைய அயோத்திமுற்றும் யாவரும்மதிசயிக்கும்படியாய்ப் பசலைச்சப்பந்தல் மகடதோரணம்வாழைகமுகு முதலானதுகள் கட்டும்படியாய்த் திட்டஞ்செய்துவாரும்பிள்ளாய்(சேர்வைக்காரன வசனம்) அப்படியே செய்கிறேன்சுவாமி.

நகரை-அலங்கரிக்கிற-கண்ணிகள்-இ-ம்-மோகனம்-அடதாளம்

பச்சைப்பந்தல்களை	சூட்டினார்—நல்ல
பாக்காய்வாழைக்கமுகு	நாட்டினார்
உச்சிதமாலைக	ளமைத்தார்—ஒளி
யுறவேகண்ணாடிகள்	சமைத்தார்
நவமணிமாலைகள்	பூட்டினார்—திவ்ய
ரஸ்தார்குளோப்வேஷ்ட்டில்	மாட்டினார்
துவசங்களபலவிதம	தூக்கினார்—மகரத்
தோரணமெங்குமுன்	டாக்கினார்
சுந்தகதம்பத்தால்	தீற்றினார்—சந்தன
கஸ்தூரியாடகோலஞ்	சாற்றினார்
பந்தியபந்தியாய்ப்படம்	பரப்பினார்—வாத்யங்
பலவாகமுழுக்கும்	கிரப்பினார்

பொதுதிபதை

தேவவாக்கியத்துடனே அஸ்வயாகஞ்
செயவசிஷ்டர்முதலோர்கள் சீராய்ச்செய்து
மூவருக்குமுன்னோருக்குந் தேவருக்கு
முயற்சிசெய்யுமஷ்டதிக்குப் பாலகர்க்கும்
யாவருக்குமினிதுடனே யவிர்ப்பாகங்க
ளயோத்திகாடாளுமன்னனளிக்கவிப்பால்
பூவிருக்குமியாவருக்குந் தெரியதாகப்
புகலுவாரமருமே மகிழுவாரே.

(பொது-வசனம்) சீதாதெப்படியென்றால் ஸ்ரீராமர் அஸ்வமேதயாகத்தைவஷிஷ்டர் வால்மீகர்முதலாகிய பெரியோர்களால் நடப்பித்துயாவருக்கும் அவிர்ப்பாகங்கொடுத்து மகிழ்வுற்றிருக்கையில் ஸ்ரீராமர்குசலராஜனுக்குத் திருக்கலியாணஞ்செய்து வைக்கிறவிதங்காண்க.

ஸ்ரீராமர்-லட்சுமணருக்குச்சொல்-திபிதை.

இஷ்டங்கொளகூமணகம் மிளவலாங்குசலனுக்கும்
சட்டங்கொளரண்யராஜன் தன்மகள்விபுதையாட்கும்
இட்டமாயுஉதயத்திற்குத் திருக்கலியாணமென்று
பட்டணமுழுதும்பேரி பாங்குடனறையச்செய்வாய்

(வ-ம்) அகோவாருந்தம்பி லட்சுமணா நமமுடைய குசலராஜனுக்கும் அரண்ணியராஜனுடைய குமாரத்தியாகிய (விபுதையம்மாளுக்கும்) நாளை சூரியஉதயத்திற்குத் திருக்கலியாண முகூர்த்தமென்று பட்டணமுழுதும் பேரிகையறையும்படி செய்வாய்தம்பி லட்சுமணா.

(லட்சுமணர்-வ-ம்) அப்படியே செய்துவைக்கிறேனண்ணவே,

லட்சுமணர்-சேனாதிபதிக்குச்சொல்-திபிதை.

நயமிகுந்தசேனாதிபதியேகேளாய் ஸ்ரீராமர்மகன்குசலராஜனுக்கும்-நயமிகுந்தஅரண்ணியமகாராஜனீன்ற நற்குணஞ்சேர்விபுதையெனும் நாயகிக்கும்-வயமிகுந்தநாளையுதயத்திற்கு மணமெனவே அயோத்திநகர்முழுதும்நீதான்-கயமீதிற்பேரிகைவைத்தறிக்கைசெய்து கடிதினிலேயிங்குவந்துகழறுவாயே.

(வ-ம்) அகோவாருஞ் சேனாதிபதியே ஸ்ரீராமமூர்த்தியின் குமாரனாகிய(குசலராஜனுக்கும்)வாரணாபுரியையாளப்பட்ட சோமகாசமகாராஜனுடைய புத்திரனாகிய அரண்யமகாராஜன் குமாரத்திசௌபாக்கியவதி (விபுதையம்மாளுக்கும்) நாளைசூரியவுதயத்தில் திருக்கலியாண மென்று யானையின்மீது பேரிகைவைத்து அயோத்திமாநகரமுழுதும் அறிக்கைசெய்வாய்சேனாதிபதியே.

(சேனாதிபதி-வ-ம்) அப்படியே செய்துவருகிறேனையா.

சேனாதிபதி-மாவுத்தனுக்குச்சொல்-கவி.

திடங்கொளமாவுத்தனே திரைகரியொன்றில்
அடல்கொளச்சிங்காரித் ததைக்கொண்டுவராய்

(மாவுத்தன்சொல்-வ-ம்)அப்படியே யிதோ கொண்டுவந்தேனையா.

சேனாதிபதி-யானையின்மீதேறி பேரிகையறைகிற-வசனம்.

அகோராஜாதிராஜன் ராஜப்பிரகாசன் அயோத்திமகாராஜன் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியின் திருக்குமாரராகிய (குசலராஜனுக்கும்) வாரணாபுரியை யாளப்பட்ட சோமகாசமகாராஜன் மூத்தபுத்திரராகிய அரண்யமகாராஜன் குமாரத்தி சௌபாக்கியவதி (விபுதையம்மாளுக்கும்) நாளையத்தினஞ் சூரியஉதையத்திற்குத் திருக்கலியாண மாகையால் அநுகாரியத்திற்கு-மச்ச-மராட-கர்னாட-காம்போஜ- களிங்க-குருகு-குடகர்-மகதர்-குகுதர்-சாளவர்-வங்கர்-அங்கர்-கொங்கணர்-குச்சரர்-ஈழர்க

டர்-யவுணர் முதலாகிய ஐம்பத்தாறுதேசத்து ராஜர்களும் எங்கள் அயோத்தியாபுரியி லவர்களும்வந்து சேரவேண்டியது திடும் திடும் திடும் திடும்.

பொது-இபிதை.

திருக்கலியாணஞ்செய்தல்.

துங்கமுறுமுத்தாவ ரத்னத்தாலுஞ்
சொல்லரியமரகதமா ணிக்கத்தாலும்
பொங்கமுறுசெகப்பந் தலமைத்துவின்ளேர்
புளகமுறமேதினியோர் வியப்பதாகத்
திங்கள்முகவிபுதையெனு மின்னாள்வந்து
சேர்ந்தவுடனரசர்களிச் செய்திகேட்டுத்
தங்கள் தங்கள் பதியைவிட்டு வந்தெல்லோருஞ்
சார்ந்திட்டார்மனக்களிப்பு கூர்ந்திட்டரே.

கண்ணிகள்-இ ம்-சங்கராபரணம்-அடதாளம்.

ராஜர்பலர்கள் வந்து சேரவே-சுகு
ராமராங்கியங்களிப் பேறவே
வாசம்பலவிதமாய் வீசவே-வந்து
மறையவர் நூற்களைப் பேசவே
மகதர்குருதரீமூர் வருகவே-பல
வாத்தியவோசைகள் பெருகவே
ககனத்தித்திற்பூமழை பெய்யவே-திருக்
கல்யாணச்சடங்குகள் செய்யவே
சித்திரதீபங்க ளேற்றினர்-அந்த
தெருவெங்கும்தூபங்கள் சாற்றினர்
முத்துநகைகளை யிட்டனர்-மண
மொய்க்கவேபுறப் பட்டனர்
ஆரண்யராஜர்மனம் பூரிக்க-அவரை
யண்டினோர்கள்மெய் பாரிக்க
கருணையுள்ளவர்கள் மொய்க்கவே-சில
கணிகைமாண்கள் விர்ம்பிக்கவே
மின்னார்கள்நடனங்க ளாடவும்-சில
மின்னார்கள்சங்கீதம் பாடவும்
பொன்னாலகவரிகள் வீசவும்-சில
பூவையர்புதுமைகள் பேசவும்
மணவரைபதினி லேறவே-பக்கம்
வதிஷ்டர்வால்மீகருட் காரவே
இளையிலோமாக்கினி வளர்த்தார்-கரும
மென்னுடயினை விளைத்தார்
சிதைமனங்களிப் பேறவும்-எங்கள்
ஸ்ரீராமர்களிப் பூறவும்

மாதவராசிகள் ... சாற்றவும்-வேத
மறையவர் ... சதை ... ற்றவும்
திருமங்கிலிய ... தரித்தார்-யாவருஞ்
சேர்ந்தட்சதையை விரித்தார்
இருவருக்கைமை ... பிடித்தார்-வதிஷ்ட
ரெல்லாச்சடங்கு முடித்தார்

பொ...-திபிதை,

சந்தனபுட்பத்தோடு தாம்பூ...ளித்துயார்க்கும்
பந்திபோசனங்களிட்டுப் பாங்கு...னுபசரித்து
சுந்தரமணத்தின்சேதி சொல்லிக்கொண்டிருக்கவிப்பால்
அந்தமாய்ச்சோபனங்க ளதுசெயனினைந்திட்டாரே

ஸ்ரீராமர்-கட்டியக்காரனுக்குச்சொல்-கவி.

கனமுடனெதிரில்நிற்குங் கட்டியக்காராகேளாய்
மனையினிற்குசலனுக்கு வளர்சுபசோபனங்கள்
இனிதுடநடப்பதாலே யிரவிற்பார்ப்பனியையேயும்
மனமுடனழைத்துச்சோப னம்பாடச்செய்குவாயே

(வ-ம்) அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா நம்முடைய குசலராஜனுக்குச் சுபசோபனமாகையால் இன்றிரவில் பிராமணமாதனை அழைப்பித்துச் சோபனம்பாடச்செய்குவாய் கட்டியக்காரா.

(கட்டியக்காரன்-வ-ம்) அப்படியே செய்துவைக்கிறேன் சுவாமி.

கட்டியக்காரன்-பிராமணமாதருக்குச்சொல்-திபிதை.

தனமிகத்தருவோமுங்கள் தனமனங்குலுங்கவியங்கள்
இனமிக...கிழ்வதாக யிருகரங்கூப்பிரன்றுயக்
கனமுட...டைகுலுங்கக் கட்டியனுன்மகிழ்வதாகத்
தொனியட...ன்வந்திப்போது சோபனம்பாடுவீரோ

(வ-ம்) அகோ...ாரும் பிராமணமாதர்களே உங்களுக்கு நல்ல வெகுமதிதருகிறோம் ய...வரும் நானுமெச்சும்படியாய் ஸ்ரீராமர்மனையில்சோபனம்பாடவேணும் வருகுவீர் பிரா...ணமாதர்களே.

(பிராமண...தர்கள்-வ-ம்) இதோ...வருகிறோம்ஐய...

...சோபனம்-தரு-இ-ம்-புந்நா...கவராளி-ஆ...தாளம்.

சோபனமடிசோபனமே சுபசோபனம்சோ...பனமே

சூபனும்ஸ்ரீ ராம...னுக்கும்
புண்ணியவதிஷ்டர் வால்மீகர்க்கும்(சோப)
லட்சுமணருக்கும் ப...தருக்கும்
நாடரியசத் துரு...க்கருக்கும்(சோப)
மும்மூர்த்திகளுக்குச் தும்பிரு...கனுக்கும்
முருகனுக்கும் மறைய...ர்களுக்கும்(சோப)
முப்பத்முக்கோடி தே...வர்களுக்கும்
முனிவர்சந்திரர் ...ரியனுக்கும்(சோப)

ஸ்ரீராமஜெயம்.

குசலராஜனுக்கு

இளவரசுபட்டங்கட்டல்.

பொது-திபிதை.

மாதவவசிஷ்டர் வால்மீகர்பிருகு மகிழ்கலைக் கோட்டுமாமுனிவர்.......................*
போதகன்றுவரும் கௌசிகர்முதலாய்ப் பூதலமன்னவர் சூழக்.......................*
காதல்சேரயோத்தி ரகுராமமூர்த்தி காளையாங் குசலராஜனுக்குப்.......................*
பூதலமகிழ விளவரசதனைப் பூணுவர்களிப்பு காணுவரோ.......................*

ஸ்ரீராமர்-குசலராஜனுக்கு-இளவரசுபட்டங்கட்டுகிற-தரு-இ-ம்-ஆதிதாளம்.

பல்லவி.

இளவரசுபட்டங்கொண்டானே குசலராஜன் இளவரசுபட்டங்கொண்டானே

அநுபல்லவி.

தளபமுனிவர்களும் களபமனி[illegible]ளும் உளமகிழ்ராஜர்களும் தளகர்த்த ருடன்வர (இளவரசு)

சரணங்கள்.

தேவதுந்துமிபோட சித்தகின்னரர்பாட பாவலரந்தணர் பலவாய்வாழிகள்பாட (இளவரசு)

வசிஷ்டர்விஸ்வாமித்திரர் வாமீகர்மகிழ்வுற இஷ்டமுடனேநாடி யேகவாத்தியஞ்சாட (இளவரசு)

பரதசத்துருக்கரும் பாங்குடனருகில்வர நரபதியோர்கள்காண நங்கையர்நடனமிட (இளவரசு)

வாழி - திபிதை.

சீர்மிகுந்த குசலவநாடகமும்வாழி ஸ்ரீராமர்வாழியிளை யோரும்வாழி..................*
பேர்மிகுந்தஜானகியா ளன்னோர்வாழி பெருமைமிகுமுதியோர்கள் மன்னர்வாழி......*
பார்மிகுந்த யிந்நாடகத்தைப் பண்புடனேபாடினபேர் பார்த்தபேரும்...........*
ஏர்மிகுந்த வுலகிலிதைப் படிப்போர்கேட்போ ரியாவர்களுமின்பமுற வாழிமாதோ...*

குசலவநாடகமுற்றிற்று.

உ

கடவுள் துணை.

அறிவிப்பு.

கட்டளைக்கலித்துறை.

சென்னையிலேயச்சுக் கூடங்கள் வைத்துச் சிறந்ததமிழ்
நன்னூல்களச்சி விட்டேதொழிற்செயும் நாவலர்க்குந்
தன்னேரிலாத வியாபாரிகட்கும்யான் சாற்றலென்னே
இன்னூலையச்சி விடமுயலாம லிருப்பதுவே.

விருத்தம்.

கற்றவர்முதலா யாவருங்களிக்கக் கருத்தினி லவாமிகக்கொண்டு
நற்றமிழ்தனைக் குசலவநாடகம் நன்குறவச்சினில் விட்டேன்
பெற்றதாயதனைப்பெண்டிரென்றெண்ணிப் பிரியமாய்ப்புணர்ந்தி
டுமூடக்குற்றறிவுடையோ ரச்சினிலிடுவர்குசலவநாடகமிதையே

இச் சென்னைமாநகரத்தில் அச்சுக்கூடங்கள் வைத்துச் சிறப்பாகிய தமிழ்க் காவியபுராணங்கள் நன்னூல்களிலும் மற்றென்னூலும் அச்சிவிட்டுத் தொழிற்செய்யும் நாவில் வல்லவர்களுக்குந் தனக்கு நிகரில்லாத புத்தகவியாபாரிகட்கும் யான் சொல்லுவது யாதெனில்

இக் குசலவநாடகத்தை இயலிசை நாடகமென்னு முத்தமிழிற் சிறந்த கல்விமான்களும் மற்ற யாவர்களும் வாசித்து மனக் களிப்பை யடையும்படியாய் அச்சிட்டிருக்கின்றனன், ஆகையால் மேற்கூறிய பாட்டின்கருத்தை யுணர்ந்து மேற்படி குசலவநாடகத்தை அச்சிடாம லிருக்கும்படி கோறுகின்றனன். இதை மறுத்து என்னனது பொருத்தமில்லாமற் செய் தச்சிட்டவர்கள் பெற்றதாயைப் புணர்ந்தவர்களென்றியாவரும் அறியக்கடவது.

இங்ஙனம்